இந்தி
சிந

(INDIAN ECONOMIC THOUGHT)

சி. டி. இராஜேஸ்வரன்

தமிழ்நா

இந்தியப் பொருளியல் சிந்தனை

சி. டி. இராஜேஸ்வரன்

தமிழ்நாட்டுப்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண் —544

இந்தியப் பொருளியல் சிந்தனை

ஆசிரியர்

சி. டி. இராஜேஸ்வரன், B.Sc. (Econ), (Lond.),

ஓய்வுபெற்ற

பொருளாதாரப் பேராசிரியரும்

கல்லூரி முதல்வரும்,

பச்சையப்பன் கல்லூரி,

சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1973

T.N.T.B.S. (C. P.) No. 544

© Tamil Nadu Text Book Society

INDIAN ECONOMIC THOUGHT

C. D. RAJESVARAN

Price Rs. 4 00

Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
Shanmugam Press Private Ltd.,
Madras-1.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன் றுண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத் தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற் கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற் றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங் களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவை யான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியப் பொருளியல் சிந்தனை' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 544ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 579 நூல்கள் வெளிவந்துள் ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத் தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனங்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

இந் நூல் இந்தியப் பொருளாதாரக் கொள்கைகளைச் (Indian Economic Thoughts) சுருக்கமாக விளக்குகிறது. பல்கலைக் கழக மாணவர்கட்குப் பயன்படும் வண்ணம் பண்டைக்காலந்தொட்டு நடைமுறை நூற்றாண்டு வரை வரலாற்று முறையிலும், கொள்கைகள் உருவாகிய முறையிலும் தெளிவாக இந் நூல் எழுதப்பட்டுள்ளது. கருதுகோள்களைப் (theory) பற்றி எழுதுங்கால், வரலாற்றுமுறை (historical method), செயலறிவு சார்ந்த முறை (empirical method) என்னும் இரண்டையும் தழுவியே சிந்தித்தல் வேண்டும். மேனாட்டிலும் ஆதாம் ஸ்மித் காலத்திலிருந்து பொருளாதாரம் ஒரு தனி சாத்திரமாக உருவானாலும், தற்காலக் கருது கோள்கள் சென்ற ஒரு நூற்றாண்டில்தான் ஜான் மேனார்டு கெய்ன்ஸ் போன்றவர்களால் புரட்சிகரமாக விரிவடைந்தன என்பர். இந்தியப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் நாட்டின் விடுதலை வரை அந்நிய ஆட்சியின் கொள்கைகளை எதிர்த்தும் ஆராய்ச்சி செய்தும் தங்கள் கொள்கைகளைத் தெரிவித்து வந்தார்கள். அந்த அளவில்தான் கருதுகோள்கள் உருவாயின. விடுதலைக்குப்பின் பல பொருளாதாரப் பிரச்சினைகளாலும், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் தேவையினாலும், புதுக் கொள்கைகள் உருவாகி வருகின்றன. இவைகளையெல்லாம் இந் நூல் கூறுகிறது.

செ. து. இராஜேஸ்வரன்

பொருளடக்கம்

முதல் பாகம்

		பக்கம்
1.	தோற்றுவாய் ...	1
	வரலாற்றுக் காலம் முதல் விடுதலை வரை பொருளாதார நிலையும் நோக்கங்களும்—விடுதலைக்குப் பின் எழுந்த பிரச்சினைகள்.	
2.	பழங்காலப் பொருளாதார இயல் ...	4
	மொகஞ்சோதாரோ நாகரிகம்—தர்ம சாத்திரக் காலம்—கௌடில்யர் அர்த்த சாத்திரம்—வள்ளுவம் : திருவள்ளுவர் பொருட்பால் கொள்கைகள்—சங்க நூல்களில் பொருளாதாரக் கருத்துகள்.	
3.	இடைக்காலப் பொருளாதாரமும் கருத்துப் போக்கும் ...	8
	ஹர்ஷர் காலம் முதல் (7ஆம் நூற்றுண்டு) முகலாயர் காலம் வரை (14ஆம் நூற்றுண்டு)—முகலாயர் காலத்தில் பொருளாதார மாறுதல்கள் : செலாவணி சீர்திருத்தங்கள் — நில நிருமாணம், நிலத்தீர்வை — வரி வகைகள்—கைவினைப் பொருள்கள் முன்னேற்றம்—ராஜா தோடர்மால் சீர்திருத்தங்கள்.	
4.	கிழக்கிந்தியக் கம்பெனியார் காலமும் பிரிட்டிஷ் அரசாட்சி தொடக்கமும் ...	11
	குடியேற்ற நாட்டின் பொருளாதாரம் புகுதல் : டச்சு, போர்த்துகீசியர் காலத்தில் திசை மாற்றங்கள்—கிழக்கு இந்தியக் கம்பெனியார் காலத்தில் வியாபார முற்றுரிமைகள்—புதுக் கடல் வழிகளில் வாணிபம்—	

பக்கம்

கம்பெனியின் சூறையாடல்கள்—இந்திய உற்பத்தியாளர்களின் நிலை—கம்பெனியாரின் ஆதிக்க முடிவு.

5. ஆங்கிலேய ஆட்சி—பொருளாதார மாறுதல்களும் இயக்கங்களும் ... 13

முதல் உலகப் போர் வரை [1919]—விக்டோரியா மகாராணியின் அறிக்கை—இந்தியப் பொருளாதார மாறுதல் காலம்—இந்தியச் சிற்றரசர்களின் போர் முடிவுகள்—பண்டங்கள் இடம் விட்டு இடம் மாறி வாணிபத்துக்கு வந்தமை—பிரிட்டிஷ் பேரரசு நோக்கில் வர்த்தகம்—இந்திய உற்பத்தியால் கிடைத்த பணத்தைச் சுரண்டல் (drain)—தாதாபாய் நௌரோஜியின் எதிர்ப்பு—பொதுச்செலவும் அரசு கடனும் அதிகரித்தல்—நாட்டில் பஞ்சங்கள்—தொழில் முன்னேற்றத்திற்குத் தடைகள்—இந்தியத் தொழில் கமிஷன்—இந்திய அரசிறைக் கமிஷன் (Indian Fiscal Commission) பரிந்துரைகள்—சுங்க வாரியம் ஏற்படுத்துதல்—அரசியல் கிளர்ச்சியில் பொருளாதாரப் பிரச்சினைகள் இடம் பெறல்.

6. முதல் உலகப் போர் முதல் இரட்டை ஆட்சி முடிவு வரை (1914—1935) ... 16

இந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் தெளிவு பெறல்—அரசியல்வாதிகட்குப் புறம்பாகப் பொருளாதார விற்பன்னர்களின் கருத்துகளை வற்புறுத்துதல்—சுரண்டலை நிறுத்த கருத்துப் போர்—இந்தியத் தொழில்களுக்குப் பாதுகாப்பு—பேரரசு சுங்கச் சலுகைகள்—சுங்க வரி சீர்திருத்தங்கட்கு அறைகூவல்—அரசிறைக் கோள் (Fiscal Policy) கைத்தொழிலையும் வாணிபத்தையும் பாதித்தல்—மாகாண மந்திரிசபைகட்குக் கைத்தொழில் பொறுப்பு ஆதல்—இரட்டை ஆட்சியில் கைத்தொழில் முன்னேற்றம்—தமிழ் நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபையின்

பக்கம்

சாதனைகள்—தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டம் நிறைவேற்றப்படல் — ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் இல்லாமையால் இடர்ப்பாடுகள்.

7. 1935 அரசியல் சீர்திருத்தம் முதல் 1947 விடுதலை வரை ... 18

திட்டமிட்ட பொருளாதாரச் செய்கை தலையெடுத்தல்—1935ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தங்கள் பொருளாதார நோக்கங்கட்கு தனித்தன்மையின்மை—சட்ட மறுப்பு இயக்கமும் அடக்குமுறையும் — அதனுல் பொருளாதார முன்னேற்றத்திற்கு இடையூறு —நிருவாகக் கட்டமைப்பும் செலவும் அதிகமாதல்—முன்னேற்றப் பொருளாதாரக் கொள்கைகள் தலையெடுத்தல்—தேசிய திட்டக் குழு (National Planning Committee) ஏற்படுத்தப்படல்—திட்டமிட்ட பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம்—தனியார் துறையும் பொதுத் துறையும்—தலையிடாக் கொள்கை (Laissez faire) மாறுதல்—அடக்கப்பட்ட பொருளாதாரத்தின் தேவை—பொது உடைமைக் கொள்கை உருவாதல்—எஃகு, பொறியியல் தொழில்கள் தலையெடுத்தல்-இந்தியப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் இங்கிலாந்து ஃவேபியனிசம் (fabianism) சித்தாந்தத்தால் கவரப்பட்டமை.

8. செலாவணிச் சீர்திருத்தங்கள் தேவையானவை 21

இங்கிலாந்து நாணயச் செலாவணி விலை மதிப்பு மாறுதல்களால் இந்தியச் செலாவணியும் பாதிக்கப்படல்—பொன்னும் வெள்ளியும்—வெள்ளி ரூபாய் அடிப்படை நாணயமாதல்—பொன் வெள்ளி நிகர் (Ratio)-காகிதச் செலாவணி—பொன் நாணயத் திட்டம் (Gold standard)—நாணயச் சுழற்சிக் கட்டுப்பாடு—ஹில்டன் யங்கு கமிஷன் (1923) பரிந்துரைகள் — இங்கிலாந்து பொன் மதிப்புக் கொள்கையைக் கைவிடல் — ரூபாயின் மாற்று மதிப்புக்கு இந்தியாவில் எதிர்ப்பு—இந்திய

பக்கம்

விவசாயப் பொருள் ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்படல்—பிரிட்டிஷ் இறக்குமதியாளர்கட்கு இலாபம்—இந்தியப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் நாணய மாற்றத்தின் கொள்கைபற்றித் தீவிரமான மனக்குறை—இந்திய நாணயக் கொள்கைக்கு நெகிழ்ச்சியின்மையால் நாட்டுக்கு நலமின்மை-இந்தியக் கொள்கைகள் இந்த விஷயத்தில் தெளிவாக உருவாதல்.

9. காந்தீயப் பொருளாதாரக் கொள்கைகள் ... 24

ஆக்கவேலைகள் (Constructive Programmes) கதர், கைவினைத் தொழில் முன்னேற்றம்—இயந்திர ஆலைகள் பெருக்கத்திற்கு எதிர்ப்பு—மான்செஸ்டர், லங்காஷயர் ஆதிக்கத்தை அடக்க நோக்கம் — இயந்திரத் தொழில்கள் வேண்டாமென்பதற்கு நாட்டில் கருத்து வேற்றுமைகள்—மக்கள் தொகையும் பொருள் வளர்ச்சியும் (economic growth) நிபுணர்களின் கருத்துகள் — காந்தியின் பொருளாதாரக் கொள்கைகள் முற்றும் ஒவ்வாமை—விஞ்ஞானத்தின் முக்கியத்துவம்—உலோகாயதப் பொருளாதாரம்—காந்தியின்காவல் கொள்கை (trusteeship) — பஞ்சாயத்து இராச்சியமும் கிராம முன்னேற்றமும்—மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு மாற்றுத் தொழில் பெருக்கம் தேவை என்ற தீவிரமான கொள்கை.

10. 1947 விடுதலைக்குப்பின் பொருளாதாரப் போக்குகளும் நோக்கங்களும் ... 28

இந்திய விடுதலைப் போராட்டம் ஓய்ந்தபின் பாகிஸ்தான் பிரிவினையால் வந்த பொருளாதாரக் குறைபாடு—அகதிகளைக் காப்பாற்ற பணச் செலவு—இராணுவம் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்தல்—காஷ்மீர் தகராறு, பிரிவினைப் பிரச்சினைகள் (Economics of Partition)—முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பொருளாதாரக் கொள்கைகள் உருவாதல்—பண வீக்கம் தேவையா? வேண்டாமா? வேண்டுமாயின் எந்த அளவுக்கு என்ற

பக்கம்

பிரச்சினை — உணவுப் பற்றுக்குறையும் விலை வாசி அடக்கும் திட்டமும் —இந்தியப் பொருளாதாரத்தின் உள்துறை அமைப்பு (infra structure) மாறுபடல்—பணச் சுழற்சி அதிகப் படல்—ஐந்தாண்டுத் திட்டங்கள் சக்திக்கு மீறினவையா என்பதைப்பற்றிக் கருத்து முன்னேற்றங்கள்—வெளிநாட்டு முதலீடுகளை நாடுதல் — இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் முக்கியமா, விவசாயம் முக்கியமா என்பதில் தொழிலுக்கு முக்கியம் தந்தது — அந்நியநாட்டுப் பொருளுதவி — திட்டக் குழு ஆதிக்கம் அடைதல்-அரசாங்கக் கருத்து, இடதுசாரி, வலதுசாரிக் கருத்துகள் —ஏற்றுமதி வேட்கையும் உள்நாட்டு அடக்க விலை கோப்பும் (cost structure) — இந்திய சோஷலிச சமுதாய நீதியை மேற்கொள்ளல் — ஆதாரமான கனரகத் தொழில்களைத் தேசியமாக்குதல்—மக்களின் வருமானத்தில் ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்—வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மேற்கொண்ட கொள்கைகள்—மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய வரிகள்—திரு நிக்கலஸ் கால்டார் அறிக்கையின் விளைவுகள்—வருமான வரி சீரமைப்பு முயற்சி—வெளிநாட்டு வியாபார உடன்படிக்கைகள்—வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி — அரசாங்க வாணிப கார்ப்போரேஷன் அமைத்தல்-நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் சீனப் படையெடுப்பின் காரணமாகப் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டமை—காங்கிரசு ஆட்சி கூட்டுறவு சமுதாயத்தை ஏற்றுக் கொள்ளுதல்—ஆவடி காங்கிரசு தீர்மானத்தில் சோஷலிசம் மேற்கொள்ளப் பட்டமை. 1962 தேர்தலில் சமவுரிமை குடியாட்சி வற்புறுத்தியமை. வரவு செலவு திட்டத்தைச் சரிகட்ட வேண்டுமென்ற புதிய கொள்கை.

11. திருமதி இந்திரா காந்தி காலம் ... 34

சோஷலிசக் கொள்கைகள் வலிவடைந்தது —பாங்கிகளும் ஆயுள் இன்சூரன்சும் தேசிய

பக்கம்

மயமாக்கப்பட்டது. அரச மானிய ஒழிப்பு—இடதுசாரி வகுப்பினர் ஆதிக்கம் விரிவடைதல்—பொதுத்துறை மேலிடம் பெறல்—வெளி நாட்டுப் பொருளீடு பாதிக்கப்படல்—பொருளாதாரத்தில் புது விதிகள் மேற்கொள்ளப்பட்டமை—அமெரிக்க நட்பு குறைவுபடல்—கரீபி ஹடாவோ என்ற வறுமையை ஒழிக்கும் கொள்கை — சுய பல பொருளாதாரக் கொள்கை.

12. வேறு சோஷலிசக் கட்சிகளின் கொள்கைகள் ... 36

சிறு வேறுபாடுகள்—பொது நோக்கம்—செல்வம் ஒரு சிலரிடத்தில் தங்கக்கூடாது என்பது—முதலாளித்துவத்துக்கு எதிர்ப்பு—தொழிலதிபர்களின் இலாபத்தை வரையறுக்க முயற்சி — பணக்காரர்கள் மீது அதிக வரி போடும் கொள்கை—பயிரிடுவோர்க்கு நிலவுரிமை தரவேண்டும் என்ற கொள்கை—நிலச்சுவான்தார்களிடமிருந்து உபரி நிலத்தைப் பறிமுதல் செய்து நிலம் இல்லாதவர்கட்கு வழங்க வேண்டுமென்பது — தொழில் ஆலைகளில் தொழிலாளிகட்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்பது—எல்லா முக்கியத் தொழில்களையும் தேசிய மயமாக்க வேண்டுமென்பது—மார்க்சிசம் தலையெடுத்தல்.

13. மாநிலப் பொருளாதாரம் (1967) ... 38

பொதுத் தேர்தலுக்குப்பின் பிரச்சினை வலியுறுத்தல்—மத்திய அரசாங்கத்தில் ஒரு கட்சியும் மாநிலங்கள் சிலவற்றில் வேறு கட்சிகளும் ஆட்சியில் இருப்பதால் ஏற்படும் கோளாறுகள்—எல்லா மாநிலங்களிலும் நிதி பற்றாக்குறை—மத்திய அரசின் பொறுப்பு—நிதிக் கமிஷன்களின் பரிந்துரைகள் — மாநில அரசாங்கங்களின் அவலநிலை—வரிப் பணங்களை அதிகமாகப் பங்கீடு செய்யவேண்டுமென்ற கோட்பாடு.

14. பொருளாதாரக் கோட்பாடுகள் ... 41

வரலாறும் தத்துவமும் பொருளாதாரமும் ஒன்றே இந்தியத் தத்துவம் என்று தனியாகக்

பக்கம்

கிடையாது என்பது சிலர் கருத்து — வரலாறின்றி விதிகள் இல்லை—பொருளாதார வளர்ச்சியைக் அளவிட கருவிகள்—ஆடம் ஸ்மித் பொருளாதார நூலை முதலில் எழுதியவர்—இயந்திரப் புரட்சிக்குப்பின் பொருளாதாரத்தில் உற்பத்தி, நுகர்வு, பங்கீடு (Production, Consumption, Distribution) என்ற பிரிவுகள் உண்டானது — பொருள் மதிப்பு (Theory of Value) என்ற கொள்கை—ரிக்கார்டோவின் மதிப்புக் கோட்பாட்டுக்கு அடிப்படை உலோகப்பற்று விவாதம் (Bullion Controversy) — பணத்தின் மதிப்பைப் பொறுத்த விதிகள் — வட்டிக் கோட்பாடு (Theory of Interest)—வெளிநாட்டு வாணிபமும் அயல்நாட்டு வாணிப மாற்றுக் கோட்பாடுகளும் (Theory of International Trade and Foreign Exchange) — முற்றுரிமை வாணிபம் (Monopoies) கெயின்சின் General Theory of Employment, Interest and Money—J. S. மில், கார்ல் மார்க்சு கொள்கைகள் — ஷூம்பீடர் பொருளாதார வரலாறு (history), நியதி (theory) குத்துப்புள்ளி (statistics) என்ற மூன்றும் சேர்ந்தது என்ற கொள்கை—பொருளாதாரம் அனுபவத்தை ஒட்டியது (empirical) தத்துவம் அல்ல (not philosophical); மனோபாவமில்லை (not speculative); வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் தழுவியதே பொருளாதாரம் (Smith. Marx, Mill, Marshall முதலாயினோர்) — பேராசிரியர்கள் ராபின்ஸ் (Prof. Robbins), டானி (Prof. Towney) முதலாயினோர் கொள்கைகள்—பொருளாதாரக் கருத்தும் கோட்பாடுகளும், ஆடம் ஸ்மித்து தன்னுரிமை வார்த்தம் 'Monopolism, Mercantalism) இவைகட்கு எதிர்ப்பு — மார்க்சு தனி உடைமைக்கு எதிர்ப்பு—கீன்ஸ் முதல் பணத்தின் குறைபாட்டால் ஆதிக்கத்தைப் பெருக்கும் போக்கை எதிர்த்தல்—இவர்கள் இந்தியச் சிந்தனையாளர்களின் கவனத்தை ஈர்த்தல்.

பக்கம்

15. இந்தியப் பொருளாதாரப் போக்கு 44

இந்தியப் பொருளாதாரம் செல்வத்தைப் பற்றியதல்ல; வறுமையைப் பற்றியது—சுய ஆட்சியில் பொருளாதார நிபுணர்கள் அமைச்சர்களுக்குக் கருத்து ஆலோசனை வழங்க இன்றியமையாமை — பன்னாட்டுக் கொள்கைகளினின்றும் பிரிக்க முடியாத நிலைமை — பணவீக்கம், அன்னியக் கடன், ரூபாய் மதிப்புக் குறைத்தல், ஏற்றுமதிப் பெருக்கம்—தொழில்களைத் தேசிய மயமாக்குதல்—வரி முதலியவைகள் சீர்திருத்தம்—கருப்புப் பணம் உலாவுதல் — கூலி, சம்பள நிலையும் விலைவாசி நிலையும் சமன்படுத்துதல் முதலிய முக்கியப் பிரச்சினைகள்.

16. நவீன இந்தியப் பொருளாதாரச் சிந்தனை ... 46

150 ஆண்டுகளில் மாறுதல்—மேல் நாட்டில் பருவினப் பொருளாதாரம் (Macroeconomics) நுண்ணினப் பொருளாதாரம் (Microeconomics) எனப் பாகுபடுத்தல்—இந்தியாவில் இரண்டுக்கும் இடையே இடைவெளி அதிகம் அல்ல—நவீன பொருளாதார நிபுணர்கள்: தாதாபாய் நௌரோஜி—மகாதேவ கோவிந்த ரானடே—சர் தின்ஷா எதுல்ஜி வாசா — ரொமேஷ் சந்தர் தத்—கோபாலகிருஷ்ண கோகலே—வாமன் கோவிந்த கலே—விரிஜ் நாராயணன்—கே. டி. ஷா—ஆர். கே. முகர்ஜி —என். சி. வக்கீல்—பி. ஏ. வாடியா—கியான் சந்த்.

17. பொருளாதார விதிகள்—காரண காரியத் தொடர்புகள் ... 59

11 எடுத்துக்காட்டுகள்

Theory of value—Theory of rent and distribution and effects of investment—Theory of money—Theory of interest—Theory of international trade and foreign exchange—Monopolis — Keyenes' general theory — Defecit financing theory—Export promotion theory—Indirect taxation theory—Low Incidence taxation theory, etc.

பக்கம்

Historical school—Free trade school—Protection—Marxism, etc.

18. இந்தியப் பொருளாதாரக் கோட்பாடுகள்—பல்வேறு சார்புகள் ... 62

(a) அதிகார வர்க்கத்தினர்களின் கொள்கைகள்—(b) அரசியல்வாதிகளின் கொள்கைகள்—(c) பொருளாதார நிபுணர்களின் கொள்கைகள்—(d) வெளிநாட்டுக் கொள்கைகள் முதலியன சமீப காலத்துப் போக்குகள்—Election manifestoes — பொருளாதாரக் கொள்கைகள்— Applied Economics நிலையங்களின் உதவி கோருதல் முதலியன.

19. இருபதாம் நூற்றுண்டில் இந்தியப் பொருளாதாரப் பொதுக் கொள்கைகள் ... 66

இரண்டாம் பாகம்

பக்கம்

1. ரொமேஷ் சந்தர் தத் ... 73
2. திலகர், ரானடே, படேல் ... 115
3. கோபாலகிருஷ்ண கோகலே ... 119
4. தாதாபாய் நௌரோஜி ... 127
5. D. E. வாச்சா ... 130
6. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி ... 132
7. ஜவஹர்லால் நேரு ... 141
8. எம். என். ராய் ... 144
9. V. G. கலே ... 146
10. C. N. வக்கீல் ... 150
11. D. R. காட்கில் ... 151
12. P. A. வாடியா ... 153
13. கியான் சந்த் ... 154
14. பிற்காலத்தவர் ... 156

BIBLIOGRAPHY ... 159

முதல் பாகம்

1. தோற்றுவாய்

இந் நூல் இந்தியப் பொருளாதாரக் கொள்கைகளின் வளர்ச்சியை வரலாற்றுப்படுத்திக் கூறுகிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுக் காலப் பரப்பில் இந் நாட்டில் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. வரலாற்றுக் காலத் தொடக்கத்தில் நாட்டில் பல்வேறு பேரரசுகள், சிற்றரசுகள் இருந்தன. வடக்கே மௌரியர்கள், குப்தர்கள், தெற்கே பல்லவர்கள், சேர, சோழ, பாண்டியர்கள் ஆட்சி நிலவிற்று. பேரரசுகள் மறைந்த பின் பல்வேறு சிற்றரசுகள் ஆண்டு வந்தன. இந் நிலை சுமார் கி.பி. 1200 வரையில் இருந்தது. பின் முகலாயர்கள் ஆட்சி சுமார் கி.பி. 1700 வரை இருந்தது. பின் ஆங்கிலேயர்கள் ஆட்சி ஓங்கி, நாடு 1947ஆம் ஆண்டில் விடுதலை அடையும்வரை அடிமை நாடாக இருந்தது. சுதந்தரம் அடைந்தபின் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் கிளம்பின. அவற்றுள் முக்கியமானது பொருளாதாரத்தை வளர்க்க வேண்டுமென்பது. இந்து அரசர்கள் காலத்தில் நாடு விவசாய நாடாக இருந்தது. ஆனால், வினைபொருள்களும், கைத்தொழில் பொருள்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வாணிபம் நிகழ்ந்தது. முகலாயர்கள் காலத்தில் நுண்கலைகள் வளர்ந்தன. நிருவாக முறைகள் பெருகியதால் வரி வகைகள் அதிகமாயின. சண்டை சச்சரவுகளால் செலவுகள் அதிகமாயின. ஆங்கில ஆட்சி வளர்ச்சியில் இந்தியக் கைத்தொழில்களும், அது சம்பந்தப்பட்ட வாணிபமும் அழிந்துபோயின. பருத்தி முதலிய வாணிப வினைபொருள்கள் (raw produce) தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்து, பொறிசெய் பொருள்களை (manufactured goods) இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். உள்நாட்டுப் பொருள்களுக்கு அதிகமான ஆயத் தீர்வைகளை விதித்தார்கள். நிலவரி, சுங்கவரி முதலியவை அதிகமாயின. நிருவாகச் செலவும், இராணுவச் செலவும் அதிகமாயின. நாட்டில் அமைதியும், நீதியும், நிருவாகமும் சீரடைந்தாலும், பொருளாதார நோக்கங்கள் நாட்டின்

நலனுக்குப் பொருந்தியதாக இல்லை. நாடு விடுதலை அடைந்த பின் குடியேற்ற நாட்டின் பொருளாதாரத்தை நீக்கி மக்களின் வறுமையை நீக்கவும், நலத்தைப் பெருக்கவும், திட்டமிட்ட பொருளாதார வழிவகைகளைச் செயலாக்கவும் அரசு ஈடுபட வேண்டியதாயிற்று. பொருளாதார முன்னேற்றமின்றி அரசியல் சுதந்தரம் ஒரு பயனுமில்லை என்ற நோக்கம் வலிமையுற்றது.

மேற்கூறியவற்றால், ஒரு நாட்டின் பொருளாதார நோக்கங்களும், கொள்கைகளும் அரசியல் சூழ்நிலைகளைப் பொறுத்தும், அரசியல் ஆட்சிமுறைகளைப் பொறுத்தும், மக்களின் தேவைகள், உழைப்பு, தேர்ச்சி இவைகளைப் பொறுத்தும் மாறிவரும் என்பது வெளிப்படை. இந்த உண்மை இந்தியாவுக்கு மட்டுமன்றி இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷ்யா போன்ற நாடுகளுக்கும் பொருந்தும். இந்தியாவின் தற்காலப் பொருளாதாரத் தேவைகள் தெளிவாகத் தெரிந்தாலும், நாட்டின் சென்ற காலத்தின் போக்குகளையும், நல்லவை தீயவைகளையும், குற்றங்குறைகளையும் அறிந்து வரலாறு தரும் படிப்பினைகளை மனத்தில் கொண்டு, நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலுதல் வேண்டும். அதுபோல், வெளிநாட்டுக் கொள்கைகளையும் அனுபவங்களையும் ஒத்திட்டுப் பார்த்துப் பயன்பெறுவது நலமாகும். இந்த நூற்றுண்டிலே, போக்கு வரவுகள் முதலியவை விருத்தியடைந்த நாளிலே எந்த நாடும் தனிப்பட்ட நாடாக, வெளி சம்பந்தமின்றி வாழ இயலாது. வெளிநாட்டுப் பொருளாதார மாறுதல்கள் நம் நாட்டையும் பாதிக்கும். அவ்வாறு பாதிக்கும் போது நம் நாட்டிற்கு நன்மையாகவும் அமையலாம்; தீமையாகவும் அமையலாம். கைத்தொழில் விருத்திக்கும் வெளிநாட்டுச் செலாவணி தேவை. அது நாணய மதிப்பீடு ஏற்ற இறக்கங்களால் பாதிக்கப்படும். வாணிக இருப்பு நிலை (balance of payments) பாதகமா சாதகமா என்று இடைவிடாது கண்காணிக்க வேண்டும். வெளி சம்பந்தங்கள் இவ்வாறு இருக்க, உள்நாட்டிலேயே பொருளாதார அமைப்பின் உள்துறை அமைப்பு (infra structure) எவ்வாறு அமைதல் வேண்டுமென்பது மிகவும் முக்கியமானது. எந்தெந்தத் தொழில்கள் அரசுமயமாக்க வேண்டும், எவை தனியார் துறைக்கு விடப்பட வேண்டும் என்பதெல்லாம் மிகச் சீரிய பிரச்சினைகளாகும். முதலாளித்துவம் கொண்ட பொருளாதார அமைப்பு (capitalist economy) நல்லதா, பொதுவுடைமை அமைப்பு (socialistic economy) நல்லதா, இரண்டும் உள்ள சமரசமான கலப்பு அமைப்பு (mixed economy) நல்லதா என்பதை ஒழுங்கு படுத்த வேண்டும். எந்த அளவு வெளி நாட்டு உதவி (foreign aid)

நல்லது, எந்த அளவு பொதுக் கடன்கள் வரையறுக்க வேண்டும் (public debts), எந்த அளவு பற்றுக்குறை நிதி (deficit finance) நல்லது என்பதெல்லாம் தற்காலத்துச் சீரிய பிரச்சினைகளாகும். இந்தியா பெரிய நாடு; சுமார் 50 கோடி மக்கள்தொகை கொண்ட நாடு; பல நூற்றாண்டுகளாகப் பஞ்சத்திலும், பசியிலும், வறுமையிலும் மக்கள் இருந்து வந்த நாடு; பெரும்பாலோர் பருவ மழையை நோக்கி வாழ்பவர்கள்; போதுமான வேலை வாய்ப்புகள் இல்லாத நாடு; பொறித்தொழில் போதுமான அளவு விருத்தியாகாத நாடு; தனி நபர் வருமானம் (per capita income) மிகக் குறைவான நாடு; பொருளாதார வளர்ச்சி (economic growth) வெகு மந்தமாக உள்ள நாடு; சாண் ஏறினல் பல காரணங்களால் முழம் சரியும் நிலையிலுள்ள நாடு. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகை காணுவதற்கு அரசுமட்டுமன்றி மக்களும் சிந்திக்க வேண்டும். அதற்கும் மேலாகப் பொருளாதாரத் தத்துவமும், பொருளாதார விதிகளும் (economic laws) எப்படி எடுத்துக்கொண்ட விஷயங்களில் பயன்படுகின்றன என்பதைக் கவனிப்பதும் மிகவும் முக்கியமானதாகும். எனவே, பொருளாதாரம் பயிலும் நிபுணர்கட்கு (Economists) இதில் பெருத்த பங்கு உள்ளது. இவைகட்குப் பொருளாதாரக் கோட்பாடுகள் (economic theory) சரியாக உருவாக்கப்பட வேண்டும். மேல்நாட்டு அல்லது கீழ்நாட்டுக் கோட்பாடுகள் அப்படியே செல்லாது. அமெரிக்கா, பிரிட்டிஷ் கோட்பாடுகளோ ருஷ்ய, சீன கோட்பாடுகளோ ஜெர்மன், ஜப்பான் கோட்பாடுகளோ அப்படியே நாம் கொள்ள இயலாது. ஆனல், அவை வழிகாட்டிகளாய் உபயோகப்படும்.

2. பழங்காலப் பொருளாதார இயல்

பொருளாதார நோக்கங்களும், கொள்கைகளும் ஒரு நாட்டின் சரித்திர, சமுதாய மாற்றங்கட்கு ஏற்ப மாறுதல் அடையும் என்று கண்டோம். அடிப்படையிலே பொருள் ஈட்டல், காத்தல், வகுத்தல் ஆகியவைகளைப்பற்றிய கருத்துகளை அந்தந்தச் சமுதாயத்தின் நீதி சாத்திரங்களும் நாகரிக வளர்ச்சியும் உருவாக்கும். வரலாற்றுக் காலத்திற்கு முன்பு, சமீபத்தில் அகழ்வு ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட பழைய திராவிட நாகரிகம் என்று ஆராய்ச்சியாளர்களால் கொள்ளப்படும் மொகன்சோதாரோ, ஹாரப்பா நாகரிகங்களின் அமைப்புகளைக் காணுமிடத்து அந்தப் பழைய மக்கள் பட்டண வாசம் போன்ற நாகரிகத்தை (urban civilisation) அடைந்திருந்தார்களென்றும், அவர்கள் சுமேரியா போன்ற நாடுகளுடன் வாணிபம் செய்தார்கள் என்றும், வெளிநாட்டுக்கு அனுப்பும் பண்டங்களுக்கு முத்திரை போட்டு அனுப்பினுர்களென்றும் காணப்படுகிறது. நாணயங்கள் காணப்படவில்லை. பண்ட மாற்றமும் கடல் வாணிபமும் இருந்ததென ஊகிக்கலாம். வீதிகள், வாய்க்கால்கள், குளங்கள், தானியக் களஞ்சியங்கள் ஆகியவைகளின் அடையாளங்கள் காணப்படுவதால் அங்கு வாழ்ந்த மக்கள் பொருளாதார வழிவகைகள் அறிந்த மக்கள் என்றே கொள்ளவேண்டும். பின் வேத காலத்தில் ரிஷிகள் மழை, தானியங்கள், கால்நடைகள் முதலியவைகளைப் பெறுவதற்கும், காப்பாற்றுவதற்கும் பல தெய்வங்களை வேண்டினுர்கள் எனக் காண்கிரேம். பின்னர், தர்ம சாத்திரங்கள் உருவாக்கப்பட்ட பின்புதான் சமுதாயக் கட்டுப்பாடுகளும், அரசனுக்குச் செலுத்த வேண்டிய கடமைப்பாடுகளும், நிலம் முதலிய பற்றுதற்கு விதிகளும், இந்த விஷயங்களில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளும் (Manu's laws) உருவாயின. மக்கள் நாடக்கூடிய நலன்களைத் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று நான்கு

வகையாய் நம் முன்னோர்கள் பிரித்தார்கள். அதில் 'அர்த்தம்' என்பது செல்வம். அதற்குக் கருவியாய்க் கொள்ளப்பட்டது 'வர்த்தம்'. அதாவது நிலம், மாடு முதலியவைகளால் வரக் கூடிய செழிப்பு. அந்தக் காலத்தில் நாணயம் இல்லாமையால் ஒரு குடியின் செல்வத்தை அவன் பெற்றிருக்கும் நில அளவை யாலும், ஆடு, பசு முதலியவைகளின் எண்ணிக்கையாலும் கணக்கிடப்பட்டது.

அர்த்த சாத்திரம்

கௌடில்யர் எழுதிய அர்த்த சாத்திரத்தில் (Arthasastra) தான் முதன் முதலாக அந்தக் காலத்து அரசியல் அமைப்பைப் பற்றியும் பொருளாதாரக் கருத்துகள் பற்றியும் தெளிவான தகவல்கள் கிடைக்கின்றன. தர்மத்தைக் காப்பதற்கும், பொருளாதாரத்தைக் காப்பதற்கும் அரசன் தேவையென்றும், அமைச்சர்கள், அலுவலர்கள் முக்கிய அம்சங்கள் என்றும் இந்த நூல் கூறுகிறது. நிலங்கள் கைப்பற்றுதல், செலுத்த வேண்டிய வரிகள், பலவிதமான அரசாங்க ஆதாயங்கள், நாணயங்கள், அரசின் பொறுப்புகள், குடிகளின் கடமைகள், கைத்தொழில்கள், இராணுவம் முதலிய பல்வேறு விஷயங்களைப் பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளன. கௌடில்யர் கூறும் வரி வகைகள் நிலவரி, சுங்கம், அபராதங்கள், வாணிபவரி முதலியன வாகும். விலைவாசிகளைப்பற்றியும் கூலி நிருணயித்தல் பற்றியுங் கூட கௌடில்யம் பேசுகிறது. பொருளாதாரத்தைமட்டுமன்றி, அரசியல், நீதி, பாதுகாப்பு முதலிய பொருள்கள் பற்றியும் அர்த்த சாத்திரம் விரிவாகப் பேசுகிறது. இந்த அர்த்த சாத்திரத்தின் அடிப்படையில் சந்திரகுப்த மௌரிய சக்கரவர்த்தி காலத்து அரசியலும் பொருளாதாரமும் அடிப்படையில் வலுவடைந்தன. அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் மேலும் இவை வலுவடைந் தன. கௌடில்யர் காலம் சுமார் கி.பி. 100—300 எனலாம். மௌரியர்கள் காலத்திலும் பின் வந்த குப்தர்கள் காலத்திலும் இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் தொடர்பு வளர்ந்தது. பல கிரேக்கப் பிரயாணிகளும் இந் நாட்டிற்கு வந்து சென்றூர்கள்.

வள்ளுவம்

தென்னுட்டிலே திருவள்ளுவர் செய்த திருக்குறள் பொருட்பாலில் பொருளாதாரக் கொள்கைகள் காணப்படுகின் றன. திருவள்ளுவர் காலம் சுமார் கி.பி. 100 என்று பெரும்பாலோ ரால் கூறப்படுகிறது. திருவள்ளுவர் கௌடில்யரைப்போல் விரிவாகப் பொருளாதாரத்தைப் பற்றி எழுதவில்லை, ஆனல்

பொதுவான கொள்கைகளை அளவைக்கும் உய்துணர்தற்கும் இயைபுபட ஆணித்தரமாகக் கூறியுள்ளார். உயிர் வாழ்வதற்கு இன்றியாமையாதது வானம் என்பதைத் திருவள்ளுவர் அழுத்தமாகக் கூறுகிறார். இம்மை வாழ்வுக்கு வானத்தின் விளைவாகத்தான் எல்லா நலங்களையும் பெறக்கூடும் என்பதை வள்ளுவம் காட்டுகிறது. பொருளாதாரச் செம்மையை உறுதிப்படுத்த இன்றியமையாத ஓர் ஏதுவாகத் (economic determinant) திருவள்ளுவர் வான் சிறப்பைக் கொண்டுள்ளார். அறத்தால் வருவதே பொருளும் இன்பமும் என்றாலும், பொருளாதாரத்திற்கு வேண்டிய மழை, நீர் வளத்திற்கும் நிலவளத்திற்கும் ஆதாரமாக இருப்பதால் அஃது இல்லையேல் அறம் தழைக்காது என்பது பெறப்படும். பொருளாதாரங்கள் (economic resources) முழுவதும் மழையில் அடங்காது. எனவே, திருவள்ளுவர் நல்ல அரசியலும் தேவை என்பதையும் கூறுகிறார்; நிலையான பொருளாதாரத்திற்கு (economics of permanance) நாட்டில் உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் இருத்தல் கூடாது என்றும் கூறுகிறார். இல்லையேல் பொருளாதார அசைவுடைமை (economic unstability) என்ற தீங்கு விளையும். கௌடில்யருக்கும் திருவள்ளுவருக்கும் உள்ள வேற்றுமை மக்களின் வறுமையோ செம்மையோ விதியால் வந்தது என்று கொள்ளாதது. பொருள் செயல் வகைபற்றியும், உழைப்பு ஊக்கமுடைமை பற்றியும், பொருள் வளத்திற்கு (work and industry producc wealth) அடிப்படை என்பது நனி விளக்கப்படுகிறது. உழவின் முக்கியத்தை நாயனார் அழகுபடக் கூறியுள்ளார். வள்ளுவர் பருப்பொருள் ஆக்கக் கொள்கையர் (Physiocrat) என்று கொள்ளுதல் ஆகாது. ஆனால், மிடியின்மைக்கு உழவு ஒன்றுதான் பரிகாரம் என்பதை அவர் வற்புறுத்தினார். (பொருள் இல்லை என்று சொல்வாரை நிலம் என்ற நல்லாள் பார்த்து நகுவாள் என்பார்.) எனவே, உழவின் அடிப்படையில் (agricultural base) வளர்க்கப்பட்ட பொருளாதாரமே நிரந்தரமானது என்று பெறப்படும். வாணிபத்தைவிட உழவுக்கு நிகரப் பொருளீட்டலுக்குச் (net product) சிறப்புத் தந்தது இதுவே காரணம். அரசன் உழவர்களிடம் வரி வாங்குதலில் கொடுங்கோன்மை முறைகளைச் செலுத்தக் கூடாது என்றும் வள்ளுவர் கூறுகிறார். நிலத்தைவிட நிலத்தின் விளை பொருளே மூலப் பொருளாக்கத்தின் (capital) அளவு என்றும் இதனால் பெறப்படும். பொருளைப் பகுத்தலிலும் (distribution of wealth) அறம் என்ற ஓர் அம்சம் இருக்குமாயின் பொருளாதாரம் பழுதுபடாது. நாட்டில் இலர் பலராதல் (haves and have nots) இந்த அறம் என்ற தவம் இறுகிப் போவதின் காரணம்

என்று வள்ளுவர் கூறுவர். ஈதலின் சிறப்பையும் இரத்தலின் இழிவையும் வள்ளுவர் மிகத் திட்பமாகப் பேசியுள்ளார். பொது வுடைமைக் (socialism) கொள்கைக்கு அடிப்படையான கொள்கைகளை வள்ளுவர் ஆங்காங்கே சொல்லியுள்ளார் பொது வரவு செலவுகளிலும் வள்ளுவர் சிக்கனத்தைக் கையாள வேண் டும் எனக் குறிப்பாகக்கூறுவர். சமதர்ம சமுதாயத்தின் (equalitarian society) இலக்கணங்களைக் கூறுங்கால் அதை நீதி சாத்திரங் களின் துணைகொண்டோ அரசியலில் வெல்லும் வழியாகவோ கூருமல், பொருளாதாரக் கண் கொண்டும் மக்கள் நலக் குறிக் கோளுடனும் (economic humanism) திருவள்ளுவர் தம் கொள்கைகளை வடித்துக் காட்டியுள்ளார்.

சங்க நூல்களிலும் இத்தகைய கருத்துகள் விரவி வரு கின்றன. தமிழரசர்கள் இந்தக் கொள்கைகளின் அடிப்படை யிலேதான் தங்கள் ஆட்சியைச் செலுத்தினுர்கள். அனபாய சோழருக்கு முதலமைச்சராயிருந்த சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்திலும் நாட்டுச் சிறப்பு, குடிகள் வாழ்வு, செங்கோன்மை முதலியவைகளைப்பற்றிப் பேசும்போது இந்தக் கருத்துகளின் பிரதிபலிப்பைக் காண்கிருேம். சோழப் பேரரசு காலத்தில் தமிழ் நாடு வெளிநாடுகளுடன் வாணிபம் செய்து வந்தது. மூவேந்தர் கள் தல அதிகாரத்தைப் பெருக்கி வந்தார்கள். அர்த்த சாத்தி ரத்தில் கூறப்பட்டுள்ள மத்திய அதிகாரம் உள்ள நிருவாகத்தை உருவாக்கவில்லை, எனவே, பொருளாக்கம் என்ற விஷயத்தில் மக்களுக்கு எதேச்சை (freedom of enterprise) இருந்து வந்தது. அரசர்கள் அணைகள், ஆலயங்கள் முதலிய பொதுப் பணிகளை மேற்கொண்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுத்து வந்தார்கள்.

3. இடைக்காலப் பொருளாதாரமும் கருத்துப் போக்கும்

ஹர்ஷ வர்த்தனருக்குப்பின் (கி.பி. 647) வடநாட்டில் இந்தியப் பேரரசு சிதைந்து பல சிறிய அரசுகளாக மாறின. பல பரம்பரைக்கிடையே போட்டியும் போரும் இருந்து வந்தன. தென்னுட்டிலும் பல்லவர் காலத்திற்குப்பின் வந்த களப்பிரர்கள் காலத்தில் குழப்பம் உண்டாயிற்று. பின் சில காலம் மூவேந்தர்கள் காலத்தில் நாடு பொலிவடைந்தது; கலைகள் வளர்ந்தன. வலிந்து கவர்தலின்றி ஆதிக்கத்தைக் காட்டும் போர்களில் தலையிட்டார்கள். இருப்பினும் வெளிநாட்டு வாணிபம் நடந்து வந்தது. இந்த நிலை சுமார் கி.பி. 1300 வரை இருந்தது. வடக்கிலும் தெற்கிலும் பொருளாதாரக் கருத்துகள் புதிதாக உருவாகவில்லை. எனினும், மக்களின் பொருளாதார நிலை (economic condition) பொதுவாகச் செம்மையாக இருந்தது எனலாம். வெளி நாட்டு வாணிபம் பண்டமாற்று முறையில் நடந்தாலும், அயல்நாட்டுச் செலாவணிகளும் கைம்மாறின. முக்கியமாகத் தென்னுட்டில் பல இடங்களில் புதைபொருள் அகழ்வில் உரோம நாணயங்கள் கிடைத்துள்ளதே இதற்கு சான்று. சுமார் கி.பி. 700 முதல் 1300 வரை இந்தியா விவசாய நாடாக இருந்தது. கைத்தொழிலும் வாணிகமும் கூடுதலாகக் கொண்ட நாடாக மாறிற்று. நேர்த்தியான கைவினைகள் விருத்தி அடைந்தன. கச்சாப் பொருள்களுடன் (raw products) கைவினைப் பொருள்களும் (handicrafts) வெளிநாட்டு வியாபாரத்தில் பங்கு பெற்றன. உதாரணமாக டாக்கா மஸ்லின் துணி நாகரிக நாடுகளில் பெரிதும் வாங்கப்பட்டது. இந்தியாவின் விவசாயம் பருவ மழைக் குறைவால் அடிக்கடி பாதிக்கப்பட்டு வந்தது. ஆனுல், இந்தியக் கைவினையாளர்களின் திறத்தினுல் வெளிநாட்டு வர்த்தகம் ஓரளவு விருத்தி ஆயிற்று. அரசர்கள் கலைகளை வளர்த்ததால் நுண்கலைகளாகிய சிற்பம் முதலியவை வளர்ந்து

தொழில் வாய்ப்புகள் குறையாமல் இருந்தன. ஆனால் [illegible] செல்வம் பெருகிற்று என்று சொல்வதற்கில்லை. மக்கள் [illegible]களாகவே இருந்தார்கள். எளிய வாழ்வை இயல்பாகவே ஏற்றிருந்தார்கள்.

முகலாயர் காலத்தில் பொருளாதார மாறுதல்கள்

பொருளாதாரத்துக்கு நிலம் முதன்மை அடைதல் : முகலாயர் படையெடுப்புக்குப்பின் (சுமார் கி.பி. 1300) பொருளாதாரக் கருத்துகள் மாறுதல் அடைந்தன. முகலாய அரசுகள் மத சம்பந்தமான அரசுகள் ஆயினும் அவர்கள் இந்தியாவிலே தங்கி ஆட்சி புரிந்ததால் இந்தியாவைக் குடியேற்ற நாடாகக் கருத வில்லை. நிருவாகத்தில் பல சீர்திருத்தங்கள் செய்தார்கள். முகம்மது பின் துக்ளக் (கி.பி. 1325-1351) செலாவணிச் சீர்திருத்தத்தை (currency reform) முதன்முறையாகப் புகுத்தினர். இதனால் பண்டமாற்றத்தின் அடிப்படையாக நடந்து வந்த வாணிபம் பணம் அடிப்படையாகத் திசை திரும்பியது. பிரோஷா துக்ளக் காலத்தில் வரி சீர்திருத்தங்கள் விரிவாக அமலுக்குக் கொண்டு வரப்பட்டன. அவர் பல்வேறு வகைப்பட்ட 23 வரிகளைச் சுமார் 4 அல்லது 5 வரிசைகளில் அடக்கி அமைத்தார். மக்களுக்கு வேலை வாய்ப்புகள் தரப் பல பொதுப் பணிகளை ஆரம்பித்தார். ஷெர்ஷா காலத்தில் நிலச் சீர்திருத்தங்கள் பல நிறைவேற்றப்பட்டன. ஒவ்வொருவருடைய நிலமும் சரியாக அளக்கப்பட்டு (survey) வரி வகைகள் பரப்பின்படி விதிக்கப் பட்டன. சரித்திர பிரசித்தி பெற்ற அக்பர் காலத்தில் நில உரிமை ஆவணங்கள் சீரடைந்தன. அவருடைய அமைச்சர் தோடர்மால் ஜாகீர்களை ஒழித்தார். 17ஆம் நூற்றுண்டு முடியும் வரை பொருளாதாரத்துக்கு நிலம் அடிப்படையென்றும், சமுதாயப் பணிகளுக்கு நில வரிதான் முக்கியமென்றும் உருவாயின. இது பின்னர் வர இருக்கும் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பெரிதும் உதவியது. முகலாயரும் ஆங்கிலேயரும் தங்கள் நாடுகளிலிருந்து செல்வத்தை இந்தியாவிற்குக் கொணர்ந்து இதை முன்னேற்றம் செய்ய வில்லை. உண்மையிலேயே துவக்க காலத்தில் முகலாயர்கள் இந்திய செல்வத்தைச் சூரையாடிச் சென்றுர்கள். அது வெற்றி வெறியினுல் செய்த செயல்கள். ஆனால், ஆங்கிலேயர்கள் வரி என்ற கருவி கொண்டு, இந்தியக் கைத்தொழிலை அடக்கி, தங்கள் நாட்டுக்குக் கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்து கொண்டு, தங்கள் கைத்தொழில் பொருள்களை இந்தியாவுக்குக் கொணர்ந்து தங்கள் வாணிபத்தை ஆளும் இனம் என்ற முறையில் விருத்தி செய்தார்கள்.

முகலாயர் ஆட்சியின் பிற்பகுதியில் நிலவரி, ஆள்வரி, நாணயம், கனிப் பொருள்கள், உப்பு, சுரங்கம், இறைப் பணம் முதலியவை அரசாங்கத்தின் முக்கிய வருமானமாய் இருந்தன. நகரங்கள், கட்டடங்கள், கலை விநோதங்களால் சிறப்படைந் தன. மதத் தடைகளினால் மக்கள் அச்சத்தில் வாழ்ந்தாலும், பொருளாதார நிலை குறையவில்லை. ஆனால், பிரபுகட்கும் பாமரர் கட்கும் இடையே உள்ள இடைவெளி பெருகிற்று. வீண் பெருமை ஓரிடத்திலும், வறுமை வேறோர் இடத்திலும் காணப் பட்டது.

இதுபோல் உற்பத்தியாளர்கட்கும் பொருள் நுகர்வோர் கட்கும் இடையே இடைவெளி அகன்றது. உற்பத்தியாளர் கள் விவசாயிகளும், கைவினைஞர்களும் ஆவார்கள். நுகர் வோர்கள் பிரபுக்கள், அரசர்கள், அதிகாரிகள் ஆவார்கள். சேனை பலமும் பெருத்தது. அதற்குப் பணம் அதிகமாகச் செலவு செய்யப்பட்டது. மக்களின் வரும்படி உயரவில்லை. ஏற்றுமதிப் பொருள்கள் பல திறமாக மாறிற்று. நேர்த்தி யான துணிகள், நவமணிகள், வெள்ளி, பட்டுநூல், வாசனைத் திரவியங்கள், பீங்கான் பொருள்கள், குதிரை, தந்தம் முதலியவை ஏற்றுமதி ஆயின. இவைகளினால் பொன், வெள்ளி நாட்டுக்குள் அதிகமாகக் கிடைக்கவில்லை. அரசாங்கத்திற்கோ மக்களுக்கோ தெளிவான பொருளாதாரக் கொள்கைகள் உருவாக வில்லை. இராஜா தோடர்மாலின் நிலச் சீர்திருத்தங்கள் பொரு ளாதாரத்தின் மூன்று கருவிகளாகிய நிலம், தொழில், முதல் பொருள் (land, labour and capital) என்பவைகளுள் ஒன்றுக்கு முக்கியத்துவம் கிடைத்தது. நாட்டில் கஜானக்கள் (treasuries) விரிவாக அமைக்கப்பட்டுப் பணம் (money) முக்கியத்துவம் அடைந்தது.

4. கிழக்கிந்தியக் கம்பெனியார் காலமும் பிரிட்டிஷ் அரசாட்சி தொடக்கமும்

குடியேற்ற நாட்டின் பொருளாதாரம் புகுதல் (கி.பி. 1600-1858)

டச்சு, போர்த்துகீசு, ஃபிரெஞ்சு, ஆங்கிலேய வாணிகக் கம்பெனிகள் இந்தியாவில் வாணிகத்துக்காக நுழைந்து தமக்குள் ஏற்பட்ட போட்டிகளால் தமக்குள்ளும், தம்முள் சேர்ந்த இந்திய சிற்றரசர்களுக்குள்ளும் அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டன. கடைசியில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆதிக்கம் பெற்றது. இது இந்திய அரசுகளுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை களால் சிற்சில பகுதிகளில் முழு அதிகாரத்தையும் செலுத்தத் தொடங்கியது; படைகளை ஏற்படுத்திற்று; வரிவசூலும் செய்தது; வியாபாரத்திற்குப் பண்டக சாலைகள் கட்டுவதுடன் பாதுகாப் புக்குக் கோட்டைகளையும் கட்டிற்று; பண்டவரி முதலான புது வரிகளையும் போடத் தொடங்கிற்று. அரசியல் குழப்பங்கட்கு இடையேயும் சண்டைகட்கு இடையேயும் இந்தக் கால அளவை யில் வெளிநாட்டு வியாபாரம் புது திக்குகளில் விருத்தி அடைந்தது. பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கம் பரவிய பிரதேசங் களில் கம்பெனியார் வர்த்தகத்தைப் பரப்பினார்கள். சீனா, கிழக்கு ஆசிய நாடுகள், அரபு நாடுகள் முதலியவைகளுக்கு வியாபார இணைப்பு உண்டாயின. கம்பெனியார் அபினி, உப்பு, தேயிலை முதலிய பொருள்களின் வியாபாரத்தை தனியுரிமையாக (monopoly) ஆக்கிக் கொண்டார்கள். புது கப்பல் வழிகளின் மூலம் சரக்குகள் எடுத்துச் செல்லப்பட்டன. உள் நாட்டிலே பண்டங் களின் அடகின் பேரில் பணம் வங்காளம், பம்பாய், சென்னை முதலிய இடங்களுக்கிடையே பத்திரங்கள், உண்டியல் மாற்றங் கள் மூலம் (bonds and bills of exchange) மாற்றப்பட்டன. இந்த வாணிகமுறை கம்பெனியார்கட்குமட்டும் முதலில் இருந்து

வந்தாலும், பின்னர் இது புது முறையாகக் கையாளப்பட்டது. இங்கிலாந்தின் சீனு வர்த்தகத்தில் கொடுக்க வேண்டிய மாற்று உண்டியல்களுக்கு (bills of exchange) இந்தியப் பணத்திலிருந்து கொடுக்கப்பட்டது. இதனுல் ஏற்பட்ட இந்தியப் பண உறிஞ்சல் (drain) அதிகமாயிற்று. ஆங்கிலேய வர்த்தகர்களும் அவர்களோடு சேர்ந்த இந்திய வர்த்தகர்களும் இந்தியாவில் கம்பெனியின் பல்வேறு இடங்களிலிருந்து பொருள் மாற்றங்களாலும், உண்டியல் மாற்றங்களாலும் இலாபம் அடைந்தார்கள். ஆனுல், இந்திய உற்பத்தியாளர்களின் நிலை உயரவில்லை. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் கம்பெனியின் போக்குகளைப்பற்றி அதிருப்தி உண்டாயிற்று. 1853-ல் புதுப்பித்த சாசனம் (Charter of 1853) கம்பெனியின் அதிகாரங்களைப் பெரிதும் குறைத்துவிட்டது. அதிகாரிகளை இங்கிலாந்து அரசாங்கம் தேர்ந்தெடுத்து அனுப்பியது. 1858ஆம் ஆண்டில் பேரரசி விக்டோரியாவின் பிரகடனத்தின்படி இந்தியா இங்கிலாந்து பாராளுமன்றத்தின் நேர் ஆட்சிக்கு உட்பட்டது.

5. ஆங்கிலேய ஆட்சி—பொருளாதார மாறுதல்களும் இயக்கங்களும், 1919 வரை

பேரரசி விக்டோரியாவின் பிரகடனத்தின்பின் இந்தியாவில் பொருளாதார மாறுதல் காலம் (economic transition) எனலாம். இந்தியச் சிற்றரசர்களுக்குள் சண்டைகள், கிழக்கிந்தியக் கம்பெனி தலையீடுகள் முதலிய குழப்பங்கள் இன்றிப் பொறுப்புடைய அரசப்பிரதிநிதிகளை இந்தியப் பொது மக்களின் பிரதிநிதிகள் சந்தித்துப் பொருளாதார விஷயங்களில் முறையீடுகள் செய்யவும், கருத்துகளை எடுத்துச் சொல்லவும் வாய்ப்பு உண்டாயிற்று. கம்பெனியார் காலத்தில் பொருள் உற்பத்தியைத் தொழிற்சாலைகளில் (factories) நடத்தினர்கள். இதனால், பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஊதியத்திற்கு வேலை செய்யும் முறை உண்டாயிற்று. விவசாயப் பொருள்கள் ஆங்காங்கே கொள் முதலாகி உபயோகப்பட்டு வந்ததற்குப் பதிலாக வியாபார முறையில் இடம்விட்டு இடம்மாறி வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி ஆயின. நிலத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டு வரிகள் அதிகமாயின. கைவினைத் தொழில்கள் இறுகிப்போக ஆரம்பித்தன. இரயில் முதலியவைகளுக்குத் தேவையான அயல் நாட்டுப் பணம் தவிர இந்தியாவிற்குள் பணம் அதிகமாக வரவில்லை. ஏற்றுமதிகள் அதிகரித்தன அதனால் பயன் ஒன்றுமில்லை. ஆங்கிலேய வர்த்தகர்களும், உத்தியோகத்தர்களும் தங்கள் இலாபங்களையும் சேமிப்புகளையும் இங்கிலாந்துக்கு அனுப்பியதாலும், அவர்களுக்குத் தேவையான பொருள்களை இந்தியப் பணத்திலிருந்து இறக்குமதி செய்ததாலும் இந்தியப் பொருளாதாரச் சுரண்டல் (drain) அதிகமாயிற்று. ஆங்கிலேய வெளிநாட்டுச் சண்டைகளில் தலையீடு காரணமாகவும் இந்தியப் பணம் செலவாயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியப் பிரமுகர்களும் பொருளாதாரச் சிந்தனையாளர்களும் முதன்மையாகக் கண்டித்தது இந்தச் சுரண்டலைத்தான். இதில் தலைசிறந்தவர் தாதாபாய் நௌரோஜி. பேரரசி பொறுப்பேற்றபின் இந்தியாவில் பொதுச் செலவும் (public expenditure), அரசு கடனும் (public debt) அதிகமாயின. 1856—1871-ல் பொதுச் செலவு 3·2 கோடி பவுண்டிலிருந்து 4·9 கோடி பவுண்டாக மேலிட்டது. அரசு கடன் 10 கோடி பவுண்டாயிற்று. வரிச் சுமை வருமானத்தில் 14·3 சதவிகிதமாயிற்று. நூற்புத் தொழிலும், உலோகத் தொழிலும் மெலிந்தன. இந்தியாவில் நடுத்தர மனிதர்கள் ஆங்கிலேய நடையுடை பாவனைகளை மேற்கொண்டு நகர்ப் புறங்களில் வசிக்க ஏற்பட்டதால் நாட்டுப் புறத்தில் வறுமை அதிகமாயிற்று. பஞ்சங்கள் அடிக்கடி ஏற்பட்டன. நகர்ப் புறத்திலும் ஆங்கிலேய நலத்துக்குப் பாதகமாகக் காணப்பட்ட தொழில்களின் விருத்தி தடை செய்யப்பட்டது. 1908ஆம் ஆண்டு நடைபெற்ற தொழில் மாநாட்டில் அரசாங்கம் தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கருத்தை ஆங்கிலேயத் தொழில் அதிபர்கள் விரும்பவில்லை. இந்தியா செக்ரடரி மார்லி பிரபு தொழில்துறை ஒன்று வைசிராயின் கீழ் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை ஆதரிக்கவில்லை. 1914ஆம் ஆண்டு முதல் உலகப் போர் ஆரம்பித்தவுடன் இந்தப் போக்கினால் இந்தியா எவ்வளவு பாதிக்கப்பட்டதென்றும் அதனால் இங்கிலாந்தின் பலமும் பாதிக்கப்பட்டதென்றும் நன்கு வெளிப்பட்டது. 1916ஆம் ஆண்டில் ஒரு தொழில் உயர்மட்டக் குழுவை (Industrial Commission) இந்தியா செக்ரடரி ஏற்படுத்தினார். அதே சமயத்தில் சண்டைக்கு வேண்டிய சில சாமான்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டது. 1917ஆம் ஆண்டில் இந்தியத் தளவாட வாரியம் (Indian Munitions Board) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. சண்டை முடிந்தபின் 'தொழில்' (industries) மாகாணங்களின் பொறுப்பாக விடப்பட்டது.

இந்தியத் தொழில் கமிஷனின் பரிவுரைகள் காரணமாக இந்திய அரசிறைக் குழு (Indian Fiscal Commission) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. எந்தெந்தத் தொழில்களுக்குப் பாதுகாப்புத் (protection) தரவேண்டுமென்று அது தேர்ந்தெடுக்கத் தலைப்பட்டது. இந்தியப் பொருளாதார வரலாற்றில் இஃது ஒரு முக்கியமான கட்டம் ஆகும். இதன் விளைவாகச் சுங்க வாரியம் (Tariff Board) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த விவகாரங்களில் மிண்டோ-மார்லி அரசியல் சீர்திருத்தத்தில் (Minto-Morly Reforms) ஏற்படுத்தப்பட்ட சட்டமன்றங்கட்கு நியமிக்கப்பட்ட

இந்திய அங்கத்தினர்கள் பெரும்பங்கு எடுத்துக் கொண்டார்கள். அதே சமயத்தில் இந்திய தேசியக் காங்கிரசும் (Indian National Congress) மற்றும் பல்வேறு அரசியல் நிறுவனங்களும் அரசியல் கிளர்ச்சிகளுடன் பொருளாதாரப் பிரச்சினைகளைச் (economic problems) சட்ட மன்றங்களிலும், பொது மாநாடுகளிலும் தீவிரமாக விவாதம் செய்தன. முதல் உலகப் போரும், இந்தியாவில் அரசியல் போராட்டமும், சமூகச் சீர்திருத்தமும், உயர்தரப் படிப்பு வளர்ச்சியும் பொருளாதார நோக்கங்களை மக்கள்பாலும், அரசினர்பாலும் அதிகரித்தன.

6. முதல் உலகப்போர் முதல் இரட்டை ஆட்சி முடிவுவரை, 1914 - 1935

இந்த இடைவெளி இரண்டாவது உலகப் போர் (1939) சம்ப விக்கும் வரை பரந்துள்ளது. இந்த இடைவெளி காலத்தில்தான் பொருளாதாரக் கொள்கைகள் தெளிவாக அரசியல்வாதிகளுக்குப் புறம்பாகப் பொருளாதார விற்பன்னர்கள் (economists) வாயிலாக உருவாக்கப்பட்டுச் சீரிய சிந்தனைக்கு வந்தன. இந்தியாவிலிருந்து சுரண்டலைத் (drain) தவிர்க்க நடத்திய கருத்துப் போர், தொழில்கட்குப் பாதுகாப்புப் (industrial protection) பற்றிய போராக மாறிற்று. அரசு பேரரசு சுங்கச் சலுகை (imperial preference) என்ற திட்டத்தைப் புகுத்தியது. இந்தியப் பிரமுகர்கள் இதை எதிர்த்தார்கள். எந்தத் தேசத்து ஏற்றுமதி இறக்குமதியானாலும் ஒரே விதமான சுங்கம் விதித்தால்தான் நாட்டுக்கு நன்மை எனக் கருதப்பட்டது. இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அரசு இந்தத் திட்டத்தை அமல் படுத்தியது. இவ்விதமான அரசிறைக் கைகோள் (fiscal policy) இந்தியத் தொழில்களையும் வாணிபத் தையும் பாதித்தது. இந்தக் காலம் இரட்டையாட்சியின்கீழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்குத் (Elected Ministers) தங்கள் மாநிலங்களில் தொழில் அபிவிருத்தி செய்யப் பொறுப்புத் தரப்பட்ட காலம். தமிழ் நாட்டில் முதல் முதலாகத் தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டம் (State Aid to Industries Act) நீதிக் கட்சியினரால் (Justice Party) முதன்முதலாக நிறை வேற்றப்பட்டது. இது போல் பிற மாநிலங்களிலும் ஏற்படுத்தப் பட்டன. இந்திய தேசீயக் காங்கிரசு அரசியல் உரிமைகளின் போராட்டத்தில் மிக்க முக்கியத்துவம் செலுத்தியது. இரட்டை ஆட்சியை ஏற்றுக் கொண்ட மற்றைய கட்சிகள் பொருளாதாரக் கொள்கைகளில் கவனம் செலுத்தின. குறிப்பாக மாநிலக் கட்சிகள்

பொருள் துறையில் அதிகாரமின்றித் தொழில் முன்னேற்றம் செய்ய இயலாமையை எடுத்துக்காட்டின. தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான மின்சார உற்பத்தியையும் பெருக்க வேண்டியிருந்தது. கூட்டுறவுக் கல்வித் துறைகளில் முன்னேற்றம் காணப்பட்டது. இக் காலத்தில்தான் நிதி பங்கீடுகள் சரியாகச் செய்வது (budgetary control), மக்கள் வரிச் சுமையைக் குறைத்தல் (taxation), தல முன்னேற்றத்திற்கு வேண்டிய நிதி வசதிகள் (local finance) ஆகியவைகளைப்பற்றி முதன் முறையாக அரசியல்வாதிகளும், பொருளாதார நிபுணர்களும் கருத்தைச் செலுத்தினார்கள். நாட்டின் நலத்திற்கு இவை மிகவும் முக்கியமானவை. இதே காலத்தில்தான் இராணுவச் செலவைக் (military expenditure) குறைக்க வேண்டுமென்று டெல்லி சட்டமன்றத்தில் மிகவும் வாதாடப்பட்டது. மத்திய நிதி அங்கத்தினர்கள் (Finance Members of the Viceroy's Executive Council) அநேகமாக இந்தியன் சிவில் சர்விசு (ICS) அங்கத்தினர்களாக இருந்தார்கள். இவர்கள் மிகவும் திறமைமிக்கவர்களாக இருந்தாலும், பிரிட்டிஷ் தனியார் சாட்சியின் நலத்துக்கும் இந்திய மக்கள் நலத்திற்கும் நடுநிலை வகிப்பதில் மிகவும் தொல்லைப்பட்டார்கள். முக்கியமாகச் செலாவணிக் கொள்கைகளில் (currency poilcy) மக்கள் நலத்திற்குப் பல இடர்ப்பாடுகள் நேர்ந்தன.

7. 1935 அரசியல் சீர்திருத்தம் முதல் 1947 விடுதலை வரை

செம்ஸ்ஃபோர்ட் - மாண்டேகு அரசியல் சீர்திருத்தங்கள் 1935ஆம் ஆண்டுப் புதிய சட்டத்தில் (Government of India Act 1935) அமைக்கப்பட்டன. இந்திய அரசாங்கத்துக்குக் கூடு தலான பொருளாதாரப் பொறுப்புகள் தரப்பட்டாலும் இந்திய செக்ரடரியும் (Secretary of State for India), பிரிட்டிஷ் அரசாங்கமும் (Whitehall) ஆட்டிவைப்பவர்களாக இருந்தார்கள். மத்திய அரசுக்கும், மாநில அரசுகட்கும் அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. எனினும், பொருளாதார நோக்கம் (economic policy) தட்டுத் தடங்கள் இல்லாமல் உருவாக வாய்ப்பில்லை. பொருளாதாரக் கொள்கைகளும், நோக்கங்களும் அரசியல் சூழ் நிலையைப் பொறுத்துத்தான் உருவாகும் என்பது நனி விளக்க மாயிற்று.

இந்தக் காலத்தில் காந்திஜியின் சட்ட மறுப்பு இயக்கத்தின் (Civil Disobedience Movement) விளைவுகளாலும் பின் ஆங்கிலேயர் வெளி ஏறுக (Quit India) என்ற இயக்கத்தாலும் நாட்டில் கொந்தளிப்பு அதிகமாக இருந்தது. காங்கிரசுக் கட்சி அமைச்சரவை 1937-ல் இராஜிநாமா செய்தபின் மத்திய சர்க்காரில் இடைக்கால வைசிராய் சபையாலும் மாநிலங்களில் இடைக்கால ஆலோசகர்களாலும் (advisory governments) நிருவாகம் நடைபெற்று வந்தன. பெரும்பாலும் உத்தியோகத் தர்கள் நிருவாகம் ஆகையினாலே, அவர்கள் எண்ணிக்கைப் பெரு கிற்று ; நிருவாகப் பொதுச் செலவும் அதிகரித்தது ; நிருவாகம் திறம்பட நடைபெற்றிருந்தாலும் பொருளாதார வளர்ச்சிக்கு இடம் இல்லாமல் போயிற்று. ஆரம்ப காலத்தில் நௌரோஜி, ரானடே, கோகலே போன்ற பொருளாதாரச் சிந்தனையாளர் கட்டும், சுதந்தரத்துக்குப்பின் வர இருக்கும் முன்னேற்றப்

பொருளாதார அறிஞர்கட்கும் (development economists) இடையில் இந்தக் காலத்தில் பொருளாதாரக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போயிற்று. நடைபெற்ற அரசாங் கங்கள் இடைக்காலப் பாதுகாக்கும் அரசாங்கங்களாக (care taker governments) இருந்ததால் அவர்கள் துணிந்து ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த இடைக் காலத்தில்தான் பண்டித நேருவின் தலைமையில் தேசியத் திட்டக் குழு (national planning committee) என்ற ஒரு குழு பல முக்கியமான அறிக்கைகளை ஒவ்வொரு பொருளாதாரத் துறைக்கும் வெளிப்படுத்தியது. இதன்பிறகு முதன்முறையாகத் தேசியத் திட்டம் வேண்டத் தக்கது எனக் கருதப்பட்டது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி என்றாலே ஆட்சியின் அதிகாரம் தலையிடாத போக்கு (laissez faire) என்பது பொருள். திட்டம் வகுத்தாலே பொருளாதார வளர்ச்சி ஒரு நெறிக்கு (controlled economy) அடங்கியதாகிவிடும். நேருவின் எண்ணங்கள் பின்னர் பொது வுடைமை (socialism) என்ற கொள்கையில் உறுதியடைந்தமைக்கு இந்தத் திட்டக் கமிட்டி ஓர் அறிகுறியாக இருந்தது.

சில ஆண்டுகளுக்குமுன் பல தொழில்கள் தனியார் துறையில் முன்னேற்றம் அடைந்தன. பருத்தி நூற்பு, நெசவு அமதாபாத் முதலிய இடங்களில் பெரிதும் முன்னேற்றமடைந் தன. சணல் தொழில் வங்காளத்தில் பெருகிற்று. சணல் ஆலைகள் பன்மடங்கு அதிகமாயின. கரும்பு ஆலைகள் உத்தர பிர தேசத்தில் ஓங்கிற்று. காகித ஆலைகள் சில இடங்களில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டன. இரும்பு எஃகு ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டன. புகழ்பெற்ற டாடா எஃகு ஆலை 1907ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அது திறமையாக நடத்தப் பட்டதால் பின்னர், வேறு சில ஆலைகளும் நிறுவப்பட்டன. பொறியியல் தொழில்களும் (engineering industries) இரசாயனத் தொழில்களும் (chemical industries) இங்கும் அங்கும் தலை காட்டின. நிலக்கரி கம்பெனிகளும் ஆரம்பிக்கப்பட்டன. அந்தக் காலத்தில் இவை முதலாளித் தத்துவத்தில் சேர்க்கப்பட்டு இகழப்படவில்லை. பொருளாதார வளர்ச்சி பொருளாதாரத் தத்துவத்தின் கண்கொண்டு பார்க்கப்பட்டது. பின்னர், அரசியல் சித்தாந்தங்கள் அடிப்படையில் பார்க்கப்படவில்லை. முதலாளித் துவம், சமுதாய உடைமை என்ற பாகுபாடுகள் இன்னும் வலுவடைந்து பிரியவில்லை. மேனாட்டில் முக்கியமாக இங்கி லாந்தில் தொழிற்கட்சி (labour party) வளர்ச்சியில் சில இந்திய அரசியல்வாதிகளும், பொருளாதார நிபுணர்களும் கவர்ச்சி

அடைந்தார்கள். ஃவேபியனிசம் (fabianism), சின்டிகலிசம் (syndicalism) முதலிய பொருளாதாரத் தத்துவப் பாகுபாடுகளில் இந்திய அறிவாளிகள் ஈடுபட்டார்கள்.

முதலாளித்துவம், பொருளாதாரக் கோணத்திலிருந்து பெருங் கவனம் செலுத்தப்படாவிட்டாலும் தொழிலாளிகள் இயக்கத்தில் (trade union) மிகுந்த சர்ச்சை செய்யப்பட்டது. தொழிலாளிகளின் கூலி விகிதங்கள், வேலை செய்யும் நேரம், வேறு சலுகைகள் முதலியவைகளைப்பற்றிச் சிந்திக்கும் போது பொருளாதாரம் நீக்கப்படமாட்டாது.

முன் தலைமுறையிலிருந்த பொருளாதாரச் சிந்தனையாளர்கள் அரசாங்கம் எடுத்துக் கொண்ட கொள்கைகளை ஆராய்ச்சி செய்து கண்டனம் அல்லது திருத்தம் கூறி வந்தார்கள். அவர்களை இந்த முதலாளி தொழிலாளி (capital vs. Labour) பிரச்சினைகள் ஈர்க்கவில்லை. பின் வந்த பொருளாதாரச் சிந்தனையாளர்கள் மேலும் மேலும் இதில் ஈடுபட வேண்டி இருந்தது. இதைச் சாதாரணமாக உணர்வதில்லை. இதைப்பற்றி அதிகமாக எழுதப்படவும் இல்லை. இடையே மகாத்மா காந்தியின் அடிப்படைக் கொள்கையான கிராமத் தொழில் முக்கியத்துவத்தால் அதன் முக்கியத்துவம் குறைந்தது.

8. செலாவணி சீர்திருத்தங்கள் தேவையானவை

இந்தியாவும் இங்கிலாந்தும் அரசியலிலும் வாணிபத்திலும் பிணைக்கப்பட்டிருந்ததால் இங்கிலாந்தில் நாணயச் செலாவணி விலை மதிப்பு மாறுதல்களால் (currency reforms) இந்தியாவும் பாதிக்கப்பட்டது. முகலாயர் காலத்தில் பொன், வெள்ளி இரண்டு நாணயங்களும் வழக்கில் இருந்தன. பண்டமாற்றத்துக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பு நிலையாகக் கையாளப்படவில்லை. மேலும், இவ்வளவு வெள்ளிக்கு இவ்வளவு பொன் சுழற்சியில் இருக்க வேண்டும் என்ற நிருணயமும் இல்லை. இதனால், குழப்பங்கள் ஏற்பட்டு வந்தன. தனியார்களும் உரிய பொருளைக் கொடுத்துத் தங்க நாணயங்கள் செய்து வைத்துக் கொள்ளலாம். 1806ஆம் ஆண்டு கிழக்கு இந்தியா கம்பெனி வெள்ளி ரூபாயையே அடிப்படை நாணயமாக (standard currency) ஏற்படுத்தினார்கள். பொன் நாணயத்திற்கு இதனால் செல்வாக்கு இல்லை. பணமாற்றங்களில் வெள்ளி நாணயங்களே கொடுத்து வாங்கப்பட்டன. அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளுக்குக் கஜானாக்களில் வெள்ளி நாணயங்களே செலுத்தப்பட்டன. மேலும் உலக அங்காடியில் பொன் விலை ஏற்றம் இறக்கம் அதிகமாக இருந்தது. பின் 1853-ல் பொன், வெள்ளி இரண்டும் குறிப்பிடப்பட்ட அளவில் சுழற்சியில் கொண்டுவரப்பட்டன. இச் செயல் இரட்டை உலோக நாணய முறையை (bi-metallism) மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதாய் ஆயிற்று. மேலும், சிறிதளவு காகிதச் செலாவணியை (paper currency) வங்கிகளுக்குத் தொடர்ந்து அரசாங்கமே தம் அதிகாரத்தில் அச்சிட்டு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. பின்பு, உலக அங்காடிகளில் வெள்ளி விலை மிகவும் வீழ்ச்சி அடைந்தது. இதன் விளைவாக ரூபாய்க்குப் பொன் மதிப்பு

நிலையாக 15 ரூபாய் ஒரு பவுண்டு என உறுதி செய்யப்பட்டது. இந்தப் பொன் நாணயத் திட்டம் (gold standard) மேலும் பொன் ஒதுக்கத்துக்கு (reserve) நிகராகத்தான் குறிப்பிட்ட பங்கு வெள்ளி நாணயம் சுழற்சியில் (circulation) இருக்க வேண்டு மென்றும் திட்டமிடப்பட்டது. இந்தப் பொன் நாணயத் திட்டம் நாட்டில் நிலையான நாணய விலை மதிப்பை நிலை நாட்டிற்று. அளவுகடந்த பொன் சேமிப்பும் (gold reserve) வைக்கத் தேவையில்லாமல் போயிற்று. இந்தியாவில் 1862-ல் இருந்து காகிதச் செலாவணி (paper currency) இருந்து வருகிறது. வாணி பத்தில் வெளிநாட்டில் பெறப்பட்ட பொன் செலாவணியைச் செல்லு செய்துகொண்டு அந்த அளவில் இந்தியாவில் நோட்டு அடிக்க முடிந்தது. வெள்ளி வாங்குவதற்கும் இந்தியா விலிருந்து பொன்னை அனுப்பத் தேவையில்லை. முதல் உலகப் போர் காரணமாகச் செலாவணி மதிப்புகள் தாறுமாறாக அதிர்ச்சி அடைந்தன. 1923-ல் ஹில்டன் யங்கு கமிஷன் வெள்ளி, காகித நாணயம் சுழற்சியில் இருக்கலாமென்றும், பொன் நிகர் எப்போதும் கவனிக்கப்படவேண்டும் என்றும் தீர்மானித்தது. பொன் பண்டமாற்றம் மதிப்பை (gold exchange rate) நிலைநாட்டு வதைவிட இது நல்லது என்று கருதப்பட்டது. ஆனால், துரதிஷ்டவசமாகப் பின்பு 1931ஆம் ஆண்டில் இங்கிலாந்து பொன் மதிப்புக் கொள்கையைக் கைவிட்டது. ஹில்டன் யங்கு கமிஷன் இந்தியாவுக்கு நிலையான திட்டம் பொன் உலோகத் திட்டம்தான் (gold bullion standard) என்று வலியுறுத்தியது. பொதுவான சுழற்சியில் பணம் மாறுபாடு அடையத் தேவை இல்லையென்றும், எந்த நேரத்திலும் பொன் வாங்கவோ விற்கவோ கூடுமானால் அதுவே போதும் என்றும், செலவாணி அதிகாரிகள் குறிப்பிட்ட மதிப்பின்படி 400 அவுன்ஸ் அளவு ஒரு தடவையில் வாங்கவும் விற்கவும் முன் வர வேண்டும் என்றும் கூறியது. வெள்ளி நாணயத்தின் முக்கியத்தைக் குறைக்க, ஒரு ரூபாய் நோட்டையும் அச்சிட்டு வழங்கலாம் என்றும் கூறிற்று. ரூபாயின் மாற்ற மதிப்புக்கு இந்தியாவில் தீவிரமான எதிர்ப்பு உண்டாயிற்று. இந்திய வர்த்தக உலகம் 1 ரூபாய்க்கு 1 ஷில்லிங்கு 4 பென்சு மதிப்பு நிலவ வேண்டும் என்று விரும்பிற்று. கமிஷன் 1 ஷில்லிங்கு 6 பென்சு இருக்க வேண்டு மென்று கூறிற்று. இந்தியப் பொருளாதார நிபுணர்கள் இந்த விதம் நாணயமாற்று விகிதத்தைத் தூக்கி வைப்பது உள்நாட்டு நாணய மதிப்பைக் குறைத்து விவசாயப் பொருள் ஏற்றுமதி யாளர்களின் இலாபத்தைப் பாதகப்படுத்தி, பிரிட்டிஷ் இறக்கு மதிப் பொருள்களின் விலையை ஏற்றுவதாக முடியுமென்று

கண்டித்தார்கள். இங்கிலாந்து பொன் நாணயத் திட்டத்தைக் (gold standrd) கைவிட்டபின் பவுண்டு - ரூபாய் இனமாற்றமே நிலவியது. விலை வாசிகள் வீழ்ந்ததால் சேமிக்கப்பட்ட பொன் காப்புநிதி (gold reserve) இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்து நிலை (balance of payment) நெருக்கடியைச் சமாளிக்க உதவி னாலும், சுமார் 3.6 கோடி அவுன்ஸ் பொன் அல்லது ரூ 300 கோடி விலைமதிப்புச் செலவழிந்து போயிற்று.

இந்தியப் பொருளாதார நிபுணர்களிடையே அரசாங்கத்தின் நாணய மாற்றத்தைப்பற்றிய கொள்கைகளைப்பற்றி (currency and exchange policy) மிகுந்த மனக்குறை ஏற்பட்டது. ஆரம்ப காலத்தில் இந்தியப் பொன் சேமிப்புகள் தாராளமாக இங்கிலாந் துக்கு மாற்றப்பட்டன. நாட்டில் நிலையான பொன்னின் அடிப் படையில் நாணய மதிப்பு நிலவவில்லை. இந்தியாவின் அயல் நாட்டுச் செலுத்துநிலை கேவலமானநிலைக்குப் போனபின் இந்தப் பொன் நாணயமாற்றம் (gold exchange standard) பயன்பட வில்லை. திட்டவட்டமான பொன் திட்டமே (gold Standard) வேண்டியிருந்தது. சாதாரணக் காலத்தில்தான் இந்த ஏற்பாடு ஒரு விதத்தில் மனநிறைவாக இருந்தது. எவ்வாறுயினும் இங்கிலாந்து பவுண்டுக்கு விலைமதிப்பை எப்போதும் அதிக மாகத் தங்கள் அதிகாரத்தினால் நிலை நாட்டியதை இந்தியப் பொருளாதார நிபுணர்களும், அரசியல்வாதிகளும் கடுமையாக எதிர்த்தார்கள். பேராசிரியர் கலே, பேராசிரியர் பானர்ஜீ போன்றவர்கள் இதைப்பற்றித் திட்டவட்டமாகத் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தார்கள். இரண்டாவது உலகப் போர்க் காலத்தில் ரூபாய்-பவுண்டு இணைப்பு இந்தியாவுக்குச் சாதக மில்லை என்பது விளங்கிற்று. இந்திய நாணயக் கொள்கை இவ் வாறு நெகிழ்ச்சி (elasticity) இல்லாமலிருந்து நாட்டுக்கு நலம் விளைவிக்க வில்லை. மற்ற எல்லா விஷயங்களைவிட இந்தச் செலாவணி கொள்கைகளைப்பற்றிய (currency policy) இந்தியப் பொருளாதாரச் சிந்தனை (economic thinking) மிகவும் தெளி வாகவும் திட்டவட்டமாகவும் வளர்ந்தது.

9. காந்தீயப் பொருளாதாரக் கொள்கைகள்

காந்திஜியின் 1920-21 ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய நாள் முதற்கொண்டு 1930-32 சட்டமறுப்பு இயக்கம் முடியும் வரையும் முக்கியமாகவும் அதற்குப் பின்னும் ஆக்க வேலைகள் (constructive programmes) என்ற முறையில் சில அடிப்படையான பொருளாதாரக் கொள்கைகள் வேர் ஊன்றின. கதர், சுதேசி, கைவினைகள் முன்னேற்றம், ஆலைகள் முன்னேற்றத்தைக் குறைத்தல் முதலிய கொள்கைகள் மக்களிடையே பரவின. பொருளாதார நிபுணர்கள் இவைகட்கு ஓரளவு மதிப்புக் கொடுத்தாலும் இவை அரசியல் கருவிகளையும் மக்கள் வறுமையையும் ஓரளவு மாற்ற வழியாகுமே தவிர இந்தியப் பொருளாதாரத் திட்டத்தைப் பெரிதும் மாற்ருது எனக் கருதினர். மான்செஸ்டர், லங்காஷயர் துணிகளை ஏற்காமை வெளிநாட்டுச் சுரண்டலைத் தவிர்க்க ஒரு கருவியாக இருந்தது. கதர் நெய்தல் ஏழைகள் வேலை செய்து ஒரு வேளை சோறு உண்பதற்காவது வழி காட்டியது. இயந்திரங்களின் வித்தரிப்பு (machinery) இந்தியாவில் அதிகம் வேண்டாமென்று சில மேல்நாட்டுப் பொருளாதார நிபுணர்கள்கூட ஒப்புக் கொண்டார்கள். ஆனால், உலகெங்கும் இயந்திர வித்தரிப்பு இடம் பெற்று வருகின்றபொழுது மக்கள் தொகை அதிகம் கொண்ட இந்தியாவில் தொழில் முன்னேற்றமும் ஆலைகள் பெருக்கமுமின்றி பொருள் வளர்ச்சி (economic growth) அடையாது என்பது பெரும்பாலான நிபுணர்களின் கருத்தாகும், ஒவ்வொருவரும் தினமும் நூல் நூற்க வேண்டும் என்ற கொள்கை நடை முறையில் வரமுடியாத கொள்கையாகக் காணப்பட்டது. அயல்நாட்டுப் பொருள்கள் அனைத்தையும் ஏற்க மறுத்து விலக்குவதும் முடியாத செயலாகக் காணப்பட்டது. காந்திஜி தனிப்பட்ட மனிதனின் (Individual or human) நிலையை நோக்கி மாற்றுவழி கூறினார். பஞ்சாயத்து ராஜ்ய திட்டம், நிலம் பகிர்ந்து கொடுத்தல் முதலியவை

நல்ல நோக்கங்களாயினும், சிக்கல்கள் கொண்ட சமுதாய நிலையில் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாய் இல்லை. கோபால கிருஷ்ண கோகலே இதைச் சுட்டிக் காட்டினார். பொருள் முன்னேற்றத்திற்கு மூலதனம் தேவை என்றும் தொழிலாளி மேன்மை அடைவதற்குத் தொழில் முன்னேற்றம் தேவை என்றும் கருதினார். காந்திஜியின் பொருளாதாரக் கொள்கைகள் ஓரளவுக்குத்தான் பயன்படும் என்றும், 20ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட பல்வேறு சமுதாய மாறுதல்களாலும் வெளிநாட்டுச் சம்பந்தங்களாலும் பெருவாரியாக இக்கொள்கைகளை ஏற்றுக்கொள்வதில் ஐயப்பாடும் காணப்பட்டது. விஞ்ஞானம் வளர்ந்தோங்கி வரும் காலத்தில் காந்தீய முறைகள் வெற்றி பெறுமா என்று பலர் உண்மையில் ஐயப்பட்டனர். காந்தீயத்தின் முக்கியத்துவம் பொருளாதார வளர்ச்சியில்கூட வன்முறை(non-violence)இன்மைஎன்பது. இது பெரிதும் விரும்பற்பாலது. எவ்வளவுதான் வளர்ச்சி இருந்த போதிலும் அதன் கடைசிப் பரிணமம் (வேறுபாடு) மக்களின் நலம் தான். எனவே, மோதல்களும் முரண்பாடுகளும் உடைய பொருளாதார வளர்ச்சி மற்ற சாதனைகளைப் பெற்றாலும், முக்கியக் கருத்தை இழந்துவிடும். ஆன்மீக வளர்ச்சி (spiritual) இன்றிப் பொருள் வள முன்னேற்றம் (material progress) பயன்படாது. காந்திஜி இவ்விரண்டையும் பிணைக்கவேண்டும் என்று கூறினார். இதற்கு முதல் அடிப்படை (1) தன் தேவைகளைக் குறைத்துக் கொள்ளுதல், (2) பிறர் தேவைகளுக்கு வழிவகை செய்தல். இதைத்தான் அவர் சுதேசி (swadeshi) என்றும் சர்வோதயம் (sarvodayam) என்றும் கூறினார். காந்திஜி அறிவியலை இகழவில்லை. அதை ஒழுங்கு படுத்தி சன்மார்க்க முறையில் பயன்படுத்துவதே அவர் நோக்கம். மேல் நாட்டுப் பொருளாதாரம் ஒரு தலையான நோக்கைக் கொண்டதாகக் காணப்பட்டது. அதாவது, மனிதனின் பொருட்தேவைகளை (material need) அதிகப்படியாக நிறைவு செய்வதேயாகும். மற்ற முயற்சிகள் எல்லாம் உற்பத்தியில் (productive) சேர்க்கப்படாது அதன் செலவுகளாகத் (cost of production) தள்ளப்பட்டது. பொருளாதாரம் ஓரளவுக்குத்தான் நலம் தரும். பொருளாதாரத்துக்கு வேறு ஆதாரங்கள் தேவை என்பதே நம் நாட்டுப் பண்டைய சித்தாந்தம். மேல்நாட்டுப் பொருளாதார விற்பன்னர் சிலர்கூட உலகுக்காக பொருளாதாரத்துக்கும் ஆன்மீகத்துக்கும் இடையே ஒரு மத்திய வழி நாட்டின் நலத்துக்கு நல்லது என்று கருதினர். தற்காலத்துப் பொருளாதாரத் தத்துவம் மனிதனின் தேவைகளை அளவற்ற எல்லை வரைக்கும் தீர்த்து வைக்கலாமென நம்பிக்கை கொள்கிறது.

இது தவறான கொள்கை. முடியாத செயல். எனவே, பொருளாதார மாறுதல்கள் நிதானமாகவும் வன்முறையின்றியும் வருவதே நல்லது. புரட்சித் (revolutionary) தன்மை கூடிய மாறுதல்கள் கட்டாயத்தாலும் (authoritarian) அடக்குமுறையாலும் (regulation) வரலாம். இயல்பாகவே மனிதனுடைய நல் வளர்ச்சியாலும், சமுதாயத்தின் ஒற்றுமைப்பாட்டினாலும் வரலாம். இரண்டாவது முறையே வேண்டற்பாலது. காந்தீயத்தின் கொள்கைகள் புரட்சிகரமாக இருந்தாலும் அது மனிதனின் இதயத்தைப் பண்படுத்திச் சாதிக்க வேண்டியதாக இருக்கும். உதாரணமாகப் பணமுள்ளவர் தமது செல்வம் ஏழைகளுக்காக நம்பிக்கையால் வைத்துவைத்த செல்வம். இதில் அவர்களுக்கு முழு உரிமை (trustees life) கிடையாது. இது, பொது உடைமைத் (socialism) தத்துவத்தினுள் அடங்காது; கம்யூனிசக் கொள்கையிலும் சேராது. இவற்றுள் ஒன்று வற்புறுத்தலுக்கு உடனாக வேண்டும்; மற்றொன்று வன்முறைக்கு உடனாக வேண்டும். எனவே, காந்திஜியின் கொள்கைகளைப் பொருளாதார விதிகளுக்குக் (economic laws of theory) கொண்டுவர பொருளாதாரச் சிந்தனையாளர்கள் இடர்ப்பட்டார்கள். ஆனால், அவர்கள் காந்திஜி பொருளாதாரத்தையும் மனுநீதியையும் பிணைத்துப் பிரச்சினைகளை நோக்கினார்கள். பொருளாதாரச் சாத்திரம் ஏதாவது பயனுடையதாக இருக்க வேண்டுமானால், அது சமயம் அல்லது ஆன்மீகத் தன்மைக்கு உடன்பாடுடையதாக இருக்க வேண்டுமென்று (Economics to be worth anything must be capable of being reduced in terms of religion or spirituality) காந்திஜி கூறினார். தற்காலப் பொருளாதார விதிகள் இதை முற்றும் ஏற்றுக்கொள்ளா. ஆனால், காந்திஜி நடத்திய போராட்டத்தில் சத்தியாக்கிரகம் ஒரு புறம் இருக்க, பொருளாதார ஆயுதங்களே பிரிட்டனை மிகவும் பாதித்தன. சுதேசி சுயராஜ்யத்துக்கு வழி. பிரிட்டனின் கட்டுப்பாடில்லாத வாணிபம் (free trade) இந்தியாவுக்கு நஞ்சு போன்றது. சர்க்கா பல கோடி மக்களுக்குச் சோறு போடும். கிராமக் கைத்தொழிலே இந்திய வறுமையை ஒழிக்கும். தொழிலாளி நலமே முதலாளி நலம். தொழிலாளிகள் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். அஹிம்சை வழியே தொழிலாளிகட்கு வெற்றி தரும். பஞ்சாயத்து ராஜ்ய ஆட்சி மக்களுக்குப் பொறுப்பைத் தரும். நிருவாகச் செலவைக் குறைக்கும். உத்தியோகத்தர்கட்கு ரூ. 500க்குமேல் சம்பளம் தேவை இல்லை. இவைப் போன்ற கொள்கைகள் பெரிய பொருளாதாரக் கோட்பாடுகள் கொண்டு விமர்சனம் செய்யத் தேவை இல்லை. இவை பகுத்தறி

வுக்கு ஒத்ததாகவே இருந்தன. எனவே, பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியர்களிடத்திலும் காந்தீயப் பொருளாதாரம் வெகுவாக விமர்சனம் செய்யப்படாவிட்டாலும் அப்படிப்பட்ட பொருளா தாரத்திற்கு இடம் உண்டு என்பது பரவலாயிற்று. இன்று வரையிலும்கூட காந்தீயப் பொருளாதாரம் மறுக்கப்படவில்லை. ஆனால், சுதந்தரத்திற்குப்பின் தொழில் உற்பத்தி பெரும் முக்கி யத்துவத்தை அடைந்தது. அதற்கான வெளிநாட்டுக் கடன்களும் (foreign aid) வெளிநாட்டு நுண்கலைகளும் (foreign technology and Know-how) ஏராளமாக நாடு பெற்றது. மத்திய திட்ட முறையால் (central planning) மத்திய கட்டுப்பாடு இல்லாத (decentralised economy) பொருளாதாரம் என்ற ஒன்றையே கடைப்பிடிக்க முடியவில்லை.

10. 1947 விடுதலைக்குப்பின் பொருளாதாரப் போக்குகளும் நோக்கங்களும்

இந்திய விடுதலை நெடு நாள் சுதந்தரப் போராட்டத்திற்குப் பின் எதிர்ப்பாராவண்ணம் கிடைத்தது. ஆனால், பாகிஸ்தான் பிரிவினையால் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. பிரிவினையினால் ஏராளமான அகதிகள் இந்தியாவுக்குள் புகுந்ததால் அவர்களுக்குப் புனர்வாழ்வு தருவதற்கு ஏராளமான பணச் செலவு ஆயிற்று. விடுதலை அடைந்தபின் வெளி நாடுகளில் தூதர் ஆலயங்கள் நிறுவ வேண்டியிருந்தன. இதற்கும் அதிகப் பணம் தேவையாயிற்று. பாதுகாப்புக்கு இராணுவத்தைப் பலப்படுத்த வேண்டியிருந்தது. காஷ்மீர் தகராறு மேலும் பொருளாதாரச் சுமையைத் தந்தது. பாகிஸ்தானுக்கு ரூ. 200 கோடி ஈடு செய்ய வேண்டியிருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் சேமித்து வைத்த வெளிநாட்டுச் செலாவணி (foreign exchange reserve) விரைவில் கரைந்து கொண்டு வந்தது.

விடுதலைக்குப்பின் முதன்முதலாக ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகள் (economics of partition) பொருளாதார நிபுணர்களின் கவனத்துக்கு வந்தன. அதுமட்டுமன்றி முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதால் பொருள் சாதனங்கள் (resources) தேவைப்பட்டன. பண்டித நேருவின் பெரும் புகழால் பல வெளி நாடுகளின் பொருள் உதவி (foreign aid) கிடைக்க ஆரம்பித்தது. விடுதலை வந்ததின் அறிகுறியாக மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் சேமநல பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

விடுதலையைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் மழை யின்மையால் நாட்டில் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டது. அமெரிக்கா ஏராளமாக உதவி செய்தது (point four aid). அப்படி இருந்தும் இந்தியப் பொருளாதாரம் புது திருப்பத்தில் நின்றது. முதன்முதலாக இந்தியா வளர்ச்சி பெற வேண்டிய நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் (economics of a developing country) எவ்வகை இருக்க வேண்டுமென்று சிந்திக்க வேண்டியதாய் இருந்தது. விலைவாசிகள் நஞ்சுபோல் ஏறின. உணவுப் பங்கீட்டுத் திட்டத்தைப் (rationing) பரவலாகச் செய்ய வேண்டியிருந்தது. இன்னும் பலவிதமான கட்டுப் பாடுகளை (economic controls) அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இந்திய அரசியல் சாசனத்திலுள்ள சில இயக்குமுறைக் கட்டளைகளின்படி (directive principles of the constitution) அரசாங்கம் இலவசக் கல்வியை 14 வயது வரையில் தரவேண்டி யிருந்தது. சமுதாய நலத் திட்டமும் பஞ்சாயத்து ராஜ்ய திட்டமும் ஆரம்பிக்கப்பட்டன. இவைகளுக்கெல்லாம் அரசாங்கம் செலவு செய்யவேண்டியதாயிற்று. பல்வேறு காரணங்களால் பணவீக்கம் (inflation) ஏற்பட ஆரம்பித்தது. செப்டம்பர் 1949-ல் ரூபாயின் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது. வரவு செலவுக் கணக்கைச் (budget) சரிகட்டுவதற்குப் (deficit finances) புது வரிகள் போட்ட பின்பும், நோட்டு அடித்துப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இந்த முறை தேவையா தேவை இல்லையா, தேவையானால் எந்த அளவு அதை மேற்கொள்ளலாம் என்ற சர்ச்சை பொருளாதார நிபுணர்களிடையே ஏற்பட்டது. ஒரு கட்சியினர் பற்றுக்குறை தரும் நிதியாட்சி (deficit spending) தேவைதான்; அது பொருளாதார வளர்ச்சிக்கு இன்றி யமையாதது என்று கருதினர். மற்றொரு சாரார் இந்த ஆட்சியினால் பண வீக்கமும் (inflation), விலைவாசிகளின் உயர் வும் கட்டுக்கடங்காமல் போய்விடும் என்று எண்ணினர். இந்தியா குடியரசு நாடான 1950ஆம் ஆண்டில் விலைவாசிகள் 1939ஐ 100 என்று அடிப்படையாக வைத்துப் பார்த்தால் 405·2 என்ற அளவில் நின்றது. இதனால், சம்பளம், கூலி உயர்த்த வேண்டும் எனும் கிளர்ச்சிகள் எங்கும் தோன்றின.

மேற்கூறிய காரணங்களால் இந்தியப் பொருளாதாரத்தின் உள்துறை அமைப்பே (infra structure) மாறுபட்டது. நாட்டி லுள்ள வங்கிகளின் மூல தனத்திலிருந்தோ (banking system) மக்கள் சேமிப்பு நிதிகளிலிருந்தோ (savings) செலவுகளை ஈடு

செய்ய முடியவில்லை. ரிசர்வ் வங்கியும் ஒன்றும் செய்ய முடியவில்லை. பணச் சுழற்சி (money circulation) அதிகமாகிக்கொண்டு வந்தது. இவ்வளவு இருந்தும் ஒரு மனிதனின் சராசரி ஆண்டு வருமானம் 1931-32-ல் ரூபாய் 241ஆக இருந்தது. 1949-50-ல் ரூபாய் 249 ஆகத்தான் உயர்ந்தது. இன்னும் உண்மை வருமானம் (real income) நாணய மதிப்பீடு குறைவால் இதைவிடக் குறைவென்றே கூறலாம். சில பொருளாதார நிபுணர்கள் அரசாங்கத்தின் சக்திக்கு மீறிய செலவுகளை மேற்கொள்வதாக எண்ணினார்கள். சிலர் அவ்வாறு செய்யாவிடின் நாட்டில் பல கோடி மக்கள் மனக்குறையும் அமைதியின்மையும் அடைவார்கள் என்று கருதினார்கள். அரசாங்க நிதியாலேயே (government finance) ஆக்க வேலைகளை விரைவாக நிறைவேற்றி மக்கள் நலத்தைப் பெருக்க வேண்டுமென்று எண்ணினார்கள். கைத்தொழில் முன்னேற்றம் விரைவாக நடைபெற வேண்டியிருப்பதால் அரசாங்கமே பொதுத் துறையிலே (public sector) அந்த வளர்ச்சியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எண்ணினர். வெளிநாட்டு நுண்பொருள் அறிவையும் (know-how) பெற வேண்டும் என்று கருதினார்கள்; வெளிநாட்டு முதலீடுகள் (foreign investment) நாட்டில்அதிகமாக வேண்டுமென்று எண்ணினார்கள். முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அந்த இடம் தொழில் முன்னேற்றத்திற்குத் தரப்பட்டது. இவை நேருவின் நோக்கத்தாலும், சில பொருளாதார நிபுணர்களின் கருத்துகளாலும் உருவடைந்தன. ஆனால், இவை கொரியா சண்டையால் (Korean War) பாதிக்கப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணி போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை.

பின்பும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையால் (foreign policy) வெளிநாட்டு உதவிகள் பாதிக்கப்பட்டன. சார்பின்மைச் (non-alignment) சில அயல் நாடுகளுக்குப் பிடிக்கவில்லை. இந்தியா மேற்கு வல்லரசுத் தொகுதியிலாவது சேர வேண்டும் அல்லது கம்யூனிசத் தொகுதியிலாவது சேரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. இந்த நிலையில் பிரதமர் நேரு அரசியல் நோக்கமல்லாத (political strings) உதவியை எந்த நாடாக இருந்தாலும் இந்தியா பெறும் என்று கூறினார். பொருளாதார நிலைக்கு எந்த அளவு வெளிநாட்டு உதவி பெறலாம் என்ற பிரச்சினை அடிக்கடி எல்லா வட்டாரங்களிலும் சிந்திக்கப்பட்டது. பொதுத் தேர்தல்களிலும் அரசியல் கட்சிகள் இது சம்பந்தமான கொள்கைகளைத் தெரிவித்தன. மத்திய நிதி அமைச்சர்களிடத்தும் காலத்துக்குத் தக்கவாறு கருத்துகள்

உருவாயின. அரசின் கருத்துகள் (Government thinking) திட்டக் கமிஷனின் கருத்துகளுக்கு ஒத்ததாக இருக்க வேண்டியிருந்தன. அரசின் கருத்துகள் ஆளும் கட்சியின் அதாவது காங்கிரசுக் கட்சியின் கருத்துகளையும் (congress party thinking) தழுவ வேண்டியிருந்தன. இவைகட்குப் புறம்பான கருத்துகள் கிழக்குச்சாரி (leftist thinking) கம்யூனிஸ்டுக் கட்சிகளாலும் வலதுசாரி கருத்துகள் (rightist thinking) கொண்ட சுதந்தராக் கட்சிகள் போன்ற கட்சிகளாலும் தனிப்பட்ட தொழில் அதிபர்கள் போன்றவர்களாலும் அறிவிக்கப்பட்டு வந்தன. பிற நாட்டு உதவி (foreign aid) இந்தியப் பொருளாதார அமைப்பில் நீக்கமுடியாத இடம் பெற்றுவிட்டது. ஏற்றுமதிகளை வளரச் செய்து அதனால் வெளிநாட்டுச் செலாவணியை அதிகமாகப் பெற வேண்டுமென்ற கொள்கை அதே சமயத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டது. இது காரணமாக உள்நாட்டு அடக்க விலை கோப்புப் (cost structure) பெரிதும் பாதிக்கப்பட்டது. உள்நாட்டுப் பங்கீட்டிற்குப் பண்டங்கள் குறைவாகவும், விலை அதிகமாகவும் ஆயின. வெளி நாடுகளிலும் இறக்குமதிக்குப் பல கட்டுப்பாடுகள் போடப் பட்டன. எனவே, ஏற்றுமதிப் பெருக்கம் (export promotion) ஓரளவுக்குத்தான் முன்னேற்றமடைந்தது. ஏற்றுமதி செய்பவர்கட்குப் பலவிதச் சலுகைகள் தரப்பட்டன. அப்படி இருந்தும் வெளி நாட்டுச் செலாவணி பெருக்கமடையாது முடையாயிற்று (foreign exchange debacle). இந்தியப் பொருளாதாரம் ஒரு நெருக்கடி நிலையில் நின்றது. அரசாங்கக் கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை; அவைகளை முற்றும் நிராகரிக்கவும் முடியவில்லை.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சோசலிச சமுதாயத்திற்கு (socialist pattern of society) ஏற்ற பொருளாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறப்பட்டது. இவைகளின் குறிக்கோள்கள்: (1) தேசீய வருமானம் (national income) உயரவேண்டும். (2) விரைந்து தொழில் மயமாக்கப்படவேண்டும் (rapid industrialisation). அதிலும் அடிப்படையான கனரகத் தொழில்கள் (basic and heavy industries) விரைவில் முன்னேற்றமடைய வேண்டும். (3) மக்கள் வருமானங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் (irregularity in income) குறைய வேண்டும். (4) எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் (standard of life) உயர வேண்டும். (5) வேலை வாய்ப்புகள் (employment) அதிகரிக்க வேண்டும் என்பனவாகும்.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றப் புதிய வரிகள் போடப்பட்டன. அவை இறந்தவர் சொத்து வரி (estate duty), அன்பளிப்பு வரி (gift tax), முதலீட்டு இலாப வரி (capital gains tax), சொத்துவரி (wealth tax), செலவுவரி (expenditure tax) முதலியவையாகும். இந்த வரிகள் திரு. நிக்கலாஸ் கால்டார் (Mr. Nicholas kaldor) சமர்ப்பித்த அறிக்கையின் பயனாகத் (Report on Indian Tax Reform) தீர்மானிக்கப்பட்டன. வருமான வரி சட்டம் (Indian income tax act) திருத்தப்பட்டது. 25 சத விகிதம் அசையாத முதல் (fixed assets) வகையில் போடப் பட்ட பணத்துக்கு முன்னேற்றத்தள்ளுபடித் (development rebate) தரப்பட்டது. இந்த வரிகள் பற்றி விவாதம் இருந்தது. இந்த வரிகள் நம் நாட்டுக்குப் பொருந்தாது எனக் கருதப்பட்டது.

வெளிநாடுகளுடன் பல வியாபார உடன்படிக்கைகள் (trade agreement) மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியால் இறக்குமதிக் கட்டுப்பாடு அதிகமாக் கப்பட்டது. சில பொருள்களின் வெளிநாட்டு வாங்கல், விற்றல் வியாபாரத்தை நடத்த அரசாங்க வியாபார நிறுவனம் (State Trading Corporation) ஒன்று நிறுவப்பட்டது.

நான்காம் ஐந்தாம் திட்டம் சீனப் படையெடுப்பால் பாதிக்கப் பட்டது. விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்கப் பற்றுக்குறை நிதி ஈடு கொள்கையைக் குறைந்த அளவுக்குப் பயன்படுத்தப் பட்டது.

காங்கிரசுக் கட்சி ஒன்றே நாடெங்கும் ஆட்சி செய்து வந்ததால் அரசாங்கப் பொருளாதார நோக்கங்கள் பெருமளவு கட்சியின் நோக்கங்களுடன் ஒத்ததாகவே இருந்தன. 1951ஆம் ஆண்டுக் காங்கிரசு தேர்தல் அறிக்கை நாட்டில் கூட்டுறவுச் சமுதாயம் (co-operative common wealth) என்ற குறிக்கோளை நிலைநாட்ட வேண்டும் என்று கூறியது. போட்டியையும் முரண் பாட்டையும் தவிர்த்துக் கூட்டுறவையே எல்லா உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களிலும் நிலைநாட்ட மேற்கொள்ளப் பட்டது. 1955ஆம் ஆண்டு ஆவடி காங்கிரசு மாநாட்டில் முதன் முறையாகச் சமவுரிமை சமுதாயக் குறிக்கோள் (socialistic pattern of society) வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டது. 1957ஆம் ஆண்டில் இந்தூரில் கூடிய காங்கிரசு மாநாட்டில் தொழிற்குடியாட்சி (industrial democracy) ஏற்படுத்த வேண்டு மென்றும், தொழிலாளர்கட்கும் அதில் பங்கு இருக்க வேண்டு மென்றும், கிராம நிருவாகத்தில் கிராமவாசிகளுக்கு நிரம்பப் பங்கு

இருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. 1959ஆம் ஆண்டு நாகபுரியில் கூடிய காங்கிரசில் பண்டித நேருவின் ஆர்வமுடைய கொள்கையான கூட்டுறவு விவசாய முறை (co-operative farming) வலியுறுத்தப்பட்டது. 1962ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் காங்கிரசு விஞ்ஞானத்தையும் நுண்கலைகளையும் (science and technology) வளர்க்க வேண்டுமென்றும் சமுதாய நீதியை (social justice) நிலைநாட்ட வேண்டுமென்றும் கூறப்பட்டது. 1964ஆம் ஆண்டு புவனேசுவரத்தில் கூடிய காங்கிரசு மாநாட்டில் கட்சியின் நோக்கம் சமவுரிமைக் குடியாட்சி (democratic socialism) என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டது. சமவுரிமை கூடிய சமுதாயம் என்பது மாறி, சோஷலிசம் என்பது பூரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது ருஷ்ய நாட்டுச் சோஷலிசம் இல்லை என்பதற்கு அறிகுறியாகக் குடியாட்சி சோஷலிசம் என்று வேற்றுமைப்படுத்திக் காட்டப்பட்டது. நேரு இறந்த பிறகு காங்கிரசுக் கட்சியின் கொள்கைகள் ஏறக்குறைய மாறுதலின்றி இருந்தன. திரு. லால் பகதூர் சாஸ்திரி வரவுசெலவு திட்டத்தைக் கூடுமானவரை துண்டு விழாமல் சரிகட்ட வேண்டுமென்ற கருத்துடையவராய் இருந்தார். பற்றுக்குறை நிதி அளிப்பு மிகவும் குறைக்கப்பட்டது.

11. திருமதி இந்திரா காந்தி காலம்

இந்திரா காந்தி பிரதமரானபின் சோஷலிசக் கொள்கைகள் மிகவும் தீவிரமடைந்தன. ஆயுள் இன்சூரன்சும் (life insurence), முக்கிய வங்கிகளும் தேசியமயமாக்கப்பட்டன (nationalisation of banks). இன்னும் பல தொழில்கள் தேசியமயமாக்கப் பட்டன. ஆனால், பூரண சோஷலிசம் கொள்கையல்லவென்றும் கலப்புப் பொருளாதாரமே (mixed economy) குறிக்கோளென்றும் விளக்கப்பட்டது. சோஷலிசத்துக்கு அறிகுறியாக அரசர்களின் இராஜ்ய மானியத்தை (privy purse of princes) நீக்கச் சட்டம் செய்யப்பட்டது. நில உச்சவரம்புகள் போட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. பொருள் வருமானத்துக்கு உச்ச வரம்பில்லாவிட்டாலும் வரி வகைகளின் பாரம் குறையவில்லை. காங்கிரசுக் கட்சியில் இடது சாரிக்காரர்கள் (leftists) கருத்துகளே வெற்றி அடைந்தன. காங்கிரசுக் கட்சியே பிளவு பட்டது. பழைய காங்கிரசு எதிர்க் கட்சியாக மாறிற்று. 1971ஆம் ஆண்டு இறுதியில் பாகிஸ்தானோடு நடந்த போரில் இந்தியா வெற்றி அடைந்து பங்களா தேசத்தை விடுதலைச் செய்ததினால் அரசாங்கத்துக்குச் செல்வாக்கு அதிகரித்தது. ஆனால், சுமார் 10 இலட்சம் கிழக்கு வங்காள அகதிகளுக்குப் புகலிடம் தந்ததாலும் சண்டையாலும் மிக அதிகமாகச் செலவு உண்டாயிற்று.

பொருளாதார நிபுணர்கள் பொதுத் துறைக்குச் செல்வாக்கு அளித்துத் தனியார் துறையின் வலிமையை ஒடுக்கியதைப் பற்றித் தங்கள் கருத்து வேற்றுமைகளைத் தெரிவித்தார்கள். பொதுவுடைமைக் கொள்கையால் நிதியளிப்பதும் (capital formation), வெளியார் இந்தியாவில் பணம் போட்டுத் தொழில் நடத்துவதும் (foreign investment) பாதிக்கப்பட்டன என்றும் குறை கூறப்பட்டன. எந்த அளவு இந்தியாவுக்குப் பொது உடைமை

கொள்கை தேவை, எந்த அளவுக்குத் தேவை இல்லை என்பதற்கு எவ்விதமான விதி ஒன்றும் (economic theory) நிபுணர்கள் கோட்பாடு செய்யவில்லை. பொருளாதார நிபுணர்களிடையே பொதுவுடைமைப்பற்றிப் (nationalisation) பெரிய தர்க்கம் நடந்து வந்தது; தொடர்ந்து நடந்தும் வருகிறது. பிரதமர் இந்திரா காந்தியின் நோக்கங்கள் நெகிழ்ச்சியுற்றதாக (flexible) இருந்தாலும் கட்சியில் சிலர் பூரண சோஷலிசப் போக்குகளை மேற்கொள்ள வற்புறுத்துபவர்களாக இருந்தார்கள். இந்திரா காந்தி வறுமையை ஒழிக்க (Garibi hatao) எல்லா வழிகளையும் மேற்கொள்ளத் தயாராயிருந்தாலும் ஓரளவுக்குத்தான் நடைமுறையில் கைக்கொள்ளக் கூடும். இந்தியப் பொருளாதாரம் தன் பலத்தில் (selfreliant economy) நிற்க வேண்டுமென்ற கொள்கையைப் பிரதமர் வற்புறுத்தி வருகிறார். இதனால், அமெரிக்க உதவி மிகக் குறைந்து போனாலும், இந்தியா தனது பொருளாதாரத்தைத் தானே சமாளிக்க முயல வேண்டும் என்ற கருத்தை எல்லாருமே ஒப்புக் கொள்வர். அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் (President Nixon) இந்தியாவின்பால் காட்டும் குறைந்த நேசத்தால் இந்தியப் பொருளாதாரம் அதிகமாகப் பாதிக்கப்படக் கூடாது என்பது கொள்கை. ருஷ்யாவின் ஆதரவு போதுமான அளவுக்கு இருந்துகொண்டு வருவதால் பயமில்லை. முக்கியமாகத் தளவாட உதவி பொருளுதவியைவிட முக்கியமானது. இந்த விஷயத்தில் ருஷ்யாவின் நட்பு இந்தியப் பொருளாதாரத்திற்கு ஊறு இன்றி நிற்கிறது.

12. வேறு சோஷலிசக் கட்சிகளின் கொள்கைகள்

இந்தியாவில் வேறு சோஷலிசக் கட்சிகள் பல இருக்கின்றன. அவை சோஷலிசக் கட்சி, அகில இந்திய சோஷலிசக் கட்சி, கிசான் மஸ்தூர் பிரஜா கட்சி, சம்யுக்த சோஷலிசக் கட்சி, பிரஜா சோஷலிசக் கட்சி முதலியனவாகும். இந்தக் கட்சிகளின் கொள்கைகள் ஒன்றுக்கொன்று சிறிதளவு வேறுபடும். பொருள் எல்லாம் ஒரு சிலரிடத்தில் அடைப்படக் கூடாது (concentration of wealth) என்று எல்லாக் கட்சிகளும் வற்புறுத்துகின்றன; அமெரிக்கா முதலாளித்துவ (capitalist) நாடாகையால் அதனுடைய அயல்நாட்டுக் கொள்கைகட்கு இடம் தரக்கூடாதென்றும் வாதாடுகின்றன; மக்களின் வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வேண்டுமென்றும் வாதாடுகின்றன; பணக்காரர் மேல் வரி இன்னும் அதிகம் போட வற்புறுத்துகின்றன; தொழில் அதிபர்களின் இலாபத்தை வரையறுக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றன; பயிரிடுவோருக்கு நிலவுரிமை வேண்டுமென்று கட்டாயப்படுத்துகின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சிகளில் முக்கியமானவை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, ரெவலூஷனரி சோஷலிச கட்சி, ஃபார்வார்ட் பிளாக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்ஸிஸ்டு) முதலியனவாகும். இவைகளின் தர்க்கம் எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்குவது, அதிகப்படியான நிலங்களை நிலச்சுவான்தாரர்களிடமிருந்து பறிமுதல் செய்து நிலமில்லாதவர்கட்குப் பகிர்ந்து கொடுப்பது,

தொழில் ஆலைகளில் தொழிலாளர்கட்கு அதிகாரம் கொடுப்பது முதலியவையாகும். வங்கி, ஆயுள், பொது இன்சூரன்ஸ்கள், எஃகு, நிலக்கரி, எண்ணெய், சர்க்கரை, காப்பி, தேயிலை முதலிய எல்லா உற்பத்திகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்பது இக் கட்சிகளின் கொள்கை. தொழிலாளர்கட்குச் சலுகைகளை அதிகமாக்க வேண்டுமென்பதும் இவைகளின் குறிக்கோள். ருஷ்யா மாதிரி முழு பொதுஉடைமை (complete socialist transformation) ஆக்கவேண்டுமென்பது இக் கட்சிகளின் பொது நோக்கம். மார்க்ஸிஸ்டுக் கட்சி புரட்சியாலும் வன்முறையாலும் இவற்றை நடத்தலாம் என்ற போக்கு உடையது. அநேகமாக இந்திய கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்களை ஜனநாயகக் கட்சிகளென்றே கூறி கொள்கின்றன. இது இந்தியப் பொருளாதாரத்திற்கு ஒரு நல்ல அறிகுறி. ஏனெனில் எந்தத் தர்க்கமும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

13. மாநிலப் பொருளாதாரம் (1967)

1967ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்குப்பின் சில மாநிலங்களில் காங்கிரசல்லாத கட்சிகள் ஆட்சிக்கு வந்தன. காங்கிரசைச் சார்ந்த கட்சிகள் மத்திய காங்கிரசு ஆட்சியின் கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள கட்சிக் கட்டுப்பட்டால் கடமைப்பட்டவைகள். ஆனால், மற்றைய கட்சிகளுக்குத் தங்கள் சொந்தமான பொருளாதாரக் கொள்கைகள் உண்டு. ஒரே கட்சி மாநில ஆட்சிகளும் தங்கள் தங்கள் மாநிலங்கட்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவைகளாகும். எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியான பொருளாதார நிலை இருக்க முடியாது. இயற்கை வளங்கள், குடிகளின் நிலைமை முதலியவை வேறுபடும். இந்தியாவில் எல்லா மாநிலங்களின் பிரச்சினைகளும் அடிப்படையில் ஒன்றுபோல் இருந்தாலும், வெவ்வேறு விதங்களில் அவைகளைத் தீர்க்க வேண்டும். அதேபோல் வெவ்வேறு கட்சிகளின் அணுகும் முறையும் மாறும். உத்தர பிரதேசத்தின் நிலை வங்காளத்துக்கு மாறுபட்டதாக இருக்கும். கேரளாவின் நிலை ஆந்திர பிரதேசத்திற்கு மாறுபட்டதாக இருக்கும். சில மாநிலங்களில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தன. ஒரு மாநிலத்தில் சுதந்தராக் கட்சி ஆட்சிக்கு வந்தது. இவைகட்கும் மத்திய காங்கிரசுக் கட்சிக் கொள்கைகட்கும் சில விஷயங்களில் வேற்றுமைகள் இருந்தன. நில உச்ச வரம்பு, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் தேசீயமயமாக்குதல், தொழில்களைத் தேசீயமயமாக்குதல் ஆகியவைகளில் கருத்து வேற்றுமை இருந்தன. எந்தக் கட்சியாயிருந்தாலும் எல்லா மாநில ஆட்சிகளுக்கும் ஒரு பொதுவான குறைபாடு நிதி பற்றுக்குறை ஆகும். மத்திய அரசை அடிக்கடி நிதி உதவிக் கோருதல் வழக்கமாயிற்று. அரசியல் அமைப்புப்படி (constitution) ஐந்தாண்டுக்கு ஒரு முறை நிதிக் கமிஷன் (finance commission) ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்டு அது மத்திய அரசுக்கும் பல்வேறு மாநில அரசுகட்கும் வரிப்

பங்கீடுகள் (tax shares) விருப்பப்படியான மானியங்கள் (discretionery grants) நிருணயிக்கப்பட்டு வருகின்றன. சில பங்கீடுகள் மாநிலங்களின் மக்கள்தொகை விகிதத்தின் மேல் நிருணயிக்கப் படும். சில, அந்தந்த மாநிலங்களின் கடன் நிலையைப் பொறுத்து நிருணயிக்கப்படும். பொதுவாகக் கடன் அதிகமாகக் காட்டும் மாநிலங்கட்கு, மானியம் அதிகமாக வழங்கப்படும். சிக்கனம் கடைப்பிடிக்கும் மாநிலங்களுக்குப் பரிசு குறைவாகவே கிடைக்கும். நிதிக் கமிஷனின் பரிந்துரைகள் மாநிலங்கட்கு முழு திருப்தி அளிப்பதில்லை. மாநிலங்கள் அடிக்கடி ரிசர்வ் வங்கியிடம் அதிகக் கடன்கள் (over drafts) வாங்கும். இவை அளவுக்கு மீறி போய்விடும். ரிசர்வ் வங்கி சில சமயங்களில் கடனைத் தீர்க்கும்படிக் கட்டாயப்படுத்தும். நிற்க, மத்திய அரசு தங்கள் ஊழியர்கட்கு ஊதியம் உயர்த்தினல் மாநில அரசுகளும் தங்கள் ஊழியர்கட்கு ஊதிய உயர்வுதர வேண்டியிருக்கும். மத்திய ஊதிய உயர்வு மாநிலங்களோடு கூடி ஆலோசித்துத் தரப்படுவதில்லை. திடீரென இந்தச் செலவு மாநிலங்கட்கு வந்து சேரும். அப்போது மாநிலங்கள் மத்திய அரசு மானியத்துக்கு மனு போட நேரிடும். தவிர, மாநிலங்களில் வறட்சி, வெள்ளம் ஏற்பட்டால் நிவாரணத்திற்கு உடனடியாகத் தேவையான பணத்திற்கு மத்திய அரசையே கேட்க வேண்டியிருக்கும். மாநில அரசுகளின் மத்திய அரசின் கடன் வகைகளுக்கு வட்டி செலுத்துவதற்கே திண்டாட வேண்டியிருக்கும். இந்த அவலத்தைப் போக்க மாநிலங்களில் சில அமைச்சர்களும்,பொதுவாகப் பொருளாதாரச் சிந்தனையாளர்களும் நிலவரிப் பணத்தில் மாநிலங்களுக்குக் கூடுதலாகப் பங்குதர வேண்டுமென்றும், மாநிலங்களின் வரி விதிக்கும் அதிகாரத்தை விரிவுப்படுத்த வேண்டுமென்றும் கருதினர்கள். உண்மையிலேயே மாநிலங்களின் வரிகள் நெகிழ்ச்சி இல்லாதவை (inelastic sources). வளமான வரி வகைகள் மத்திய அரசின் அதிகாரத்தில்தான் உள்ளன. ஆனல், மத்திய அரசு பாதுகாப்பு (defence) முதலிய முக்கியப் பொறுப்புகளை நிறைவேற்ற இருப்பதால் இந்தக் கூடுதலான நிலை அவசியமே. இருப்பினும் அரசியல் அமைப்பின்கீழ் மாநில அரசுகட்குக் குறிக்கப்பட்ட பொறுப்புகள் உள்ளன (state list of subjects). இவைகளைப் பராமரிக்கப்போதுமான பணம் இருந்தால் தான் முடியும். மத்திய அரசு வகுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களையும், மத்திய பண ஒதுக்கீடுடன் மாநிலங்களும் பணம் ஒதுக்கி நிறைவேற்ற வேண்டும். உண்மையிலேயே மத்திய அரசும் மாநில அரசுகளும் ஒன்றுபோல பண நெருக்கடியில்தான் உள்ளன. ஆனல், மத்திய அரசு வெளிநாட்டுக் கடன்களை

(foreign loans) உலக வங்கி (world bank), சர்வதேச நிதி பண்டு (International Monetary Fund) முதலிய நிலையங்களில் இருந்து வாங்க முடியும். அந்த வசதி மாநிலங்கட்கு இல்லை. ரிசர்வ் வங்கி அல்லது பொதுக் கடன் (public loans in open market) மூலம்தான் பணம் திரட்ட முடியும். அதிகமாக வரி மக்கள்மீது போட்டால் ஆளும் கட்சியின் மேல் மக்களுக்கு வெறுப்பு உண்டாகி அடுத்த தேர்தலில் கட்சி ஆதரவை இழந்து தோற்கடிக்கப்படலாம். இந்தத் தீமைகள் கூட்டு அரசியல் அமைப்பில் (federal constitution) இருக்கத்தான் செய்யும். அமெரிக்கா, முக்கியமாக ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் அரசியல் அமைப்பும், நிதி அதிகாரங்களும் வேறு விதமாய் அமைந்துள்ளன. எனவே, இந்தியாவில் மத்திய மாநில நிதி சம்பந்தங்களைப்பற்றி (centre-state financial relation) நாளுக்கு நாள் விவாதம் அதிகரித்து முக்கியத்துவத்தை அடைந்து வருகிறது. அது அரசியல் சாயலையும் சில சமயங்களில் பெறுகின்றது. ஆனால், உண்மையிலேயே இஃதொரு மகத்தான பொருளாதாரப் பிரச்சினை. மாநிலங்களின் பொருள்நிலை ஆரோக்கியத்திற்கு (fiscal stability) இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியது அவசியமாகிறது. இந்தக் கொள்கையைப் பற்றிச் சமீப காலமாகப் பல பொருளாதார நிபுணர்கள் எழுதி வருகிறார்கள். இந்தப் பிரச்சினை முற்றிலும் இந்தியப் பிரச்சினை; வெளிநாட்டுக் கொள்கை பொருந்தாது. இந்தப் பிரச்சினை இந்தியப் பொருளாதார வரலாற்றில் இப்போது முக்கிய இடம் பெறுகிறது. முக்கியமாகத் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த காலஞ்சென்ற திரு. C. N. அண்ணாதுரை இதைப்பற்றிக் குறிப்பாகப் பேசியும் எழுதியும் வந்தார். காங்கிரசு முதலமைச்சர்களுள் சிலரும் இதைக் குறித்துப் பேசி வந்துள்ளனர். இது மத்திய அரசின் வலிமையை இழக்கச் செய்யும் கொள்கை என்று கருதுவது உண்மையன்று.

14. பொருளாதாரக் கோட்பாடுகள்

இதுகாறும் இந்தியப் பொருளாதாரத் தத்துவத்தின் வளர்ச்சிகளையும் மாறுபாடுகளையும்பற்றிச் சரித்திர சம்பந்தமாகக் கூறினோம். பொருளாதார வரலாற்றிலிருந்து இந்தியப் பொருளாதாரத் தத்துவத்தைப் பிரித்துக்கூற இயலாது. உண்மையிலே இந்தியப் பொருளாதார சரித்திரம் என்பது தனியே கிடையாது என்று சிலர் கருதுகின்றனர். பொருளாதார சாத்திரத்தின் விதிகள் எல்லா நாட்டுக்கும் ஒப்ப பொருந்துவனவே. எனினும், பொருளாதார விதிகளை நடைமுறை நிகழ்ச்சிகளின் பழக்கத்தால்தான் ஊகித்து அறியலாம். வரலாறு இன்றி சரித்திரம் உருவாகாது. ஆனால், வரலாற்றின் போக்கை, பொருளாதார விதிகளால் விளக்கம் செய்யலாம். விதிகளின்றி வரலாறு இல்லை (no theory no history) என்பது உண்மையே. பொருளாதாரம் சமுதாய சாத்திரம் என்பது ஒப்ப முடிந்த உண்மையாகும். ஆனால், சமுதாய வளர்ச்சியையோ மாறுபாடுகளையோ பொருளாதாரக் கருவிகள் இன்றி (economic tools) அளவிட முடியாது. ஒற்றுமை வேற்றுமைகளை நிகழ்ச்சிகளால்மட்டும் அளவிட முடியாது. அவைகட்கு ஒத்திட்டுப் பார்க்கும் கருவிகள் (comperative tools) தேவை. மேல்நாட்டில் பொருளாதார வரலாறு (Economic History), ஆதம் ஸ்மித் (Adam Smith) நாடுகளின் செல்வம் பற்றி (wealth of nations) எழுதியதின் மூலம் ஆரம்பித்தது என்று கூறினாலும், பொருளாதாரம் என்ற சாத்திரம் சுமார் இரு நூற்றுண்டுகட்கு முன்புதான் உருவாகியது என்று நிபுணர்கள் கூறுவார்கள். இயந்திர புரட்சிக்குப்பின்தான் பொருளாதாரத்தில் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு, பொருள் மாற்றம் (production, distribution, consumption and exchange) என்ற பிரிவுகள் திட்டவட்டமாக உருவாகின என்பது சிலர் கருத்து. பொருள் மதிப்புப் (theory of value) போன்றவை கொள்கைகள் என்று உணரப்பட்டாலும் அவற்றைப்பற்றிய கோட்பாடுகள் (theoritical doctrine) பல காலத்திற்குப்பின்தான் நிருணயிக்கப்படுகின்றன. கோட்

பாடுகள் (theories) தாமாகவே வெட்ட வெளியில் உற்பத்தியாவதில்லை (does not grow in vacuum). நிகழ்ச்சிகள் மாறுதலடைந்தாலும் நிகழ்ச்சிகளின் சார்பிலேதான் தத்துவம் உருவாக வேண்டும். நிகழ்ச்சிகள் அதற்குச் சான்று தரும். பின்வரக்கூடியதை (prediction) ஊகித்துச் சொல்வதற்குத் தத்துவத்தும் துணை நிற்கும். உதாரணமாக உலோகப்பற்று விவாதம் (bullion controversy) ரிக்கார்டோவின் (Ricardo) மதிப்புக் கோட்பாடு (theory of value) விதிக்கு அடிகோலிற்று. தானிய சட்ட விவாதம் (Corn Law controversy), வாரக் கோட்பாடுக்கு (theory of rent and distribution) அடிகோலிற்று. முதல் உலகப் போரில் விலைகள் தாறு மாறாக ஏறியதின் காரணத்தால் பணத்தின் மதிப்பைப் (value of money) பொறுத்த விதிகள் உருவாயின. அப்போது தேசியக் கடன் மிக அதிகமாகப் பெருகியதால் வட்டி கோட்பாடு (theory of interest) உருவாயிற்று. போருக்குப்பின் வெளிக் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய நெருக்கடியில் அனைத்துலக வாணிபம், அயல்நாட்டு நாணயமாற்றுக் கோட்பாடுகள் (theory of international trade and foreign exchange) உருவாயின. ஏகபோகம் அல்லது தனியுரிமை வாணிபத்தின் (monopolies) விளைவாக theory of valueவின் கொள்கையே சீர்திருத்தம் அடைந்தது.

இரண்டு பெரும் போர்களுக்கும் இடையே ஏற்பட்ட வியாபார மந்தத்தின் (great depression) விளைவாகச் கெயின்சின் keynes's general theory of employment, interest and money 1936-ல் உருவாயிற்று. மேல் நாட்டில் சரித்திரப் பொருளாதார மாறுதல்களின்போது விஞ்ஞான ரீதியில் அப்போதைக்கப்போது பொருளாதார விதிகளைப் பொருளாதார விற்பன்னர்கள் உருவாக்கினார்கள். புகழ்மிக்க ஜெ. எஸ். மில் (J. S. Mill) கூறியதுபோல் பொருளாதார விஞ்ஞானிகளின் கடமை எப்போதும் நடக்கக்கூடிய விஷயங்களைத் தக்க விதிகளோடு சம்பந்தப்படுத்துவதாகும். கார்ல் மார்க்சு (Karl Marx) சொன்னபடி மனிதர்கள் வரலாற்றை உண்டாக்கினாலும் அவர்கள் நினைத்தபடி அது செல்வதில்லை. அடிப்படையான நியதிகளே அவைகளை முறைப்படுத்துகின்றன. ஷீம்பீடர் (Schempeter) எனும் பொருளாதார நிபுணர் வரலாறு (history), நியதி (theory), குத்துப்புள்ளி (statistics) மூன்றும் சேர்ந்துதான் பொருளாதாரம் ஒரு சாத்திரமாக விளங்க வேண்டும். ஏனெனில், பொருளாதாரம் நடைமுறையை ஒட்டியது (empirical). அது தத்துவ ஆராய்ச்சியும் (philosophical) அன்று; மனோபாவமும் (speculative) அன்று. சமீபகாலத்துப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் எல்லாம் (Smith, Marx, Mill,

Maishall) சமுதாயத்தின் எல்லா அம்சங்களையும் உட்படுத்தியே பொருளாதார வளர்ச்சிக்குச் (economic growth) சட்டங்கள் வகுத்தார்கள். பொருளாதார போக்கை மாற்ற விரும்பினால் அந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி மாற்ற வேண்டும். பேராசிரியர் ராபின்ஸ் (Prof. Robbins) பொருளாதாரம் அச்சு என்றால் பொருளாதார வரலாறு அதில் வார்க்கப்பட்ட உலோகம் என்று எண்ணினார். அச்சு மீறியும் விளைவுகள் உருவாவதும் இயற்கையே. பொருளாதாரக் காரணங்களல்லாத வேறு காரணங்களும் விளைவுகளை உருவாக்கும். இக்காரணம் பொருட்டே பேராசிரியர் டானி (Prof. Tawney) முழு சமுதாய நோக்குடன் (more conscious sociological outlook) பொருளாதாரத்தைச் சிந்திக்க வேண்டுமென்று கூறினார். மார்க்சும், என்ஜெல்சும் (Marx and Engals) தங்களது கம்யூனிச அறிக்கையில் (Communist manifesto-1848). எல்லாச் சமுதாயப் போக்குகளும் வகுப்புப் போராட்டங்களினால்தான் (class struggles) உருவாகின என்று கூறினார்கள்.

பொருளாதாரக் கோட்பாடுகள், பொருளாதாரக் கருத்துகள் அடிப்படையிலேதான் உருவாயின என்று கூறலாம்.

ஆதம் ஸ்மித்து தன்னுரிமை (Monpolism) அல்லது வார்த்தம் (mercantalism) ஆகியவைகளை எதிர்த்தார்.

டேவிட் ரிக்கார்டோ நில உரிமைகளை எதிர்த்தார்.

கார்ல் மார்க்சு தனிவுடைமையை (private property) எதிர்த்தார்.

ஜான் மேனார்ட் கீன்ஸ் முதலாளிகள் முதல் பணத்தின் குறைபாட்டால் வரும் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்ளும் போக்கை எதிர்த்தார் ('the enthanasia of the cumulative oppressive power...to exploit scarcity value of capital').

இந்த மேனாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்துகள் இந்தியச் சிந்தனையாளர்களின் கவனத்தை ஈர்த்தன. ஆனால், இந்தியாவின் அரசியல் நிலைமை வேறுவிதமானதால் அவை அப்படியே பொருந்துவனவல்ல.

15. இந்தியப் பொருளாதாரப் போக்கு

இந்தியப் பொருளாதாரம் செல்வத்தைப் பற்றியதல்ல; வறுமையைப் பற்றியது என்று ஒரு பொது கருத்துச் சொல்வதுண்டு. இது முழுதும் உண்மை என்றோ உண்மையல்லவென்றோ கூற இயலாது. இந்தியப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் நம் நாடு அடிமை நாடாக இருந்தபோது அன்னிய ஆட்சியின் பொருளாதார நடவடிக்கைகளைக் கூர்ந்து ஆராய்ந்து நாட்டின் நன்மைக்குப் பொருந்தாதனவைகளை எடுத்துக்காட்டி அதற்கு ஏதுகள் கூறுவதே சித்தாந்தமாக இருந்ததென்றும், பொருளாதார நிபுணர்கள் உலகெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொது சித்தாந்தத்தை வெளிப்படுத்தியதில்லை என்று கூறுவதும் உண்டு. விடுதலைக்குப் பின்பும் சுய ஆட்சியில் அமைச்சர்கள் ஆக்க வேலைகளுக்கு மேற்கொள்ளும் ஏற்பாடுகளைப் பரிசீலித்துக் கருத்துச் சொல்வது முக்கியப் பணியாய் இருந்து வருகிறது. முன்னேற்றமடையாத நாடுகளின் பொருளாதார சீரமைப்புகளைப்பற்றிச் சர்வநாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளினின்றும் வேறுபட்டுச் சிந்திக்க முடியாது. வெளிநாட்டுப் பொருளுதவி, கடன் வகைகள், வெளி நாட்டுச் செலாவணி மாறுதல்கள் அரசியல் கொள்கைகள் ஆகியவைகளால் பாதிக்கப் பட்டது. எனவே, அரசியல் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் ஒட்டியே இந்தியப் பொருளாதார சிந்தனைகள் அவைகளை எதிர்த்தோ ஆமோதித்தோ திருத்தியோ உருவாகி வருகின்றன. நாடு வளர்ச்சியடையும் காலத்தில் இருப்பதால், அதையொட்டிய பொருளாதாரக் கொள்கைகள் தீவிர சிந்தனைக்கு அடிக்கடி வந்துள்ளன. உதாரணமாகப் பணவீக்கம், அன்னியக் கடன்,

ரூபாய் மதிப்பு குறைத்தல், ஏற்றுமதி பெருக்கம், தொழில்களைத் தேசியமயமாக்குதல், வரி வகைகள், சீர்திருத்தம், கறுப்புப் பணம் உலாவுதலை அடக்குதல், கூலி, சம்பள நிலையையும் விலைவாசி நிலையையும் சமன்படுத்தல் முதலியப் பிரச்சினைகளைப் பொருளாதார நிபுணர்கள் அடிக்கடி சிந்தித்து வருகிறார்கள்; சிற்சில கோட்பாடுகளையும் தெரிவித்துள்ளார்கள். ஆனால், அத்தப் பொருளாதாரக் கோட்பாடுகள் உலக நாடுகளுக்கெல்லாம் பொருந்துவனவாய் இருக்குமா என்பதைக் கூற இயலாது. ஆனால், கீன்ஸ் முதலியோர் கோட்பாடு அல்லது சங்கேதம் (Keynesian theory) போல் புகழ்வாய்ந்ததாக இல்லை.

16. நவீன இந்தியப் பொருளாதாரச் சிந்தனை

நவீன இந்தியப் பொருளாதாரச் சிந்தனை சுமார் 150 ஆண்டுக் கால அளவில் அடங்கியுள்ளது. இதே கால அளவில் மேல் நாட்டுப் பொருளாதாரக் கோட்பாடுகள் அதிகமாக வளர்ந்துள்ளன. அநேக விதமாக விதிகள் (theories) உருவாக்கப்பட்டுள்ளன. இவை பருவினப் பொருளாதாரம் (Macro economics), நுண்ணிய பொளாதாரம் (micro economics) என இருவகைப் பிரிவுகளாக ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் உண்மையிலேயே இந்த இரு பிரிவுக்கும் இடையே இடைவெளி அதிகம் இல்லை. மக்கள் பெருக்கமுள்ள நாட்டில் தனி நபரின் பொருளாதாரப் பிரச்சினைகள் எல்லாம் சமுதாய, அரசியல் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினைகளேயாகும். இஃது ஆதி நாள் தொட்டு அதாவது சுமார் 200 ஆண்டுகளாக இப்படி இருந்து வருகிறது. இந்த வரலாற்றுக் கொள்கை பரிணமப்படி பிரிக்கவோ தனித்து எழுதவோ முடியாது. ஆனால், சிந்தனையாளர்களின் வெவ்வேறு கொள்கைகளைத் தெளிவாகக் காணலாம்.

தாதாபாய் நௌரோஜி (1825-1917)

பழைமையான இந்திய பொருளாதார சிந்தனையாளர்களுள் தாதாபாய் நௌரோஜி முதலில் வைத்து எண்ணக் கூடியவர் ஆவார். இவருடைய நூலான 'Poetry and Un-British Rule in India' என்னும் நூலை இப்போதும் படித்துப் பயன் அடையலாம், முக்கியமாக இவர் வலியுறுத்தியது அன்னிய அரசாட்சியின் பொருளாதாரக் கொள்கைகள் அவர்கள் நாட்டின் சுய நலத்தைப் பெருக்கி இந்தியாவின் செல்வத்தை வற்றச்செய்வது என்பதைத்தான். இதனை drain theory என்று கூறுவர். இவர் கணிதப் பேராசிரியராகச் சில காலம் இருந்து பின்னர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அங்கத்தினராக விளங்கினார். இந்திய

தேசிய காங்கிரசுக்கு இரு முறை அதாவது 1893லும் 1906லும் தலைமை வகித்தார். இவருடைய கோட்பாடுகளை Royal commission on administration and expenditure in India என்ற குழுவிற்கு அமர்ப்பாத சகாரத்தில் விரிவாகக் கூறினார். இவர் இந்தியப் பொருளாதாரச் சிந்தனைக்கு நல்கிய பங்கு (contribution) என்னவென்றால், தூலப் பொருள்கள் உற்பத்தியே (material prodution) ஒரு நாட்டின் செல்வாக்கையும் மதிப்பையும் (wealth and values) உயர்த்துகிறது என்பதாகும். நிதி, நிருவாகம், பொதுநிருவாகம் எல்லாம் இதை நிராகரிக்க முடியாது. பொருள் முதல், உழைப்பு, நிலம் (capital, labour and land) ஆகிய மூன்றும் தூலப் பொருள் உற்பத்தியைப் பெருக்கி வியாபாரம் (trade), நுகர்வு (consumption) முதலியவைகளை வளரச் செய்ய வேண்டும். இந்த ஒரு வழியினால்தான் நாட்டு வருமானம் (national income) உயரும். தற்காலக் கொள்கைப்படிப் பார்த்தால் இவருடைய கோட்பாடு சிறிது குறுகிய நோக்கமுடையதாகத்தான் காணப்படும். தூலப்பொருள் உற்பத்திமட்டும் பொருள் (wealth) ஆகாது. பணிகள், அவைகளின் அமைப்பு, வியாபாரம் (services, organisation, trade etc.) ஆகியவைகள் கூட பொருள் வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகும். தாதாபாய் நௌரோஜி தூலப் பொருள் உற்பத்தியுடன் நாட்டு உற்பத்தியின் (national output) இலாபம் வெளிநாட்டுக்குப் போய் விடக்கூடாது என்று கூறினார். இதுதான் இவரது ஆணித்தரமானகருத்து. இதைத்தான் Drains theory என்று கூறுவர். இதைப் பின்னர் வந்த ரானடே, கோகலே போன்ற இந்தியப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் ஓரளவுக்குத்தான் ஏற்றுக் கொண்டார்கள். வெளிநாட்டில் இந்தியப் பொருளீடு (investment) நல்லதுதான். ஆனால், வெளிநாட்டுப் பணியாளர்களும் காப்புப் படையும் நாட்டின் செல்வத்தை உறிஞ்சுவன என்று எடுத்துக் காட்டினார்கள். தாதாபாய் நௌரோஜிதான் முதன் முதலாக வெளிநாட்டுப் பொருளாதார இன்னல்களைக் கோவைப் படுத்தி எடுத்துக் காட்டினார்.

மகாதேவ கோவிந்த ரானடே (1842-1901)

மகாதேவ கோவிந்த ரானடே பொருளாதாரம் பயின்று அதே துறையில் பம்பாய்ப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய பின்னர் நீதிபதியானவர். இவர் பொருளாதார அடிப்படைகளை விரிவாக ஆராய்ந்து நாட்டுக்கு வேண்டிய தேவைகளை எடுத்துக் காட்டினார். ரானடே பழைய மேனாட்டுக் கொள்கைகளை ஓரளவு மறுத்தார். தொழில் வளர்ச்சிக்கு

அரசாங்கத்தின் கண்காணிப்பு (State regulation of Industry) வேண்டு மென்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. இம்முறையில் இவர் நாட்டுக்குப் பொருளாதார நீதியை வற்புறுத்தினர். இவர் பொது உடைமைக் கோட்பாட்டை ஏற்கவில்லை; திட்டமிட்ட பொருளாதாரத்தை வற்புறுத்தினர். முதலாளி தத்துவத்தை ஆதரித்து எழுதிய முதல் இந்தியச் சிந்தனையாளர் இவரே ஆவார். நவீன இந்தியப் பொருளாதார சாத்திரத்துக்கு அடிகோலியவர் இவர்தான் என்று கூறலாம்.

சா தின்சா எதுல்ஜி வாசா (1844-1937)

சா தின்ஷா எதுல்ஜ் வாசா பம்பாயில் தொழிலதிபராக இருந்தார். இவர் சட்டசபை அங்கத்தினராகவும் இருந்தார்; 1901-ல் இந்திய தேசீய காங்கிரசுக்குத் தலைமை வகித்தார்; பல முக்கிய அரசாங்கக் குழுக்களில் அங்கம் வகித்துச் சிறந்த முறையில் பணியாற்றினர். மக்கள் வறுமை, பஞ்சம், தொழில் வளர்ச்சி, இராணுவச் செலவு, செலாவணி சீர்திருத்தம், இரயில்வே பொருளாதாரம், வியாபார வளர்ச்சி, குத்துப் புள்ளியின் முக்கியத்துவம், விவசாய வங்கிகள், வாணிப சட்டம் ஆகியவைபற்றி இவர்தம் கருத்தைச் செலுத்தினர். இவர் கோட்பாடுகளை உருவாக்கவில்லை. ஆனால், இந்தியப் பொருளாதார நிலையின் ஒவ்வோர் அங்கத்தினையும் பரிசீலனைச் செய்து இந்திய வறுமையை ஒழிக்க வழிவகைகள் கூறினர்.

ராமேஷ் சந்திர தத் (1845-1909)

ராமேஷ் சந்திர தத் I.C S. தேர்வில் வெற்றி பெற்று இந்திய அரசாங்கத்தில் பல உயர் பதவிகளை வகித்தவர். பின்பு இலண்டன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தவர். 1899-ல் இந்திய தேசீய காங்கிரசுக்குத் தலைமை வகித்தவர்; 1907-ல் Royal commission on Decentralisation என்ற குழுவில் அங்கத்தினராக இருந்து பணியாற்றியவர்; பரோடா இராச்சிய முதலமைச்சராகவும் இருந்தவர். இவருடைய மிகச் சிறப்பான—இன்றும் பயன்படுவதுமான நூல் Economic History of India என்னும் சிறந்த நூலாகும். முதன்முதலாக இந்திய பொருளாதார வரலாற்றை முறைப்படுத்தி எழுதப்பட்டநூல் இந் நூலேயாகும். மக்கள் தொடர்பும் நிருவாகப் பயிற்சியும் உடையவராகையால் இவருடைய கொள்கைகள் உண்மைத் தத்துவம் உடையனவையாகவும் தெளிவானவையாகவும் இருக்கும். இவர் இந்தியப் பொருளாதாரம், வளர்ச்சியின்மையான தல்ல தடுக்கப்பட்டது என்றுகருதினர். முதன்முறையாக நிலக்

குத்தகை முறை, நிலவரி முதலியவை எப்படி விவசாயிகளின் செழிப்பைக் குறைக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினர். பண்ணையாளர்களும், குத்தகைக்குப் பயிர் செய்வோர்களும் எப்படிப் பாதிக்கப்பட்டு வறுமையில் இருக்கிருர்கள் என்பதை விளக்கிக் கூறினர். இவரது கருத்துகளில் சில 50 வருடங்களுக்குப் பின்னர் வரப்போகும் நிலச் சீர்த்திருத்தங்களுக்கு அடிகோலின.

கோபாலகிருஷ்ண கோகலே (1866—1915)

கோபாலகிருஷ்ண கோகலே பொருளாதாரச் சாத்திர நிபுணராய் இல்லாவிட்டாலும் பொருளாதாரப் பிரச்சினைகளில் தலையிட்டு நல்ல யோசனைகளை நல்கினர். இந்திய வைசிராய் கவுன்சிலில் அங்கத்தினராக இருந்து, இந்தப் பணியைத் தொடர்ந்து ஆற்றினர். இவருடைய கொள்கைகளை Welby commission on expenditure in India (1897) என்ற குழுவிற்குச் சமர்ப்பித்தது மிகவும் முக்கியமானதாகும். இவர் தாதாபாய் நௌரோஜியின் உறிஞ்சல் கோட்பாட்டை (Drains theory) முற்றிலும் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு நாடு இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகமாகச் செய்தாலும் வெளிநாட்டுக் கடன்களையும் பணிகளையும் நாடினுலும் அந் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படமாட்டாது என்று கருதினர். ஏனெனில், அவை பொருளாதார விதிக்கு மாருனவை. இங்கிலாந்து கணக்குக்குப் போகும்படியான தொகைகள் நாட்டின் தேவைகளான இராணுவம், இரயில் பாதை முதலியவைகட்குத்தான் பெரும்பாலும் போகின்றன. இவை தேவையானவை. ஆனுல், பெரும் சம்பளம் கொடுத்து இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் நிபுணர்களும் முக்கியமல்ல எனக் கூறினர். நிருவாகச் செலவைக் குறைக்க வேண்டுமென்றும் கூறினர். பொளாதாரச் சிக்கனமின்மையால், வரி செலுத்தும் விவசாயிகள் பாதிக்கப்படுகிருர்கள் என்று கூறினர். போர் இல்லாத காலத்திலும் பிரிட்டிஷ் இராணுவப் படை போர் நிலைக்கு வேண்டிய செலவுகள் செய்வது தவறு என்பதை எடுத்துக் காட்டினர்.

கோகலே முதன்முதலாக மிகை வருவாய்ச் செலவுத் திட்டத்தை (Surplus budget) எப்போதும் எதிர்பார்ப்பது பொருளற்றது என்பதை விளக்கினர். மிகையாகவுள்ள நிலையைக் காட்டுவதற்கு மக்கள்மேல் அளவின்றி வரி விதித்தல் தவறு என்று கூறினர். இவர் சட்டமன்றத்தில் நிகழ்த்திய பேச்சுகள் மிகவும் பொருள் செறிந்தவை. இந்தியப் பொருளாதாரத்துக்கு

ஓரளவு துண்டுவிழும் வரவு செலவு நிலை பாதகமில்லை என்றும் கூறினர்.

கோகலே வற்புறுத்திய மற்றொரு கொள்கையான தடையில்லா வாணிபம் (free trade) இந்தியாவின் நிலைக்குப் பொருந்தாது. வாணிப பாதுகாப்பு (protection) என்பதாகும். தடையில்லா வாணிபத்தில் தாழ்த்தப்பட்ட இந்தியா தலையெடுக்காது என்று விளக்கினர்.

கோகலே பொது நிதி இயல் (public finance) சிந்தனையைத் தனது அறிவு மிகுந்த கருத்துகளால் தூண்டினர். நௌரோஜி காலத்துப் பொருளாதாரச் சிந்தனையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியப் பொருளாதாரத் தத்துவ அடிப்படைகள் விரிவடைந்துள்ளதைக் காணலாம்.

வாமன் கோவிந்த கலே (1876—1946)

வாமன் கோவிந்த கலே பூனாவில் பொருளாதாரப் பேராசிரியராகவும், இந்தியன் டாரிஃப் போர்டு அங்கத்தினராகவும் இருந்தவர். பொருளாதாரத் துறையில் அதிகமான நூல்கள் முதன்முதலில் எழுதியவர் இவரே ஆவார். இவருடைய பொருளாதாரப் பாட நூல், பலமுறை பதிப்பிக்கப்பட்டது. இவர் முதன்முதலாகப் பொருளாதாரத்தை முறையாகத் தனிப்பட்ட தத்துவமாகப் பயில வேண்டும் என வற்புறுத்தினர். பெரும் புகழ்பெற்ற சில இந்தியப் பெரியோர்கள் இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆர்வமுடன் ஆராய்ந்துள்ளார்கள். அந்த ஆராய்ச்சியால் நல்ல விளைவுகளும் பிறந்தன. இவற்றல் இந்தியாவில் ஒரு தனிப்பட்ட பொருளாதாரச் சம்பிரதாயம் உண்டாக்கப்பட்டது என்பது மிகையாகும். நிருவாக நடவடிக்கைகளை ஆராய்ந்து பரிகாரம் கூறுவதுமட்டும் தத்துவம் ஆகாது. இருப்பினும், இந்தியாவின் நிலைமையைக் கருத்தில் வைத்துப் பார்க்கும்போது இது தவிர்க்க முடியாதது. இந்தக் காரணத்தால் இந்தியப் பொருளாதாரத்துக்கு ஆங்கிலேயே அரசியல் பொருளாதாரம் (political economy) போல் சீரிய மதிப்புத் தரவேண்டும்; பொருளாதாரம் தேசீய அடிப்படையில்மட்டும் கருதப்படாமல் சர்வதேச அடிப்படையிலும் கருதவேண்டும் என இவர் கருதினர். பண்டையப் பொருளாதார நிபுணர்கள் (classical economists) ஒரு புது விஞ்ஞான முறை தத்துவத்துக்கு அடிகோலினும், ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்நிலை இந்தியாவில் அதிகமாகக் காணப்படும். முதல் உலகப் போருக்குப்பின் ஒரு நாடு பொருளாதார விஷயத்தில் தனித்து இயங்க முடியாது என்பது தெளிவாக

விளங்கியது, எனவே, உள்நாட்டுப் பொருளாதார ஏற்பாடு களைக் கவனிக்கும் போது அனைத்துலக கண்ணோக்கும் தேவை.

கலே, ஏகாதிபத்திய சலுகை (Imperial proference) என்பதைத் தீவிரமாக விவாதத்துக்குக் கொண்டு வந்தார். கட்டுப்பாடற்ற வாணிபம் (free trade) நல்லதா பாதுகாப்பு (protection) நல்லதா என்பது மட்டும் கேள்வியல்ல. இந்தியாவுக்கு எது நன்மை தரும் என்று சிந்திப்பதுதான் நல்லது எனக் கூறினார். தொழில் பெருக்க பொருளாதாரத்தை இவர் நன்றாக எடுத்துக் கூறினார். சுதேசிமட்டும் நாட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்காது; தொழில் முன்னேற்றமும் தேவை என எடுத்துக் கூறினார். அதே சமயத்தில் விவசாய முன்னேற்றம் மிகவும் முக்கியமானது என்றும் கூறினார். முதல் உலகப் போரினால் இந்தியா எப்படிப் பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்டது என்பதை விரிவாக எழுதினார். செலாவணி சீர்திருத்த விஷயத்தில் இந்திய ரூபாயின் மதிப்புக் கூடியவரை மாற்றமில்லாமல் இருக்கவேண்டு மென்றும், பொன் இறக்குமதியைத் தாராளமாக அனுமதிக்க வேண்டுமென்றும், ரூபாய் இருப்புக் குறைவாயிருந்தால் உண்டி யல்களை மறுக்க அரசுக்கு அதிகாரம் வேண்டுமென்றும், மத்திய வங்கி உடனடியாக நிறுவ வேண்டுமென்றும் கூறினார். இந்தக் கடைசிக் கருத்துப் பின் வந்த சேமிப்பு வங்கிகளுக்கு அடி கோலியதாகக் கருதலாம்.

இந்திய நிதி (Indian national finance) முன்னேற்றத்தை 1921ஆம் ஆண்டு முதல் இவர் பரிசீலனை செய்து இதை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். (1) 1921—1924ஆம் ஆண்டு வரை பொருளாதார முடக்கத்தால் இந்தியப் பொருள் நிலை குழப்பம் அடைந்தது. (2) 1924—1927 வரை சீர்திருத்தங்கள்: பொது நிதியிலிருந்து இரயில் நிதியைப் பிரித்தது முக்கியச் சீர்திருத்தம், இன்னும் நீர்ப்பாசனம் முதலியவைகளுக்குத் தனித்தனிப் பணம் ஒதுக்கியது நல்ல ஏற்பாடு. (3) 1927—1932ஆம் ஆண்டு பணம் பற்றுக்குறை—தொடர்ந்து பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங் கள் (deficit budget) ஏற்பட்டன. வரிச் சுமை அதிகமாயிற்று. பவுன் ஸ்டர்லிங்கு கடன் பெருகிற்று. முதலினச் செலவு (capital expenditure) அளவுக்கு மீறிக் குறைக்கப்பட்டது. பிற்காலத்தில் இவைகளைத் தவிர்க்க நாட்டின் பொருளாதார அமைப்பையே சீர்திருத்த வேண்டுமெனக் கூறினார்.

இந்தியாவின் பொருளாதாரக் கல்வியின் நிலையை விமர் சனம் செய்த அவர் இந் நாட்டில் பொருளாதாரத்தை

மட்டுமே பயிலும் நிபுணர்கள் குறைவாய் இருப்பதை எடுத்துக் காட்டினர். பொருளாதார நிபுணர்களுள் பலர் கலேவுக்கு இந்தியப் பொருளாதார வரலாற்றில் முதல் இடம் கொடுத்தனர்.

விரிஜ் நாராய்ன் (1888—1947)

விரிஜ் நாராய்ன் இலாகூரில் பொருளாதாரப் பேராசிரியாகப் பணியாற்றியவர். வெளிநாடுகளுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றியவர். இந்தியா பொருளாதாரத்தில் உன்னத நிலையில் விளங்கவேண்டுமாயின் தொழில் முன்னேற்றமும் திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றமும் தேவை என்பது இவருடைய கொள்கை. ஆரம்ப காலத்தில் சில துன்பங்கள் இருந்தாலும், பின் விளைவுகள் நாட்டுக்கு நல்லது என்றார். முற்றிலும் பொதுவுடைமைக் கருத்தை எதிர்த்தார். எண்ணற்ற நூல்களை இயற்றினார். 'இந்தியப் பொருளாதாரம்' என்று தனியாக ஒன்றுமில்லை என்பது இவர் கருத்து. ரானடே காலத்தில் இந்தியப் பொருளாதாரம் என்ற ஒன்று தேவையாய் இருந்திருக்கலாம். அண்மைக் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட மாறுதல்களால் பொருளாதாரப் பொது அடிப்படைகள் இந்தியாவுக்கும் பொருந்தும் என்று கூறினார். பொருளாதார விதிகள் சர்வ வியாபகம் கொண்டவை. இந்தியாவில் வேறுவிதமான அனுகுமுறைகளோ குத்துப்புள்ளி சேகரிப்புகளோ அடிப்படை விதிகளையே மெய்ப்பிக்கும் என்றார். மேனாட்டுத் தொழில் முன்னேற்றம் இந்தியாவுக்கு முற்றிலும் தேவை என்று கூறினார்.

விரிஜ் நாராய்ன் இந்தியப் பொருளாதார வரலாற்றில் தமக்கே சொந்தமான புதுமையான கருத்துகள் உடையவராகக் காணப்பட்டார். மகாத்மா காந்திஜியின் சர்க்காவினால் பொருளாதாரம் பலனடையும் என்ற கொள்கையைப் பகிரங்கமாக எதிர்த்தார். ருஷ்யாவைப் போல் திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்தின் தேவையை வற்புறுத்தினார்.

கெ. டி. ஷா. (1888-1953)

கெ. டி. ஷா. புகழ்மிக்க பொருளாதாரப் பேராசிரியர். இந்திய தேசியக் காங்கிரசு பண்டித ஜவகர்லால் நேருவின் தலைமையில் ஏற்படுத்திய தேசியத் திட்டக் கமிட்டியின் செயலராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றினார். இவர் பல பொருளாதார நூல்களை இயற்றினார். பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிர்ப்பும், தேசிய விடுதலைக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பரிந்தும் பேசினார். 'இந்தியப் பொருளாதாரம் 1858-1919' என்ற நூலில் பல கோணங்களில் பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்துள்ளார்.

நிலவரியை மட்டும் குறைத்து, மற்ற வரிகளை ஏற்றி இராணுவச் செலவை ஏராளமாக உயர்த்துதல் நாட்டின் பொருளாதார நிலையைச் சரியாகக் கவனிப்பது ஆகாதென்று கருதினார். செலாவணிச் சீர்திருத்தத்தில் பொன் நாணயத் திட்டம் நாட்டுக்கு நல்லதென்றும் காகித நோட்டுகள் பொன் மதிப்பீடுதான் குறிக்க வேண்டும் என்றும் கூறினார். காகித ரூபாய் நோட்டுகள் ரூ. 50 வரை செலாவணியாகச் சுழலலாம் என்றும் கருதினார்.

சாதாரண வங்கிகளைக் கண்காணிக்க ஒரு மத்திய வங்கி தேவையென்பதும், தொழில் கடன்கள் கொடுக்க ஜப்பானில் உள்ள இன்டஸ்டிரியில் வங்கிகளைப் போன்ற வங்கிகள் இந்தியாவில் நிறுவப்பட்டு நீண்டகாலக் கடன் கொடுக்கச் செய்ய வேண்டுமென்பதும் வங்கி சீர்திருத்தத்தைப்பற்றி இவர் கொண்டிருந்த கருத்துகளாகும். வாணிபப் பொருளாதாரத்தைச் சுங்க வரி, போக்கு வரவு செலவுகள் முதலியவைகளைக் கொண்டு ஆராயப்படவேண்டும் எனக் கருதினார். சாதாரண மக்கள் தங்கள் பொருளாதாரத்தைச் சமன் செய்வதற்கு நாட்டின் மக்கள் தொகைக்கு ஈடாக இன்னும் அதிக வங்கி வசதி ஏற்படவேண்டும்; காசோலை (Cheque) மூலம் பணம் கொடுத்தல் வாங்குதல் என்ற முறை பெருகிப் பரவவேண்டுமென்றும் கருதினார். நாட்டின் பொருள் நிலையை உயர்த்துவது நாட்டுப் பகிர்வுத் தொகையை (National devident) முதன்மைநிலைத் தொழிலதிபர்கட்கே விட்டு விடக்கூடாதென்றும், கூட்டுறவுப் பங்கீடும் அவ்வளவு பயன் தரத்தக்கதல்ல என்றும், அரசாங்கப் பொதுவுடைமை (state socialism) நல்ல தென்றும் கருதினார், கூட்டுறவு ஏற்பாடும் (Co-operative System) தனியார் சொத்துரிமையைத் தவிர்ப்ப தில்லை. முதலாளி, தொழிலாளி பிரிவினையைத் தவிர்ப்பதில்லை, உற்பத்தியும் பெருக்கப்படுவதில்லை. ஆதலால், அதுவும் அவ்வளவு ஏற்றதல்ல என்று கருதினார். தேசிய வருவாயின் பங்கீட்டை (National devident) மாற்றி அமைக்கும் தேவையைக் காட்டிலும், மக்கள் பெருக்கத்தைக் (population problem) குறைப்பது மிகவும் முக்கியமாகும் என்றும் மக்கள் பெருக்கம் வறுமைக்கு மூலகாரணமாய் அமையும் என்றும் கருதினார். பிரிட்டிஷ் ஆட்சி இதைத் தீர்க்கவேண்டுமென்றார். பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட வேறு நாடுகளுக்கு இந்தியர்கள் குடியேற அனுமதிக்க வேண்டும் அல்லது பொருள் உற்பத்தியைப் பெருக்கி சமரசமாகப் பிரித்துத் தரவேண்டுமென்று வாதாடினார்.

பேராசிரியர் ஷாதான் முதல் முதலாகத் தல நிருவாகத்தின் நிதி நிலை குறைபாடுகளை (Municipal finance) எடுத்துக்

காட்டினார். இதைப்பற்றி ஒரு தனி நூலே எழுதினார். தேசியமும் (Nationalism) மக்கள் ஆட்சியும் (democracy) ஓரளவு முரண்பட்டதால் மக்கள் சுதந்தரத்தோடு வாழ தலசுய ஆட்சியே நல்லதென்று நம்பினார். நகராட்சி பொருள் நிலையைக் குறித்துப் போடப்படும் வரிகள் அந்தத் தலத்துக்கே பெரிதும் பயன் தரும்படி போடப்பட்டு, வரவு செலவைச் சமன்படுத்திச் சீர்திருத்த வேண்டுமெனக் கருதினார். நேர்முக வரிகளைச் சீர்படுத்தி நேர்முகமில்லாத வரிகளைக் குறைத்து, வருமானம் வரக்கூடிய நகராட்சி வேலைகளை அதிகரித்து நிதிநிலையை மக்கள் நலத்துக்காக உயர்த்த வேண்டுமெனக் கூறினார். மாநில அரசு போல் தல ஆட்சியும் கடன் வாங்குவதைத் தவிர்க்க முடியாது. ஆனால், அது வருமானம் தரக்கூடிய வேலைகளுக்கே (productive purposes) வாங்கவேண்டும் எனக் கருதினார். கூட்டாட்சி பொருள் நிலையைப் (federal finance) பற்றியும் பேராசியர் ஷா தமது சிந்தனைகளை எழுதியுள்ளார். மிண்டோ மார்லி அரசியல் சீர்திருத்தங்களால் கூட்டாட்சி நிதி ஏற்பாடுகள் உருவாக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி ஆகவில்லை. கூட்டாட்சியில் ஒவ்வோர் அங்கத்துக்கும் தத்தம் பொறுப்புகட்குத் தகுந்தபடி நிதி பகிர்ந்து தரப்படவேண்டுமெனக் கருதினார். மைய செலவுகளைக் குறைத்து அங்க அரசுகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று கூறியது கவனிக்கத்தக்கது.

பேராசிரியர் ஷா பிரிட்டனின் ஆதிக்கத்தால் இந்தியா இரண்டாவது உலகப் போரில் கலந்துகொள்ள நேர்ந்து தனது சக்திக்குமேல் பொருள் ஆதரவு பிரிட்டனுக்குத் தந்திருக்கிறது என்பதை பேராசிரியர் ஷா மெய்ப்பித்தார். போருக்கு வேண்டிய கச்சாப் பொருள்கள், இரயில், அஞ்சல் வசதிகள், இராணுவத்துக்கு உணவு முதலியவைகள் கொடுத்ததுமல்லாமல், புதுப் பணம் உற்பத்திசெய்வதும் புது வரிகள் போட்டும் இந்தியா பெரும் பொருளாதாரப் பாரத்தை ஏற்றுக்கொண்டது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

திட்டமிட்ட முன்னேற்றத்தைப்பற்றித் தெளிவான கருத்துகளைத் திரு. ஷா தெரிவித்தார். அவர் சூத்திரம் போல் கூறியது பின்வருமாறு. 'மக்கள் ஆட்சியில் திட்டமிட்ட பொருளாதாரம் என்பது நுகர்வு, உற்பத்தி, முதலீடு, வாணிபம், வருவாய்ப் பங்கீடு முதலியவைகளை நிபுணர்கள் சமானுதிகரணம் செய்வதுதான்'. அதை மக்கள் பிரதிநிதிகள் நாட்டின் குறிக்கோள் என்னவென்பதை நிருணயித்தபடி செய்யவேண்டும்; அதே சமயத்தில் பொருளாதார விதிகட்கு இணங்க அமைக்க

வேண்டும். திட்டத்தின் இரு நோக்கங்கள் பொதுவாக: (1) நாடு முழுவதும் திறம் உயர்த்துவது (National efficience). (2) இப் போதுள்ள வாழ்க்கைத்தரத்தை இரண்டு பங்காக உயர்த்துவது என்று கூறினர். இந்தியாவின் ஒவ்வொரு மாநில அரசும் நிறைவு அடைவதற்கு முயன்றாலும் பொதுவாக நாடு முழுவதும் ஒரு முழு முதலாகச் சிந்திக்க வேண்டுமென்றும் கருதினர்.

தொழில் முன்னேற்றத்தைப்பற்றி அவர் கருத்து: இந்தியா வின் தொழில் முன்னேற்றமே எல்லா முன்னேற்றமும் என்று கருதுவது எளிது. தொழில்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை : (1) பாதுகாப்புக்கு வேண்டிய தொழில்கள் (defence industry). (2) திறவுகோல் தொழில்கள் (key industries). (3) பொது வசதிகள் (Public utililies) எனப்படும் தொழில் களுக்கு முதல் பணம் கொடுப்பது ஒரு தேசிய மத்திய வங்கி யாக இருக்கவேண்டுமென்று எண்ணினர். (1) நிதி நிரு வாகத்தை விரிவு செய்ய வேண்டும் (centralised). (2) அவைகள் தனியார்கள் மூலம் அல்லாமல் நிலையங்கள் (institutional) மூலமாக வழங்க வேண்டுமென்று கருதினர். அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் (Government budget) நாட்டின் திட்ட செலவு திட்டத்தின் (aggregate budget of the community) பிரதிபிம்பமாக (எதிர்ச்சாயலாக) இருக்க வேண்டும்.

திரு. ஷா சம உடைமைத் திட்டத்தைப்பற்றி முதன்முத லாகச் சீரிய முறையில் ஆழ்ந்து சிந்தனை செய்தவர் ஆவார்.

ஆர். கே. முகர்ஜீ

ஆர்.கே. முகர்ஜீ பொருளாதாரப் பேராசிரியராக இருந்தவர். இலட்சுமணபுரி பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பணிப் புரிந்தவர். பல அரசாங்க குழுக்களிலும், FAO, ILO, போன்ற அனைத்துலக (UNO) நிலையங்களின் பல குழுக்களிலும் பணியாற் றியவர். பல பொருளாதார நூல்களை இயற்றியவர். அவற்றுள் ‘தற்காலத்து இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சினைகள்’ (இரண்டு தொகுதிகள் 1939-1941) எனும் நூல் முக்கியமான நூலாகும். இந்தியப் பொருளாதார நிலையில் ஒரு திருப்பம் நிகழ்வதைப்பற்றியும், அதைச் சமாளிப்பது எப்படி என்பதைப் பற்றியும் இவர் விதிகள் கூறினர். தொழில் முன்னேற்றத்திற்கும் விவசாய முன்னேற்றத்திற்குமிடையே பொறுத்தமான உறவு இருக்க வேண்டு மென்றும், இந்தியத் தொழில்களால் கைத் தொழில்கள் பாதிக்கப்படும் என்றும் (உதாரணம் : கைத்தறி நெசவு) நெசவு ஆலைகள் மேனாட்டைப் போல் பெரும் பயன்

அடையவில்லை என்றும் இவர் கருதினர். சிறு கைத்தொழில்கள் இயந்திரக் காலத்தில் அழிந்துவிட வேண்டுமென்பது தவருன கொள்கை என்பதையும் இவர் எடுத்துக் காட்டினர், பிற நாட்டுப் பொருளாதாரத் தத்துவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் முறையில் தான் (comparative economics) ஒரு பொதுத் தன்மையான (universal economics) பொருளாதாரத் தத்துவம் உருவாகும் என்பது இவரது மற்றொரு முக்கியக் கருத்தாகும். மேலும் ஒரு நாட்டிலேயே ஒரு மாநிலத்திற்கும், மற்றொரு மாநிலத்திற்குமுள்ள பொருளாதார வேறுபாடுகளைப்பற்றிச் சிந்திப்பதன் மூலமாகத்தான் அந் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை நன்கு உணரமுடியும் என்றும் கூறினர்.

திரு முகர்ஜீதான் முதன்முதலாக Institutional theory of Economics-ன் முக்கியத்துவத்தை வற்புறுத்தினர். பொருளாதாரத்தின் வடிவம் அந்தந்த நாட்டுப் பண்டை முறை அரசியல் கட்டுக்கோப்பினுல் உருவாகிறது. கம்யூனிச நாட்டுப் பொருளாதாரம் அந்த நாட்டுக் கட்டுக்கோப்பை நிலைநாட்ட ஏற்பட்டது. எனவே, சமுதாயத்தின் தன்மைக்கு ஒப்ப பொருளாதாரம் அமையும். வரலாறின்றி கொள்கைகள் வளரா. கொள்கைகளின்றி வரலாறு என்பது ஒன்றில்லை என்று இவர் கூறினர்; திட்ட மிட்டப் பொருளாதார வளர்ச்சி தேவை என்றும் வற்புறுத்தினர்; நகர்ப்புற பொருளாதாரத்தை மட்டுமேயன்றி நாட்டுப்புறப் பொருளாதாரத்தைப்பற்றியும் சிந்திக்க வேண்டுமெனக் கருதினர். மக்கள் தொகை, தொழில் நிலை முதலிய பொருள்களைப்பற்றியும் இவர் சில கோட்பாடுகளைத் தீட்டினர்.

திரு. முகர்ஜீ நடைமுறைப் பொருளாதாரத்தையும், நூன் முறைப் பொருளாதாரத்தையும் சமன்படுத்திய சிந்தனையாளர்களுள் முதலிடம் பெறுபவர் ஆவார். வேளாண்மைச் சமுதாயத்தைப் பொருளாதாரச் சட்டதிட்டப்படிச் சீர்ப்படுத்த வேண்டுமென்று கூறியதும் இவரேயாவார்.

சி.என். வக்கீல்

சி. என். வக்கீல் சிறந்த பொருளாதாரப் பேராசிரியர்; பல நூல்கள் இயற்றியவர்; இந்தியாவின் பணக் கொள்கைகளைப் பற்றி ஒரு சிறந்த வரலாற்றை (Fiscal history) எழுதியவர். இவர் பொருளாதாரத் திட்டத்தைப்பற்றியும் எழுதியுள்ளார்; பற்றுக் குறை பொருளாதாரம், விரிவடையும் பொருளாதாரம் என்னும் இரு கூறுகளைப் பற்றியும் எழுதியுள்ளார். இந்திய பிரிவினை

யினுல் ஏற்பட்ட பொருளாதார விளைவுகள் பற்றியும் முதன் முதலாக எழுதியவர் இவரேயாவர். இவர் ஐந்தாண்டுத் திட்டங்களில் மேனாட்டு அணுகு முறைகள் இந்தியாவுக்குப் பொருந்தாது என்று கருதினர். பண முதல் குறைவினுல் பொருளாதார வளர்ச்சிப் பாதிக்கப்படுகிறது என்பதை இவர் ஒப்புக் கொள்ளாமல், வேலை வாய்ப்புகளுக்குச் சேமிப்பும், கூலி தரும் பொருள்கள் உற்பத்தியே தேவை என்றும் கருதினுர்.

டி. ஆர். காட்கில்

டி. ஆர். காட்கில் கோகலே ஆராய்ச்சி நிலையத்துக்குத் தலைவராக இருந்தார். இவர் தொழில் முன்னேற்றப் பொருளாதாரத்தைப் பற்றி விரிவாக எழுதினுர். பல அரசாங்க குழுக்களில் பணியாற்றினுர்; முதல் உலகப் போரின் விளைவாக இந்தியத் தொழில் முன்னேற்றத்தைப்பற்றி விரிவாக எழுதினுர். தொழிலாளிகளின் பொருளாதாரப் பிரச்சினைகளைப்பற்றியும் தமது கருத்தைச் செலுத்தினுர்; குறைந்த கூலி, ஒரே தொழில் புரியும் தொழிலாளிக்கு இடத்துக்கு இடம் கூலி வேறுபாடு காணப்படுதல் ஆகியவைகளால் தொழிலாளர்கள் மன நிறைவும் பொருள் உற்பத்தியும் வளரவில்லை என்று கருதினுர்.

பி. ஏ. வாடியா

பி. ஏ. வாடியா பொருளாதாரப் பேராசிரியராக இருந்தவர். இவர் இந்தியாவின் சொத்து, செல்வம், பணமும் பணமார்க்கட்டும், பம்பாய் திட்டம், அரசாங்க ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆகியவைகளைப்பற்றி எழுதியுள்ளார். செல்வம் பருப்பொருளான பண்டங்களில்மட்டும் வளர்வது அன்று, மக்களின் நல்வாழ்வுக்குத் துணைபுரியும் எல்லா நலன்களும் கூடியது என இவர் கருதினுர்; இந்தியாவின் உற்பத்தி திட்டமிடப்படாதது, ஒழுங்குபடுத்தப்படாதது (unorganised) எனக் கருதினுர்; தேசிய வருமானம் சேமிப்பு இல்லாதவரை வளராது என்றும் அதனுல், பொருள் உற்பத்தி வளராது என்றும் கருதினுர்; ஐந்தாண்டுத் திட்டங்கள் முன்னேற்றத் திட்டங்களின் செலவுத் திட்டங்கள் என்றும் அதனுல் மக்களின் வருமான ஏற்றத்தாழ்வு சீரடையவில்லை என்றும் கருதினுர்; சமவுரிமை கொள்கைகளுக்கு இந்தியப் பொருளாதாரம் மிகவும் உகந்ததாயில்லை எனக் கருதினுர்.

கியான் சந்த்

கியான் சந்த் பொருளாதாரப் பேராசிரியர். இவர் அனைத்துலக நிதி பண்ட் (International Mometary Fund) நிலையத்தில்

தொழில் புரிந்தார். இந்திய நிதி அமைப்பைப்பற்றித் தெளிவாக எழுதியுள்ளார். மக்கள் தொகை பிரச்சினைகளைப்பற்றியும், தல நிதி (local finance) பிரச்சினைகளைப்பற்றியும் சிறப்பாக எழுதியுள்ளார். சீன பொருளாதார அமைப்பைப்பற்றிப் பாராட்டி எழுதியுளார்.

வி. கெ. ஆர். வி. ராவ்

வி. கே. ஆர். வி. ராவ் பொருளாதாரப் பேராசிரியர் ஆவார். இவர் இந்திய வருமான வரியைப்பற்றியும், தேசீய வருமானத்தைப்பற்றியும் அரிய ஆராய்ச்சிகளைச் செய்துள்ளார் ; வருமான வரி தீர்வையில் உள்ள கோளாறுகளை எடுத்துக் காட்டியுள்ளார். தேசீய வருமானத்தை நிருணயிக்கும் முறையில் செய்யவேண்டிய சில சீர்திருத்தங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

ஜான் மத்தாய், ஆர்.பாலகிருஷ்ணு முதலிய பொருளாதார நிபுணர்கள் முக்கியமாகத் தென்னுட்டுப் பிரச்சினைகளில் ஈடுபட்ட பொருள்ாதார நிபுணர்களாவார்கள்.

17. பொருளாதார விதிகள்—காரண காரியத் தொடர்புகள்

பொருளாதாரக் கோட்பாடு, காணப்படும் பல காரண காரியங்களைத் தொடர்புபடுத்தி பொதுவிதிகளாக அமைப்பது என்று கொள்ளலாம். சமுதாய வழக்கங்களில் காணப்படும் பொருள்நிலை உண்மைகளை வரலாற்று முறையில் கண்டு பொதுவாக நிகழ்ந்த விளைவுகளைப் (facts of Universal history) பிரித்தெடுத்துக் காரண காரியம் தெளியப் பெற்று எந்தெந்த விளைவுகட்கு எந்தெந்தக் காரணம் என்பதை ஊகித்தும், ஒரு விளைவு வேண்டின் எந்தெந்தக் கருவிகள் தேவை என்பதைக் கோட்பாடு செய்வதே சாத்திரத்தின் பலனாகும். இன்றேல் அது வெறும் வரலாறாக மட்டும் நின்று விளங்கும். உதாரணமாக, கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் அவைகட்கு நேரில் கண்ட பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு ஆதரவாயின :

1.	வெள்ளி நாணய விவாதம் (Bullion Controvery).	ரிகார்டோவின் மதிப்புக் கோட்பாடு (Theory of value).
2.	தானிய சட்ட விவாதம் (Corn Law controvery).	ரிகார்டோவின் பங்கீடும் வாரக் கோட்பாடும் (Theory of rent and distribution).
3.	முதல் உலகப் போருக்குப் பின் விலைவாசி தடுமாற்றம்.	பணத்தின் பெறுமானத்தைப் பற்றிய விதி (theory of money).
4.	தேசியக் கடன் பெருக்கம் 1914-1925. (National debt)	வட்டியின் பெறுமானம் (Theory of interest and effects on investment).

5.	வெளிநாட்டுக் கடனும் மீட்பும் (1920-29) (External debts and repatriation).	பன்னாட்டு வாணிபமும், வெளிநாட்டுச் செலாவணியும் (Theories of international trade and foreign exchange).
6.	விற்பனைத் தனியுரிமை (Monopolis).	மதிப்பீட்டுக் கோட்பாட்டின் நுட்ப முன்னேற்றம்.
7.	பெரிய வாணிப மந்தம் (great depression).	கெய்ன்சின் பொதுக் கோட்பாடு (Keyene's general theory).
8.	திட்டமிட்டப் பொருளாதாரம் (planned economy).	பற்றுக்குறை நிதியாட்சி(deficit financial).
9.	வெளிநாட்டுச் செலாவணி சுருக்கத்தால் நெருக்கடி (foreign exchange crisis).	ஏற்றுமதியைப் பெருக்குதல் (export promotion).
10.	வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக் குறை (balancing the budget).	மறைமுக வரிகளும் ஆயத்தீர்வைகளும் போட்டு நிறைவு செய்தல் (device of indirect taxation).
11.	மாநில அரசு வரிகளைப் பலப்படுத்தவும் சமன் செய்யவும் மத்திய அரசு வரி விதிக்க அதிகாரம் அவாவுதல் (Central taxation to mop lighty taxed section).	விவசாயம் போன்ற தொழில்களின் இலாபம் பெருகியதால் மத்திய அரசாங்கமே விவசாய வருமான வரி விதிப்பை மேற்கொள்ளலாம் என்ற கொள்கை (criterion for low incidence of taxation theory).

மேற்கூறிய பிரச்சினைகளும் கொள்கைகளும் இந்தியாவில் கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாகத் தலைகாட்டி வந்துள்ளன. எனினும், தெளிவான பொருளாதாரக் கருதுகோள் (economic theory) உருவாகவில்லை எனலாம். இந்தியாவில் பொருளாதார முன்னேற்றம் ஏற்றத் தாழ்வுகளைச் சமன்படுத்துவதின் தேவையைப் பொருத்து உருவாகிறது எனக் கூறலாம். மேனாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளை அப்படியே இந்தியாவில் மேற்கொள்ளுவது என்பது எல்லா விஷயங்களிலும் பொருந்தாது

என்பது வெளிப்படை. இந்தியா இருநூறு ஆண்டுகளாக இங்கிலாந்துடன் தொடர்பு கொண்டிருந்தது. இன்றியமையாத பிரிட்டிஷ் கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் பிற கொள்கைகளின் சாயல் விழாமல் இல்லை. உதாரணமாக ஃபிரிடரிக் லிஸ்டு (1789—1806) அவர்களின் கோட்பாடுகள் வரலாற்று முறையைப் பின் பற்றுபவர்கள் கொள்கை (Historical school 1843—1883), கார்ல் மார்க்சின் கொள்கைகள் (1818—1883), முதலியவைகள் ஓரளவு இந்தியச் சிந்தனையாளர்களின் கருத்தில் புகுந்தன. மார்க்சின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு நிலைபெற்றிருந்த இந்திய அரசியல் அமைப்பினுல் செல்வாக்கு இல்லை. ஆனுல், குடியேற்ற நாடு என்ற வகையில் இந்தியா இருந்ததால், லிஸ்டு அவர்களின் தடையிலா வாணிபம், நாட்டுத் தொழில் பாதுகாப்பு (free trade and protection) முதலியவை இயல்பாகவே கடைப்பிடிக்கப்பட்டன. சாத்திர முறையில் பார்க்கப் போனுல் புதுப் புது வாய்ப்புகள், புதுப்புது கொள்கைகள் உருவாகியுள்ளன. அல்லது உள்ள விஷயங்களைக் குறித்துப் புதிய வழியில் நோக்கினுல் புதிய கொள்கைகளை மேற்கொள்ள வேண்டியதாய் இருக்கின்றன.

18. இந்தியப் பொருளாதாரக் கோட்பாடுகள்—பல்வேறு சார்புகள்

பொதுவாக இந்தியப் பொருளாதாரக் கோட்பாடுகளின் சிந்தனைகள் பல்வேறு சார்புடையவர்களின் குறிக்கோள்களின் படி வளர்ந்து வந்துள்ளன என்று சொல்லலாம். அறிவியல் முறையில் சுத்தப் பொருளாதார நியதிகள் வளர்வதற்கு இந்தியாவில் வழியில்லை. இஃது எல்லா நாடுகளுக்கும் ஏற்பட்ட குறைபாடுதான் எனினும் இந்தியாவில் அது தவிர்க்க முடியாததாக இருந்தது.

பொருளாதாரச் சிந்தனையாளர்களைக் கீழ்க்கண்ட முறையில் பிரிக்கலாம் :

(1) ஆட்சியில் உள்ளவர்களின் கருத்துகள் (Governmental thinking).

(2) அரசியலில் ஈடுபட்டவர்களின் கருத்துகள் (political thinking). இவற்றில் இரு பிரிவுகள் உண்டு. அவை,

(அ) இடது சாரி, (ஆ) வலது சாரி.

3. உத்தியோகம், அரசியல் ஈடுபாடற்ற இந்தியப் பொருளாதார நிபுணர்களின் கருத்துகள்.

(4) வெளிநாட்டு நிபுணர்களின் கருத்துகளும் சிந்தனைகளும் (foreign critics and advisers).

முதல் வகுப்பினர்களில் முக்கிய இடம் பெறுபவர்கள் இந்திய மத்திய அரசு நிதி மந்திரிகளும் அவர்களின் உதவியாளர்களும் ஆவார்கள். பொருளாதாரக் கொள்கை பொதுவாக நிருவாகக் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும்

போதுதான் வெளிப்படையாக உருவாகி தர்க்கத்திற்குத் வருகின்றன. விடுதலைக்கு முன்னரும் பின்னரும் திறமையான நிதி மந்திரிகள் இருந்துள்ளார்கள். அவர்களின் கருத்து வேறுபாடுகள் அரசியல் சார்பைப் பொறுத்ததாகும். உதாரணமாக, பழைய ஆங்கிலேய நிதி மந்திரிகள் திறமையுடையவர்களாகவும் முன்னெச்சரிக்கை உடையவர்களாகவும் இருந்த போதிலும் பிரிட்டிஷ் அரசின் நலத்தைக் கருத்திற்கொள்ளாது செயலாற்ற முடியவில்லை. அவர்களின் தொழில் பெருக்கக் கொள்கைகள், வாணிபக் கொள்கைகள், வரி விதித்தல்கள் எல்லாம் ஓரளவு பிரிட்டன் நலத்தைக் கருதும் கோணத்திலிருந்துதான் உருவாகும். சர் ஜேம்ஸ் கிரிக்கு முதலிய திறமையான அரசாங்க உறுப்பினர்களின் கோட்பாடுகளால் இதைக் காணலாம். இடைக்காலத்தில் வந்த இந்திய மந்திரிகள் R. K. சண்முகம் செட்டியார், டாக்டர் ஜான் மாத்தாய் போன்றவர்கள் அரசியலிலுள்ள பற்றைவிட பொருளாதார அறிவியலில் ஈடுபாடுடையவர்களாய் விளங்கியதால் ஓரளவு மிதவாதிகளாகவே காணப்பட்டார்கள். இவ்வாறு இருப்பது ஆளும் கட்சிக்கு நல்லதே ஆயினும், எதிர்க்கட்சியாளர்களிடையே கருத்து வேற்றுமையை ஏற்படுத்துவது இயல்பாகும்.

நிற்க, பாராளுமன்ற மக்கள் ஆட்சியில் மந்திரி சபையின் கூட்டுப் பொறுப்பால் நிதி மந்திரி மட்டும் தன் கருத்தை நிலைநாட்ட முடியாது. மந்திரி சபையின் ஆதரவும், முக்கியமாகப் பிரதமரின் ஒப்புதலும் பெற வேண்டும். இவர்களுக்கு பின்னர் வந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், முரார்ஜி தேசாய் போன்றவர்களின் கருத்துகளும் பல்திறப் பட்டனவாய்க் காணப்படும். சிலர் மேல் நாட்டு நிபுணர்களின் கருத்தில் நம்பிக்கையும் பற்றும் உடையவர்களாய் இருப்பர். சிலர் தமது சொந்தக் கருத்துகளில் பிடிவாதம் உடையவர்களாய் இருப்பர். (உதாரணம், பொன் கட்டுப்பாடு.) அண்மைக் காலத்தில் தனியார் துறை, பொதுத் துறை தொழில் ஈடுபாடுகளைப்பற்றித் தீவிர விவாதங்கள் நடந்து வருவது அனைவரும் அறிந்ததேயாகும். எந்த அதிகார வர்க்கத்தினரும் பொருளாதார நியதியை எடுத்துக் காட்டி, தம் ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது பொதுவாகக் கிடையாது. உதாரணமாகப் பற்றுக்குறை நிதியாட்சியைப்பற்றி எத்தனையோ பொருளாதார நிபுணர்களும், வணிக சங்கங்களும் தங்கள் கருத்துகளைக் கூறிய போதிலும் அதிகார வர்க்கத்தினர் தாங்கள் நினைத்ததையே செய்தனர். வங்கி தேசிய மயமாக்குவதைப்பற்றிய விவகாரத்திலும் இவ்விதமே அதிகாரவர்க்கம் நடந்து கொண்டது.

பொருளாதார விதியை வைத்து இவைகள் உறுதி செய்யப் படுவதில்லை. அரசாங்க நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டும் Government economics என்ற ஒரு அனுபவ, ஆனால், அசாஸ் திரியான பொருளாதாரக் கொள்கைகள்தான் நிலவி வரும். இஃது எந்த நாட்டிற்கும் ஒப்ப முடிந்த ஒரு நிலைதான். ஆனால், மேல் நாடுகளில் நாட்டின் தலைமை வங்கி, பொருளாதார நிபுணர்கள், பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் கூறும் கருத்துக் களைக் கேட்டுச் சிந்தித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். இந்த முறை இந்தியாவில் இன்னும் உருவாகவில்லை எனலாம்.

இனி, அரசியல் கட்சிகளின் சார்பற்றக் கூட்டத்தாரின் பொருளாதாரம் அவர்களின் அரசியல் கொள்கைகளைப் (political ideology) பொறுத்தவையாக இருக்கும். சில கட்சிகள் எல்லாவற்றையும் தனியாரிடமே (free enterprise) விட்டுவிட வேண்டும் என்று கூறுவர். மற்றொரு சாரார் எல்லாம் தேசிய மயமாக்கப்பட்ட வேண்டுமென்று வற்புறுத்துவர். மேலும் சிலர் சமுதாயக் கட்டுப்பாடு (social control) மட்டும் இருந்தால் போதும் என்பர். இந்தக் கட்சிகள் தங்கள் தங்கள் அரசியல் கோட்பாடுகளைத் தங்கள் தங்கள் தேர்தல் அறிக்கைகளில் (election manifestoes) குறிப்பிடவேண்டும். ஆனால், அரசியல் கட்சிகள் தெளிவாகக் குறிப்பிடப்படுவதில்லை. பல சமயங்களில் குறிப்பிட்ட பொருள்களில் நிலையான கொள்கையைக் கூறிக் கொள்வதற்குத் தயாராய் இருப்பதில்லை. இதனால், நாட்டின் நலம் பாதிக்கப்படும். உதாரணமாகத் தேசியமயமாக்கும் கொள்கை அடிக்கடிப் பேசப்பட்டு வந்தால் அயல் நாட்டுப் பொருள் ஈடுபாடு இந்தியாவிற்கு அதிகமாகக் கிடைக்காமல் போய்விடும்; இந்தியாவில் தொழில்களை ஏற்படுத்த அஞ்சு வார்கள். அரசாங்கத்திற்குக்கூட பொருளாதாரக் கொள்கை இல்லை (no economic policy) திட்டங்கள் மட்டும்தான் (five year plans only) இருக்கின்றன என்ற குறைபாடுகள் கூறப் படும்.

அயல் நாட்டு நிபுணர்களும், அயல் நாட்டு அரசாங்கங் களும், இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகள் உருவாகக் கருவியாக இருக்கிறார்கள் என்பது ஓரளவு உண்மையேயாகும். கால்டார் போன்ற நிபுணர்களின் கருத்துகள் ஏற்றுக்கொள் ளப்பட்டவையே. ஆனால், அந்தக் கருத்துகளை அரசாங்கம் ஏற்கக் கட்டுப்பட்டதன்று. இஃதிப்படி இருக்க, அயல் நாட்டுப் பண உதவியால் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகள் சாதகமாகவோ பாதகமாகவோ ஒரு சிறிது மாறலாம். அயல் நாட்டு உறவுக் கொள்கைகள்கூட நாட்டுப் பொருளாதாரக்

கொள்கைகளைப் பாதிக்கலாம். அயல் நாட்டுப் பொருளுதவி அரசியல் திணிப்புகளுடன் (political strings to foreign aid) மறைமுகமாகச் சேர்க்கப்படுவது நடைமுறையில் கண்டதேயாகும். வங்கிகளைத் தேசிய மயமாக்கியது வெளிநாட்டுப் பொருளுதவி வங்கிகளின் ஏவுதல் என்றும் கூறப்பட்டது நினைவிருக்கலாம்.

இதுகாறும் கூறியவற்ருல், இந்தியப் பொருளாதாரத்தின் தூய கொள்கைகளை அரசாங்கத்தினராலோ அரசியல் கட்சிகளினுலோ உருவாக்க முடியாது என்பது வெளிப்படை. எவ்விதச் சார்புமற்றப் பொருளாதார நிபுணர்களால்தான் தூய கொள்கைகளை உருவாக்கித் தர முடியும். ஆனுல், இவை வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாகவும், தந்தக் கோபுரக் கொள்கைகளாகவும் இருந்தால் எவ்விதப் பயனும் இல்லை. எனவே, அரசாங்கமும் நிபுணர்களும் சேர்ந்து சிந்தித்த பின்னர், அரசாங்கம் இவற்றைக் குறித்து முடிவு கட்டவேண்டும். அதுதான் நல்லது. இந்த முறை இப்போது சிறிது வளர்ச்சி அடைந்து வருகிறது. இதை applied economics என்பார்கள். மத்திய, மாநில அரசாங்கங்கள் பல்வேறு பொருளாதார ஆராயச்சி நிலையங்கள் மூலம் குறிப்பிட்ட பிரச்சினைகளை ஆராயச் செய்து, பின்னர் அவை அளிக்கும் அறிக்கைகளின் பரிந்துரைகளின் பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்றது. இது வேண்டற்பாலதாகும். ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கும் கடைப்பிடிக்கும் நடைமுறைகளுக்கும் இரு வழிப் போக்குவரவுள்ள உரையாடல் இருந்தால்தான் கொள்கைகள் நிலைபெறும்; செயல்முறையில் இவை பயன் பெறும்.

19. இருபதாம் நூற்றுண்டில் இந்தியப் பொருளாதாரப் பொதுக் கொள்கைகள்

இருபதாம் நூற்றுண்டில் 1947ஆம் ஆண்டில் இந்தியா சுதந்தரம் அடையும்வரை நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் அன்னிய ஆட்சியின் பொருளாதார நடவடிக்கைகளை ஆராய்ந்து அவற்றில் குறைகளிருப்பின் விளக்கிக் காட்டுவதையே அடிப்படையாகக் கொண்டிருந்தன என்பது தெளிவாகிறது. இதில் பங்கு கொண்டவர்கள் கலே, விரிஜ் நாராயணன், காந்திஜி, மேத்தா, ஷா, முகர்ஜீ, வக்கீல், காட்கில், வாடியா, கியான் சந்த், சண்முகஞ்செட்டியார், மத்தாய், தாமஸ், பாலகிருஷ்ணு முதலியோர் ஆவார்கள். பொதுவாகச் சிந்தனைக்கு வந்த விஷயங்கள் நிலவரி, வருமான வரி, இராணுவச் செலவு, வாணிபப் பெருக்கம், போக்குவரவு, தொழில் முன்னேற்றம், நாணயம், வங்கி முதலியனவாகும். ஆனுல், கொள்கைகளாக உருவாக்கி வாதித்தவர்கள் சிலரே ஆவர். மேத்தா, முகர்ஜீ போன்றவர்கள்தான் கோட்பாடு வரம்பில் இருந்து எழுதியவர்கள். மேனுட்டுக் கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை உருவாக்க வேண்டுமெனக் கூறியவர்கள் கலே, விரிஜ் நாராயணன் போன்றவர்களும் தொழில்மயமாக்குவதுதான் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என்று வாதாடினுர்கள். குடிசைக் கைத்தொழில் போதாது என்று இவர்கள் வாதாடியது வியப்பைத் தரத்தக்கதாகத் தோன்றினும் இந்தியப் பொருளாதாராப் போக்கைக் காணும்போது இது நல்ல கொள்கை எனக் கூறலாம்.

மேனுட்டுப் பொருளாதார ஆட்சியை எதிர்த்து நிற்க தொழில் முன்னேற்றம் இன்றியமையாதது என்ற கொள்கையை வற்புறுத்தியவர்கள் இவர்களேயாவார்கள். அடி நாளில் தனியார்த் தொழில் முன்னேற்றக் கொள்கைக்கு ஆதரவு தந்தாலும் பின்னர், திட்டமிட்ட முன்னேற்றத்திற்குத் தலையிடாக் கொள்கை (Laissez faire) கூடாது எனக் கருதினுர்கள். காந்தி

அடிகளின் பொருளாதாரக் கருத்துகளுக்கு ஒத்துழைப்புத் தந்த பேராசிரியர் மேத்தா அவர்கள் விரிஜ் நாராயணன் கொள்கைக்கு நேர்மாறான கொள்கையுடையவர் ஆவார். இந்த இரண்டு சார்பார்கட்கும் இடையே நடுப்பாதைக் கொள்கையை ஆதரித்த வர்கள் பேராசிரியர் முகர்ஜீயும் வேறு சிலரும் ஆவார்கள். பேரா சிரியர் ஷா மட்டும் இராச்சியப் பொதுவுடைமைக் கொள்கையை (state socialism) ஆதரித்து வந்தார். வக்கீல், வாடியா, காட்கில், கியான்சந்த், ராவ், சுதர்க்கர் முதலியோர் போன்ற சிந்தனையாளர் கள் அந்தந்தப் பிரச்சினைகட்கு மட்டும் தத்தம் கருத்துகளைத் தெரிவித்தார்கள். பொதுவாகப் பொருளாதாரக் கொள்கைக்கு ஒரு சாலை மாணவர்களாகவோ ஒரு கொள்கையை உடையவர் களாகவோ இவர்களைக் கருத இயலாது. பிற நாடுகளில் பேரறிஞ ராய் விளங்கிய சிலரைத் தவிர்த்து மற்றவர்களையெல்லாம் புதிய கோட்பாடுகளைச் செய்தவர்கள் என்று கூற இயலாது. இந் நிலை இந்தியாவில் மேலும் அதிகம் என்பதில் வியப்பில்லை.

அரசியல் வாதிகள் கம்யூனிசம், சோஷலிசம் வேண்டும் என்று விளம்பரம் செய்தார்களேயொழிய பொருளாதாரக் கோட்பாடா கப் பிரித்துக் கூறவில்லை. எம். என். ராய் போன்றவர்கள் பொது உடைமைத் தத்துவவாதிகளே தவிர பொருளாதாரக் கோட்பாடு களைச் செய்தவர்கள் ஆகமாட்டார்கள். தொழில் அதிபர் கூடா ரத்தில் இருந்த பொருளாதார நிபுணர்கள் தொழில் துணிவு சுயேச்சையை (free enterprise) வேண்டுமென்று வாதாடினார்கள். சிலர் காலப் போக்குக்கேற்றபடி பிடிவாதமாயிராமல் அரசாங்கக் கட்டுப்பாடுகட்கு முழு எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. வாணிகச் சங்கங்களும் (chambers of commerce), பொருளாதாரப் பத்திரிகை களும் தங்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப வாதாடின. தத்துவம் ஒன்றும் உருவாகவில்லை. விவசாயத்திற்கூட தெளிவான பொரு ளாதாரக் கருத்துகள் வெளிப்படவில்லை. கூட்டு விவசாயம் (Joint Farming) என்னும் சாதாரண முயற்சிகளில்கூட ஒருமுக மான முடிவுகள் ஏற்படவில்லை. பொருளாதாரக் கொள்கைகளை அரசியல் கண்கொண்டு ஏற்றும் எதிர்த்தும் கருத்துகள் வெளி யிடப்பட்டன. அவைகளை எல்லாம் ஒன்றுதிரட்டி ஒரு புது கோட்பாடாக இந்திய நாட்டுக்கு ஒத்ததாகவோ பன்னாட்டுக்கும் உகந்ததாகவோ எவரும் தரவில்லை. இந்தியாவில் கோட்பாடுகள் உருவாக மேல் நாட்டில் இருந்த கேய்ன்ஸ் போன்றவர் பலர் இந்தியாவில் காணப்படவில்லை. கேய்ன்சின் கொள்கைகள் மட்டும் அண்மைக் காலத்தில் இந்தியாவில் அதிகமாகப் பேசப் பட்டும், ஏற்றுக்கொள்ளப்பட்டும் வந்துள்ளன. கேய்ன்சின் கொள்கைகளைச் சிறிது கவனிப்போம் :

முதல் உலகப் போருக்குப் பின் கேய்ன்சின் கொள்கைகள் உலகெங்கும் ஆராய்ச்சி செய்யப்பட்டன. அவரது பொதுக் கொள்கை (general theory) வியாபார மந்தத்தில் அவரது சேமிப்புக் கொள்கையும் சமத்துவக் கொள்கையும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையாக இருந்தன. ஒரு நாட்டின் பொருளாதார நலத்துக்குச் சேமிப்பு ஒன்றுதான் வழி என்ற பழைய கருத்துத் தாக்கப்பட்டது. பொருளாதார முன்னேற்றத்திற்குத் தாராள மான செலவு இன்றியமையாதது என்பது நன்கு விளக்கப் பட்டது. ரிகார்டோவின் கொள்கைகளைப்போல், கொள்கை பகுப்பொருளாக இல்லாவிட்டாலும், அதை அடிப்படையாகக் கொண்டு கூறும் உண்மைகள் மதிக்கத்தக்கவையாகவே இருந்தன. முதலாளித் தத்துவத்தின் எதிர்காலம் இங்கிலாந்தில் எந் நிலையில் இருக்கத்தக்கது என்பதை அவர் முன்னோடி யாகக் கண்டார். அந்தக் காட்சியின் காரணமாக அவரது கொள்கைகள் உருவாயின. நெடுங்காட்சி முன், பின் அதைப் பற்றிக் கூறுசெய்தல் (analysis) என்ற முறையைத்தான் அவர் கடைப்பிடித்தார். இதற்கு உள உறுதியும் தெளிவும் வேண்டும். அவரது அரைகுறைப் போட்டியில் (imperfect competition) சமன் காண்பது மிகவும் முக்கியக் கொள்கையாகும். பொருளாதார நிபுணர் பலர் வியாபார மந்தம் நிலையாக நிற்கும் என்றனரே தவிர, அதனால் வளர்ச்சியின்மை ஏற்படுவதைத் தடுப்பதற்கு வழியொன்றும் கூறவில்லை. வளமான காலத்திற்குப்பின் மந்தம் ஏற்படுவது இயல்பு. அது எவ்வளவு காலம் பாதிக்கும்? இங்கிலாந்தில் இரண்டாம் உலகப் போரால் முடிவு ஏற்படுமா என்று ஒருவரும் கூறவில்லை. எனவே, மந்தம் மந்தமின்மை என்ற இரு எதிர்முகமான பொருளாதார நிலை உருவாவதில்லை. எத்திசையில் மந்தம், பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கிறது என்பதுதான் முக்கியமானது. அதைத் தீர்ப்பதற்குச் சேமிப்பு என்பதை மறந்து தாராளமாகச் செலவு செய்வதை மேற்கொண் டால் முடிவு காணக் கூடும் என்பதுதான் கேய்ன்சின் பொதுக் கொள்கை எனக் கூறலாம்.

எம். என். ராய் (1887—1954)

எம்.என். ராய் சிறு வயதிலேயே புரட்சிக்காரராய் பல நாடு கள் சென்று, கம்யூனிசத்தில் தோய்ந்திருந்து பின் மூலாதார மானிடக் கொள்கையைத் தீவிரமாகக் கைக்கொண்டார். இவரது கொள்கைக்கு ராடிகல் யுமேனிசம் (Radical Humanism) எனப் பெயரிட்டார். புரட்சியாளர்களைவிடவும், அரசியல் தத்துவாசி ரியர்களைவிடவும் இவர் பல சீரிய நூல்களை எழுதியுள்ளார்.

மார்க்சு, ஏன்ஜெல்ஸ் போல் தர்க்கவாத முறையில் தமது கொள் கைகளை விளக்கும் கூரிய அறிவுடையவர் இவர். இவர் எழுதிய நூல்களெல்லாம் பெரும்பாலும் மனிதனது தன்னுரிமையை அடிப் படையாகக்கொண்டு எழுதப்பட்டவையாயினும், பொருளா தாரச் சிந்தனைகள் அவற்றில் மலிந்து பொலிவுற்றுக் கிடக்கின்றன. அடிமைத்தனம் அன்னிய ஆட்சியில் மட்டும் அல்ல தன்னுரிமை யாட்சியிலும் முதலாளித் தத்துவத்தால் ஏற்படும். மேலும், பொது உடைமைத் தத்துவத்திலும் மனிதநலம் என்ற கொள்கை இல்லா விடின் அது கொடிய ஆட்சியாகவே ஆகிவிடும் என்று வற்புறுத் தினுர். இந்தியாவில் கனரகக் கைத்தொழில்களுக்கு முக்கியத் துவம் தருதல், அன்னிய நாட்டு முதலாளித் தத்துவத்திற்குத் துணைபோவதாகவே அமையும் என்றும், விவசாயமும் சிறுரகக் கைத்தொழில்களுமே மக்கள் பொருளாதாரத்தைச் சமன்படுத் தும் என்பதை விரிவாகக் கூறினுர். இந்த அடிப்படையில் மக்கள் திட்டம் (peoples plan) என்பதை வகுத்துக் காட்டினுர். 1920-ல் மாஸ்கோவில் நடந்த உலகக் கம்யூனிச மாநாட்டில் பெரும்பங்கு எடுத்துக் கொண்டார். பின்னர், 1931 முதல் 1936 வரை இந்தியா வில் சிறைவாசம் செய்தார். மெக்சிகோவிலும், சீனுவிலும் கம் யூனிசக் கட்சியின் நடவடிக்கைகளில் பெரும்பங்கு கொண்டார். இரண்டாவது உலகப் போரின் விளைவாக அவர் கம்யூனிசத்தில் நம்பிக்கையை இழந்து, உலக நன்மைக்கு ராடிகல் யுமேனிசம் தான் சிறந்த வழி என்று கருதிப் பல நூல்களை எழுதினுர். அவர் கடைசி எட்டு ஆண்டுகள் துறவி போல் வாழ்ந்தார். எனினும் மிகப் பெரிய சிந்தனையாளராக விளங்கினுர். மார்க்கிசம் நிரா கரிக்கப்பட வேண்டுமானுல் அதற்குப் பதிலாக அதைவிட மேம் பட்ட கொள்கை எது என்று ஆழ்ந்து சிந்தித்து 'ராடிகல் யுமேனிச'த்தைப் பரப்பினுர்.

முதல் உலகப் போருக்குப்பின் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இந்தியாவில் Indian Industrial Commission 1916, Fiscal Commission 1922, Montague—Chemsford Reforms 1919 ஆகியவை கள் அறிவிக்கப்பட்டன. நடுத்தர வகுப்பினரைக் (bourgeoise) கொண்ட இந்திய தேசிய காங்கிரசு, அன்னிய ஆட்சி யுடன் ஒத்துழைத்துப் பாட்டாளி மக்களை அடிமைத் தனத்தி லேயே அழுத்துவதற்கு இவை வழி வகுக்கும் என்று ராய் கருதி னுர். இதற்கு இவர் இரு காரணங்களைக் கூறினுர். அவற்றுள் ஒன்று அரசியல்; மற்றொன்று பொருளாதாரம். அரசியல் முறையில் நடுத்தர வர்க்கத்தினர் கிளர்ச்சி செய்து குடியேற்ற நாட்டின் அடிமைத் தனத்தை மாற்றுவது. பொருளாதாரத் துறையில், வறுமையில் வருந்தும் பாட்டாளி மக்கள், அந்நிய

நாட்டு முதலாளிகள் இந்திய முதலாளிகளுடன் சேர்ந்து நாட்டை முன்னேற்றமடையச் செய்யும் என்ற மறைமுகப் பொருளாதார அடிமைத் தனத்தை எதிர்த்தல். தனியாட்சி யாளர்கள் முதலாளிகளுடன் கூட்டாளியாக இருந்து வருவதைத் தடுத்தல். முதல் உலகப் போருக்குப்பின் பிரிட்டிஷ் அரசாட்சி காட்டி வந்த அரசியல், பொருளாதாரச் சலுகைகளும் நட்புரி மையும் இந்தக் குடியேற்ற நாட்டின் நிலையை மேலும் நீடிப்பதற் காகவே என்று ராய் கருதினர். எளிய அரசியல்வாதிகள் அந்தக் காலத்தில் எழுப்பிய கூக்குரலுக்கும் ராய் தத்துவத்தின் அடிப் படையில் கூறிய பொருளாதாரக் கொள்கைக்கும் இடையே பெருத்த வேறுபாடு காணப்பட்டது. எனவே, ராய் பொருளா தாரக் கொள்கையாளர்களுள் முக்கிய இடம் பெறுகிறார்.

இம் முறை பெரு நிலக்கிழார்களின் அடிமைத் தனத்தையும் பாமர மக்களின் வலிவற்ற நிலையையும் இந்தியப் பொருளாதாரத் தையும் மனிதன் மனிதனுக வாழவைக்கும் வாய்ப்பையும் பெரி தும் பாதிப்பதாக அவர் கருதினர். இந்தக் கொள்கை மிகவும் உண்மையானது. இந்திய விடுதலைக்குப் பின்னரும் இந்திய முதலாளித் தத்துவம் பொருளாதார வல்லாட்சி நீடிக்க விரும்பிய நாடுகளுடன் உறவு கொண்டு அதன் பலத்தைப் பெருக்கிக் கொண்டு வந்தது. இஃது இந்தியாவின் பொருளாதார வளர்ச் சியை வளர்க்க உதவும் என்று மேல் நோக்காகக் காணப்பட் டாலும், ஒரு பக்கத்தில் பொருளாதார அடிமைத்தனத்துக்கு வழி வகுப்பதாய் இருக்கிறது என்று சிலர் கூறுவர். அரசியல் கோணத்திலிருந்து சிலர் முதலாளி நாடுகளாகிய அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியைப் பெறக்கூடாது என்றும், ருஷ்யா, சீன முதலிய நாடுகளின் உதவியை நாடவேண்டும் என்றும் கூறுவர். அந்நிய உதவியை அறவே விலக்காமல் இருப்பதோடு, பொருளாதார அடிமைத்தனம் மேலும் நீடிக் காமல் இருக்கச் செய்ய வேண்டுமென்பதே அவர் கொள்கை. இதற்கு அவர் de-colonialism என்னும் பெயரைக் கொடுத்தார். இந்தியப் பொருளாதார வரலாற்றில் இது முக்கிய இடம் பெறும். இதை ராய் வேறு ஒரு கோணத்திலிருந்தும் நிலை நாட்டினர். இந்தியப் புரட்சியின் குறிக்கோள் சோஷலிசம். அப்படியானல் அதற்கு இன்றியமையாதது de-colonialism என்றார்.

இந்தியாவில் பூஷ்வா புரட்சி வராது, பாட்டாளியின் சர்வாதிகாரம்தான் (proletarian dictorship) ஏற்படும் என்று அப்போதே அவர் தெளிவாகக் கூறினர்.

இரண்டாம் பாகம்

1. ரொமேஷ் சந்தர் தத்

சுய சரிதம்

ஆங்கில இலக்கியத்தில் மிகத் திறம் படக் கல்வி கற்று, தகுதியின் காரணமாக உபகாரச் சம்பளம் பெற்று முதல்தரமாகத் தேறியபடியால் ஆசிரியர் பலரால் புகழப்பட்டார். ரொமேஷ் சந்தர் தத் இங்கிலாந்து சென்று I.C.S. (இந்தியன் சிவில் சர்வீஸ்) பட்டம் பெற எண்ணினர். அந்தக் காலத்தில் கடல் கடந்து அயல் நாடு செல்வது கண்டிக்கப்பட்டது. ரொமேஷுடன் புறப்பட்ட மூவருள் சுரேந்திரநாத் பானர்ஜிக்கு மட்டுமே பெற்றோர்களின் இசைவு கிடைத்தது. மற்ற இருவராகிய ரொமேஷுக்கும் பிகாரிலால் குப்தாவுக்கும் பெற்றோர் இசைவு கிடைக்கவில்லை. ஆகவே, இவ்விருவரும் இரவோடு இரவாக ஓடிக் கப்பலில் ஒளிந்துக் கொண்டனர். ஒருவருக்கும் சொல்லிக் கொள்ளாமல், உற்றார் உறவினர்களையும் மற்ற அனைத்தையும் துறந்து செல்லும் இவர்கள் உள்ளத்தில் தாங்கள் வெற்றி பெறுவோமா ? வெற்றியுடன் திரும்பினும் தங்களை நாடு ஏற்றுக் கொள்ளுமா? ஏழ்மையுடனும், ஏமாற்றத்துடனும் திரும்பி வருவோமா? சமுதாயத்திலிருந்து நீக்கப்படுவோமா ? என்பன போன்ற பல கேள்விகள் தோன்றி இவர்களை அன்று இரவெல்லாம் துன்புறுத்தின.

ரொமேஷ் சந்தர் தத் 1848ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 13ஆம் நாள் இசான் சந்தர் தத் என்னும் கவிஞர் ஒருவருக்கும் தகமணி என்னும் அம்மையாருக்கும் பிறந்தார். ரொமேஷுக்குப் பதின்மூன்று வயதாகும் போது அவருடைய தந்தையார் விபத்து ஒன்றில் சிக்கி இறந்து விட்டார். 1864ஆம் ஆண்டு புகுமுக வகுப்புத் தேர்வில் தேறினர். அந்த ஆண்டே மதங்கினி (மோகினி) போஸ் என்னும் அம்மையாரை மணந்து இல்லறம் நடத்தினர். அவருக்குப் பெண்கள் ஐவரும் ஆண்பிள்ளை ஒருவரும் பிறந்தனர்.

ஐரோப்பாவில் ரொமேஷ் சந்தர் மூன்றாண்டுக் காலம் தங்கிப் பெற்ற அனுபவம், தாய் நாட்டுப் பற்றும் சுதந்தர உணர்வும் கொண்ட அவரது உள்ளத்தில், பின் தங்கியுள்ள இந்தியாவைப் பல துறைகளிலும் முன்னேற்றமடையச் செய்து வளமிக்க பொன்னாடாக்கி மகிழ வேண்டுமென்ற எண்ணத்தை உண்டாக்கியது. இவர் மக்கள் பிரதிநிதிகள் பலர் ஒன்று சேர்ந்து நாட்டுக்காகச் சேவை புரியும் மன்றங்கள் பலவற்றைக் கண்டார். தொழில், வாணிபம், உற்பத்தி முதலியவைகள் வளரும் தன்மையையும், வேகத்தையும் கண்டார். இந்தியாவும் அத்தகைய வளர்ச்சியைப் பெற்று ஓங்கி உயர வேண்டுமென்று விரும்பினார்.

1868ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1871ஆம் ஆண்டு ஜூலை வரை ரொமேஷ் சந்தர் இங்கிலாந்தில் தங்கிப் படித்துச் சட்ட நிபுணராகும் தகுதியைப் பெற்றார். மேல் நாட்டுப் பண்பாட்டிலுள்ள நல்ல பல பழக்க வழக்கங்களை நேரில் கண்டார். இவர் தமது தாய் நாட்டிலிருந்து மேலும் பலர் வந்து இத்தகைய அனுபவங்கள் பெற்று இந்தியாவைப் புதுமையான நாகரிக நாடாக்கவேண்டும் எனக் கருதினார். இந்தியாவுக்குத் திரும்பியதும் இவர் கூறியதாவது: 'மேல் நாட்டின் பண்பாடுகளைக் கண்மூடித்தனமாக அப்படியே நாம் பின்பற்றக்கூடாது. ஆனால், அங்குள்ள பல உயரிய பண்பாடுகளை நமது சமுதாய நிலையங்களில் புகுத்த வேண்டும். நமது இந்தியப் பெரியோர்கள் அவர்களால் முடிந்தவரை இளைஞர் பலரை மேல் நாடுகளுக்கு அனுப்பி மனித உரிமை, ஆண் பெண் சமத்துவம் முதலிய தத்துவங்கள் செயல்படும் முறைகளைக் கண்டறிந்து வரச் செய்ய வேண்டும்' என்பதாகும்.

ரொமேஷ் தத் 'கொள்கை வழியாகக் கலப்புத் திருமணம் நடத்துவது நமது கடமை. ஏனெனில், பிளவுண்டு நலிந்து கிடக்கும் நமது இந்தியாவை நலமுடன் ஒன்றுபடுத்த விதவை மறுமணம், கலப்பு மணம் போன்றவைகளை நமது சிறிய வகுப்பில் ஆரம்பித்து நாளடைவில் இந்துப் பெருஞ்சமுதாயத்தில் நுழைத்தால் வைதீக இந்து பெரியோர்கள் நம்மைப் பின் பற்றுவார்கள். விதவை மறுமணத்தை ஆதரிக்கும் எனது 'சன்சார்' என்ற புதினமும் கலப்புத் திருமணத்தை ஆதரிக்கும் எனது 'சமாஜ்' என்ற புதினமும் இவ்வித சீர்திருத்தங்களின்மீது எனக்குள்ள பிடிப்பைக் காட்டும்' என்று எழுதியிருக்கிறார்.

இந்தியப் பொருளாதாரக் கொள்கைகள்

முன்னுரை

ரொமேஷ் சந்தர் தத் தோன்றிய 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் அரசியல் முரண்பாடுகளும் அறிவியல் தேக்க-

மும் நிறைந்த காலம்; நூதன சக்திகளும் அறிவியல் நுண்ணறிவும் இந்தியாவில் சிறிது சிறிதாக ஊடுருவி அரசியல், சமுதாயம், அறிவியல், மதம் முதலிய துறைகளில் புனரமைப்பும், புத்துணர்வும் தோற்றுவித்த காலம். அப்போழுதுதான் டாக்டர் R. C. மஜூம்தார் கூறுவது போல் இந்தியாவில் ஆங்கிலம் நுழைந்து தளைபட்டுக்கிடந்த நாட்டுக்கு அயல் நாடுகளின் அறிவையும் ஆற்றலையும் தோற்றுவித்தது. அக் காலத்தில்தான் மேல் நாடுகளிலும் 'பழையன கழிதலும் புதியன புகுத்தலும் வழுவல காலவகையினனே' என்றபடி நடந்து கொண்டிருந்தன' வழக்கமான கொள்கைகளுக்கு எதிர்ப்புகள் கிளம்பிய வண்ணமிருந்தன. பழைமையில் தேங்கிக் கிடந்த இந்தியா, நாளடைவில் முன்னேறிய அயல் நாடுகளைவிட அதிகமான எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருத்தது. பழைமையை ஆதரித்தாலும், புதுமையான நல்ல கொள்கைகளை ஊக்குவித்து உடன்கட்டையேறும் 'சதி' எனும் கொடிய பழக்கத்தைப் புகழ்மிக்க சீர்திருத்தக்காரரான ராஜா ராம் மோகன் ராய் என்பவர் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே சட்டத்தின் மூலம் நீக்கக் காரணமாய் இருந்தார். பழைமையில் மூழ்கியவர்களைத் திடுக்கிடச் செய்யும் விதவை மறு மணத்தை ஈஸ்வர் சந்தர் வித்யாசாகர் என்பவர் ஆதரித்துப் பரவிடச் செய்தார். மது சூதன் தத், தாரு தத் போன்றோர் தங்கள் கவிதைகளின் மூலம் இப் புதுமை கருத்துகளை மக்களிடையே பரவிடச் செய்தனர்.

ரொமேஷ் சந்தர் தத் இப் புத்துணர்ச்சி காலத்திய பொருளாதார நிபுணராதலால் அவருடைய கொள்கைகள் முற்போக்கான கருத்துகளைக் கொண்டனவாய் இருந்தன. அயல் நாட்டு அரசாங்க இடத்திலிருந்து இந்தியப் பொருளாதார நிலைகளைப்பற்றிச் சிந்திக்காமல் இந்தியப் பெருமக்கள் சார்பாகப் பொருளாதார மாற்றங்களைச் செய்ய விழைந்தார். பழைமையிலும், மூடப் பழக்க வழக்கங்களிலும் தோய்ந்து 'ஊழ்' என்றும் 'வினை' என்றும் கருதிக் கொண்டு முன்னேற்றமடைய விருப்பமிருந்தும் செயலற்றுக் கிடந்த தமது நாட்டினரைக் கண்டு கவலையுற்றார். ஆங்கில நாட்டின் அரசியல், பொருளாதார அமைப்புகளை நன்கு கவனித்து இந்தியாவின் ஏழ்மைத் தன்மைக்குக் காரணங்களை ஆராய்ந்தார். அவருடைய இறக்கம் அயல் நாட்டு ஏழைகள் பாலும் சென்றது. ஆங்கில நாட்டு வறியோர்களைப்பற்றி 1869-ல் இவர் எழுதியதாவது: 'அயல் நாட்டு மக்களுடைய உயர்ந்த பண்புகளுக்கிடையே அடித்தளத்திலுள்ள ஏழை மக்கள் எப்படி வாழ வேண்டுமோ அவ்வாறன்றி மனித இயல்புக்கொவ்வாத மிகக் கொடிய பழக்க வழக்கங்களுக்

குள்ளாகி அவதிப்படுகின்றனர். மது வருந்துதலும், மனைவி மக்களைக் கொடுமைப்படுத்துவதும் அளவுக்கு மீறிய கொடுமையான நிலையிலுள்ளது. பசி, பட்டினியால் வாடும் மனைவியையும் மக்களையும் மதுபோதையில் அடித்துத் துன்புறுத்திக் கொடுமை செய்யும் கணவனைப்பற்றியும், தந்தையைப்பற்றியும் நீதி மன்றங்களின் வாயிலாகச் செய்திகள் வந்த வண்ணமிருந்தும் மக்களைத் திடுக்கிடச் செய்யாதிருப்பதிலிருந்து அத்தகைய குற்றங்கள் எவ்வளவு அதிக எண்ணிக்கையிலும் வேகத்திலும் நடக்கின்றனவென்பது' புலனாகிறது என்பதாகும்.

அயர்லாந்தின் விவசாயிகளைப்பற்றிக் குறிப்பிடும்போது 'கிராமங்களைப் பொறுத்தவரை அவர்கள் உண்மையிலேயே ஏழைகளாயுள்ளனர். கணவன், மனைவி, மக்கள் முதல் அதிக எண்ணிக்கையில் உள்ளவர்கள் வெயிலிலும், மழையிலும் ஒரே வயலில் வேலை செய்துவிட்டு இரவில் அனைவரும் தொல்லைப் பட்டு ஒன்றாகப் பாழுங் குடிசையொன்றில் பன்றிகளுடனும் வாத்துகளுடனும் சேர்ந்து உறங்குகின்றனர்'. என்று கூறி தத் அவர்கள் இரக்கப்படுகிறார். கடைசியில் இந்தியாவைப்பற்றி அவர் குறிப்பிட்டு 'வளம் மிகுந்த நாடுகளுள் விவசாயிகள் வறுமையால் மிகவும் வாடுவது இந்தியாவில் மட்டுமல்ல வேறு நாடுகளிலும் உண்டு' என்று கூறுகிறார்.

விக்டோரியா பேரரசி ஆட்சியின் வைர விழா மிகக் கோலாகலமாக இலண்டன் மாநகரில் நடந்த போது பிரிட்டிஷ் பேரரசின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டார்கள். இங்கிலாந்து நாடு அத்தகைய மகிழ்ச்சியை அதன் வரலாற்றில் எக் காலத்திலும் கண்டதில்லை. பேரரசுக்கு அடங்கிய நாடுகள் அனைத்தும் முன்னேற்றத்தையும் செழிப்பையும் காட்டி மகிழ்ந்தன. இதை அறிந்த ஏழ்மையிலும் துன்பத்திலும் வறுமையிலும் உழன்று கொண்டிருந்த இந்தியாவின் காட்சி அனைவர் உள்ளத்தையும் ஈர்த்தது. மிக அதிக மக்கள் தொகை கொண்ட இந்திய நாட்டில் என்றும் கண்டிராத கொடிய பஞ்சம் 1897ஆம் ஆண்டு தோன்றி நாட்டை அலங் கோலமாக்கிற்று. வளர்ந்து வரும் செல்வமும், முன்னேற்ற மடைந்துவரும் தொழிலும், வளங்கொழிக்கும் விவசாயமும் ஆங்கில நாட்டுக் கொடியின் கீழுள்ள அனைத்து நாடுகளுக்கும் எட்டின. ஆனால், மிகப் பெரிய நாடான இந்தியாவுக்கு மட்டும் எந்த வாய்ப்பும் கிட்டவில்லை.

1898ஆம் ஆண்டு வரை நாட்டில் பஞ்சம் ஓய்ந்தபாடில்லை. 1899-ல் சற்று அமைதி ஏற்பட்டது. 1900-ல் மேலும் பரவலாக

மற்ருெரு பஞ்சம் தோன்றி மூன்ருண்டுக் காலம் மக்களைத் தொடர்ந்து வாட்டிற்று.

கனடா போன்ற நாடுகளில் ஆண்டொன்றுக்குத் தனிநபர் வருமானம் 49 பவுன். கிரேட் பிரிட்டனில் 42 பவுன். ஆனால், இந்தியாவில் அரசாங்கக் கணக்குப்படி ஆண்டொன்றுக்குத் தனிநபர் வருமானம் 2 பவுன் ஆகும். ராபர்ட் கிப்பின் என்னும் ஆங்கிலப் பொருளாதார நிபுணர் 'பிரிட்டிஷ் பேரரசின் மக்கள் தொகையில் ஆறில் ஐந்து பங்கு கொண்ட இந்தியாவை ஏழ்மை நிலையிலாழ்த்திவிட்டு எப்படி பேரரசில் ஒற்றுமையை வளர்ப்பது ?' என்று கேட்டார்.

இந்திய மக்களின் நிலையான ஏழ்மை நிலையைக் குறிப்பது தான் சிற்சில ஆண்டுகளில் வரும் பஞ்சங்களும், அதனுல் ஏற்படும் பெருத்த மக்கள் சேதமும், கால்நடை சேதமுமே தவிர வேறல்ல. இந்தியாவில் உணவு உற்பத்தி எந்தக் காலத்திலும் குறையவில்லை. 1897, 1900 முதலிய பஞ்சங்களால் பீடிக்கப் பட்ட ஆண்டுகளில்கூட இந்தியாவில் போதுமான உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. பருவ மழை தவறு வதால் சிற்சில பிரதேசங்களில் பயிர்கள் சேதமடைகின்றன. ஆனால், இந்தியாவில் செழிப்பான மற்றப் பிரதேசங்களிலிருந்து உணவுப் பொருள்களைப் பெறுவதற்குப் பஞ்சப் பிரதேசத்தி லுள்ள மக்களிடம் போதுமான சேமிப்போ வசதியோ இருப்ப தில்லை. ஆகையால், பஞ்சத்திற்குக் காரணம் மக்களின் ஏழ்மை நிலையே தவிர விளைபொருள் குறைவல்ல.

1876-ல் கிழக்கு வங்காளத்தில் பெரும் புயற்காற்றும், சூருவளிக் காற்றும் மழையுடன் சேர்ந்து அடித்து வீடுகளையும் பயிர்களையும் அழித்து நாசமாக்கின. அரசாங்கம் ரொமேஷ் சந்தர் தத் அவர்களை அதை ஆராய்ந்து போதுமான பாது காப்பு ஏற்பாடுகள் செய்து மக்களைக் காப்பாற்ற உத்தியோகத் தராக அமர்த்தி அங்கு அனுப்பியது. அந்த மாநிலத்தில் விவசாயிகள் மிகக் குறைந்த நிலத் தீர்வையைக் கட்டி வந்ததால் சாதாரணமாக வளமுடன் வாழ்ந்து வந்தனர். இந்தியக் குடி மகனுக்குப் பொதுவாக உள்ள எதிர்காலச் சேமிப்பு, சிக்கனம் முதலிய நற்பண்புகளால் அவர்கள் கடந்த பல ஆண்டுகளில் சேர்த்து வைத்த பணத்தைக் கொண்டு கப்பல் கப்பல்களாக அரிசி மற்ற மாநிலங்களிலிருந்து கொணர்ந்து பஞ்சம் வராதபடி தடுத்துக் கொண்டனர். பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப் பட்ட ரொமேஷ் சந்தர் தத் இதைக் கண்டு மன நிறைவு

அடைந்தார். ஆனால், அன்று கிழக்கு வங்காளத்திலிருந்தது போல் மற்ற மாநிலங்களில் நிலவரி குறைவாக இருக்கவில்லை. மேற்கு வங்கம், பம்பாய், சென்னை முதலிய மாநிலங்களில் வரிச் சுமை மிக அதிகமாய் இருந்தது. மக்களுக்கு வசதி குறைவாதலால் பொருள் சேர்த்து வைக்க முடியவில்லை. ஆதலால், பஞ்சங்கள் அடிக்கடி வந்து மக்களைப் பசி, பிணி, இறப்பு முதலியவைகள் வாட்டுகின்றன. ஒரு நாட்டின் செல்வ நிலை அதன் விவசாயம், வாணிபம், உற்பத்தி, நல்ல பொருளாதார நிருவாகம் ஆகியவைகளைப் பொறுத்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அமைதியைத் தந்தது. ஆனால், செல்வநிலையை உயர்த்தவில்லை.

இந்திய உற்பத்தியைக் குறைத்து, பிரிட்டிஷ் உற்பத்தியைப் பெருக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் நல்வாய்ப்பின்மை காரணமாகப் பலித்துவிட்டன. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் ஐரோப்பாவில் இறக்குமதி செய்ய பெருத்த சுங்க வரிகளும், பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் இந்தியாவில் இறக்குமதி செய்ய மிகச் சிறிய வரிகளுமே விதிக்கப்பட்டதால் இந்தியாவில் தாயரிக்கப்பட்ட பொருள்களுக்குத் தேவை இல்லாமல் உற்பத்தி நாளடைவில் குறைந்து தேய்ந்துவிட்டது. பிரிட்டிஷ் தொழிற்சாலைகட்கு வேண்டிய மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவும், அங்குத் தயாரிக்கப்பட்ட பொருள்களை வாங்கும் சந்தையாகவும் இந்தியாவை உருவாக்குவதே இங்கிலாந்தின் வியாபாரக் கொள்கையாக இருந்தது.

1837-ல் விக்டோரியா பேரரசி அரியாசனம் ஏறுவதற்கு முன்பே இந்தியாவுக்குப் போதுமான கெடுதிகள் விளைவிக்கப் பட்டுவிட்டன. பிரிட்டிஷ் தறிகளுக்கு இந்தியாவில் எப்படிப் பருத்தி விளைச்சலைப் பெருக்குவது என்பதைப்பற்றிப் பார்லிமெண்டில் விவாதங்கள் நடந்தனவே தவிர இந்தியத் தறிகளை எப்படிப் பெருக்குவது, முன்னேற்றமடையச் செய்வது என்பதைப் பற்றியல்ல. இந்தியாவைக் குறித்துக் கவலைப்படுவோர் அங்கு ஒருவரும் இல்லை. 1858-ல் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி முடிவுற்ற போதோ இந்தியாவின் பரம்பரை பரம்பரையாகப் புகழ் பெற்றத் தொழில் உற்பத்திக்கும் கெடுதல் ஏற்பட்டது. எஞ்சி நின்ற விவசாயத் துறை ஒன்றே இந்தியாவுக்கு வாழ்வளிக்கும் வாய்ப்பாக நின்றது.

1858க்குப் பிறகு பிரிட்டிஷ் வியாபாரிகள் இந்திய ஏற்றுமதி இறக்குமதி முதலிய சுங்கவரிக் கொள்கைகளைக் கூர்ந்து

கவனித்து வந்தார்கள். பம்பாயில் நூற்பாலைகள் தோன்றி யதைப் பொறுமைக் கண் கொண்டு நோக்கினர்கள். 1882-ல் உப்பு, மதுபானங்களைத் தவிர மற்றெல்லாப் பொருள்களுக்கும் இறக்குமதி வரிகள் அடியோடு நீக்கப்பட்டன.

தினசரி இரண்டரை பென்னிகூட சம்பாதிக்க இயலாத ஏழை இந்தியன் உடுக்கும் மட்டரகமான முரட்டுத் துணிக்கும் வரி விதிக்கப்பட்டது. வளரும் சிறு பருவத்திலுள்ள பம்பாய் நூற்பாலை கட்கு ஆதரவு தருவதை விடுத்து நாகரிக உலகில் எங்குமில்லாத அளவிற்கு வரி விதித்து நசுக்கப்பட்டன. ஒன்றரை நூற்றுண்டுக் காலமாக ஆங்கில ஆட்சியாளர்கள் வியாபாரத் துறையை ஆங்கிலேய வியாபாரிகளுக்கு உதவியாக இருக்கும் வழியில் அணுகினர்களே தவிர இந்திய உற்பத்தியைப் பெருக்கும் வகை யில் அணுகவில்லை. மிக நேர்த்தியான பயனுள்ள பொருள்களை இந்தியாவிலிருந்து போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், அராபியர், ஆங்கிலேயர் முதலியோர் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுகளின் பெருமை மறைந்து விட்டது. ஆக, ஆலைகட்கு வேண்டிய மூலப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா மாற்றப்பட்டது. இவையெல்லாம் ரொமேஷ் சந்தர் தத்தை மிகவும் உறுத்தின.

உள்ளாட்சி அதிகார மாற்றம்

மார்லி பிரபுவால் 1907ஆம் ஆண்டு அங்கத்தினர் எழுவர் கொண்ட அதிகாரம் பரவலாக்கும் குழு (Royal commission on decentralisation) நியமிக்கப்பட்டது. அதில் ரொமேஷ் சந்தர் தத் ஒருவர்தான் இந்தியர். மற்றேனையோர் ஆங்கிலேயர் ஆவர். அக் குழுவிற்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை. நிருவாக அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமானுல் அதன் முடிவுகளால் பாதிக்கப்படும் பகுதிகளிலுள்ள மக்கள் கருத்தறிந்தே செயல்பட வேண்டும். அதற்கேற்ப நிருவாக இயந்திரத்தில் மாறுதல்கள் செய்யப்பட வேண்டுமாகையால் 1808ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசுக்கு அக் குழு தனது முடிவுகளைத் தெரியப்படுத்திற்று. அவற்றையும், ரொமேஷ் சந்தர் தத் தெரிவித்த மாறுபட்ட கருத்துகளையும் ஆராய்ந்து 1908ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்களில் இங்கிலாந்து பார்லிமெண்ட் முன் சீர்திருத்த மசோதா ஒன்றை மார்லி பிரபு வைத்தார். அம் மசோதாவில் கொடுக்கப் பட்ட அதிகார மாற்றங்கள் வருமாறு :

1. அரசப்பிரதிநிதி ஆட்சி மன்றக் குழுவில் ஓர் இந்தியரை நியமித்தல்.
2. மாநில கவர்னர் (ஆளுநர்) ஆட்சி மன்றக் குழுவில் இந்தியரை நியமித்தல்.
3. மாநில சட்டமன்றங்களில் பொது மக்கள் பிரதிநிதிகள் பெரும்பான்மையாக அங்கம் வகிக்கச் செய்தல்.
4. மாநில சட்ட மன்றங்களில் ஆண்டுதோறும் தயாரிக்கப் படும் பொருளாதாரத் திட்டங்களை ஆராய்வது, பொது விஷயங்கள், அரசாங்க நிருவாகம் முதலியவைகளைப் பற்றி விவாதிப்பது போன்ற அதிகாரங்கள் அளிப்பது.
5. கிராம தன்னுட்சி நிருவாகத்திலிருந்து மாவட்டத் தன்னுட்சி நிருவாகம் வரை சீரமைத்தல் முதலியன வாகும்.

தொழிலும் வணிகமும்

இந்தியா, பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டு மானுல் தொழிற்சாலைகளும், தொழில் முறைகளும் புதுமையான சாதனங்களுடன் இயங்க வேண்டும். இந்தியாவுக்கும் இங்கி லாந்துக்குமுள்ள பொருளாதாரத் தொடர்பை ஆராய்ச்சி மூலம் கண்டறிந்த ரொமேஷ் சந்தர் தத் விவசாய வளர்ச்சி மட்டும் இந்தியாவின் பொருளாதார வசதியைப் பெருக்கப் போதுமானதல்ல என்று கருதினுர். தனியாட்சி அதிகாரமும் ஆதிக்க மனப்பான்மையும் கொண்ட அரசு தொழில் வளர்ச் சியை ஊக்கப்படுத்தாது ; வளர்ச்சியடையாதபடி தடைக் கல்லாக இருந்தாலும் இருக்கும். அஃது எப்படி இருப்பினும் தோல்வி மனப்பான்மை கொள்ளாது தொழில் வளத்தை வளர்க்கப் பாடுபட வேண்டும். விவசாயம் எவ்வளவு முக்கிய மானதாக இருந்தாலும் அது பொருளாதார உதவியும், மற்ற சம்பந்தப்பட்ட தொழில்களின் உதவியும் இன்றி, முன்னேற்ற மடைந்த நாடுகளிலுள்ளதுபோல், நம் நாட்டை உயர்த்த முடியாது என்று இப்போது நாம் உணர்வது போல் நூருண்டுக் காலத்திற்கு முன்னிருந்தோர் உணரவில்லை. இந்தியா பொரு ளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்த நாடாக விளங்க வேண்டுமானுல் தொழில் வளங்களைப் பெருக்கி விவசாயத் திற்குத் துணை புரிய வேண்டும். இதை இந்தியர்கள் நன்கு உணர்ந்தார்கள்.

இரு மாறுபட்ட கருத்துகளுக்கு இடையில் உண்மை

இந்தியத் தொழில், உற்பத்தி ஆகியவைகளைப் பற்றி இரு தவறான கருத்துகள் இருந்து வந்தன. ஒன்று தாழ்வு மனப் பான்மை. அஃதாவது இந்தியா ஒரு விவசாய நாடு. ஐரோப்பிய நாடுகளின் தொழில் வளர்ச்சியோடு இந்தியத் தொழில் போட்டி யிட முடியாது என்பது. மற்றொன்று தவறான மனநிறைவு மனப் பான்மை. இந்திய வாணிபம், இறக்குமதி, ஏற்றுமதி ஆகியவை கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே இருந்தன. அதனால், உற்பத்தி வளர்ந்து கொண்டே வருகிறது எனத் தவறாகக் கருதியது. முதல் கருத்து இந்திய செய்தித் தாள்களிலும், தினசரிகளிலும் வரும் மனநிறைவற்ற நிலை. இரண்டாவது கருத்து இலண்டன் நகரில் ஆங்கிலேயர்கள் வியாபாரப் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு கூட்டங் களில் பேசியது உண்மை நிலை இவ்விரு கருத்துகட்கும் இடை யில் இருந்தது. தொழில் துறையில் இந்தியர்கட்கு மாபெரும் இன்னல்கள் ஏற்பட்டன. தொழில் துறையில் முன்னேறிய நாடுகளுடன் போட்டியிடுவது எளிதல்லதான். உள உறுதி யோடு சமாளித்து முன்னேறுவது இந்தியர்கள் மன நிலையைப் பொறுத்திருந்தது. உள்ளத் தளர்ச்சியடையாது நமது பழைய தொழில் துறையை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். எந்த நாட்டிலுமில்லாத அளவு பொருளாதாரம் நம் நாட்டில் நலிந்திருக்கிறது. எனவே, அதை வலிவுள்ளதாக்க வேண்டும். தொழில் துறையில் நமக்குள்ள இன்னல்கள் இரண்டு. முதலா வது நம்மோடு போட்டியிடும் நாடுகள் ஏற்கெனவே, நம்மை முந்திக் கொண்டிருக்கின்றன என்பது. இரண்டாவது இப்போட் டியில் நமக்கு நீதியற்ற இன்னல்கள் பல இருந்தன என்பது.

முதல் இன்னல்

கடந்த பல நூற்றாண்டுகளாக இந்திய உற்பத்திப் பொருள்கள் ஐரோப்பா, ஆசியா, அரேபியா, போர்ச்சுகல் முதலிய நாட்டுச் சந்தைகளில் போற்றிப் புகழப்பட்டும் டச்சு, இங்கிலாந்து கப்பல்களில் இந்தியப் பொருள்கள் உலகின் பல பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் வந்தன. அக் காலத்தில் இந்தியத் தொழில் வளம் நசுக்கப்படும் என்று ஒருவரும் எண்ணியதில்லை. இந்தியச் சரக்குகளின் மேன்மை, உற்பத்தி வேகம் முதலியவை களால் மன நிறைவும், இலாபமும் அடைந்த அயல் நாட்டு வணிகர்கள் இந்தியத் தொழிலை மிகவும் ஆதரித்தார்கள்.

ஆனால், 18ஆம் நூற்றாண்டின் இடையில் இந்தியா ஆங்கிலேயர்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட பிறகு நிலைமை மாறிவிட்டது. ஆங்கிலேயர்கள் அவர்கள் நாட்டில் பொருள்களை உற்பத்திச் செய்து வியாபாரம் செய்பவர்கள். இந்திய உற்பத்திப் பொருள்களுக்கு அரசாங்க ஆதரவு குறைந்துவிட்டது. வரிகள் பல போட்டு ஏற்றுமதி குறைக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டுக்குச் சலுகைகள் பல காட்டி இறக்குமதி பெருக்கப்பட்டது. இதன் உட்பொருள் இங்கிலாந்து நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கு இந்தியா மூலப் பொருள்கள் வழங்கும் நாடாக மாற்றப்பட்டது. இந்த நிலையைப்பற்றிச் சரித்திர ஆசிரியர் H.H. வில்சன் 'சரிசமமாக நின்று போட்டியிட இயலாத ஆங்கிலேய தொழிற்றுறை நேர்மையற்ற அரசியல் அதிகாரத்தால் தன்னோடு போட்டியிடும் இந்திய நாட்டை மட்டந்தட்டி வைத்துக் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டது' என்று கூறுகிறார்.

இங்கிலாந்தில் புதிய ஆலைகள் பல ஏற்பட்ட பிறகு இந்தியாவின் கைத்தறித் தொழில் மிகவும் பின்னடைந்துவிட்டது. நமது பருத்தி ஆடை உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவை 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நலிவுற்றதை அடியில் கண்ட புள்ளி விவரம் காட்டுகிறது. கல்கத்தா துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியான பருத்தித் துணிகள் குறைந்த வேகத்தைக் காட்டும் பட்டியல்:

நாடு	ஆண்டு	பேல்கள்	ஆண்டு	பேல்கள்
பிரிட்டன்	1801	6000	1826	1000க்குக் குறைவு
அமெரிக்கா	1801	13000	1829	300
டென்மார்க்	1800	1400	1820க்குப் பிறகு	150க்குக் குறைவு
போர்ச்சுகல்	1799	10000	1825க்குப் பிறகு	1000க்குக் குறைவு

இதே போன்று மற்ற துறைமுகங்களிலும் ஏற்றுமதி குறைந்துவிட்டது. ஆனால், இறக்குமதியின் அளவோ ஏறிக்கொண்டே போயிற்று. உதாரணமாக 1858ஆம் ஆண்டு ரூபாய் 50 இலட்சம் மதிப்புள்ள துணிகளும், 1877ஆம் ஆண்டு ரூபாய் 160 இலட்சம் மதிப்புள்ள துணிகளும் இறக்குமதியாயிற்று. இப்படி இறக்குமதியின் அளவு ஏறியது இந்தியாவின் செழிப்பு நிலை என்று உண்மை நிலைக்கு மாறாகத் திரித்துக் கூறப்பட்டது.

இரண்டாவது இன்னல்

எப்படி ஒரு நாடு உற்பத்தித் தொழில் மூலம் மட்டுமே நிரந்தரமாக முன்னேற முடியாதோ அப்படியே விவசாயத்தின் மூலம் மட்டுமே எந்த நாடும் முன்னேற முடியாது. இரண்டும் ஒருமித்து முன்னேற்றமடைந்து நாட்டு மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். விவசாயத்தை முழுவது மாகப் புறக்கணித்துவிட்டுத் நாட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்களுக்கு அயல் நாடுகளை அணுகும் இங்கிலாந்தைப் பாராட்ட முடியாது. அதேபோல் நமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் தவிர மற்றனைய செய்பொருள்களுக்கு அயல் நாடுகளை அணுகும் இந்தியாவைப் பாராட்ட முடியாது. சொந்த வயலில் வேலை செய்து வாழும் விவசாயியையும் சொந்தத் தொழிற்சாலையில் வேலை செய்து வாழும் தொழிலாளியையும் போல் பிறருடைய வயலிலோ தொழிற்சாலையிலோ கூலிக்கு வேலை செய்து வாழும் தொழிலாளி மதிப்புடன் மிகிழ்ச்சியாக வாழமுடியாது. நாட்டுப்புற வயல்களிலும் குடிசைத் தொழிலகங் களிலும் வேலை செய்யும் பாட்டாளியைப் போல் நகர்ப்புறத்தில் பெரிய ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் பாட் டாளிகள் நல்ல உடல் நலத்துடன் இருப்பதில்லை. நலமான நல்ல சமுதாயத்தை நாம் வளர்க்க வேண்டுமானால் குடிசைத் தொழில் முதலிய கிராம சிறுதொழில்களுக்கு ஆதரவு தரவேண்டும். நகரங் களில் பெரிய ஆலைகளைச் சுகாதார முறைப்படி அமைத்துப் பலருக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும். ஆகவே, இவ்விரு முனையிலும் இந்தியா தனது கவனத்தைச் செலுத்த வேண்டி யதாய் இருந்தது.

கம்பெனிகள் அமைத்து ஆலைகள் அமைக்க முதலீடு தேவை. அதற்கு நம் நாட்டின் சூழ்நிலை சரியாக இல்லை. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளைவிட நம் நாட்டின் நிலங் களுக்கு வரி விதிப்பு அதிகம். நம் நாட்டில் வரும் வருவாய் அனைத்தும் நம் நாட்டில் செலவிடப்படுவதில்லை ; இங்கிலாந் துக்குச் சென்றுவிடுகிறது. ஆகவே, தொழில் துறையில் (1) நாம் பின் தங்கி விட்டோம். (2) அத் துறையில் பயிற்சி, (3) மூலதனம், (4) தேவைப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் ஆகியவை நம்மிடமில்லை. ஆயினும், இந்தியப் பெருமக்களுக்குத் திறமை இருக்கிறது. பொறுமையும், நுண்ணறிவும், புதுமையைப் போற்றி சூழ்நிலைக்குத் தக்கவாறு திறம்படப் பயன்படுத்தும் ஆற்றலும் நம் மக்களிடம் நிரம்ப இருக்கின்றன. அன்னை பூமி அளிக்கும் மூலப் பொருள்களும் மக்களின் மனமுவந்த உழைப்பும்

ஒற்றுமையும் இருப்பதால் ஒளிமயமான நம்பிக்கை உண்டா கிறது. முயலாமல் தோல்வி மனப்பான்மையோடிருப்பதைவிட முயன்று தோல்வியடைவது மேல். முயன்றால் வெற்றி உறுதி என்னும் நம்பிக்கைமிகவும் இருக்கிறது. கைத்தறிகட்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டும். இந்தியப் பட்டுக்கும், பட்டாடை கட்கும் மிகுந்த செல்வாக்கிருக்கின்றன. கம்பளி நெய்தல் வேகமாகப் பரவி வருகிறது. இவைகட்கு வெளிநாடுகளில் நல்ல வாய்ப்பும் தேவையும் இருக்கின்றன. மற்றும் சணலும், சணலாலாகிய பொருள்களும் செம்பு, பித்தளைச் சாமான்களும் அதிகமாக உற்பத்தியாகி வேகமாக விற்பனையாகின்றன. ஜப்பானைத் தவிர வேறெந்த நாடும் இந்தியாவைப் போல் மிகுந்த இன்னல்களுக்கும் மாறுபாடான சூழ்நிலைகட்குமிடையில் இவ்வளவு குறுகிய காலத்தில் இந்த அளவு முன்னேறியதில்லை.

தரம் எப்படி இருப்பினும் சுதேசிப் (உள் நாட்டுப்) பொருள்களை வாங்கி ஆதரித்து நம் நாட்டின் தொழிலையும் உழைப்பாளிகளையும் ஆதரிக்க வேண்டும். உலகத்தின் எல்லா நாடுகளும் தம்தம் உள்நாட்டுப் பொருள்களை மிகுந்த ஆர்வத்தோடு ஆதரிக்கின்றன. இங்கிலாந்தில் அயல் நாட்டுப் பொருள்கள் இறக்குமதியாவதைத் தடுக்க பாதுகாப்பு (protection) என்பதன் மூலம் சேம்பர்லினும் பதிலுக்குப் பதில் என்பதன் மூலம் பால்ஃபரும் (Balfour), சுங்கவரி விதிப்பு மூலம் பிரான்சும், ஜெர்மனியும், அமெரிக்காவும் மற்றும் எல்லாப் பிரிட்டிஷ் பேரரசு நாடுகளும் கடைப்பிடிப்பது 'சுதேசியம்' தவிர வேறு என்ன? எனவே, இந்திய வாணிபத்துக்கும் பாதுகாப்பு வேண்டுமென்ற கருத்து இந்தியப் பெரியோர்களிடத்தில் உருவாயிற்று. இஃது அடிக்கடி சட்டமன்றத்திலும் வேறு இடங்களிலும் பேசப்பட்டு வந்தது. இதன் விளைவாக டாரிஃப் கமிஷன் (Tariff Commission) பின்னர் நிறுவப்பட்டது.

பஞ்சம்

பஞ்சத்தின் கொடுமையைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் அறியலாம். எடுத்துக் காட்டிற்காகச் சில பஞ்சங்கள் மட்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

ஆண்டு	மாநிலம்	மக்கட்தொகை
1812—'13	ராஜபுதனம்	20,00,000
1833—'34	சென்னை மாநிலம் (வடக்கு) சில மாவட்டங்களில்	50%
1860—'61	உத்ர பிரததேசம், பஞ்சாப்	50,000க்கு மேல்

ஆண்டு	மாநிலம்	மக்கட் தொகை
1865—'66	ஒரிசா (6 மாவட்டங்களில் மட்டும்)	13,00,000
1865—'66	பீகார், வடக்கு வங்காளம்	1,35,000
,,	சென்னை	4,50,000
1865—'69	ராஜபுதனம்	12,50,000
,,	உத்தரப் பிரதேசம்	6,00 000
,,	பஞ்சாப்	6,00,000
,,	மத்திய மாகாணம்	2,50,000
1876—'77	பம்பாய்	8,00,000க்கு மேல்
1876—'78	சென்னை, உத்தரப்பிரதேசம்	82,50,000
1899—1900	இந்தியா முழுவதும்	1,25,00,000

பஞ்சத்திற்குக் காரணங்கள்

மக்கள் தொகை பெருக்கமே பஞ்சங்களுக்குக் காரணமென்று கூறப்படுவது சரியான காரணமன்று. மக்கள் கணக்கெடுப்பின்படி இங்கிலாந்து போன்று இந்தியாவில் மக்கள் தொகை விகிதாசாரம் அப்படியொன்றும் அதிகமில்லை.

இந்திய விவசாயி மிகவும் சிக்கனமானவன்; உலகத்தில் உள்ள எந்த விவசாயியையும்விடத் தனது எதிர்காலத்திற்காகச் சேமித்து வைக்கக்கூடிய இயல்புடையவன். விவசாயி ஒருவன் பணக்காரனிடம் சென்று கடன் பெறுகிறனென்றால், உண்ண உணவின்றித் தவிக்கின்றான் என்பது பொருள். அவன் காட்டும் ஈடுகளின் பேரில் குறைந்த வட்டிக்குக் கடன் பெற முடியாதபடியால்தான் 25 அல்லது 37 விழுக்காடு வட்டிக்குக் கடன் பெறுகிறான். வங்காளத்தில் ஏழை விவசாயிகளுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் காரர்களிடம் கடன்பட்ட விவசாயிகளின் நிலம் அவர்களுடைய கையைவிட்டு நழுவிப் போவதைத் தடுக்க சட்டம் கொண்டு வரப்பட்டது. விவசாயிகட்கு அவர்களுடைய சொந்த நிலத்தை அடகு வைக்கவோ விற்கவோ உரிமை இல்லை என்ற சட்டம் வந்தால் நிலத்தின் மதிப்புக் குறைந்துவிடும். ஆதலால், அந்தச் சட்டம் விவசாயிகட்குப் பாதகமாய் முடியும் என்பதை ரொமேஷ் தத்தும், வங்காள கவர்னராயிருந்த ஸ்டீவென்சும் (Stevens) உணர்ந்த காரணத்தால் அத்தகைய சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதைக் கைவிட்டதோடு நீக்கவும் செய்தார்கள். அதற்குப் பதிலாகப் பஞ்ச காலத்தில் ஏழை

விவசாயிகள் கடன்பட்டு இன்னற்படுவதைத் தவிர்க்க செழிப்பான காலத்தில் அவர்கள் சிறிது அளவு சேமித்து வைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு அவர்கட்குச் செய்துதர வேண்டும் என்று கருதினர்கள்.

பரோடா சமத்தானத்தில் ரொமேஷ் தத் நிதி வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபோது அவர் எழுதியதாவது; ‘நாட்டு முன்னேற்றத்திற்காக நான் புதிய முறைகளைக் கையாள இருக்கிறேன். புதிய கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் வளரச் செய்து பரோடா சமத்தானத்தை வளமான பாதையில் நடத்திச் செல்ல இருக்கிறேன். சிதறிக் கிடக்கும் சக்திகளை ஒன்று சேர்ந்து நமது வாலிபர்களிடம் உள்ள அறிவாற்றலுக்கும் துணிந்து செயல்படும் உள்ளத் துணிவிற்கும் ஊக்கமளித்து, புது கொள்கைகளையும் திட்டங்களையும் வரவேற்று, எல்லாத் துறைகளின் முன்னேற்றத்துக்கும் துணை நின்று, பரோடாவை வளங் கொழிக்கும் ஓர் இன்ப நாடாக்க நான் முயற்சி செய்ய விழைகின்றேன். எனது திட்டங்களை அச்சிட்டுத் துண்டு அறிக்கைகளாக வெளியிட்டு மக்களிடம் அவைகளைக் கொடுத்துவிட்டு மன்னரிடம் சென்று எனது தீர்மானங்களைக் கொடுத்து என் விருப்பப்படி முன்னேற்றங்கள் செய்வேன். செயல் முறையில் முதிர்ந்த அறிவும் ஆற்றலும் உள்ள அலுவலர்களும், உத்தியோகத்தர்களும் இவை, பழக்க வழக்கங்களுக்கு முரண்பாடானவை எனக் கூறக்கூடும். விவசாயிக்குத் தற்போதுள்ள பாரமான வரிச் சுமையைக் குறைக்கப் பாடுபடுவேன். பெரிய முதலாளிகளைக் கூட்டி புதிய ஆலைகளையும், தொழில்களையும் தொடங்க முயற்சி செய்து வருகிறேன். சட்ட மன்றம் கூட்டுவதில் வெற்றி பெற்றால் இந்தச் சமத்தானத்தின் வேலைகள் மக்களுடைய நலனுக்காக மக்களின் தொடர்பு கொண்டு நடக்கச் செய்வேன். எந்தச் செயலும் இருட்டில் மறைமுகமாக நடக்காமல், வெட்ட வெளிச்சத்தில் வெளிப்படையாகத் தனியாட்சி அதிகாரப் போக்கின்றி நன்கு நடைபெறும். இது கனவு! கனவு! என்று சிலர் சொல்லக்கூடும். தேக்கப்பட்டுச் செயலற்று விழித்திருப்பதை விடச் செயல்படுவதாகவும், முன்னேற்றமடைவதாகவும் கனவு காண்பது மேலானது.........’

ரொமேஷ் சந்தர் தத் செய்த முக்கியமான சீர்திருத்தங்கள்

1. நீதியையும் நிருவாகத்தையும் பிரித்துத் தனித் தனியாக இயங்க வைத்தார்.
2. சிறப்புக் கௌரவ கிராம முனிசீப்புகளை நியமித்தார்.

இந்தியாவைப் போன்ற பழம் பெரும் நாடுகள், அவற்றின் கடந்தகால வரலாற்றையும், பண்பாட்டையும் போற்றிப் புகழ்ந்து பேணிக்காத்தாலன்றி முன்னேற முடியாது. அதே போன்று வெகு வேகமாக மாறிக் கொண்டிருக்கும் இவ்வுலகில் பழைமையை மட்டும் போற்றினால் போதாது. கல்வி, பண்பாடு, பொருளாதாரத் துறை ஆகியவைகளில் ஏற்பட்டிருக்கும் புதிய புரட்சிக் கருத்துகளையும் ஆராய்ந்து வேண்டுவனவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய இந்தியாவை அதன் பழைமையுடன் புதுமையையும் கலந்து நிகழ்கால, எதிர்காலங்களுக்கு ஏற்றவையாக ரொமேஷ் சந்தர் தத் தோற்றுவிக்க முயன்றார். அதனால், அவர் ரிக் வேதம், இராமாயணம், மகாபாரதம் முதலிய மொழி பெயர்ப்பு நூல்களை எழுதினார். அவர் இயற்றிய 'இந்தியப் பழங்கால நாகரிகத்தின் வரலாறு' (History of Ancient civilisation of India) இவ்வகையில் ஒரு முக்கியச் சிறந்த நூலாகும்.

அவர் அனைவர் கருத்தையும் புறக்கணித்துவிட்டு மேல் நாடு சென்று பயின்றதும், அவர் எழுதிய 'சமாஜ்', 'சன்சார்' போன்ற நூல்களும் அவருடைய புரட்சி மனப்பான்மையைக் காட்டுகின்றன. பொருளாதாரத் துறையில் அவர் கொண்டு உள்ள கருத்துகளை அவர் இயற்றிய 'ஐரோப்பாவில் மூன்றாண்டுகள்', 'வங்காள விவசாயிகள்', 'இந்தியாவின் பொருளாதார வரலாறு இரண்டு பாகங்கள்', 'இங்கிலாந்தும் இந்தியாவும்', 'இந்தியாவின் பஞ்சங்கள்' முதலிய நூல்களில் விரிவாகக் காணலாம். தாதாபாய் நௌரோஜியைப் போல் இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீவிரமாகச் சிந்தித்தவர்களுள் ரொமேஷ் சந்தர் தத்தும் ஒருவராவார். அவருடைய முக்கியக் கருத்து விவசாயத்துடன் கைத்தொழிலையும் பெருக்க வேண்டுமென்பதும் இந்திய வாணிபம் வளர பாதுகாப்புத் தேவை என்பதுமாகும்.

நீர்ப்பாசனம்

முகமதிய மன்னர்களால் நிறுவப்பட்ட பெரும் நீர்ப்பாசனக் கால்வாய்கள் 18ஆம் நூற்றாண்டில் மூண்ட போர்களால் பாழாக்கப்பட்டன. 1910ஆம் ஆண்டு மிண்டோ பிரபு தலைமையில் அமைக்கப்பட்ட நீர்ப்பாசனக் குழுவினரிடையே ஏற்பட்டக் கருத்து வேறுபாட்டினால் எவ்வித முடிவும் எடுக்க இயலாமற் போயிற்று. ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் முயற்சியினால் லெப்டினன்ட் பிளெய்ன் என்பவரால் மேற்கு ஜமுனா கால்வாய் ஆரம்பிக்கப்பட்டு டெல்லி வரை சென்று நின்றுவிட்டது. 1823ஆம் ஆண்டு

ஜான் கால்வின் மேற்பார்வையில் 445 மைல் நீளமுள்ள அந்தக் கால்வாய் வேலை செய்து முடிக்கப்பட்டது. 1837ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் பஞ்சத்தின் போது இந்தக் கால்வாயின் நீர்ப் பாசனத்தால் காப்பாற்றப்பட்ட விளைச்சலின் மதிப்பு 15,00,000 பவுன்கள் என மதிப்பிடப்பட்டது.

கிழக்கு ஜமுனா கால்வாயை ராபர்ட் ஸ்மித் என்னும் ஆங்கிலப் பொறியாளர் 1930ஆம் ஆண்டுத் திட்டப்படி முடித்தார். அதில் இருந்த குற்றம் குறைகளைக் கேப்டன் காட்லே என்பவர் சீர்திருத்தினார். பெய்ர்டு ஸ்மித் என்பவர் 155 மைல் நீளமுள்ள அந்தக் கால்வாயைக் கட்டி முடித்தார். 898½ மைல் நீளமுள்ளதும், 45,00,000 ஏக்கருக்குப் பாசன வசதி கொடுக்கக் கூடியதுமான கங்கைக் கால்வாய்த் திட்டம் ஆக்லண்ட் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், அவருக்குப் பிறகு வந்த எல்லன்பரோ பிரபு அதை நிறுத்திவிட்டார். ஆனால், ஹார்டிஞ் பிரபு வந்ததும் கிழக்கு, மேற்கு ஜமுனா கால்வாய்களின் நீர்ப்பாசனப் பெரும் பலனைக் கணக்கிட்டுக் கங்கைக் கால்வாய்த் திட்டத்தைத் தொடர்ந்து முடித்தார்.

பஞ்சாபிலுள்ள 'பார்வே டோப் கால்வாய்' 450 மைல் நீளமுள்ளது. அதை வெட்டி முடித்த பெருமை ஜான் லாரன்ஸ், டலௌசி பிரபு ஆகியவர்களைச் சாரும். வளம் பொருந்திய மிகப் பெரும் நிலப் பரப்பு கரம்பாகக் கிடந்தது. அதிகப் பயன் தரத் தக்க வளமான நிலமாக அதை மாற்றுவதற்கு நீர்ப்பாசனந்தான் தேவை என்று இங்கிலாந்துக்குத் தெரிவித்து அந்தக் கால்வாயை வெட்டுவதற்கு வேண்டிய இசைவைப் பெற்றார் டலௌசி பிரபு.

சென்னை மாநிலத்தில் அரசர்களும், பாளையக்காரர்களும் வெட்டிய வளம் தரும் ஏரிகள் பல உள்ளன. அவைகளை ஆழப்படுத்துவதோடு தேவையான இடங்களில் புதிய ஏரிகளை வெட்டி நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால் சில ஆண்டு களில் அதை விவசாயத்திற்குகந்த—பஞ்சம் எட்டிப் பார்க்க முடியாத வளங்கொழிக்கும் மாநிலமாக மாற்றிவிடலாம். கோதா வரி, கிருஷ்ணா, காவேரி கடலோடு கலக்கும் செழிப்பான புகார் (டெல்டாப்) பகுதிகளில் கால்வாய்களை வெட்டி நீர்ப்பாசன வசதி யைச் செய்து கொடுத்த பெருமை சர் ஆர்தர் காட்டன் அவர் களைச் சாரும். அவருடைய தொண்டு, வடக்கே பெய்ர்டும் அவருடைய சகாக்களும் செய்த தொண்டுக்கு ஒப்பானதாகும். கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் சோழர்களால் கட்டப்பட்ட

கொள்ளிடம் அணைக்கட்டு நாளடைவில் பழுதுபட்டு, பயிராகும் நிலப்பரப்புக் குறைந்து வந்ததால் 1936ஆம் ஆண்டு அது 80,000 பவுன் செலவில் செப்பனிடப்பட்டது. பிறகு கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் அணைக்கட்டுகளால் ஸர் ஆர்தர் காட்டன் அவர்களுடைய புகழ் மேலும் உயர்ந்தது. இவ்வளவு நீர்ப்பாசன வசதிகட்குப் பிறகும் சென்னை மாநிலத்தில் எவ்வளவு நிலத் தீர்வை உயர்த்த முடியுமோ அவ்வளவு உயர்த்தி ஏழை விவசாயிகளை எவ்வளவு ஏழைகளாக ஆக்க முடியுமோ அந்த அளவிற்கு ஏழைகளாக ஆக்கி என்றென்றும் வறுமையில் வாழும்படிச் செய்துவிட்டார்கள்.

சர் ஆர்த்தர் காட்டன் இந்தியாவில் நீர்பாசன வசதிக்கும், போக்கு வரவு வசதிக்கும் கால்வாய்கள் மிக முக்கியம் என்பதை உணர்ந்து அதைப்பற்றிப் பார்லிமெண்ட் போர்டு முன்பு விவாதித்தார். கால்வாய்கள் மூலம் மிக அதிகமான பொருள்களைக் குறைந்த செலவில் வேகமாக ஏற்றிச்செல்ல முடியும் என்று கூறியதோடு இரயில்வேகளுக்குச் செலவாகும் பணத்தில் எட்டில் ஒரு பங்கு கால்வாய்களுக்குச் செலவிட்டால் வயல்களுக்கு நீர்ப்பாசன வசதியைப் பெறுவதோடு போக்குவரவுக்கும் ஒரு முக்கியச் சாதனமாக அமையும் என்று கூறினார். ஆனால், லார்ட் ஜார்ஜ் ஹேமில்டன் குழு அதை ஏற்கவில்லை. எனவே, ஆர்தர் காட்டன் அவர்கள் திட்டம் கைவிடப்பட்டது.

இருப்புப் பாதைகள்

நீர்ப்பாசன வசதிகட்காகச் செய்யப்பட்ட செலவு ஒன்றுக்குப் பன்மடங்காகத் திரும்பப் பலன் தந்தது. ஆனால், இருப்புப் பாதைகள் ஆண்டுக்காண்டு அரசாங்கத்துக்கு நிலையான பொருள் இழப்பைக் கொடுத்து வந்தன. நீர்ப்பாசன வசதிகள் உற்பத்தியைப் பெருக்கி பஞ்சங்களைத் தவிர்த்தன, அதேபோல் இருப்புப் பாதைகள் பஞ்ச காலங்களில் உணவுப் பொருள்களைப் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எடுத்துச் செல்ல பயன்பட்டன. ஆனால், உணவுப் பொருள்கள் உற்பத்திப் பெருக்கத்திற்கு அவைகளால் எவ்விதப் பயனுமில்லை.

விவசாய நாடாகிய இந்தியாவில் நீர்ப்பாசன வசதிகட்குதான் முதலிடம் தந்திருக்கவேண்டும். ஆனால், கிழக்கிந்திய கம்பெனியும் ஆங்கில அரசும் வியாபார வசதிகட்கு இருப்புப் பாதைகள் தான் முக்கியமெனக் கருதின. 1845ஆம் ஆண்டு கிழக்கிந்திய இரயில்வே கம்பெனி (East Indian Railway Co.) பேரிந்திய தீபகற்ப இரயில்வே கம்பெனி (Great Indian Peninsular Railway Co.)

என இரு தனியார்த் துறை இரயில்வேக்கள் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஆரம்பிக்க முன்வந்தன. ஒப்பந்தத்தின் விவரமாவது : இரயில்வே கம்பெனிகள் போட்ட முதலுக்கு 5 விழுக்காட்டிற்குக் குறைந்த இலாபம் கிடைத்தால் குறைந்த தொகையை இந்திய அரசாங்கம் கொடுத்துவிட வேண்டியது. ஆனால், 5 விழுக்காட்டிற்குமேல் இலாபம் கிடைத்தால் அதிகமாகக் கிடைப்பதில் பாதி இரயில்வே கம்பெனிக்கும் மறுபாதி இந்திய அரசாங்கத்துக்கும் சேர வேண்டியது. அஃதாவது நான்கு விழுக்காடே இலாபம் கிடைத்தால் இந்திய அரசு ஒரு விழுக்காடு இரயில்வே கம்பெனிகட்குக் கொடுத்துவிட வேண்டும். அதே சமயத்தில் ஏழு விழுக்காடு இலாபம் கிடைத்தால் கம்பெனிகட்டு ஆறு விழுக்காடும், இந்திய அரசாங்கத்துக்கு ஒரு விழுக்காடும் கொடுத்துவிட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியப் பொதுமக்களுக்கு இதனால் அதிக பயன் ஏற்படவில்லை.

1857ஆம் ஆண்டுச் சுதந்தரப் போருக்குப் பிறகு இந்தியா கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து இங்கிலாந்து மன்னர் கைக்கு மாறியது. 1856ஆம் ஆண்டு ஜூலை மாதம் மதராஸ் இரயில்வே சென்னையிலிருந்து ஆற்காடு வரை 65 மைல் நீளம் போடப்பட்டது. கிழக்கிந்திய இரயில்வே, பேரிந்திய தீபகற்ப இரயில்வே, சென்னை இரயில்வே ஆகிய மூன்று இரயில்வே கம்பெனிகட்கும் பத்தாண்டுக் (1849—1858) காலத்தில் இழப்பு ஈடாக இந்திய அரசாங்கம் 22,44,829 பவுன் கொடுத்தது. இருந்தும் இரயில்வேக்கள் அதிகமாக்கப்பட்டன. இழப்பு ஈடுகள் மேற்கொண்டும் கொடுக்கப்பட்டு வந்தன. இந்திய மக்கள் பிரதிநிதிகளைக் கலந்திருந்தால் இப்படி இரயில்வே மூலமாக இழப்புகள் ஏற்பட்டிருக்காது. கால்வாய்கள் மிகுந்து போக்குவரவுக்கும் நீர்ப்பாசனத்துக்கும் குறைந்த செலவில் வழிவகுத்து இருக்கக்கூடும்; பஞ்சங்களும் தவிர்க்கப்பட்டிருக்கும். அந்நிய அரசாங்க இரயில்வே கம்பெனிக்குச் சாதகமாக இப்படிச் செய்ததென்று சொல்வதற்கில்லை. ஆனால், முடிவில் ஏற்பட்ட இழப்பு அனைத்தும் இந்திய விவசாயிகளின் தலையில்தான் விழுந்தன.

விவசாயம்

அமைதியை நிலைநாட்டிய பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் விவசாயத்தை வளர்த்தது. ஆனால், கூர்ந்து கவனிப்போர் அனைவரும் நாடு வளமடைந்து விட்டதாகவோ பஞ்சங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளக்கூடிய அளவுக்குத் தகுதிபெற்று விட்டதாகவோ கூறமுடியாது. இந்தியா ஒரு விவசாய நாடா

கையால் அதன் நிலவரி விதிப்புக் கொள்கை முக்கியத்துவம் வாய்ந்தது. 1793-ல் நிலவரி விதிப்பு விகிதத்தை வங்காளத்தில் நிரந்தரமாக முடிவு செய்யவேண்டுமென்று கார்ன் வாலிஸ் பிரபு வின் கொள்கையை மற்ற மாநிலங்களுக்குப் பரப்ப அரசாங்கத் துக்கு விருப்பமில்லை. கடைசியாக 1883-ல் கானிங் பிரபு, லாரன்ஸ் பிரபு, ஹாலிபாக்ஸ் பிரபு முதலியவர்களுடைய நிரந்தர வரி விதிப்புக் கொள்கை கைவிடப்பட்டது. முன்பிருந்தபடியே மாறும் வரி விதிப்புக் கொள்கை செயல்பட்டுக் கொண்டிருந்தது. 1875-ல் இலண்டனில் இந்தியா மந்திரியாக இருந்த சாலிஸ பிரபு 'நாட்டின் செலவுக்காக விவசாயி ஒரு சிறு தொகையை வரியாகக் கொடுத்தால் போதும். மூலதனம் இல்லாதிருக்கும் கிராமப் புறங்களிலிருந்து பெரும் வரிகள் வசூலிப்பதை விடுத்து நகர்ப் புறங்களில் ஆடம்பரச் செலவுகளில் பணத்தை வீண் செய்பவர்களிடமிருந்து வரிகள் வசூலிக்கப்பட வேண்டும்...' என்று குறிப்பிட்டார்.

20 அல்லது 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிலத்தீர்வை உயர்ந்து கொண்டே சென்றது. பம்பாயிலும், சென்னையிலும் வரிச் சுமை மிக அதிகமாயிருந்தது. அதனுடன் அந்தந்த மாகாணங்களின் விருப்பப்படி சிறப்பு வரிகள் கூட்டப்பட்டு வந்தன. இந்தியா நிலையில் எந் நாட்டை வைத்தாலும் அது இந்தியாவைப்போலவே நலிந்திருக்கும். இந்திய விவசாயிகள் மிகவும் சிக்கனமானவர்கள் ; உழைப்பாளிகள் ; அமைதியான வர்கள் ; ஆனுல் ஏழைகள் ; வசதியற்றவர்கள் ; எப்போதும் பஞ்சம், பட்டினி முதலியவைகளால் பாதிக்கப்படக்கூடிய நிலை யிலிருப்பவர்கள். எந்த ஆங்கிலேயனும் பெருமையுடன் பார்க் கக்கூடிய காட்சி அல்ல இது.

இந்தியாவின் எல்லா வரிகளையும் சேர்த்தால் ஆண்டொன் றுக்குச் சராசரி 6,50,00,000 பவுன் கிடைக்கும். இதில் இலண்ட னில் இந்தியாவுக்காகச் செலவு (Home Charges) 1 60,00,000 பவுனும் இந்தியாவில் வேலை செய்யும் ஆங்கிலேயர்கள் பெறும் 40,00,000 பவுனும் சேர்த்து 2,00,00,000 பவுன் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குக் கடத்தப்படுகிறது. அதாவது தனி நபர் ஆண்டு வருமானம் 42 பவுன் உள்ள ஓர் ஆங்கிலேயன் தனி நபர் 2 பவுன் ஆண்டு வருமானமுள்ள ஓர் ஏழையிடமிருந்து 10 ஷிலிங் பெறுகிருன் என்பது பொருள். இந்த 10 ஷிலிங்தான் இந்தியா வின் இரத்தத்தை நிரந்தரமாக உறிஞ்சிக் கொண்டிருந்தது. இந் நாட்டின் பணம் இந் நாட்டிலேயே சுழன்று கொண்டிருந்தால், வியாபாரம், தொழில், விவசாயம் முதலிய எவ்வகையிலாவது

புகுத்தப்பட்டு இறுதியாகப் பொது மக்களுக்குப் போய்ச் சேரும். ஆனால், இந் நாட்டின் வரிப் பணம் வெளி நாட்டுக்குப் போய் விட்டால் அப் பணம் எவ்வழியிலும் இந் நாட்டுக்குப் பயனளிக்காமல் ஒரே மொத்தமாகப் போய்விடுகிறது.

பொருளாதாரத் தத்துவத்தின் சட்டதிட்டங்கள் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் மற்றெல்லா நாடுகளுக்கும் பொதுவானவைதான். இந்தியா இன்று ஓர் ஏழை நாடாகக் காட்சியளித்தால் அதற்குப் பொருளாதாரச் சட்டதிட்டங்களை ஒழுங்குபடச் செயல்படுத்தாமையே காரணம் ஆகும். இவ்வளவு இன்னல்களுக்கிடையே இந்தியா ஒரு வளம் பொருந்திய நாடாக இருந்தால் அதைப் பொருளாதாரத் துறையில் நிகழ்ந்த ஒரு விந்தை என்றுதான் கூற வேண்டும்.

இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உகந்த வழிகள் தாம் யாவை என்றால் :

1. இந்திய ஆலைப் பொருள்கள் மீதுள்ள சுங்க வரிகள் நீக்கப்படவேண்டும்.
2. இந்தியத் தொழில்களுக்கும், உற்பத்திகளுக்கும் ஊக்கம் அளிக்கப்படவேண்டும்.
3. எல்லாவித வரிகளும் திருத்தியமைக்கப்படவேண்டும்.
4. நிலத் தீர்வை எளிதாக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.
5. நேர்மையற்ற முறையில் ஏற்பட்ட பொதுக் கடனைத் தக்கபடி ஆராய்ந்து குறைக்க வேண்டும்.
6. இராணுவச் செலவுகளையும், உள் நாட்டுச் செலவுகளையும் கட்டுப்படுத்த வேண்டும்.
7. உத்தரவாதக் (Guarantee) கொள்கை மூலமோ வேறெந்த வகையிலோ தேவையற்ற இருப்புப் பாதைகள் விரிவாக்கப்படுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.
8. பொதுவான வருவாயிலிருந்து கால்வாய்கள் பல வெட்டப்பட வேண்டும்.
9. இந்தியாவிலிருந்து வெளி நாட்டுக்குச் சென்றுவிடும் பணத்தை நிறுத்திப் பிடிக்க வேண்டும்.
10. இந்தப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மக்கள் பிரதிநிதிகள் பங்கு பெற வேண்டும்.

மேற்கூறிய கருத்துகளை ரொமேஷ் சந்தர் தத் தமது நூல்களில் தீவிரமாக எழுதி வந்தார்.

நிலத்தீர்வை நிருணயம்

நிலத்தீர்வை நிருணயத்தின் நிலையற்ற தன்மையையும் அதனால் ஏற்படும் தொல்லைகளையும் தவிர்ப்பதற்கு இந்திய அரசப் பிரதிநிதிகள் அனைவரும் முயற்சித்தார்கள். மண்ணின் தன்மையையும் விளைச்சலின் அளவையும் கண்டுபிடித்தால் ஒரு நிலையான தீர்வையை நிருணயித்துவிடலாமென மேயோ பிரபு கருதினார். நார்த்புருக் பிரபுவும் அவ்வாறே அடிக்கடி ஏற்படும் நிலவரி மாற்றத்தை எதிர்த்தார். ரிப்பன் பிரபு நிலத்தீர்வை நிருணயிக்கும் ஒவ்வொரு முறையும் நிலத்தீர்வை மாறுவதையும் அதன் நிலையற்ற தன்மையையும் தேவையற்ற விசாரணைகளையும் தவிர்க்க வேண்டுமெனக் கருதினார். ஆகவே, அவர் 1882-ல் இங்கிலாந்துக்கு இதைக் குறித்து ஓர் அறிக்கை அனுப்பி வைத்தார். விவசாயிகட்கு நிலங்களைப்பற்றிய உரிமையும் நிலையான நிலத்தீர்வை விகிதமும் அளிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார். அவர் நடுநிலையான கொள்கையுடனிருந்தார். கானிங், லாரென்ஸ் முதலியோரும் நிலத்தீர்வை நிரந்தரமாக முடிவு செய்ய வேண்டுமென்றும் விவசாயத்தால் கிடைக்கும் இலாபத்தை மக்களுக்கே விட்டுவிடவேண்டுமென்றும் கருதினர். மற்றேனைய அரசப் பிரதிநிதிகளோ விவசாயத்தில் விளைச்சல் அதிகரித்துக் கொண்டே போனால் வரியையும் உயர்த்திக் கொண்டே போகலாமெனக் கூறினர். விலைவாசி ஏறுவதைப் பொருத்து நிலத்தீர்வையை அதிகப்படுத்தலாமென்பதும், விவசாயிகளின் நன்மைக்காக விளைச்சலைப் பொருத்து ஒரு நிரந்தரமான நிலவரி விதிக்கப்பட வேண்டும் என்பதும் ரிப்பன் பிரபுவின் கொள்கையாகும். இந்த நல்ல கருத்துகளை இங்கிலாந்து அரசாங்கத்திலுள்ள இந்தியா மந்திரி நிராகரித்து விட்டுக் கீழ்க்கண்ட கருத்துகளைத் தெரிவித்தார் :

1. நிரந்தரமான வரி நிருணயக் கொள்கை கைவிடப்படலாம்.
2. பலன் தராவிட்டாலும் நிலத்தின் மதிப்பின் பேரில் தீர்வை விதிக்கலாம்.
3. நிலத்தீர்வையை உயர்த்துவதற்கு விலைவாசி ஏற்றமும் அறிகுறிகளுள் ஒன்றாக இருக்க வேண்டும்.
4. மக்களுக்குத் தொல்லையின்றி, ஆட்சியினரின் கட்டாயமின்றி நிலையானக் கொள்கையுடன் நிலத்தீர்வை நிருணயம் செய்யப்படவேண்டும்.

5. வரி விதிப்புச் சட்டங்களைத் தகுந்தபடி மாற்றியமைக்க வேண்டும். நிலத்தின் மதிப்பு உயர்வதைப் பொருத்தே வரியும் உயர்த்தப்பட வேண்டும். இந்தக் கருத்துகளைக் கொண்ட சட்டங்களால் முன்போலவே விவசாயிகட்குப் புரியாத முறையிலும் அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் குறித்து முறையிட்டுக் கொள்ள முடியாத நிலையிலும் அதிகாரிகள் தங்கள் விருப்பப்படி நிலத்தீர்வையை நிருணயம் செய்து வந்தார்கள். இவற்றினால் ஏழை விவசாயிகட்கு ஏற்பட்டது நன்மையல்ல என்பது 1897, 1900ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொடிய பஞ்சங்களே சாட்சியாகும்.

சென்னை மாகாண நிலத்தீர்வை நிருணயம்

1972-ல் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்ட நிலத்தீர்வை விகிதம் மிகவும் கடுமையானதாகவும் கொடுமையானதாகவும் இருந்தது. எதிர்பார்த்த விளைச்சலில் சரிபாதி அளவை அரசாங்கம் வரியாகக் கேட்டது. இதை 1807ஆம் ஆண்டு தாமஸ் மன்ரோ மூன்றில் ஒரு பங்காகக் குறைத்தார். ஆனால், இங்கிலாந்திலுள்ள கம்பெனி அதிகாரிகள் அதற்கு இசைவு கொடுக்காமல் இந்திய அரசாங்கத்தை மிரட்டினார்கள். ஆகவே, மன்ரோவின் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. சென்னை விவசாயிகட்கு எவ்விதச் சலுகையும் கிடைக்கவில்லை. ஆனால், 1820 முதல் 1827 வரை சென்னை கவர்னராய் இருந்த தாமஸ் மன்ரோ அவர்கள் இடைவிடாது தொடர்ந்து முயன்று முன்பு தாம் கூறிய அளவிற்கு அஃதாவது மூன்றில் ஒரு பங்காக வரியைக் குறைத்தார். அந்த வரியும் விவசாயிகளால் தாளமுடியாத அளவுடையதாயிருந்தது. தாமஸ் மன்ரோ அவர்கள் இறந்துவிட்ட பிறகு நேர்முகமாகத் தரகர்கள்மூலம் விவசாயிகளிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டது. எல்லா மாநிலக் கலெக்டர்களிடமிருந்தும் விவசாயிகள் ஏழ்மையாலும் வறுமையாலும் படும் இன்னல்களைப் பற்றிக் குறிப்புகள் கம்பெனிக்கு வந்துகொண்டிருந்தன. இருந்தும் கம்பெனி முதலாளிகள் ஏழை விவசாயிகளை வதைத்து வரி வசூல் செய்தார்கள். வரி கொடுக்க முடியாத சென்னை மாநில ஏழை விவசாயிகள் அடைந்த தண்டனைகளைக் குறித்து எலியட், நார்ட்டன், ஸ்டோக்ஸ் ஆகியோர் அடங்கிய குழு கூறியதாவது :

1. கடுமையான வெயிலில் நிற்க வைப்பது,
2. உணவருந்தவோ, மலசலம் கழிக்கப் போகவோ விடாமல் தடுப்பது,

3. சிறைபடுத்தி வைப்பது.
4. கால்நடைகளை மேயவிடாமல் தடுப்பது,
5. வரி செலுத்தத் தவறியவன் மீது ஒரு சிப்பந்தியை ஏற்றி உட்கார வைப்பது.
6. அவனை வளைத்துக் கட்டிப் போடுவது;
7. விரல்களை மாட்டி நசுக்குவது.
8. நிமிட்டிக் கிள்ளுவது.
9. கன்னத்திலும் மற்ற இடங்களிலும் கையால் அறைவது.
10. கைகளால் குத்துவது.
11. சாட்டையால் அடிப்பது.
12. நீண்டதூரம் ஓடச் செய்வது.
13. காதை முறுக்குவது.
14. செங்கற்களை முழங்கால்களுக்கிடையில் பொறுத்தி உட்கார வைப்பது.
15. மிகத் தாழ்த்தப்பட்டவனை முதுகின்மேல் ஏற்றுவிப்பது.
16. வரி கொடாத இருவர் தலைகளையும் ஒன்றுடன் ஒன்று மோதவைப்பது.
17. அவர்கள் குடுமி முடிகளைச் சேர்த்துக் கட்டுவது.
18. மாட்டுத் தொழுவத்தில் அடைத்து வைப்பது.
19. கழுதை அல்லது எருமை வாலில் அவனது குடுமி முடியைக் கட்டிவிடுவது.
20. எலும்பு மாலைகளையோ அருவருக்கத்தக்க பொருள்களால் கட்டிய மாலைகளையோ அவன் கழுத்தில் மாட்டி விடுவது.
21. மேலும் சில சமயங்களில் மேல் கூறியவைகள் அல்லாத மிகக் கொடிய தண்டனைகள் கொடுப்பது.

இவைகட்கு எதிர்ப்பாகச் சடார் போர்டு ஆப் ரெவின்யூ (Sadar Board of Revenue) கடுமையாகக் கண்டித்து எழுதிய கடிதமும் மாவட்ட கலெக்டர்கள் வருந்தி எழுதிய கடிதங்களும் சென்னை அரசாங்கத்தின் கொடுமையான நிலவரிக் கொள்கையை மாற்றவில்லை. வடஇந்தியாவில் பல மாநிலங்களில் பேர்டு (Bird), விங்கேட் (Wingate) போன்றவர்கள் முன்னேற்றச்

சீர்திருத்தங்கள் பல கொணர்ந்து விவசாயிகட்கு நன்மைகள் செய்திருந்தும் சென்னை மாகாணத்தில் மட்டும் எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. பசியும் பஞ்சமும் ஏற்படும் காலத்தில் வரிகள் சற்றுக் குறைவதும், வளமான காலத்தில் ஏறுவதுமாகவும் வரிக் கொள்கை இருந்து வந்தது. 1852, 1853ஆம் ஆண்டுகளில் பார்லிமெண்டு மேற்கொண்ட விசாரணையின் பயனாக 1855-ல் சில வரிச் சலுகை நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டன.

1855-ல் சென்னை மாநில அரசு நிலத்தீர்வையை மீண்டும் நிருணயம் செய்யக் கருதியது. அதன்படி நிலத் தீர்வைக் குறைக்கப்பட்டு விவசாயம் பெருக்கப்பட்டால் விளைச்சலுக்குத் தகுந்தபடி அரசாங்கத்துக்கு வரி அதிகமாகக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. இக் கருத்தின்படி நிருணயம் செய்ய 1856-ல் ஆணை கிடைத்த போதிலும் இதை நடைமுறைக்குக் கொண்டுவர அநேக ஆண்டுகள் ஆயின. விளைச்சலில் சரிபாதி விவசாயிக்கு விட்டுவிட்டு மற்றொரு பாதியை வரியாகக் கொள்வது என்பது திட்டம். முப்பது ஆண்டுகளுக்கான தீர்வை நிருணயம் செய்தும் புதிதாக சாகுபடி செய்யப்பட்ட நிலம் பதினைந்து ஆண்டுகளில் இருபது விழுக்காடு மட்டுமே உயர்ந்தது. அதன் மண்ணும் வளமில்லாமலிருந்தது. மேலும், தானியங்களின் விலை மிகவும் குறைவாக இருந்தபடியால் விவசாயிகட்குக் கிடைத்த இலாபம் மிகவும் குறைவு. ஆகையால் நிலத்தீர்வையைக் குறைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அரசாங்கத்துக்கு எதிர்பார்த்த அளவு வரி கிடைக்கவில்லை. ஆனால், விவசாயிக்கு சில நன்மைகள் ஏற்பட்டன. நிலத்தீர்வை கூடுமானவரை சமமாக்கப்பட்டது. ஆண்டுக்காண்டு தீர்வையை மாற்றியதால் விவசாயிகள் தொல்லைப்பட்டது போய் தீர்வை நிரந்தரமாக்கப் பட்டதால் மன அமைதி ஏற்பட்டது. ஆயினும், விவசாயத்திற்கு 1860-ல் இருந்ததைவிட 1875-ல் வரி அதிகமாக்கப்பட்டதுடன் 1877-ல் பஞ்சம் வேறு வந்து மக்களை வாட்டியது. பத்து இலட்சம் ஏக்கர் நிலங்கள் பஞ்சத்திற்குப் பிறகு சாகுபடி செய்யப் படாமல் தரிசாகக் கிடந்தன. 1885ஆம் ஆண்டுவரை நிலங்கள் சாகுபடிச் செய்யப்படவில்லை. நீர்ப்பாசன வசதி கிடைத்த சில நிலங்கள் மட்டுமே சாகுபடிச் செய்யப்பட்டன. தண்ணீரைப் பயன்படுத்தாதவர்களுக்குக்கூட நிலத்தீர்வைகளுடன் தண்ணீர்த் தீர்வை எனும் 'செஸ்' சேர்க்கப்பட்டது. நிலத்தீர்வை, நீர்வரி ஆகியவை இந்தியப் பொருளாதார வரலாற்றில் முக்கிய இடம் பெற்று வந்தன.

வடஇந்தியாவில் வரி நிருணயக் கொள்கை

1883ஆம் ஆண்டு மெர்ட்டின் பெர்டு (Mertin Bird) என்பவர் வரி நிருணயத்தைப்பற்றி ஆராய அமர்த்தப்பட்டார். மிகுந்த கழிவிரக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட அவருடைய விசாரணை முடிய ஒன்பது ஆண்டுகள் ஆயின. 1842-ல் அவர் அளித்த அறிக்கையில் குறிக்கப்பட்டிருந்ததாவது:

1. இப்போது செய்யப்பட்ட நிருணயம் (Settlement) நீதியின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது.
2. ஓர் ஆண்டு நிலவரியை நான்கு தவணைகளில் கட்டலாம்.
3. எல்லைகள் வகுத்தலையும் கணக்குகளைத் திருத்தியமைத்தலையும் அனுமதிக்கப்பட்டன.

பெர்டு அவர்களின் வரி நிருணயக் கொள்கை வடஇந்திய விவசாயிகட்கு உதவியாய் இருந்ததைப் பலர் பாராட்டிப் போற்றினர். ஆங்கில ஆட்சியின் முதல் முப்பதாண்டுகளில் இருந்த வரிக் கொடுமையை இது தளர்த்தியது. ஆண்டுக்கு ஆண்டோ அடிக்கடியோ வந்துகொண்டிருந்த வரி நிருணயிப்பால் விவசாயிகள் பட்ட தொல்லையை மாற்றி மிக நீண்ட இடைவெளிகளுக்குப் (சுமார் 30 ஆண்டுகளுக்குப்) பிறகு வரியை மீண்டும் நிருணயிப்பது போன்ற நல்ல பல திட்டங்களைக் கொண்டவையாய்ப் பெர்டு அவர்களின் கொள்கைகள் அமைந்திருந்தன.

பம்பாய் மாநிலத்தில் நிலத்தீர்வை நிருணயம்

தக்காணத்தை ஆங்கிலேயர்கள் வென்றதும் பம்பாயில் பல மாவட்டங்களில் தற்காலிகமாக நிலத்தீர்வை நிருணயிக்கப்பட்டது. ஆனால், முறைப்படி நிருணயம் 1824-28-ல் ப்ரிங்கில் (Pringle) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது தவறான நில அளவைக் கொண்டும் மண்ணின் வளத்தை வைத்தும் எதிர்பார்க்கும் மொத்த விளைச்சலில் 55 விழுக்காடு வரி விதித்து அதைக் கொடுக்க இயலாத விவசாயிகளைத் தண்டித்தும் கொடுமைப் படுத்தியும் வசூல்செய்ய எடுத்துக் கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின. அநேக விவசாயிகள் தங்கள் வீடு, நிலங்களை விட்டுவிட்டுச் சமீபத்தில் உள்ள சமத்தானங்களில் ஓடி ஒளிந்து கொண்டார்கள். பெரும் நிலப்பகுதிகள் விளைச்சலின்றிக் கரம்பாய்க் கிடந்தன. சில மாவட்டங்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கு நிலமே பயிரிடப்பட்டது.

இம் முறை தோல்வி கண்டது. 1835-ல் கோல்ட் ஸ்மிட் (Gold Smid) என்பவராலும் விங்கேட் என்பவராலும் மீண்டும் வரி நிருணயம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவும் வடஇந்தியாவிலுள்ளது போல் 30 ஆண்டுகட்கு ஒருமுறை மறு ஆராய்ச்சிக்கு வரக்கூடியது.

இம் முறையில் மண்ணின் தரத்தைக் கொண்டு நிலம் ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பழைய விவரங்களைக்கொண்டும் ஆராய்ச்சி செய்தும் வரி விதிக்கப்பட்டு விவசாயிகளை நேரில் அழைத்து அவர்களுடைய கருத்து, இசைவு கேட்கப்பட்டது. விரும்புவோருக்கு நிலம் விடப்பட்டது. விருப்பமற்றவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். குற்றங்குறைகள் பல இருப்பினும், ஜார்ஜ் விங்கேட்டின் இந்த முறை சென்னையில் சர் தாமஸ் மன்ரோ வடஇந்தியாவில் ராபர்ட் மெர்ட்டின் பெர்டு வகுத்த முறைகளைப் போன்று ஒப்புக்கொள்ளப்பட்டு நடைமுறையிலிருந்து வந்தது.

பஞ்சாப் மாநிலத்தில் வரி நிருணயக் கொள்கை

மகாராஜா ரஞ்சிட் சிங் காலத்தில் வரி, நிகர விளைச்சலில் சரிபாதியாக இருந்தபோதிலும் பொதுவாக ஐந்தில் இரண்டு பங்கிலிருந்து மூன்றில் ஒரு பங்கு அளவில்தான் வசூலிக்கப்பட்டது. சீக்கியர்கள் வென்ற எல்லா மாநிலங்களிலும் வரியின் அளவு இவ்வாறே இருந்தது. வரி பணமாக வசூலிக்கப்படாமல் பொருளாக வசூலிக்கப்பட்டதால் வறட்சியான ஆண்டுகளிலும் வளமான ஆண்டுகளிலும் விளைச்சலுக்கேற்ற விகிதாசாரத்தில் நின்றது. அறிவுக்கும் திறமைக்கும் புகழ்பெற்ற ஹென்ரி லாரென்ஸ் (Henry Lawrance) என்பவர் பஞ்சாபிற்குப் பிரிட்டிஷ் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது அனைவருக்கும் மனநிறைவை அளித்தது. அவர் சீக்கியர்களுடன் ஒன்றரக் கலந்து கூடிக் குலவிப் பழகி நற்பெயர் பெற்றிருந்தார். சீக்கியர்பால் நல்லெண்ணம் கொண்டு அவர்கள் பெருமைக்கும் சுதந்தரத்துக்கும், நற்பண்புகளுக்கும் மதிப்புக் கொடுத்தவர் ஹென்ரி லாரென்ஸ் ஆவார். அவர் செய்த சீர்திருத்தங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை :

1. ஐயம் ஏற்படும்போதெல்லாம் மக்கள் பக்கமே நன்மையும் பயனும் வரும்படி முடிவு செய்தல்.
2. பொருளுக்குப் பதிலாகப் பணமாகவே வரி செலுத்தல்.
3. அரசாங்கத்தால் போடப்பட்ட நீதியற்ற வரிகளை நீக்கம் செய்தல்.

உடல்நோய் காரணமாகத் தாய்நாடு சென்ற லாரென்ஸ் சிறிது காலத்திற்கெல்லாம் உடல் நலம் பெற்றார். அப்போது அவருக்கு அரசாங்கம் 'சர்' (Sir) பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தியது. இவ்வாறு பெருமைப்படுத்தப்பட்ட லாரென்ஸ் மீண்டும் 1849-ல் இந்தியா திரும்பினார் ஆனால், பஞ்சாபை ஆங்கிலேயர்கள் இணைக்க விரும்பியபோது அதை எதிர்த்துப் பதவியிலிருந்து விலகினார். டல்லௌசி (Dalhousie) பிரபு அவருடைய சேவையை இழக்க மனமில்லாது அவரைக் கட்டாயப்படுத்தி பஞ்சாப் போர்டின் தலைவராக இருக்கும்படிச் செய்தார். ஹென்ரி லாரென்சுக்குப் பிறகு அவர் தம்பி ஜான் லாரென்ஸ் பதவிக்கு வந்தார். அவர் விளைச்சலில் நான்கில் ஒரு பங்கு வரிகொடுத்தால் போதும் என்று சொல்லி 1358-ல் முடிவாக ஆறில் ஒரு பங்கு வரியை நிருணயம் செய்தார்.

வங்காளத்தில் நிலச் சுவான்தார்களிடம் நிலம் இருந்தது. அவர்கள் அரசாங்கத்துக்கு நிரந்தரமாகக் குறிப்பிட்ட வரியைச் செலுத்தி வந்தார்கள். வட இந்தியாவில் நிலச்சுவான்தார்களிடம் நிலமிருந்தாலும் அடிக்கடி மாற்றப்படும் வரியை அரசாங்கத்துக்குச் செலுத்தி வந்தார்கள். சென்னையிலும் பம்பாயிலும் விவசாயிகளிடம் நிலமிருந்தது. அவர்கள் அடிக்கடி மாற்றப்படும் வரியைச் செலுத்தி வந்தார்கள். பஞ்சாபில் விவசாயிகளிடம் நிலமிருந்தது. மாற்றப்படும் வரிகளைக் கிராமத்திலுள்ள அனைவரும் மொத்தமாகச் செலுத்தி வந்தனர்.

நிலத் தீர்வையுடன் அதிக வரிகள் (Cesses)

பேரரசி விக்டோரியா அரியாசனமேறிய 1858லிருந்து எல்லா மாநிலங்களிலும் நிலத் தீர்வையுடன் வேறு சில அதிக வரிகளும் பெருகிக்கொண்டே வந்தன. இவ்வித அதிக வரி விதிப்புக்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டன. அவை,

1. நாடு முன்னேற்றமடைவதற்காகப் புதிய சாலைகள் (roads) போட்டாக வேண்டும். கல்வியும் மக்கள் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும்.
2. பொது வரிகளிலிருந்து இவைகளுக்காகச் செலவிடப்படுவதைக் குறைத்து அவ்வட்டார மக்களையே அதற்காக மேற்கொண்டு வரி செலுத்தும்படிச் செய்யவேண்டும். இதை எதிர்த்து இரண்டு காரணங்கள் கூறப்பட்டன, அவை,

1. ஏற்கெனவே, அதிக வரித் தொல்லையால் அவதிப்படும் விவசாயிக்கு மேலும் வரிச் சுமை ஏற்றப்படுகிறது.

2. கிழக்கிந்தியக் கம்பெனியாராலும் சர் சார்லஸ் உட் அவர்களாலும் ஏற்கெனவே நிரந்தரமாகவும் வேறு கால கட்டங்களுக்கும் நிருணயிக்கப்பட்ட வரியின் உச்ச வரம்பை இத்தகைய அதிக வரி விதிப்பு (cess) மீறுவதாக உள்ளது.

தொடக்க காலத்தில் மிகச் சிறிய அளவில் விதிக்கப்பட்ட இவ்வதிக வரி (cess) நாளடையில் பெருகிட ஆரம்பித்தது. ஜேம்ஸ் வில்சன் போன்ற நிதி மந்திரிகளும் சர் பர்னஸ் பீகாக் (Sir Barnes Peacock) போன்ற நீதிபதிகளும் நிலவரி நிரந்தரமாக நிருணயிக்கப்பட்ட வங்காளத்தில் இத்தகைய வரிகளை எதிர்த்தார்கள். ஆனால், அரசப் பிரதிநிதியாகிய மேயோ பிரபுவும் இங்கிலாந்தில் இந்தியா செக்ரடெரியாயிருந்த ஆர்கையில் சீமான் (Duke of Argyll) அவர்களும் மேலும் கூடுதல் வரி போடுவதற்கு உடந்தையாயிருந்தார்கள். இந்தியா செக்ரடெரி கவுன்சிலில் இருந்த தேர்ச்சிமிக்க சர் எர்ஸ்கின் பெர்ரி, ஹென்ரி தோபி பிரின்ஸெப், ராஸ் மேங்கில்ஸ், சர் ஹென்ரி மாண்ட்காமரி, சர் பிரடிரிக் ஹெலிடே போன்றோர் மிக வன்மையாகக் கண்டித்தும் பயனில்லாமற்போயிற்று. தன்னிச்சையின்படி விதிக்கப்பட்ட இந்த வரி விதிப்பின் கொடுமைக்குச் சான்று காட்ட சென்னை ஒன்றே போதும். இங்கிலாந்து அரசாங்கம் சென்னை வரவு செலவு திட்டத்தில் ஏற்பட்ட பற்றுக்குறையைச் (deficit) சரிகட்ட 55,000 பவுன் அதிக (உபரி) வரி (cess) விதிக்க அனுமதித்தது. ஆனால், அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தி 1,45,000 பவுன் அதிக (உபரி) வரி விதிக்கப்பட்டது.

டல்லெளசி பிரபு 1855-ல் வடஇந்தியாவிலும், சர் சார்லஸ் உட் 1864-ல் தென் இந்தியாவிலும் நிரந்தரமாக ஏற்படுத்திய நிலத்தீர்வை நிருணயம் இவ்வித அதிக தீர்வைகளால் (cess) உறுதித்தன்மையற்றுப் போயிற்று. அரை நூற்றாண்டுக் காலம் மிகத் தொல்லைப்பட்டு நிருணயிக்கப்பட்ட நிலத்தீர்வைக் கொள்கை இவ்வளவு பயனற்றதாக ஆராய்ச்சியின்றிப் புறக்கணிக்கப்பட்டது வருந்தத்தக்கது. இவ்விதமாக மாநில அரசாங்கங்களுக்கு அளவின்றி நிலவரிகளுடன் அதிக வரிகளை விதிக்கக் கொடுக்கப்பட்ட அதிகாரம் விவசாயிகளுக்கு ஒரு கையால் கொடுத்ததை மறுகையால் பறித்துக் கொண்டதைப் போன்றதாகும். விவசாயத்தால் கிடைக்கும் பலனில் 50 விழுக்காடு வரி விதிக்கலாமென்று சட்டமிருந்த போதிலும் வேறு வகைகளில் அதிக (உபரி) வரிகளை நிலத்தீர்வையுடன் சேர்க்க வழி வகுக்கப்பட்டது.

இந்திய நிதி நிலையும் பொதுக் கடனும்

இந்தியாவின் கடனுக்குக் கொடுக்கப்படும் வட்டி, இருப்புப் பாதைகளுக்காகக் கொடுக்கப்படும் வட்டி மற்றும் உள்நாட்டுச் செலவுகள், இராணுவச் செலவுகள் ஆகியவை அனைத்தும் சேர்த்து 'இங்கிலாந்தில் செலவு' (Home charges) என வழங்கப் பட்டது. இந்தியாவில் நிலத்தீர்வையாக வசூலிக்கப்பட்ட தொகை இங்கிலாந்து நாட்டின் செலவுக்கும் இந்திய நாட்டின் செலவுக்கும் மற்றும் பஞ்சம், போர்கள் முதலியவைகளுக்கான செலவுகளுக்கும் சரிகட்ட முடியாதபடியால் இந்தியப் பொதுக் கடன் ஏற்பட்டு வந்தது. 1792-ல் 70 இலட்சம் பவுனாக இருந்த இந்தியப் பொதுக் கடன் 1836-ல் 269 இலட்சம் பவுனாகவும் 1844-ல் 435 இலட்சம் பவுனாகவும் 1850-ல் 550 இலட்சம் பவுனாகவும் 1858-ல் 695 இலட்சம் பவுனாகவும் வளர்ந்து மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போயிற்று, இங்கிலாந்து அரசாங் கம் செய்யும் வீண் ஆடம்பர செலவுகளுக்கும் தவறுகளுக்கும் தாங்களே உண்டாக்கிக் கொள்ளும் தேவையும் பயனுமில்லாத போர்களுக்கும் இந்திய வரிப் பணம் பயன்படுத்தப்பட்டது. முதல் இந்திய சுதந்தரப் போரின்போது பொருளாதாரத்தில் தொல்லைபட்டுக் கொண்டிருந்த இந்தியா, இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட சிப்பாய்கள் அனைவருக்கும் ஆறு மாதச் சம்பளமும், மற்றச் செலவுகளும் இந்தியா வரிப் பணத்திலிருந்து செலவழிக்கப்பட்டது. இந்தியா தன்னைத் தானே அடிமைப் படுத்திக் கொள்ளவும், பொருளாதாரத் துறையில் தாழ்த்திக் கொள்ளவும் இந்திய வரிப் பணம் பயன்படுத்தப்பட்டது. பொதுக் கடனும் ஏறிக் கொண்டே போயிற்று. 1876—77ஆம் ஆண்டுகளில் அக் கடன் 1390 இலட்சம் பவுன்களாக உயர்ந்து விட்டது. அதே சமயத்தில் உப்பு, சர்க்கரை, மதுபானம் ஆகிய பொருள் மீதிருந்த வரி 100 விழுக்காடு உயர்த்தப்பட்டது.

1877-ல் சென்னையில் ஏற்பட்ட பஞ்சத்திற்குப் பிறகும் செலவு குறைந்தபாடில்லை; வரி விதிப்பும் குறைந்தபாடில்லை. ஆனால், பஞ்சத்துயர் உதவிக்காகவும் (famine relief) எதிர்காலக் காப்பீடு (Insurance) நிதிக்காகவும் புதுவரிகள் மேலும் சுமத்தப்பட்டன. பஞ்சத் துயர் உதவிக்காகச் செலவு செய்தது போக மீதியைப் பொதுக் கடனைக் குறைப்பதற்காகப் பயன்படுத்துவது என்பது ஏற்பாடு. அவ்விதம் செய்திருந்தால் பொதுக் கடனில் 55 இலட்சம் பவுன் குறைந்திருக்கும். ஆனால், அரசாங்கம் வங்காள-நாகபுரி இரயில்வே, மத்திய இரயில்வே ஆகியவைகளில் ஏற்பட்ட இழப்பிற்கு ஈடு செய்யப்பட்டதாகக் கணக்குக் காட்டி விட்டது.

1898—99-ல் ரூபாயின் மதிப்பு முந்திய ஆண்டைவிட பதினைந்து பென்சிலிருந்து பதினாறு பென்சாக உயர்த்தப்பட்டது. இதனால், 1897—98 முதல் 1901—02 வரையிலான ஐந்தாண்டு களில் 120 இலட்சம் பவுன் வரி விதிப்பு அதிகமாக உயர்த்தப் பட்டது. 1871-ல் இருந்து பலவித 'செஸ்' என்னும் கூடுதல் (உபரி) வரிகள் சேர்ந்துக் கொண்டே வந்தன. பஞ்சத் துயருதவி வரியும், பிற்காலக் காப்பீடு நிதி வரியும் சேர்ந்து விவசாய பெருங்குடி மக்களை ஏழ்மையிலும் வறுமையிலும் வறட்சியிலும் ஆழ்த்தின. இங்கிலாந்து நாட்டுச் சிப்பாய்களின் அதிகப்படிச் செலவுக்காக எட்டு இலட்சம் பவுன் கொடுக்கப் பட்டது. தென் ஆப்ரிக்காவில் இராணுவச் செலவுக்காக நான்கு இலட்சம் பவுன் கேட்கப்பட்டது. ஆனால், இந்தியா விலும் இங்கிலாந்திலும் இதற்குப் பலமான எதிர்ப்பு இருந்த படியால் கைவிடப்பட்டது. 1901—02-ல் இந்தியாவின் பொதுக் கடன் இருபத்திரண்டு கோடியே அறுபத்திரண்டு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து நூற்று ஐந்து (22,62,32,105) பவுன் என்ற அளவில் இருந்தது.

இந்தியப் பொதுக் கடன் (public debt) இவ்வாறு இந்திய மக்களின் நலனுக்கன்றி இங்கிலாந்து அரசாங்கத்தின் நன்மைக் காகவே உயர்ந்து கொண்டு போவதை இந்தியப் பிரதிநிதிகளும் பொருளாதாரச் சிந்தனையாளர்களும் அடிக்கடி கடுமையாகக் கண்டித்தார்கள்.

சுங்க வரிகள், இறக்குமதி, ஏற்றுமதி

1833 முதல் 1853 வரை வியாபாரத்தைச் சீர்படுத்தி சுங்க வரியை நிருணயிப்பதற்கு இந்திய சட்டசபையில் அநேக சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. வங்காளத்திலும் பம்பாயிலும் ஏற்றுமதி இறக்குமதி அதிகமாக முன்னேற்றமடைந்து வந்தாலும் சென்னையில் மட்டும் முன்னேற்றமடையவில்லை. இந்த வேறு பாட்டிற்குக் காரணம் சென்னையின் ஏழ்மை நிலையும், அதன் மோசமான நிலக் கொள்கைகளுமேயாகும்.

இந்தியாவில் 1857—58-ல் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் பருத்தி நூல்கள், ஆடைகள், பட்டு ஆடைகள், கம்பளிகள், இயந்திரச் சாமான்கள் முதலியவைகளாகும். ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் பருத்தி மிகவும் முக்கிய மானது. ஏற்றுமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் மதிப்பு 10 இலட்சம் பவுனிலிருந்து 12 இலட்சம் பவுன் வரை

அதிகரித்துக் கொண்டு போயிற்று. ஏறக்குறைய 100 இலட்சம் பவுன் மதிப்புள்ள சணல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

1853-ல் சென்னையைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் 'முட்டார்பா வரி' (Mutarfa Tax) என்னும் வரி நீக்கப்பட்டது. முட்டார்பா வரி என்பது துணி நெய்தல், தச்சு வேலை, பொற் கொல்லர் வேலை முதலிய தொழில்களுக்கும் பெரிய, சிறிய கடைகளுக்கும், கூடைகளில் காய்கறி விற்பவர்களுக்கும், விதிக்கப் பட்ட வரியாகும். ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு இவ்வரியி னின்று விலக்கு அளிக்கப்பட்டது.

காபி, சர்க்கரை, பருத்தி

1848ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளில் அரசியல் கிளர்ச்சி கள் எழுந்த வண்ணம் இருந்தன. பிரான்சு தனது மன்னனை நாடு கடத்திவிட்டு இரண்டாவது மக்கள் ஆட்சி (Republic) அமைத்துக் கொண்டது. ஜெர்மனி தனது சிறு மன்னர்களின் கொடுங்கோன்மையைத் தாங்காது கிளர்ச்சி செய்து முக்கிய மான அரசியல் அமைப்புகளைப் பெற்றுக் கொண்டது. இத்தாலி ஆஸ்திரியாவை எதிர்த்துப் போர் தொடங்கி உரோமில் மாஜினி கொள்கைப்படி அரசாங்கம் அமைத்தது; மேலும், சுதந்தரத் திற்காக முயன்று தோல்வியுற்றது. ஆஸ்திரியா, வியன்னாவில் அரசியல் கிளர்ச்சியை நடத்தியது. ஹங்கரி, கோஸ்ஸூத் தலைமையில் சுதந்தர உணர்வு பெற்றுக் கிளர்ந்தெழுந்தது. அயர்லாந்தில் கிளர்ச்சியும் புரட்சியும் உண்டாயின.

அதே போன்று பொருளாதாரத் துறையிலும் ஐரோப்பாவில் வாணிகம், விவசாயம் முதலியவை ஒழுங்குப்பட்டு அமைதி யுடன் நடவாமையால் பலவித இன்னல்கள் ஏற்பட்டன. தானி யங்களின் விலைகளை இறங்கவிடாத நிலப்பிரபுகளுக்கும் குறைந்த விலைக்கு உணவுப் பொருள்கள் வேண்டுமென்று 1846-ல் தானிய சட்டத்தை மாற்றத் துடித்த தொழிலாள வர்க்கத்தினர்க்கும் இடையே மோதல் ஏற்பட்டது. தனது தேவைகளைத் தானுகவே பூர்த்தி செய்துகொள்ள முடியாதா என்ற எண்ணம் பிரிட்ட னுக்கு எழுந்தது. இந்தியா தனக்கு வேண்டிய அளவு தேயிலை யைப் பயிரிட்டுக் கொடுப்பது போல் காப்பியையும் பயிரிட்டுக் கொடுக்க முடியாதா? தனக்கு வேண்டிய அளவு சர்க்கரையை ஏன் இந்தியாவில் உற்பத்தி செய்து பெற்றுக்கொள்ளக் கூடாது? லங்காஷயரிலும் மற்ற இடங்களிலுமுள்ள ஆலைகளுக்கு வேண் டிய பருத்தியை இந்தியா கொடுக்குமா? காபி, சர்க்கரை ஆகியவற்றை இந்தியா போன்ற பிரிட்டிஷ் பேரரசுக்கு உட்பட்ட

நாடுகளில் உற்பத்தி செய்து தங்கள் நாட்டுத் தேவையை நிரப்பும் அளவுக்கு அனுப்ப முடியுமா? என்பன போன்ற வினாக்கள் இங்கிலாந்து அரசாங்கத்தினரிடம் எழுந்தன. இவைகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து முடிவுகட்ட ஜார்ஜ் பென்டிங்க் பிரபு தலைமையில் 1848-ல் ஒரு குழுவை அமைத்தது இங்கிலாந்து அரசாங்கம். பால் மர்ஸ்ட்டன் பிரபு, ஜான் பேக்ஷா போன்ற புகழ்மிக்க அறிஞர்களையும் பெரியவர்களையும் விசாரணை செய்து இரண்டாயிரம் பக்கங்களும் எட்டுப் பகுதிகளையும் கொண்ட அறிக்கையை அக் குழு அரசாங்கத்திடம் அளித்தது. சர்க்கரை உற்பத்தியில் உள்ள இடையூறுகளையும் ஏற்படும் இழப்புகளையும் அடிமை முறை நீக்கப்பட்டதால் எளிதில் தொழிலாளர்கள் கிடைக்காத நிலையையும் கருத்திற்கொண்டு சர்க்கரைக்காகப் பத்து ஷிலிங் சுங்கம் விதித்து ஊக்கப்படுத்தி இங்கிலாந்து பேரரசுக்கு உட்பட்ட நாடுகளில் பயிரிடச் செய்யலாமெனப் பரிந்துரைத்தது அக் குழு. ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்குப் பண்டைக் காலத்தில் ஏற்றுமதி செய்து வந்த ஆடைகளைப்பற்றி அனைவரும் அறிவர். இங்கிலாந்து தன்னுடைய ஆலைகளைக் கொண்டும் ஏற்றுமதி சுங்க வரிகளைக் கொண்டும் இந்தியாவின் ஆடை நெய்தல் தொழிலையும், கலையையும் அழித்துவிட்ட பிறகும், லங்காஷயர் நெசவாலை போன்ற ஆலைகளுக்கு வேண்டிய மூலப் பொருளாகிய பருத்தியை உற்பத்தி செய்து கொடுக்கும் நாடாக இந்தியாவைக் கருதி வந்தது. அதற்காக 1848-ல் ஜான் பிரைட் என்னும் நல்ல அறிஞர் ஒருவரின் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. நடுநிலை நின்று இந்தியாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைச் சுட்டிக்காட்டி இங்கிலாந்து பாராளுமன்றத்தில் பேசியவர் எட்மண்ட் பர்க் என்பவராவார்.

எல்லாச் சாட்சிகளையும் கேட்டறிந்து பின் இந்தியா தரமிக்க நல்ல பருத்தியை எவ்வளவு வேண்டுமானாலும் உற்பத்தி செய்து இங்கிலாந்திலுள்ள ஆலைகளுக்கு வழங்கமுடியும் என்று அக் குழு தீர்மானித்தது. இந்திய விவசாயிகளின் இரக்கப்படும்படியான ஏழ்மை நிலைமை அக் குழுவின் கவனத்தை ஈர்த்தது. தாங்க முடியாத வரிக் கொடுமையும், மக்கட் தொகை மிகுந்த பகுதி உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே அரசாங்கத்தை நடத்திச் செல்வதும் கொடுமைமிக்க, திறமையற்ற, தவறுகள் மலிந்த ஆட்சி எல்லா மாவட்டங்களிலும் நடந்து வருவதும் இந்தியாவின் வளத்தையும் முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்திவிட்டன. விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மையை நாடும் அனைவரும் இந் நிலையைக் கண்டு வருந்திக் கவலைப்பட்டனர்.

தேயிலை, உப்பு, அபினி

தேயிலை

வடமேற்கு இமாலயப் பிரதேசத்திலும் அஸ்ஸாமிலும் 1842-ல் தொடங்கிய தேயிலை உற்பத்தி 1953-ல் வேகமாக வளர்ச்சி அடைந்து வந்தது. குமாவுன் பகுதியில்மட்டும் பத்தாயிரம் பவுண்டு தேயிலை ஆண்டொன்றுக்குப் பயிரிடப் பட்டது. சிக்கிமிலிருந்து நேபாளம் வரையிலும், குமாவுனி லிருந்து காங்ரா கணவாய் வரையிலும் உள்ள பகுதி தேயிலை பயிர் செய்யத் தகுந்த இடம். செழிப்புடன் ஓங்கி வளர்ந்து நல்ல பலனைத் தர குமாவுன் கணவாயைவிட வேறு தகுந்த பிரதேசம் இல்லை; அதற்கு இணையும் இல்லை.

உப்பு

உப்பு உற்பத்தி கிழக்கிந்திய கம்பெனிக்கு நல்ல வரு வாயைக் கொடுத்தது. வங்காளத்தில் கம்பெனி ஆள்கள் மூலம் தயாரிக்கப்படும் உப்புக்குச் சுங்கவரி எண்பதிரெண்டு பவுண்டு கள் கொண்ட மணங்கு ஒன்றுக்கு ஐந்து ஷிலிங் அல்லது நான்கு ஷிலிங் ஆகும். சென்னையின் கடலோரத்தில் சூரிய வெப்பத்தால் ஆவியாக்கப்பட்டுத் தயாரிக்கப்படும் உப்பு வங்காளத்திய உப்பைவிட விலை மலிவு. சென்னை உப்பை மணங்கு இரண்டு ஷிலிங் வீதம் விற்றுக் கம்பெனி நல்ல இலாபம் அடைந்தது. பம்பாயில் மணங்கு ஒன்றுக்கு ஒன்றரை ஷிலிங் சுங்கவரி கட்டி விட்டுப் பாத்தியிலிருந்து உப்பை எடுத்துச் செல்லலாம். உப்பு உற்பத்தியால் பெற்ற வருவாய் 1793-ல் எட்டு இலட்சம் பவுனாக உயர்ந்தது. 52 ஆண்டுகளில் கிழக்கிந்தியக் கம்பெனி 20 கோடி மணங்கு உப்புக்குமேல் உற்பத்தி செய்து 60 கோடி பவுன் வரு வாயைப் பெற்றது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கும் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உப்புக்கும் ஒரேவிதச் சலுகைக் காட்டவேண்டுமென்பது கொள்கையாகமட்டும் இருந்தது. ஆனால், செயல் முறையில் இங்கிலாந்து உப்பைக் கொள்முதல் செய்வதற்கான செலவை யும் மற்றும் கூடுதலான செலவுகளையும் விலையுடன் சேர்த்து விற்றபடியால் நாளடைவில் இந்தியாவில் இங்கிலாந்தின் உப்பு விற்பனை வெகு வேகமாக அதிகமாகிக் கொண்டு போயிற்று. இங்கிலாந்துக்கிருக்கும் தனி உரிமையை நீக்கிவிட்டுத் தனக்கு வேண்டிய உப்பைத்தானே உற்பத்தி செய்துக்கொள்ள வாய்ப் பளித்தால் இந்தியாவில் உப்பு இறக்குமதி நின்றுவிடும். எனவே, உப்பு வரியை எதிர்த்துக் கொடுக்கப்பட்ட மனுக்களும் எழுந்த

கிளர்ச்சிகளும் பயனற்றுப் போயின. உப்பு வரி நீக்கப்படவில்லை. பின்னுளில் மகாத்மா காந்தியும் இதற்குப் போராடினுர்.

அபினி

இந்தியாவுக்கு அபினி ஏற்றுமதி செய்வதில் இங்கிலாந்து தனியுரிமை பெற்றிருந்தது. அரசாங்கத்துக்கு நிருணயித்த விலையில் விற்பதாக இருந்தாலொழிய வங்காளத்தில் பாப்பி பயிர் செய்வது தடைசெய்யப்பட்டிருந்தது. பம்பாயில் பாப்பி, பயிர் செய்யப்படுவதில்லை. சென்னையில் அபினி உற்பத்தி செய்யப்படுவதேயில்லை.

அபினி உணவுப் பொருளல்ல. ஆகவே, அரசாங்கம் அதன் மீது கொண்டுள்ள தனியுரிமை உப்பின்மீது கொண்டுள்ளது போல் கெடுதியானதல்ல என்று பொது மக்களும் பிறரும் கருதினர். இருந்தாலும் அந்தத் தனியுரிமை விலக்கப்பட வேண்டும் என்று அனைவரும் விரும்பி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டனர். ஆனுல், கிழக்கிந்தியக் கம்பெனியோ அதற்குப் பிறகு வந்த முடியரசோ அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

1858-ல் பேரரசி விக்டோரியா ஆட்சிக்கு இந்திய அரசு உட்பட்டபோது பிரிட்டிஷ் ஆலைகளில் உற்பத்தியான பருத்திநூல், துணி ஆகியவைகளுக்கு 3½ விழுக்காடு சுங்க வரியும் மற்ற பிரிட்டிஷ் பொருள்களுக்கு ஐந்து விழுக்காடு வரியும் விதிக்கப்பட்டன. மற்ற அயல்நாட்டுப் பொருள்களின்மீது இதைப்போல் இரட்டை மடங்கு வரி விதிக்கப்பட்டது. மேன்செஸ்ட்டர் வாணிபக் கழகம் (Manchester Chamber of Commerce) 1874-ல் கொடுத்த மனுவின்படியும் 1874-ல் இந்திய அரசு நியமித்த குழுவின் பரிந்துரைகளின்படியும் அரசப் பிரதிநிதியாகிய நார்த்புருக் பிரபு புதிய சுங்க வரிச் சட்டத்தைப் பிறப்பித்தார். அதன்படி அரிசி முதலியவை தவிர மற்ற பொருள்கள்மீதும் இருந்த ஏற்றுமதி வரி நீக்கப்பட்டது. பருத்தி நூல் துணிமீது இருந்த வரிமட்டும் நீக்கப்படவில்லை. பொது இறக்குமதி வரிகள் ஐந்து விழுக்காடுக் குறைக்கப்பட்டது. ஆனுல், மதுபான வகைகளின் இறக்குமதி வரி உயர்த்தப்பட்டது. பருத்தி ஆடை, நூல் ஆகியவைகளின் இறக்குமதி வரி முன்போலவே வைத்திருந்தபடியால் அரசப்பிரதிநிதி நார்த்புருக் பிரபு இந்திய அரசாங்கத்துக்கு மேலும் ஏற்படவிருந்த எட்டு இலட்சம் பவுன் இழப்பைத் தவிர்த்தார்.

1874-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வென்று அதன் அரசாங்கத்தை ஏற்படுத்தியது. சேலிஸ்பரி பிரபு இந்தியா மந்திரியாக (செக்ரெடரியாக) பதவி வகித்தார். அவர் பருத்தி ஆடை, நூல் ஆகியவைகளின்மீது இருந்த இறக்குமதி வரி முழுவதுமே நீக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தினர். நுண்ணறிவும் முன்யோசனையும் நற்பண்புகளும் நிறைந்த நார்த்புருக் பிரபு சேலிஸ்பரி பிரபுவுக்கு எழுதிய பதிலில் அவ்விதம் இறக்குமதி வரியைக் குறைத்தால் இந்தியப் பொருளாதாரத்துக்குப் பெரிய இன்னல் ஏற்படுமென்பதையும் அரசப் பிரதிநிதியின் நிருவாக ஆட்சியில் இந்தியா மந்திரி அடிக்கடி தலையிட்டுக் கட்டுதிட்டங்கள் போடுவது நியாயமில்லை என்பதையும் சுட்டிக் காட்டினர். ஆனல், சாலிஸ்பரி பிரபு இதில் பிடிவாதமாக இருந்தபடியால் 1876-ல் மிக உயர்ந்த அரசப்பிரதிநிதி பதவியைவிட்டு விலகி உடனே தமது தாய் நாடாகிய இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார் நார்த்புருக் பிரபு.

அவருக்குப் பிறகு லிட்டன் பிரபு பதவி ஏற்ருர். அந்தச் சமயத்தில் எப்போதுமே இல்லாத அளவுக்கு இந்தியாவில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. இருந்தும் லிட்டன் பிரபு பிரிட்டிஷ் பார்லிமெண்டின் கட்டளைகளுக்கிணங்க பருத்திப் பொருள்களின் மீதிருந்த இறக்குமதி வரியை நீக்கிவிடத் தயாராக இருந்தார். ஆனல், அவருடைய குழுவில் (council) அதைக் கடுமையாக எதிர்த்துப் பெரும்பான்மையோர் ஆத்திரமாகவும் ஆனித்தரமாகவும் நியாயமாகவும் வாதிட்டனர். இருந்தாலும் தனக்கிருந்த தனித்த அதிகாரத்தைப் பயன்படுத்தி லிட்டன் பிரபு இறக்குமதி வரியை நீக்கிவிட்டுப் பஞ்சம், பற்ருக்குறை, போர் ஆகியவை நிறைந்த அந்த ஆண்டில் தன்னுடைய குடிமக்களாகிய இந்தியர்களுக்குப் பெருத்த இழப்பையும் துன்பத்தையும் உண்டாக்கினர், அவரையும் அவருக்கு உடந்தையாய் இருந்த அவருடைய நிதி மந்திரி சர் ஜான் ஸ்ட்ரர்ச்சியையும் இந்தியா எப்பொழுதும் மறக்காது; மன்னிக்காது. இவ்விதம் அவர்களுடைய கன்சர்வேட்டிவ் கட்சிக் கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படிந்து நடந்தும் 1880-ல் நடந்த பொதுத் தேர்தலில் அக் கட்சித் தோல்வியுற்றது.

லிட்டனுக்குப் பிறகு ரிப்பன் பிரபு அரசப்பிரதிநிதியாக வந்தார். 1882-ல் உப்பு, மதுபானங்கள் தவிர மற்றெல்லாப் பொருள்கள் மீதுமிருந்த இறக்குமதி வரிகளை நீக்கி விட்டார். பஞ்சம் நீங்கி அமைதி நிலவிய காலமானலும் விவசாய வரியும் அதனுடன் சேர்ந்த கூடுதல் வரிகளும் மிக அதிகமாக இருந்த

அந்தக் காலத்தில் நாட்டுக்குப் பலனின்றி சுங்க வரிகளை நீக்கியது வருந்தத்தக்கது. 1882-லிருந்து 1894 வரையிலான பன்னிரண்டு ஆண்டுகள் எவ்வித இறக்குமதி வரியும் விதிக்கப்படவில்லை. பெட்ரோலுக்கு மட்டும் சிறிய அளவில் வரி விதிக்கப்பட்டிருந்தது.

1894-ல் இந்திய வரவு செலவு கணக்கில் இருபது இலட்சம் பவுன் துண்டு விழுந்தது. இந்திய சட்டசபை அங்கத்தினர்கள் எவ்வளவு எடுத்துக் கூறியும் கேளாமல் லங்காஷயர், மேன்செஸ்டர் ஆலைகளுக்கு உதவியாக 1895-ல் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட எல்லாவித பருத்தி ஆடைகளுக்கும் 3½ / விழுக்காடு வரி விதிக்கச் சட்டமியற்றப்பட்டது. மேன்செஸ்டரில் தயாரிக்கப்படும் துணிகளுடன் எவ்விதத்திலும் போட்டிப் போடாத இந்திய ஆலைகளில் தயாரிக்கப்பட்ட முரட்டு இரகத் துணிகளுக்கும் மட்டரகத் துணிகளுக்கும் வரி விதிக்கப்பட்டது. இது இந்திய ஆலைகளின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் தடையாக இருந்தது. ஏழைகள் அணியும் துணிகளுக்கு வரி விதித்தது நீதியற்றதாகும். நாகரிகமுள்ள எந்த அரசும் தனது சொந்த நாட்டின் தொழில் பெருக்கத்தை ஆதரிக்கும். அதற்கு அயல் நாட்டுத் துணிகள்மீது வரி விதிக்கும். ஆனால், இந்தியாவில் ஆரம்ப நிலையிலுள்ள தொழில்களுக்குக்கூட அரசாங்க ஆதரவில்லை. இந் நிலை இந்தியப் பிரதிநிதிகளின் சிந்தையில் எரிச்சலை உண்டாக்கியது.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியா

இந்தியர் ஒருவரின் சராசரி வருமானம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 27 என்று 1882-ல் குரோமர் பிரபுவும் சர் டேவிட் பார்பரும் கணித்திருந்தனர். பிறகு கர்ஸன் பிரபு ரூபாய் முப்பது என்று முடிவு செய்திருந்தார். இவை இரண்டுமே மிக அதிகமான கணிப்பு என்றாலும் வாதத்திற்காக ஒப்புக்கொள்வோம். ரூபாய் 30 என்பது 40 ஷிலிங்குக்குச் சமம். மிகப் பெரிய பணக்காரர் முதல் பலவகைப் பொருளாதார நிலையிலிருப்பவர்களையும் சேர்த்து இந்தியர் ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம் 40 ஷிலிங். ஆனால், ஆங்கிலேயர் ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம் 42 பவுன்கள் ஆகும். இந்தியன் ஒருவன் செலுத்த வேண்டிய சராசரி வரி 4 ஷிலிங் 8 பென்சாகும். அஃதாவது உணவுக்கே அல்லலுற்றுக் கொண்டிருக்கும் இந்தியன் ஒருவன் 1 பவுனுக்கு 2 ஷிலிங் 4 பென்ஸ் வரி கொடுக்க வேண்டியுள்ளது. இது மிகவும் கொடுமையானது. 42 பவுன் சம்பாதிக்கும் ஆங்கி

லேயன் ஒருவன் 1 பவுனுக்கு 1 ஷிலிங் 8 பென்ஸ்தான் வரி கட்டு கிறான். இந்தியாவில் உணவுக்கே கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கும் ஒருவன் இங்கிலாந்தில் ஆங்கிலேயன் ஒருவன் செலுத்தும் வரியைவிட 40 விழுக்காடு அதிகம் செலுத்தவேண்டி இருந்தது.

1901-02-ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த செலவு ஏழு கோடியே பதின்மூன்று இலட்சத்து தொன்னூற்று மூவாயிரத்து இருநூற்று எண்பத்திரண்டு (71,394,282) பவுண்டு. இரயில்வே, நீர்ப்பாசன வசதி ஆகியவைகட்குச் செலவிடப்பட்டது போக மீதி நான்கு கோடியே தொன்னூற்று ஆறு இலட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்று இருபத்து ஒன்பது (4,96,50,229) நிகர செலவாகும். இதில் சிவில் இலாக்காக்களுக்காக இந்தியா விலும் இங்கிலாந்திலும் செலவிடப்பட்டது 1,52,86,181 பவுண்டு. பாதுகாப்பு, பட்டாளம் ஆகியவைகட்குச் செலவிடப்பட்டது 1,57,63,931 பவுண்டு. தவிர இங்கிலாந்தில் இந்தியாவுக்கான செலவு (Home charges) 1,73,68,655 பவுண்டு. இதில் (1) கடன் களுக்கான வட்டி (2) இரயில்வே (3) உள்நாட்டுச் செலவு (4) பட்டாளத்திற்கான செலவு முதலிய துறைகளில்தான் அதிகம் செலவிடப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்து, ஆப்கானிய சீன சூடான் அபிசீனிய போர்களுக்கான செலவை நீதியற்ற முறை யில் இந்தியாவைக் கொடுக்கும்படிச் செய்த முறையில் சுமத்தப் பட்ட கடன்கள் இந்தியாவைப் பெரிதும் பாதித்தன.

இரயில்வேக்கள் இழப்பில் செயல்பட்டு வந்திருந்தும் மேலும் புதிய இரயில் பாதைகள் போடப்பட்டு இழப்பை அதிகரித்துக் கொண்டே போனதன் விளைவாக ஆண்டொன்றுக்கு 65 இலட் சம் பவுன்கள் இங்கிலாந்து முதலாளிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இது கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும். இப் பெருந்தொகை இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப் பப்பட்டது. மீண்டும் இப் பணம் இந்தியர்கட்கோ இந்தியத் தொழிற்கட்கோ எவ்விதத்திலும் பயன்படப் போவதில்லை. உள் நாட்டு இலாகா, இராணுவ இலாகா இவைகட்காகச் செலவிடப் படும் பெருந் தொகையிலிருந்து இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரி காரியாலயத்துக்கும், ஓய்வுபெற்ற சிவில், இராணுவ ஆங்கிலேய அதிகாரிகட்கு ஓய்வு ஊதியமும் (pension) கொடுக் கப்படும். இஃது இங்கிலாந்து இந்தியா ஆகிய இரு நாடுகட்கும் பொதுவான செலவாகையால் இவ்விரு நாடுகளும் சமமாகப் பகிர்ந்துகொள்ளவேண்டும். இது குறித்துச் சர் ஜார்ஜ் விங்கேட் அவர்கள் கூறிய முறை வருமாறு :

'விவசாயிகளின் தினக் கூலியைப் பார்க்கும்போது கழிவிரக்கம் கொள்ளவேண்டியதாய் இருக்கிறது. வேலை கிடைக்கும் போது அவனுக்குத் தினம் 2½ பென்சு கிடைக்கிறது. வேலையில்லாத நாள்களையும் சேர்த்துக் கணக்கிட்டால் அவனுக்கு நாளொன்றுக்கு 2 பென்சுதான் கூலி கிடைக்கிறது. ஏழ்மையும் துக்கமும் நிறைந்த அவனது வாழ்க்கை வருந்துதற்குரியது. அவனுடைய குடிசை பழுது பார்க்கப்பட்டு பல்லாண்டுகளாயின. மழையிலும் குளிரிலும் படும் துன்பம் சிறிதல்ல. அவன் மனைவி உடுத்தியுள்ளது கிழிந்த துணி. பிள்ளைகளுக்கு அதுகூட இல்லை. நிருவானம். பாத்திரங்கள் ஒன்றுமில்லை. பழைய கந்தல் போர்வைகள். அவனுடைய குழந்தைகள் ஆடுமாடுகளை மேய்த்தும் அவன் மனைவி சிறு வேலைகளைச் செய்தும் குடும்பத்துக்கு உணவு கிடைக்கும்படிச் செய்தால் அதை அவன் இறையருளாகக் கருதுகிறான். ஆண்டுக் கடைசியிலிருந்து அடுத்த ஆண்டுக் கடைசிவரை விவசாயத் தொழிலாளியும் அவன் குடும்பமும் பசி பட்டினியால் வாடுகிறார்களென்பது மிக உண்மையான செய்தி. இளமையிலிருந்து இந்திய விவசாயி சத்தற்ற குறைந்த உணவினால் வளர்க்கப்பட்டு உடல் வலிமையற்று வளர்ச்சிகுன்றி பஞ்சம், பிளேக் போன்ற கொடிய நோய்கட்கு எளிதில் இறையாகக்கூடிய ஒரு சமுதாயத்தின் அங்கமாகிறான்.'

'நிலமுள்ள விவசாயி சற்று மேலான நிலையிலிருக்கிறான். ஆனால், தாங்க முடியாத நில வரி அவனுடைய வருவாயிலிருந்து பெரும் பகுதியை விழுங்கிவிடுகிறது. சூழ்நிலையைப் பொருத்து விவசாயிகட்குக் கூலி அளிக்கப்படுகிறது. பேக்கர்கஞ் (Backergunj) நிலம் குறைந்த குத்தகைக்கு விடப்படுவதால் கூலியாள் ஒருவன் மாதம் 10 ஷிலிங் 8 பென்சு கூலி பெறுகிறான். ஆனால், சேலத்தில் நிலவரி அதிகமானபடியாலும் விவசாயி ஏழையானபடியாலும் கூலியாள் மாதம் ஒன்றுக்கு 4 ஷிலிங் 8 பென்சே பெறமுடிகிறது. இதைக் குறித்து நிலத்தீர்வையைப் பரிசீலனைச் செய்யும் செட்டில்மெண்டு அதிகாரிகள் (Settlement Officers) கவனிப்பதில்லை. நிதானமான நிலவரி விவசாயிக்கும் கூலியாள்களுக்கும் போதுமான சலுகை அளிக்கும். கிராமத்தி லுள்ள அனைவருக்கும் முன்னேற்றமடைய வாய்ப்பளிக்கும்.'

காசிப்பூர் மாவட்ட ஆட்சியாளர் விவசாயிகளுள் பெரும் பாலோர் கடனில் மூழ்கிக் கிடக்கின்றனர் என்றும், பைசாபாத் கமிஷனர் நூற்றுக்கு 60 விழுக்காடு மக்கள் சொல்லொணா ஏழ்மையிலிருப்பதால் போதிய உணவைச் சரிகட்ட அவர்கள் தங்களுடைய குழந்தைகளையும் வேலைக்கு அனுப்புகிறார்கள்

என்றும் இட்டாவா மாவட்ட ஆட்சியாளர் நிலமற்ற விவசாயி னுடைய நிலை மிகவும் கேவலமாக இருக்கிறது. அவனும், அவனுடைய மனைவி, குழந்தைகள் அனைவருமாகச்சேர்ந்து மாதமொன்றுக்கு ரூபாய் 3க்குமேல் சம்பாதிக்க முடிவதில்லை என்றும் பண்டா மாவட்ட ஆட்சியாளர் சமுதாயத்தின் அடித் தளத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் நலிந்து மெலிந்து நோயுற்று வாடிக் கிடப்பதைக் காணும்போது அவர்கள் பஞ்சத் திலும் வழக்கமான அரைப் பட்டினியிலும் எப்படி அடிபட்டு இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறதென்றும் ராய்பெரெய்லி துணைக் கமிஷனர் பசி என்பது வழக்கப்பட்டு விட்ட ஒன்று. பஞ்சத்தின் கொடுமையை ஏறக்குறைய எல்லா ஏழைக் குடும்பத்தினரும் உணர்ந்திருக்கின்றனர். அவர்கள் பணக்காரக் குடும்பங்களைவிட மிகக் குறைவாகச் சாப்பிட்டுப் பழக்கப்படுத்திக் கொண்டவர்கள் என்றும் ஏழை மக்களுக்கும் அரைப் பட்டினிக்கிடப்பருக்கும் இடையே வேறுபாடேயில்லை. இந் நிலையினின்று மீள வழியே இல்லையென்றும் கூறியிருக் கின்றனர்.

ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கூறப்படும் இதுபோன்ற கழிவிரக்கங்கள்தான் பிரச்சினையின் முடிவா? இந்தியாவின் நிலம் வளமானதாக இருந்தும் மக்கள் அமைதியுடனும் அறிவாற்றலுடனும் உழைப்புத் திறனுடனும் இருந்தும் ஒரு நாகரிக அரசு அவர்களுடைய துயரங்களைத் தீர்த்துச் சிறப்புடன் வாழவைக்க இருந்தும் இந்தக் கேவலமான நிலை ஏன் ஏற்பட்டது? இந்த அவல நிலைக்கு நிச்சயம் ஒரு பரிகாரம் உண்டு. மக்க ளுடன் தொடர்பற்ற, நல்வாழ்வைத் தர இயலாத தனித்தன்மை வாய்ந்த அரசாங்கத்தின் அமைப்பும், செயல்முறையும்தான் நிருவாகத்தின் இத்தகைய தோல்விக்குக் காரணமாகும். இதற்கு மாற்று இரண்டே சொற்களில் கூறிவிடலாம். (1) சிக்கனம், (2) பிரதிநிதித்துவம். இந்தியாவின் மிக முக்கியமான தொழி லாகிய விவசாயத்தின்மீது சுமத்தப்பட்டிருக்கும் நிலத்தீர்வை யுடன் சேர்க்கப்பட்டிருக்கும் அதிகப்படியான (உபரி) தீர்வைகள் (Cesses) வசூலிக்கப்படுவது நீக்கப்பட வேண்டும். தீர்வை நிருணயமான புலன்களுக்குக்கூட நிலவாரத்தில் பாதிக்குமேல் தீர்வை விதிக்கக் கூடாது. சட்டமன்ற அனுமதியின்றி நிலத் தீர்வைகளை உயர்த்தக் கூடாது.

பிற தொழிலுக்கும் உதவி தேவை. ஆலைத் தொழில்கள் மீதுள்ள சுங்க வரியை நீக்கியாக வேண்டும். குறைந்த

இறக்குமதி வரி விதிக்கப்பட வேண்டும். இலட்சக்கணக்கான மக்கள் நம்பிக் கொண்டிருக்கும் சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்படவேண்டும். மிக முக்கியமாக நாட்டுச் செலவினங்களைக் குறைத்துச் சிக்கனத்தை மேற்கொள்ள வேண்டும். இந்தியாவுக்குத் தேவைப்பட்ட அளவுக்குமேல் இராணுவச் செலவு செய்யக் கூடாது. பிரிட்டிஷ் பேரரசிற்காகச் செலாகும் தொகையில் ஒரு பகுதியை இங்கிலாந்து அரசு ஏற்றுக் கொடுத்தாக வேண்டும். 30 அல்லது 40 இலட்சம் பவுன்கள் இதற்காக இங்கிலாந்து கொடுக்கலாமென்று சர் ராபர்ட் கிஃப்பின் (Sri Robert Giffin) கூறுகிறார்.

இந்தியக் கடன் நாளடைவில் குறைக்கப்பட வேண்டும். கிழக்கில் வேலை தேடி இந்தியாவிற்கு வரும் ஆங்கிலேய இளைஞர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் வேலைகளைத் தகுதி வாய்ந்த இந்தியர்களுக்குக் கொடுத்தாக வேண்டும். இந்தியாவுக்காக இங்கிலாந்தில் கொடுக்கப்படும் 170 இலட்சம் பவுன்களையும் நாளடைவில் குறைத்துவர வேண்டும். எல்லாவற்றையும்விட இந்தச் செலவினம்தான் மிகவும் கெடுதியானது; ஆபத்தானது. இந்தியாவின் உணவுக்குரிய ஒரு பகுதி செல்வத்தை இந்தியாவைவிட்டு நிரந்தரமாக வெளியேற்றி இந்திய மக்களை வறுமையிலும் பஞ்சத்திலும் பசியிலும் பிணியிலும் வாட்டி வதைப்பது இச் செலவினம்தான். பிரிட்டிஷ் பேரரசிலுள்ள இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் சேர்ந்துதான் 170 இலட்சம் பவுன்கள் செலவழிக்கப்படுகின்றன. ஆகையால், இச் செலவில் ஒரு பாதியை இங்கிலாந்தும் மற்றொரு பாதியை இந்தியாவும் ஏற்றுக் கொடுக்க வேண்டியதுதான் நீதியும் நேர்மையும் ஆகும். அவ்வாறன்றி மொத்த செலவையும் இந்தியாவையே கொடுக்கும்படிச் செய்வது கொடுமையானது; நீதியும் நேர்மையுமற்றது. இந்த 170 இலட்சம் பவுனுடன் இந்தியாவிலுள்ள ஆங்கிலேய உத்தியோகத்தர்களுடைய ஊதியம் முதலியவற்றைச் சேர்த்தால் இந்தியாவில் வசூலிக்கப்படும் மொத்த வரியில் பாதியளவாகிறது. இப்படி இந்தியாவில் வசூலிக்கப்படும் வரி இந்தியாவைவிட்டு நிரந்தரமாக ஆண்டு தோறும் வெளிநாட்டுக்குச் சென்று கொண்டே இருந்தால் எந்த நாடும் முன்னேற முடியாது. இப்படி எளிதில் உழைப்பின்றி, கைம்மாறின்றிச் சேர்க்கும் செல்வம் எந்த வல்லரசையும் வாழவைக்காது. தனி மனிதனைப் போன்றதுதான் அரசும். உழைப்பால் கிடைத்த உணவு ஊட்டம் தருகிறது;

புத்துணர்ச்சியை அளிக்கிறது. உழைப்பின்றி உண்ணும் உணவு நமது உடலுக்கு நஞ்சு போன்றது. பிரதிபலன் கொடுக்காமல் திரட்டிய பெருஞ்செல்வம்தான் ஆடம்பரத்தாலும், அருவருக்கத் தக்க செயல்களாலும் கீழ்நிலைக்கு உந்தப்பட்ட பண்டைக் காலத்திய உரோமாபுரி அரசு சீரழிந்ததைப்போன்றும் பிறகு ஸ்பெயின் அதைப் பின்பற்றியதைப் போன்றும் நாடு அழிந்தொழியக் காரணமாயிருக்கும். பொருளாதாரத்தில் இந்தியாவுக்கு வழங்கப்படும் நீதியானது முதலாவதாகப் பிரிட்டனில் உற்பத்தியாகும் பொருள்கள் வளம்பொருந்திய இந்திய மக்களிடம் செல்வாக்கும் தேவையும் பெற்றுப் பெருமளவில் விலைபோகும். இரண்டாவதாக வியாபார சம்பந்தமின்றி மறைமுகமாக வரி முதலியவற்றால் எடுத்துச் செல்லும் பொன் இங்கிலாந்தின் உற்பத்தித் துறையையும் தொழில் துறையையும் கெடுத்துத் தரத்தையும் குறைத்துவிடும்.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டது பிரதிநிதித்துவம். ஏற்கெனவே பெரிய மாநிலங்களில் சட்டசபைகள் நிறுவப்பட்டு வந்தன. இந்த நல்ல திட்டம் மேலும் முன்னேற்றமடைய வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பிரதிநிதிகள் செல்ல வேண்டும். அரசப் பிரதிநிதியின் சபையில் உள்ள ஆங்கிலேய கருத்தறிவிப்பவர்களோடு வரி செலுத்தும் இந்தியர்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து தரும் அறிவுரை இலண்டனில் உள்ள இந்தியா செக்ரடெரிக்கு (Secretary of state for India) மிகவும் உதவியாக இருக்கும். இந்தியப் பிரதிநிதிகளின் கருத்தை அறியாமலும் கேட்காமலும் 45 ஆண்டுக் காலம் ஆட்சி நடந்து வந்திருக்கிறது. இவ்வாறு, தனிப்பட்ட நம்பிக்கையற்ற ஆட்சி மக்களிடம் நன்மதிப்பிழந்து தோல்வியுறும்.

பிரிட்டிஷ் மக்கள் ஆட்சியும் பார்லிமெண்டும் இந்தியாவைப் பற்றிப் போதிய கவனம் செலுத்துவதில்லை. இங்கிலாந்திலுள்ள இந்தியா செக்ரடெரி பிரிட்டிஷ் மந்திரி சபையிலுள்ளவர். அவருடைய ஆலோசகர்கள் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கிலேயர்கள் ஆவார்கள். இந்தியாவிலுள்ள கவர்னர் ஜெனரலும் அவருடைய ஆலோசகர்களும் இந்தியா செக்ரடெரி ஆணைக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆகையால், மக்களுடன் தொடர்பு கொண்டோர் அங்கும் இல்லை. பொதுவாக இந்தியாவின் ஆட்சியும் அதிகாரமும் இங்கிலாந்திலானாலும் இந்தியாவிலானாலும் மக்கள் தொடர்பற்ற மிகச் சிறிய குழுக்களிடம் சிக்கியுள்ளன. அவை வரிச் சுமை தாங்க முடியாத இந்தியனை

யும் வேலையற்ற தொழிலாளியையும் பட்டினியால் வாடும் உழைப்பாளியையும் மறந்துவிடுகின்றன.

பிரிட்டிஷ் ஆட்சிக்குமுன் இந்தியாவின் பழங்கதை வேறு விதமாக இருந்தது. இந்து மன்னர்களும், முகமதிய மன்னர்களும் முழு அதிகாரத்துடன் ஆண்டார்கள். கொடுங்கோன்மையுடன் ஆண்டவர்களும் உண்டு. ஆனால், அவர்கள் மக்களுடன் தொடர்பு கொண்டு ஆண்டார்கள். அவர்கள் ஆட்சி நாகரிக மற்றதும் பழைமை நிறைந்ததுவுமாக இருந்தபோதிலும் மக்கள் ஒத்துழைப்பிருந்தது. டெல்லியில் பேரரசர், மாகாணங்களில் ஆளுநர்கள் (Governors), ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள், சர்தார்கள் முதலியவர்கள் அவரவர்கள் பகுதிகளையும் கிராம மக்கள் கிராமப் புறங்களையும் ஆட்சி புரிந்தார்கள். அடித்தளத்திலுள்ள விவசாயி முதற்கொண்டு மக்கள் அனைவருக்கும் நாட்டு ஆட்சியில் பங்கிருந்தது. நாகரிகம் முன்னேறிய தற்காலத்தில் பொது மக்கள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியிலும் பங்குபெற்றாக வேண்டும்.

செழிப்பான இந்தியா இங்கிலாந்தின் வியாபாரத்தை ஓங்கச் செய்யும். உண்மையான மக்களாட்சி இந்தியா, இங்கிலாந்து வல்லரசை மேலும் பலமடையச் செய்யும். ஏழ்மையுற்ற இந்தியாவோ இங்கிலாந்தின் வியாபாரத்தை ஒடுக்கி அழித்துவிடும். கொடுங்கோன்மையான ஆட்சி இங்கிலாந்தின் வீழ்ச்சிக்கு அடிகோலும்.

இந்தியப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் அரசாட்சி கொடுங்கோன்மையானது; திறமையற்றது என்று எண்ணவில்லை. ஆனால், அந்த ஆட்சியினரின் பொருளாதாரக் கொள்கைகள் இந்திய மக்களின் வறுமையைத் தீர்க்க முடியாமல் இருந்தன என்னும் நோக்கத்திலிருந்துதான் ரானடே, திலகர் முதலியோர் வாதாடி வந்தனர்.

2. திலகர், ரானடே, படேல்

திலகர்

பால கங்காதர திலகர் மேற்குக் கரையோரத்தில் இரத்ன கிரியில் 1856ஆம் ஆண்டுப் பிறந்தார். இவர் மிகவும் வைதீகமான சித்பவன் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்; சமூகக் கொள்கை களில் பழைமையைக் கைப்பற்றிய பிற்போக்குவாதி; எதையும் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக விவாதிக்கும் தன்மையுடையவர்; பேச்சாற்றலும் வாதத் திறமையும் மிக்கவர்.

1896ஆம் ஆண்டு தக்காணத்தின் வரலாற்றிலே ஒரு துன்ப மிக்க ஆண்டாகும். கொடிய பஞ்சமும், பிளேக் என்னும் மிகக் கொடிய தொத்து நோயும் கோரமாகக் காட்சியளித்த ஆண்டு அது. திலகர், பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரும்பாடுபட்டார். அவர்களுக்கு வேண்டிய உடனடித் தேவைகளை அளிக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தினார். காடுகளைக் கால்நடைகள் மேய்ச்சலுக்கு அனுமதிக்கும்படியும் வேலை வாய்ப்பும், வாழ்க்கை வசதியும் மக்களுக்குத் தரும்படியும் தர்ம சத்திரங்கள், உணவு விடுதிகள் திறக்கும்படியும் திக்கற்றோருக்காக இல்லங்களும், நெசவாளர் போன்ற தொழிலாளர்கட்கு வேலை தரும்படியும் அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தினார். பஞ்ச ஒழிப்புச் சட்ட திட்டங்களைத் தனது 'கேசரி' எனும் பத்திரிகையில் வெளியிட்டார். தாம் கோரிய சலுகைகள் கிடைத்தமைக்கு அரசாங் கத்தைத் திலகர் மிகவும் பாராட்டினார். நிலவரி வசூலிப்பதைத் தள்ளிவைக்கக் கோரியும் நியாய விலைக் கடைகள் திறக்கக் கோரியும் அரசாங்கத்தை அணுகினார். கிராம மட்டத்திலும், தாலுகா மட்டத்திலும் பஞ்ச ஒழிப்புக் குழுக்களை அமைத்துப் போராடினார். அதன் காரணமாகப் பலர் சிறைப்பட்டனர். இதனால், மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.

அடுத்து, 'பிளேக்' எனும் கொடிய தொத்து நோய் பம்பாய் மாகணம் முழுதும் பரவியது. நாள்தோறும் நூறு பேருக்குக் குறையாமல் மாண்டனர். இந்த நோயின் காரணங்களையும், ஒழித்தற்கான வழிகளையும் எடுத்துக்காட்டி பூனு, நாசிக், பரோடா, சூரத், அகமதாபாத் முதலிய நகரசபைகளுக்கு முன்னெச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் வீடுகளையும் வீதிகளையும் துப்புரவாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டி பலதரப்பட்ட நோயாளிகளுக்கு உடனடியாகத் தரவேண்டிய மருத்துவ வசதிகளைச் செய்து தரும்படிக் கேட்டார். வேகமாகப் பரவிய இந் நோய் அன்னிய நாட்டினரின் கவனத்தை ஈர்த்தது.

வெனிசில் நடந்த மாநாட்டிற்குப் பிறகு இலண்டனிலுள்ள இந்தியா மந்திரி மத்திய அரசுக்கும், மாநில ஆளுநர்களுக்கும் எச்சரிக்கை அனுப்பி வெளிநாட்டு வாணிபத்துக்குக் கட்டுப்பாடு விதித்தும் நோயாளிகளைத் தனிமைப்படுத்தியும் நோயைப் பரவவிடாமல் தடுக்கக் கட்டளையிட்டார். தனிமைப்படுத்தும் திட்டத்தை விரும்பாத மக்கள் மருத்துவ மனைகளைக் கொலைக் களங்களாகக் கருதினர்கள்; பிளேக் நோயைவிட எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகளைக் கண்டு அஞ்சினர்கள். ஆனல், திலகர் மக்களுக்கு நிலைமையை நேரில் விளக்கியும் எழுதியும் அவர்கள் பயத்தைப் போக்கி அரசாங்கத்துடனும், மருத்துவர்களுடனும் ஒத்துழைக்கும்படிச் செய்தார். நோயாளிகளின் படுக்கை, துணி முதலியவற்றை எரிக்க இராணுவம் பயன்படுத்தப்பட்டதைக் கண்டு மக்கள் அஞ்சினர்கள். ஆனல், திலகர் அவர்கள் அச்சத்தைப் போக்கி அந்த வேலையை அரசாங்கம் அமைதியுடனும், மக்கள் ஆதரவுடனும் செய்யும்படி உதவினர். திலகரும் உடன் சென்று நோயாளிகளின் வீட்டைச் சோதித்து எரிக்க வேண்டியவைகளை எரிக்க உதவினர். திலகர் மருத்துவ மனைகளுக்கு நாள்தோறும் சென்று பிளேக் குழு உத்தியோகத்தர்களுக்கு நல்ல அறிவுரைகள் நல்கியும், ஏழைகட்கு உணவு, உடை, உறைவிடம் முதலிய வசதிகள் செய்துக் கொடுத்தும் அருந்தொண்டாற்றினர்.

ரானடே

1842-ல் தோன்றிய மகாதேவ கோவிந்த ரானடேவுக்கும் திலகருக்கும் சமுதாயக் கொள்கைகளில் வேறுபாடுகள் உண்டு. M.A., LL.B., பட்டம் பெற்று நீதிபதியாக இருந்த ரானடே விதவை மறுமணம், சாதிமத வேறுபாடின்மை, குழந்தை திருமண

ஒழிப்பு, உருவ வழிபாடு எதிர்ப்பு முதலிய புரட்சிமிக்க எண்ணங்களைக் கொண்டவர் ; இந்தியாவுக்கு ஏற்ற புதிய பொருளாதாரக் கொள்கைகளை வகுத்தவர். மகாராட்டிரத்துக்கு வழிகாட்டியாகவும் உறுதுணையாகவுமிருந்த ரானடேயைத் திலகர் பல முறைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்.

தன்னம்பிக்கையும் பொறுமையும் மிகுந்த ரானடே அவர்கள் சகிப்புத் தன்மையும் எதையும் தாங்கும் இதயமும் படைத்தவர். 'We must bear our cross' என்று அனைவருக்கும் போதித்தார். இந்தியா மற்ற நாடுகளுடன் சமமாக வீற்றிருக்க வேண்டுமென்று தொலை நோக்கிப் பார்க்கும் பண்புடையவர்கள் தமக்குள்ளே மகிழ்ச்சி அடைவார்கள் என்றும் அதற்காக வேண்டிய பாதையைச் செப்பனிட்டு வழி நடத்திச் செல்வோர் அவர்களைவிட அதிக மகிழ்ச்சியடைவார்கள் என்றும் அங்ஙனம் அரும்பாடுபட்டு பெற்ற சுதந்தர இந்தியாவைத் தங்கள் கண்களாலேயே காணும் பேறு பெற்றோர் மற்றனைவரையும்விட மிக்க மகிழ்ச்சி கொள்வார்கள் என்றும் ரானடே அவர்கள் கூறினார்கள்.

படேல்

சர்தார் வல்லபாய் படேல் நாடியாட் தாலுக்கா, கராம்சாத்தில் 1865ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் கண்களில் கடுமையான பார்வை இருப்பினும் புன்னகையாலும் இனிய சொற்களாலும் அனைவரையும் கவர்ந்தவர். இவர் தமது சொந்தத் தகுதியால் உயர்ந்தவர்; கடமையும் கட்டுப்பாடும் மிகுந்தவர்; கண்டிப்பானவர்; கொள்கையில் ஆழ்ந்த பிடிப்புள்ளவர்; சிறந்த தேச பக்தர்.

படேல் ஏழை மக்களை ஏய்த்துப் பிழைக்கும் வணிகர்களைக் கண்டித்ததோடு அந்நிய ஆட்சியை நம்பி நீதியற்றவைகளைச் செய்யும் அவர்களைக் காலம் வரும்போது மக்கள் கவனித்துக் கொள்வார்கள் எனக் கூறி எச்சரித்தார்.

1928-ல் பர்டோலியில் சர்தார் படேல் வரி கொடா இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தினார். அவருடைய உண்மையான பேச்சில் மயங்கிய மக்கள் அவர் சொற்படிக் கேட்டுச் செயல் பட்டார்கள். இவரிடத்தில் ஆங்கில அரசாங்கம் பணிய வேண்டியதாயிற்று.

1931-ல் கராச்சியில் நடந்த காங்கிரசு மாநாட்டிற்குப் படேல் தலைமை தாங்கினார்.

தொழிலாளர்கட்கு அரசாங்கம் செய்யவேண்டிய நன்மைகள்

வரி விதிப்புக் கொள்கைகள், உப்பு வரி நீக்கம், தொழில் பாதுகாப்பு, தொழில் தேசிய மயமாக்குதல், விவசாயிகளுக்குச் சலுகைகள் அளித்தல், மக்களுக்கு இராணுவப் பயிற்சி, நிலவரி விதிப்புக் கொள்கை, ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம், கதர் கைத்தறிகட்கு ஆதரவு, விவசாயிகளின் கடன் தொல்லை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குச் சர்தார் படேல் தலைமையில் நடந்த காங்கிரசு மாநாடு பயன்தரத்தக்க நல்ல பல தீர்மானங்களை நிறைவேற்றியது. அயல் நாட்டுத் துணிகளை நிராகரித்தல், கதர் கைத்தறித் துணிகளை ஆதரிப்பது எப்படி பொருளாதாரத் தேவையோ அப்படியே மது ஒழிப்பும் மிக முக்கியமானது; உடனடியாகத் தேவைப்படுவது எனக் கூறப் பட்டது. கிராமத் தொழில் குடிசைத் தொழில்களில்தான் உண்மையான சோஷலிச முன்னேற்றம் இருக்கின்றதென்று படேல் மிகவும் உறுதியாகக் கருதினர்.

3. கோபாலகிருஷ்ண கோகலே

கோபாலகிருஷ்ண கோகலே அவர்களின் மரணத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'நீண்ட நெடுங்காலம் கருகிப் புகைந்துக் கொண்டிருக்கும் நெருப்பைக் காட்டிலும் குறுகிய காலமானுலும் கொழுந்து விட்டெரிந்து பிரகாசித்து மறைந்துவிடும் ஒளியே மேல்' என்று லோகமான்ய பால கங்காதர திலகர் அவர்கள் அவரைப்பற்றிக் கருதினுர்கள். கோகலே தமது வயது பதினெட்டிலே பட்டதாரி; இருபதிலே பேராசிரியர்; இருபத்திரண்டிலே மாகாண மாநாட்டின் செயலாளர்; இருபத்து நான்கிலே சக்தி வாய்ந்த மிகப் பெரிய பத்திரிகாசிரியர்; இருபத்தொன்பதிலே அகில இந்தியக் காங்கிரசின் செயலாளர்; முப்பதிலே இராயல் கமிஷன் (வெல்பி கமிஷன்) முன்பு முக்கியமான ஒரு சாட்சி; முப்பத்து நான்கிலே மாகாண சட்டசபை அங்கத்தினர்; முப்பத்தாறிலே மத்திய சட்டசபை அங்கத்தினர்; முப்பத்தொன்பதிலே அகில இந்தியக் காங்கிரசின் தலைவர்; நாற்பத்தாறிலே இராயல் கமிஷன் அங்கத்தினர். இவ்வளவு பேரும் புகழும் மிக்க வாழ்க்கையைவாழ்ந்த கோகலே தமது நாற்பத்தெட்டாவது வயதிலே இயற்கையெய்தினுர். இவர் மறைவு நாட்டுக்கொரு பெருத்த இழப்பாகும்.

கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் மத்திய சட்டசபை அங்கத்தினரானபோது இந்தியா மிக ஏழ்மையான நிலைமையிலிருந்ததோடு அடுத்தடுத்து அநேக பஞ்சங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. இவைகளைப்பற்றிக் கோகலே தெளிவாக விவாதித்தார். தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் பொருள் நாளடைவில் இந்தியாவைவிட்டுக் கடத்தப்படுவதே (drain of wealth) மக்கள் வறுமை நிலைக்குக் காரணமென்றுர். கோகலே அவர்களும் இதே கருத்தைக் கொண்டிருந்தார். இங்கிலாந்தின் அரசியல் ஆதிக்கத்தினுல் ஆங்கிலேயர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியம் (pension) வகையில் 20 கோடி ரூபாய்

ஆண்டொன்றுக்கு வெளி நாட்டுக்குச் சென்று விடுகிறது. இந்தியர்களை அதிகாரிகளாக நியமித்தால் அவ்வளவு பணமும் இந்தியாவிலேயே இருக்கும் எனக் கருதினார்; வற்புறுத்திக் கூறினார்.

இந்திய நிதிநிலையை நன்கு ஆராய்ந்த கோகலே அரசாங்க ஆண்டு வரவு செலவில் (annual budget) கூடுதல் (உபரி) ஏற்படுவதைக் கண்டித்தார். அது செழுமைக்கு அறிகுறியன்று என்றார்.

கோகலே மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட அதிக (உபரி) பணம் (surplus) அரசாங்கத்தை அதிகமாகவும் தேவையற்ற முறையிலும் செலவு செய்யத் தூண்டுமென்றும் ஆங்கிலேயர்களும் தங்களது சுமையின் ஒரு பகுதியை இந்திய அரசாங்கத்தின்மீது தள்ளுவார்கள் என்றும் கூறினார். ஒருகால் வரவு செலவில் கூடுதல் ஏற்பட்டால் நில வரி, உப்பு வரி முதலியவற்றைக் குறைத்தும், வருமான வரிக்கு உயர் வரம்பை உயர்த்தியும், பருத்தி முதலியவற்றிற்குச் சுங்க வரியை நீக்கியும், கல்வி, சுகாதாரம் போன்ற சமுதாய சீர்திருத்த வழிகளுக்குச் செலவு செய்தும் ஈடுகட்ட வேண்டும் என்றும் கோகலே கூறினார். அவர் இராணுவச் செலவைக் குறைப்பது பற்றியும் அரசாங்க ஊழியர்களை இந்திய மயமாக்குவதைப்பற்றியும் திட்டவட்டமான கருத்தைக் கொண்டிருந்தார். அவர் தந்தி தபால், இரயில்வே, காவல் துறை, அச்சடித்தல், அலுவலக சில்லரை சாமான்கள் வாங்குதல் முதலியவற்றில் சிக்கனம் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், கிடைக்கும் எல்லா வசதிகளையும் நாட்டு முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமென்றும் சட்ட சபைகளில் வற்புறுத்தினார்; வரவு செலவில் வரும் உபரியைக் (excess budget) கண்டித்தார்.

கோகலேயினுடைய வாதத்தின் நியாயத்தை உணர்ந்த அரசினர் உப்பு வரியை அடுத்தடுத்துக் குறைத்ததுடன் வருமான வரி இலக்கையும் உயர்த்தினர். கல்வி, காவல் துறை, உள்ளாட்சித் துறைகட்கும் மேலும் மானியங்கள் வழங்கப்பட்டன. ஆனால், பயன்தாராக் கடன்களைக் குறைக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்று கோகலே கூறிய கருத்தைமட்டும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. கோகலே பலமுறை கண்டித்தும் ஜெனரல் பிராக்கன்பரி அவர்கள் ஆதரவளித்தும் பிரிட்டிஷ் அரசு சிப்பாய்களின் எண்ணிக்கையையோ இராணுவத்துக்குத் தேவையில்லாமல் ஆகும் செலவையோ குறைக்க முன் வரவில்லை. பருத்தி நூலுக்கும் துணிக்கும் போடப்பட்ட வரிகளை எவ்வளவு எதிர்த்தும் அரசு கேட்காமல் வரி விதித்து வந்தது. இது நாளடைவில் பிரிட்டிஷ் அரசுக்கு நேர்முக

மாகவும், மறைமுகமாகவும் தீமை விளைவித்தது. மத்தியதர வகுப்புக்குமட்டும் பயனளித்தால் போதாது; ஏழை மக்களுக்கும் பயனளிக்க வேண்டும் என்னும் ஒரே காரணத்தால்தான் மதன்மோகன் மாளவியாவின் சர்க்கரை உற்பத்தித் தொழிலுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்னும் தீர்மானத்தையும், தாதாபாய் நௌரோஜியின் வருமான வரி உச்சகட்ட உயர்த்தல் தீர்மானத்தையும் கோகலே எதிர்த்தார். அதே காரணத்தால் தான் 1904-ல் விவசாயிகளின் நன்மையைக் கருதி ஆரம்பிக்கப் பட்ட கூட்டுறவுக் கடன் சங்கங்களை வரவேற்றார்.

ஷோலாப்பூர், பீஜபூர் மாவட்டங்களில் ஏழைகள் பஞ்சத்தால் படும் துயர்களைப்பற்றிக் கோகலேயும், ரானடேயும் அரசாங்கத்துக்கு எழுதியதற்கு இரண்டே வரிகளில் அவர்களுடைய மனு பார்வை இடப்பட்டதாகப் பதில் வந்தது. அதைப்பற்றிக் கோகலே வருத்தப்பட்டதற்கு ரானடே 'நமது மனுக்கள் 10 பேர் அடங்கிய அந்தக் குழுவுக்கு அனுப்பியதல்ல. ஆனால், வெளியிலிருக்கும் இலட்சோப இலட்ச மக்களுக்கு என்று நாம் மனநிறைவு கொள்ளவேண்டும். நம்மால் சாதிக்க முடியாவிட்டாலும் நம்மாலானதைச் செய்வோம். நமக்குப் பிறகு வருபவர்கள் இதைத் தொடர்ந்து செய்து வெற்றி பெறுவார்கள்' என்றார். அதன்படியே கோகலே அவர்கள் பேசியும் எழுதியும் செயல்பட்டும் வந்தார். விஷயங்களை எடுத்துக் கூறும் போது கோகலே தகுந்த ஆதாரங்களுடனும் புள்ளி விவரங்களுடனும் எடுத்துக் கூறியதால் ஒருவராலும் அவரை எதிர்த்துப் பேசி வெற்றி பெற முடியவில்லை. அவருடைய சொற்பொழிவில் வாதத் திறமையும் நியாயமும் மிகுந்து காணப்பட்டன. அரசாங்கத்துக்கிருந்த தொல்லைகளையும் இடையூறுகளையும் கவனித்தே பேசி வந்தார். அப்போதிருந்த சூழ்நிலையில் பிரிட்டிஷ் ஆட்சி இல்லாவிடில் இந்தியாவின் முன்னேற்றம் பாதிக்கப்படும் என்ற கருத்துடன் வாதிட்டதால் அவர் சொற்பொழிவை எல்லாத் தரப்பினரும் பெரிதும் விரும்பினர்.

பொதுவாகக் கோகலே அவர்கள் அரசாங்க வரவு செலவு திட்டத்தின்மீது ஆற்றியசொற்பொழிவுகளில் காணப்படும் சிறப்பு அம்சங்கள் வருமாறு:

1. அதிக (உபரி) வரவு மிகவும் கெடுதி பயக்கும்.
2. வரி பளுவைக் குறைக்க வேண்டும்.
3. உப்பு வரியை வெகுவாகக் குறைக்க வேண்டும்.

4. ஏழ்மையை ஒழிக்க வேண்டும்.
5. இந்திய மக்களுக்குப் பயனளிக்காத விஷயங்களுக்கு முதலிடம் தரக்கூடாது.
6. பொது மக்களுக்குக் கல்வி (mass education) அளிக்கப் படவேண்டும்.
7. பருத்திக்கும், துணிகளுக்கும் சுங்க வரி விதிக்கக் கூடாது.
8. இராணுவச் செலவைக் குறைத்தாக வேண்டும்.
9. மக்களைத் துன்புறுத்தும் பொருளாதாரச் சீர்கேடுகள் செம்மைப்படுத்தப்பட வேண்டும்.
10. விவசாயமும், கல்வியும், தொழில் முறையும் வளர்ச்சி யடைய வேண்டும்.
11. இராணுவத்திலும், அரசாங்கத்திலுமுள்ள பெரும் பதவிகள் இந்திய மயமாக்கப்பட வேண்டும். பொறுப் புள்ள பதவிகள் இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.
12. மதுபான வழக்கம் வளர்ந்து கொண்டே போவதைத் தடுத்து நிறுத்த வகை செய்ய வேண்டும்.
13. விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டும். விவசாயி களுடைய ஏழ்மையையும் கடன் தொல்லையையும் போக்க வேண்டும்.
14. தவறான புள்ளி விவரங்களும் திசை திருப்பும் புள்ளி விவரங்களும் கொடுக்கக் கூடாது.
15. இராணுவ புனரமைப்பு என்னும் பெயரால் அளவு கடந்து வரிப் பணத்தைப் பாழடிக்கக் கூடாது.
16. நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் தலத் தாபனங்களுக்கும் (District Boards) போதிய மானி யம் வழங்கவேண்டும்.
17. இராணுவத்தினர் எண்ணிக்கையைக் குறைத்தாக வேண்டும்.
18. நம்பிக்கையின்மையின் (distrust) அடிப்படையில் பாது காப்பு அமைக்கப்படக் கூடாது.
19. வரவு செலவின் உபரியைக் கொண்டு பயன்தராத இருப்புப் பாதைகளை அமைக்கக் கூடாது.

20. பஞ்ச ஒழிப்புச் சலுகை போதுமான அளவு அளிக்கப்பட வேண்டும்.

21. கவலையைத் தரும் விலைவாசி ஏற்றத்தைத் தடுத்திடக் குழு அமைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

22. வரவு செலவின் உபரியை மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்குப் (welfare schemes) பயன்படுத்த வேண்டும்.

23. கல்விக்காக அதிக நிதி அளிக்க வேண்டும்,

24. அரசியல் சீர்திருத்தம் (political reforms) விரைவில் செய்யப்பட வேண்டும்.

25. சாதாரண காலங்களில் காரணமின்றி வரிகளை உயர்த்தக் கூடாது.

26. விவசாயத்திற்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளை விரைவில் செய்தளிக்க வேண்டும்.

27. இரயில்வே துறையில் அளவு கடந்து செலவாவதைத் தடுத்து நிறுத்தி அளவோடு செலவு செய்ய வேண்டும்.

28. ஆண்டுதோறும் செலவினங்கள் ஏறிக்கொண்டே போவதை ஆராய்ந்து காரணங்களைக் கண்டறிய வேண்டும்.

29. புகையிலை மீதிருந்த வரி குறைக்கப்பட்டு இருக்கிறது. இதை விடுத்துப் பெட்ரோல் மீதுள்ள வரியைக் குறைத்திருக்க வேண்டும்.

30. நமது அண்டை நாட்டின் (சீனு) மக்களைக் கெட்ட பழக்கத்திற்குத் தூண்டும் அபினி மூலம் வருவாய் தேடுவது நல்லதன்று. இந்த வரி இன்றில்லாவிட்டாலும் பத்து ஆண்டுகளில் நீக்கப்பட்டுவிடும். அப்போது துண்டு விழும் வருவாயை மேலும் வரி விதிக்காமல் ஈடுசெய்ய அபினி சேமிப்பு நிதி (opium reserve fuud) என்ற ஒன்றை இப்பொழுதே ஏற்படுத்த வேண்டும்.

31. கடன் குறைப்புப் பண்டு
ரஷியா 5%, ஜப்பான் 4 முதல் 6%, டர்க்கி 5%, சீனு 4 முதல் 7%, இத்தாலி 3¾% வட்டியில் பெருந்தொகைகள் கடன் பெற்றிருக்கும்போது இந்தியா 3½% வீதத்தில் தான் கடன் பெற்றிருக்கிறது. இங்கிலாந்து வளம் பொருந்திய நாடாக இருந்தும் தன்னுடைய 800 மில்லியன் பவுன் கடனையும் ஆண்டொன்றுக்கு 1% வீதம் கடனை அடைத்து ஏழெட்டு ஆண்டுகளில் 750 மில்லி

யளுகக் குறைத்துக் கொண்டிருக்கிறது. ஏழ்மை நாடாகிய இந்தியா தன்னுடைய மிகச் சிறிய கடளுகிய 37 மில்லியனை ஆண்டொன்றுக்கு 4% (இங்கிலாந்தை விட 4 பங்கு அதிகமாக) வீதம் அடைத்துக் குறைத்துக் கொண்டால் போதும். அதில் மீதமுள்ள பணத்தைக் கொண்டு கல்வி, சுகாதாரம், மருத்துவம், உணவு முதலிய உடனடி இன்றியமையாத செலவுகளைக் கவனிக்க வேண்டும்.

32. ஆரம்பக் கல்வியை இலவசமாக்க வேண்டும்.

33. வட்டார மொழிகளில் வரும் செய்தித் தாள்களுக்கு மானியம் கொடுக்க வேண்டும். அரசாங்கமே வட்டார மொழிகளில் செய்தித் தாள்களை வெளியிட வேண்டும்.

34. பஞ்ச உதவி நிதியிலிருந்து கடன் குறைப்புக்கு ஒதுக்கப் பட்டிருக்கும் தொகையை (75 இலட்சத்தை) விவசாய நலனுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு மாற்ற வேண்டும்.

35. புது டெல்லியைக் கட்டி முடிப்பதற்கேற்படும் செலவு அனைத்தும் கடன் பணத்திலிருந்தே கொடுக்கப்பட வேண்டும். அடுத்த ஆண்டு வரவு செலவு உபரி யிலிருந்து செலவு செய்யக் கூடாது.

36. இந்தியப் பொருளாதார நிலையை ஆராய்ந்தறிய இராயல் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்.

37. மாநில, மாவட்ட, நகர, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். அவைகள் விவசாயிகள் முதற்கொண்ட அங்கத்தினர்களுக்குத் தகுதியின் பேரில் நியாயத்தின் அடிப்படையில் கடன் வழங்க வேண்டும். சேமிப்பு வங்கி, சேவிங்ஸ் பேங்க் போன்ற சேமிப்புப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். விவசாயிகளும் மற்றேனையோரும் தங்களது சிறு சேமிப்பைச் சேர்த்து வைக்க மிகவும் வசதியாக இருக்கும்.

38. வரவு செலவில் உபரி வரும்போது அதில் ஒரு பகுதியை நிலங்களுக்கு நல சேமிப்பு நிதிக்காகப் பகிர்ந் தளிக்கப்பட வேண்டும்.

39. ஆப்பிரிக்காவிலுள்ள நெட்டாலத்திற்கு இந்தியர்களை அனுப்புவது அவர்களை அடிமைகளாக்குவதற்குச் சமம், அங்கு இந்தியர்கள் படும் தொல்லைகள் மிக அதிகம்.

ஆகையால், அதற்கு ஆள் எடுக்கும் வேலை நிறுத்தப்பட வேண்டும்.

40. தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் படும் துயரை விசாரித்தறிய வேண்டும்.

41. வளர்ந்து வரும் பொதுச் செலவினங்களைப்பற்றி ஆராய்ந்தறிய அரசினர் சார்பிலும் பொது மக்கள் சார்பிலும் அங்கத்தினர்களைக் கொண்ட கூட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

42. செலவினங்களைக் குறைக்க வேண்டுமானால்:

(1) செலவு செய்யும் மனப்பான்மை மாறி சிக்கன மனப்பான்மை வளர வேண்டும்.

(2) இராணுவத்திற்குச் செலவிடப்படும் அதிகப் படியான தொகை குறைக்கப்பட வேண்டும்.

(3) பொதுத் துறைகளில் உள்ள பலதரப்பட்ட உத்தியோகங்களில் தகுதி வாய்ந்த இந்தியர்கள் அமர்த்தப்பட வேண்டும்.

(4) இந்திய அரசுக்குக் கட்டுப்படாத சுதந்தரமான தணிக்கையாளர் ஒருவர் இந்தியா மந்திரி அவர்களால் நியமிக்கப்பட வேண்டும்.

43. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் 9 வயது முதல் 12 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகட்கும் இலவசமாகக் கல்வி போதிப்பதற்காக ஆரம்பப் பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் நாள்தோறும் மூன்று மணிக்குக் குறையாமல் அப் பள்ளிகளில் பயில வேண்டும்.

44. பருத்தி நூற்புத் தொழில்களில் தொடர்ந்து மந்த நிலை ஏற்பட்டு வருவதால் இந்தியாவில் உற்பத்திச் செய்யப் பட்ட சாதாரண பருத்தித் துணி வகைகளுக்குச் சுங்க வரி நீக்கப்பட வேண்டும். பாதுகாப்பு (protection) அற்ற தாராளமான (free trade) வாணிப வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். 30ஆம் எண்ணுக்கு மேற் பட்ட உயர்ந்த இரகத் துணிகளுக்கு ஏற்றுமதி இறக்குமதிச் சுங்க வரிகள் விதிக்கலாம்.

45. தொடர்ந்து மந்த நிலையடைந்து வரும் சர்க்கரை உற் பத்தித் தொழிலை ஊக்கப்படுத்தி வளர்க்கும் முறையை விசாரித்தறிய தகுதி வாய்ந்த அங்கத்தினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

46. ஏழை மக்களிடம் தாங்க முடியாத வரி விதித்து வசூலிக்கும் போது வசதி படைத்தோர் செலுத்தும் வருமான வரியில் உச்சகட்ட சலுகை ரூபாய் 1000லிருந்து 1500க்கு உயர்த்துவது சரியல்ல.

47. இந்தியாவிலோ வேறெந்த ஆங்கிலேய குடியேற்ற நாடுகளிலோ (British colonies) இந்தியர்களை அடிமைகளைப் போல் ஒப்பந்தக் கூலிகளாகச் (Indentured labour) சேர்த்து அனுப்பும் முறை நிறுத்தப்பட வேண்டும்.

48. உள்ளாட்சித் துறைகளுக்கு (Local Bodies) அளிக்கப் பட்டுள்ள பொறுப்புகளைத் திறம்பட செயல்படுத்த அவைகளுக்குப் போதுமான வசதிகள் உண்டா என் பதையும் தேவைப்படின் நிதி வசதியை எப்படி உயர்த் துவது என்பதைப்பற்றியும் விசாரித்தறிய அரசாங்க சார்பிலும் பொது மக்கள் சார்பிலும் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

49. தங்க நாணயங்களை ஓரளவுக்கு இந்தியாவிலேயே தயாரிக்க வேண்டும். அதேபோல் போதுமான அளவு தங்க சேமிப்பும் இந்தியாவில் வைக்கப்பட வேண்டும்.

50. பஞ்ச காலங்களில் நிலத்தீர்வை நீக்கப்பட வேண்டும். அல்லது தள்ளி வைக்கப்பட வேண்டும். குறுகிய காலக் கடன்களும், நீண்ட காலக் கடன்களும் கொடுக்கப்பட வேண்டும். பண முதலாளிகளிடம் விவாசாயிகள் அதிக வட்டிக்குக் கடன்பட்டு அடிமைப்பட்டுக் கிடத்தலைத் தடுக்க வேண்டும்.

51. Hemp drugs (ganja, bhang and charas) கஞ்சா முதலியவை பயிரிடப்படுவதற்கும் விற்கப்படுவதற்கும் அதிக வரி விதிக்கும் யோசனையை விட்டுவிட வேண்டும். அதிகமாக வரி விதித்தால் அருந்தும் பழக்கம் ஏறுமே தவிர இறங்கிவிடாது. அதற்குப் பதிலாகப் போதைப் பொருள்கள் கிடைப்பதை அரிதாக்கினுல் (scarce) அப் பழக்கம் குறையும்.

52. விவசாயிகளின் கடன் அதிகரித்துக் கொண்டு போவதற்குப் பிரிட்டிஷ் அரசு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

53. குறுகிய காலத்திற்கு நிலங்களை விவசாயிகளிடம் விடுவதை நிறுத்தி, கூடுமானவரை நிரந்தரமாகவே விட முயற்சி செய்யப்பட வேண்டும்.

4. தாதாபாய் நௌரோஜி

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த பொருளாதாரத் துறை நிபுணர்களுள் தாதாபாய் நௌரோஜி முதன்மை யானவர் ஆவார். பிரிட்டனின் நன்மைக்காக இந்தியாவின் அறிவும் ஆற்றலும் பொருளும் எப்படிச் சுரண்டப்பட்டன என் பதை இவர் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிருர்.

ஓங்கி வளர்ந்திருந்த இந்தியத் தொழில் துறையை ஒடுக்கி இங்கிலாந்தின் ஆலை முதலிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா ஆக்கப்பட்டது. பருத்தி, பட்டு ஆடைகளுக்குச் சுங்க வரி இல்லாமலேயே இங்கிலாந்திலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்து இந்திய நெசவுத் தொழில் நசுக்கப்பட்டது. தாங்கொணு வரிச் சுமை இந்தியப் பொருள்களின் உற்பத்தியை மிகவும் பாதித்தது. இங்கிலாந்திலுள்ள இந்தியா அலுவலகத்தின் செல வினங்கள் (home charges) அயல் நாட்டிற்கே பலனளித்தன. தனி நபர் ஆண்டு வருமானம் இங்கிலாந்தில் ரூபாய் 420-ம், அமெரிக்காவில் ரூபாய் 375மாக இருக்கும்போது இந்தியாவில் ரூபாய் 30க்குக் குறைவாக இருப்பதைத் தக்க புள்ளி விவரங்க ளோடு சுட்டிக் காட்டிஞர். கணிதப் பேராசிரியரான நௌரோஜி இந்தியாவிலுள்ள ஆங்கில அரசின் நிருவாகத் திறமை யில்லாமையே இந்தியாவின் ஏழ்மைக்கும் துன்பங்களுக்கும் காரணமென்ருர். இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களை இந்தியர்களே பயன்படுத்திக் கொள்ளச் செய்வதும் இந்தி யாவின் பொதுக் கடன்களின் வட்டியைக் குறைப்பதும் பிரிட்டிஷ் நிருவாகம் இந்தியாவில் நடைபெற வேண்டிய அள விற்குமட்டும் நிருவாகச் செலவைக் குறித்துக் கொள்ளச் செய் வதும்தான் இந்தியரின் ஏழ்மையைப் போக்கும் வழி என்ருர். இந்தியாவில் தொழில், விவசாயம், கூலிவேலை முதலியவை

செய்வோருடைய நல்வாழ்வு, சுகாதாரம், உணவு, உடை, உறையுள் முதலியத் தேவைகளைப் பெற புள்ளி விவரப்படி குறைந்த அளவிற்குத் தேவையான ரூபாய் 34கூட இந்தியர் கட்குக் கிடைப்பதில்லை. ரூபாய் 20 வருமானமுள்ளவன் சாதாரண வாழ்வு நடத்த இந்தியாவின் மூலப் பொருளாதாரம் (capital wealth) உதவுவதால் நாளடைவில் நாடு பஞ்சத்தையும் அழிவையும் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்தியாவின் பொருள்கள் இந்தியருக்குப் பயன்படுவது தடுக்கப்படுவதைப் போலவே இந்தியரின் அறிவும் ஆற்றலும் தேர்ச்சியும் இந்திய நாட்டுக்குப் பயன்படாமல் தடுக்கப்படு கின்றன. இந்திய நிருவாகத்தில் நேர்முகமாகவும் மறைமுக மாகவும் பல துறைகளிலும் உயர்ந்த பதவிகளில் ஆங்கிலேயர் களே அமர்த்தப்படுகிறார்கள். இந்தியாவில் இருக்கும்போது அவர்கள் இந்தியாவின் பொருள், அறிவு, தேர்ச்சி முதலியவை களை நிரம்பப் பெற்றுத் தாய்நாடு செல்லும்போது அவைகளைக் கடத்திச் செல்லுகின்றார்கள். மற்ற அயல் நாடுகளில் அறிவும் தேர்ச்சியும் பெற்ற பெரியோர்கள் தங்களுக்குப்பின் நல்ல தகுதி பெற்ற சந்ததிகளைத் தயாரிப்பதுபோல் இந்தியாவுக்குள்ள வாய்ப்பை ஆங்கிலேயர் நிரம்பிய நிருவாகம் பறித்துச் சென்று விடுகிறது.

இங்கிலாந்து நாட்டு மொத்த வருமானத்தில் எட்டரை விழுக்காடே வரி விதிக்கப்படுகிறது. இந்தியாவிலோ 22 விழுக் காடு வரி விதிக்கப்படுகிறது. முன்னேற்றமடைந்த செல்வம் கொழிக்கும் நாடாகிய இங்கிலாந்தில் வசூலிப்பதுபோல் பின் தங்கிய ஏழ்மையிலாழ்ந்துள்ள இந்தியாவில் இரண்டரை மடங்கு அதிக வரி விதிக்கப்படுவது மிகவும் கொடுமையிக்கதாகும். நிற்க, இங்கிலாந்தில் வசூலிக்கப்படும் வரி அந் நாட்டிலேயே சுழன்று அந்த நாட்டிற்கே பயன்படுகிறது. இந்தியாவில் விதிக்கப்படும் கொடுமையான வரியின் மிகப் பெரும் பகுதி நாட்டைவிட்டே அகன்று இந்தியர்களுக்கு எவ்விதத்திலும் பயனளிக்காமல் இந்தியரல்லாதவர்களாகிய ஆங்கிலேயர்களுக்கே பயன்படு கிறது.

ஆங்கிலேயருடைய கொடுமையான இந்திய நிருவாகம் இந்தியர்கட்குக் கெடுதிகள் பல விளைவித்தது. இது இங்கிலாந் தின் தற்கொலைக்கொப்பானதாகும், உயர் பதவியிலுள்ள ஆங்கிலேயர்கள் கடத்தும் பொருள்களோடு ஏற்றுமதி, இறக்கு மதிச் சுங்க வரிகளும் ஆயுள் காப்பு நிதி (Insurance) வரிகளும்

கடத்தப்படுவதைச் சேர்த்துக் கணக்கிட்டால் நம் நாட்டிற்கு ஏற்படும் மிகப் பெரிய இழப்பானது புலப்படும். ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்குள்ளும் அதன் எல்லைகளிலும் நடத்திய போர்களில் இந்திய மக்கள் இரத்தத்தைச் சிந்தியதுடன் பணத்தையும் பறி கொடுத்திருக்கிருர்கள். ஆங்கிலேயர்கள்சிறிதும் இதில் பங்கேற்க வில்லை. அவர்கள் எதையும் கொடுக்கவுமில்லை. இந்தியர்களின் இசைவில்லாமலே இங்கிலாந்து பேரரசுக்காக ஆங்கிலேயர்கள் நடத்திய போர்ச் செலவினங்கள் அனைத்தையும் இந்தியாவே செலுத்தி வருகிறது. இது மிகவும் கொடுமையானது; கண்டிக் கத்தக்கது. இந்தியர்கள் நிருவாகத்தில் உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்பட்டாக வேண்டும். ஆங்கிலேய முதலீடு வேண்டு மாயின் இந்தியாவுக்குள் அனுமதிக்கப்படலாம். ஆனுல், இந்தி யாவுக்குள் ஆங்கிலேய முதலாளிகளை அனுமதிக்கக் கூடாது.

5. D. E. வாச்சா

D. E. வாச்சா (1844—1937) இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றிப் பல நல்ல கருத்துகளைத் தந்திருக்கிறார். பல துறைகளில் தேர்ச்சி பெற்ற அவர் காங்கிரசு தலைவராகவும் பணியாற்றி யிருக்கிறார்.

மழையின்மையே பஞ்சத்திற்குக் காரணமென்பதையும் அதைத் தவிர்க்க வேறு வழியில்லை என்பதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மக்களுடைய தாழ்ந்த பொது நிலவரமும், அவர்களது குறைந்த வாங்கும் சக்தியுமே பஞ்சத்திற்குக் காரண மென்பது அவரது கொள்கை. நாட்டில் விளைபொருள்களும் தானியங்களும் இந்தியாவின் பல பகுதிகளில் உற்பத்தியாகிக் கொண்டுதானிருக்கின்றன. ஆனால், ஏழைகளுக்கு வாங்கும் சக்திதான் குறைந்துவிடுகின்றது. அதனுடன்,

1. மழையின்மையால் குறைந்த விளைச்சல்.
2. காலப்போக்கில் ஏறிக்கொண்டே போகும் வரிச் சுமை.
3. கடன் தருவோர் வாங்கும் நீதியற்ற வட்டி.
4. நிலம் தரும் குறைந்த வருவாய்.
5. ஓய்வு நேரத்தில் வேறு வேலைகள் செய்ய வாய்ப்பின்மை.

முதலியவைகளும் பஞ்சத்திற்குக் காரணங்களென்பது அவரது கொள்கை. அதற்கு அவர் தரும் மாற்று வழிகள் :

1. நில வரியை மாற்றியமைத்தல்.
2. கிணறு, ஏரி, கால்வாய், நீர்த்தேக்கம் போன்ற பல சிறிய, பெரிய நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்தல்.
3. முதலீடு செய்வதையும் கடன் கொடுப்பதையும் ஊக்குவித்தல்.

4. கிராமப்புற மக்களுக்கு ஏற்ற வகையில் ஆரம்பக் கல்வி புகட்டல் முதலியனவாகும்.

மற்றும் அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வதை நிறுத்த வேண்டுமென்றும் வளமான காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் தானியங்களைச் சேமித்து வைப்பதற்கு வேண்டிய வசதியைச் செய்து தர வேண்டும் என்றும் அவர் கருதினர்.

மறைந்த அல்லது மறைந்துவரும் தொழில்களைப் புதுப்பித்தல்பற்றியும் புது தொழில்கள் ஆரம்பித்தல் பற்றியும் குறிப்பிடுகையில் வாச்சா அவர்கள் இந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் ஆராயப்பட வேண்டுமென்றும் சாதாரணத் தொழில்களை வளர்க்கப் பொது மக்களனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்றும் நுண்ணிய உயர்ந்த இரகத் தொழில்களை வளர்க்க உயர்தரக் கல்வியைக் கல்லூரிகள் மூலம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கருதினர். பொருளாதாரத்தில் பின்தங்கிய இந்தியா இரயில்வே வளர்ச்சியில் அதிகத் தீவிரம் காட்டாமல் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், தொழில் வளர்ச்சி முதலியவைகளில் வேகமாக முன்னேற்றம் காண வேண்டும் என்றும் கருதினர்.

பொருளாதாரம், வாணிபம், புள்ளியியல் கணிதம் போன்ற துறைகளில் பல நிலைகளில் நாம் கல்வி அறிவு பெற வேண்டுமென்று கூறிய அவர் விவசாய வங்கிகள் அமைப்பதுபற்றியும் அவை விவசாயிகளுக்கு ஆற்ற வேண்டிய பணிகள், உதவிகள் குறித்தும் அழுத்தம் திருத்தமாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்.

6. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி
(1869—1948)

மகாத்மா காந்தியடிகள் என்று யாவராலும் போற்றிப் புகழப் படும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தியாகங்கள் பல செய்து இந்தியாவுக்குச் சுதந்தரம் வாங்கித் தந்தவராவார். இவர் இங்கிலாந்தில் பாரிஸ்டராகப் (வழக்கறிஞராகப்) பட்டம் பெற்ருர். இவர் ஒரு வழக்கின் பொருட்டுத் தென் ஆப்பிரிக்கா சென்றிருந்தபோதுதான் இவர் தம்முடைய அகிம்சாப் (துன் புறுத்தாப்) போர் முறை என்னும் சத்தியாக்கிரகத்தை உருவாக் கினுர். 1915-ல் இந்தியா திரும்பிய இவர் இந்திய தேசிய காங் கிரசில் சேர்ந்து நாட்டு நற்பணிகளில் தீவிர பங்கேற்ருர். 1947-ல் இந்தியா முழுமையான சுதந்தர நாடாக விளங்க அரும்பாடு பட்டவர்களுள் இவர் முதன்மையானவராய் விளங்கினுர். ஆனுல், 1948-ல் இவர் வழக்கப்படி கடவுள் வழிபாட்டுக்குச் செல்லும்போது இந்து மத தீவிரவாதி ஒருவனுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் தனிப்பட்ட முறையில் பொருளாதாரத் துறை வல்லுந ரல்லர். மகாத்மா காந்தியடிகளின் பொருளாதாரக் கொள் கைகள் அவர் கண்ட வாழ்க்கைத் தத்துவங்களுக்கு ஏற்றன வாகவும், தொடர்புடையனவாகவும் விளங்கின. மகாதேவ தேசாய், R. K. பிரபு, J. C. குமரப்பா, V. B. கேர், P. K. கோபால் கிருஷ்ணன் முதலியவர்கள் எழுதிய நூல்கள் காந்தியடிகளின் பொருளாதாரக் கொள்கைகளை விளக்குகின்றன. மகாத்மா காந்தியின் பொருளாதாரக் கொள்கைகள் உண்மை, துன்புறுத் தாமை (அகிம்சை) என்னும் இரண்டையும் மையமாகக்கொண்டு சுழல்கின்றன. இந்த இரண்டு சாணக் கற்களில் தேர்ச்சிபெருத பொருளாதாரத் தத்துவங்களைக் காந்தியடிகள் ஏற்க மறுத்தார். பொய்மையும், வன்முறையும் கொண்ட பொருளாதார முன்

னேற்றம் காந்தீயத்துக்கு உகந்ததன்று. அவர் கண்ட முறை களின்படி பொருளாதாரத் தத்துவங்களைச் சுருக்கமாக ஆராய் வோம்.

காந்தியடிகள் இயற்கைப் பொருளாதார அடிப்படை பொருள்களை, பெருகி நிற்கும் (current economy) பெருக்கத் துரு பொருள்கள் எனவும் குறைந்து நிற்கும்.(resevoir economy) சுருக்கத்துரு பொருள்கள் எனவும் இருவகைகளாகப் பிரிக்கிறார். பெருக்கத்துரு பொருள்களில் கவனம் செலுத்துதல்தான் நல்லது என்பது இவர் கருத்து. சுருக்கத்துரு பொருள்களை நாடினால் போட்டியும், பொறாமையும் ஏற்பட்டு வன்முறையும், பகையும் தலைதூக்கும். உதாரணமாக இராட்டையில் நூல் நூற்றலும், மண் குடிசை கட்டி வாழ்தலும் பெருக்கத்துரு பொருள் இலக் கணத்தில் வருவன. நூற்பாலைகளும், சிமெண்ட்டுகளாலான மாட மாளிகைகளும் சுருக்கத்துரு பொருள் இலக்கணத்தில் வருவன. முன் கூறியவற்றால் போட்டியோ சண்டையோ வன் முறையோ தோன்றுவதில்லை. ஆனால், பின்னர் கூறியவற்றால் போட்டியும், சண்டையும், பிணக்குகளும். வன்முறையும் தோன் றுவது இயற்கை. குறைவாயுள்ள பொருள்களே மக்களைக் கவர்ந்து ஈர்க்கின்றன. அதனால் வெறுப்பும், வன்முறையும் தோன்றுகின்றன.

உற்பத்தித் துறையைப்பற்றிக் காந்தியடிகளின் கருத்துக் கவனிக்கற்பாலது. உற்பத்தியில் இரு வகை உண்டு. ஒன்று அடிப்படைத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்தல்; மற்றொன்று ஆடம்பர வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்தல். இவைகளில் முன்னர் கூறிய அடிப்படை உற்பத்தித் தொழில் பெருகினால் சமுதாயத்தில் சமாதானமும், நட்பும், இன்பமும் பெருகும். ஆனால், பின்னர் கூறிய ஆடம்பர வாழ்வுப் பொருள் உற்பத்திப் பெருக்கத்தினால் சமுதாயத்தில் சண்டையும், பகையும், இன்னலும், இழப்பும் பெருகும். உள் நாட்டில் பயன்படுத்துவதற்காகத் தரமான பொருள்களை நல்ல பண்பாட்டின் அடிப்படையில் உற்பத்தி செய்வதற்கும், வெளி நாட்டுச் செலாவணி பெறுவதற்காகக் கண்ணியமற்ற முறை களில் மிக மோசமான பொருள்களைக்கொண்டு குறைந்த செல வில் உற்பத்திசெய்து நிரம்ப இலாபம் பெற நினைப்பதற்கும் உள்ள வேறுபாட்டை மகாத்மா அவர்கள் சுட்டிக் காட்டுகிறார். அந்நிய செலாவணிக்காக நம்மிடம் மலிந்து கிடக்கும் பொருள் களைக் கொடுப்பது நல்லது. அரிதில் கிடைக்கும் பொருள் களையோ குறைந்துள்ள பொருள்களையோ கொடுத்தால் அமைதி

கெட்டுச் சண்டை சச்சரவுகள் ஏற்படும். அந்நிய செலாவணிக்குப் பணம் பெறுவதைவிட பண்டமாற்று முறை சிறந்தது என்பதும் அதனால் அமைதியும், ஒற்றுமையும் பெருகுமென்பதும் காந்தியடிகளின் கருத்தாகும்.

விவசாயமும் கிராம மறுமலர்ச்சியும் உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றிலும் தன்னிறைவு பெற்றாலொழிய எந்த நாடும் சுதந்தரமாகத் தனித்தியங்க முடியாது. உணவு தரும் பூமியின் வளத்தைச் செழுமையாக வைத்திருக்க வேண்டும். பயிருக்குப் பயிர் இடையில் சில காலம் நிலத்திற்கு ஓய்வளிக்க வேண்டும். பல நூற்றாண்டுகளாக நிலவளம் சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. செயற்கை எருவிட்டு நிலத்தைத் தூண்டி அதிக விளைச்சலைப் பெற்றால் நிலம் விரைவில் சக்தி இழந்து பாலை நிலமாகிவிடும். கிணறுகள் வெட்டி நீர்ப்பாசனம் செய்வதே சிறந்த முறை. வசதியுள்ள பணக்காரர்கள் மின்சார சக்தியால் இயக்கப்படும் இயந்திரங்களின் துணைகொண்டு குழாய்கள் மூலம் நீர் பாய்ச்சினால் வசதியற்ற ஏழை விவசாயிகளின் கிணறுகளிலுள்ள நீர் வற்றிவிடும்.

மக்களுக்கு நிலத்தின் மேலுள்ள உரிமை அகற்றப்பட வேண்டும். சூரிய வெளிச்சம், நீர், காற்று ஆகியவைகளைப் போன்றே நிலமும் பொது சொத்தாக வேண்டும். பண்டைக் காலத்தைப் போல் கிராமப் பொதுச் சொத்தாகிய நிலத்தைப் பருவத்திற்கேற்ப, அளவோடு பயிர் செய்ய, குடிமக்களின் சக்திக்கேற்ப பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பயிரிடும் குடிமகன் விளைச்சலில் தனக்குப் போதுமான அளவு எடுத்துக் கொண்ட பிறகு நின்ற மீதியே மற்றவர்கட்கு அவரவர் தேவையறிந்து பகிர்ந்தளிக்க வேண்டும். தொழிற்சாலைகள் அதிக விலை நிருணத்தையும் இலாபத்தையும் கருத்திற்கொண்டு செயலாற்றக் கூடாது. இவைகளைத் தாயன்பு கொண்டு அணுக வேண்டும். சுய நலத்திற்காக மற்றவர்களை ஏமாற்றவோ சுரண்டவோ கூடாது. நிலம் எவ்வளவு பலன் தரும்? தொழில் எவ்வளவு இலாபம் தரும்? என்னும் மதிப்பீட்டின் பேரில் வரி விதிக்கக் கூடாது. உண்மையான நிகர வருமானம் என்னவென்று கண்டறிந்து வரி விதிக்க வேண்டும். அந்த வரியையும் பணமாகக் கொடுக்க இயலாவிடில் பொருளாகக்கூட பெற்றுக் கொள்ளவேண்டும்.

கிராமத் தொழில், குடிசைத் தொழில்.

கிராம மக்கள் உபயோகத்திற்காக அந்தக் கிராமத்திலேயே சில பொருள்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. அத்தகைய தொழில் கிராமத் தொழில் (village industries) என்றும்

அதன் செய்முறை குடிசைத் தொழில் (cottage industries) என்றும் சொல்லப்படுகிறது. உதாரணமாக மண் பாண்டத் தொழில் (pottary). உள்ளூர்களில் பயன்படுத்தக்கூடிய மண் பாண்டங்களைச் செய்து அக் கிராம மக்களுக்கு அளிக்கிறது. அப் பாண்டங்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிச் செய்யப்படுவதில்லை. உள்ளூர் தொழில்கள் மூலம் தொழிலாளி தனது அறிவாற்றலை (self expression) உபயோகித்து நல்ல அழகுள்ள பொருள்களைச் செய்கிறான். அதனால், அவன் நாளுக்கு நாள் நன்மதிப்பு பெற்று உயர்கிறான். கதர்த் துணி உற்பத்தியிலும் அவ்வாறே. இத்தொழில் உண்மை, துன்புறுத்தாமை (அகிம்சை), முன்னேற்றம் முதலியவைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால், நூற்பாலைகள் மூலம் உற்பத்தியாகும் துணிகள் விலை குறைவாகத் (விலை மலிவாகத்) தோன்றலாம். அதற்குரிய ஆராய்ச்சி இரயில்வே போன்றவைகளுக்காகும் செலவை இந்தியப் பொது மக்களிடமிருந்து வரி மூலம் வசூலித்து மேன்செஸ்டர் நூற்பாலை போன்ற ஆலைகள் விலை மலிவாகத் துணிகளை இங்கு விற்கின்றன. இதனால் இந்தியாவுக்குப் பல விதங்களில் இழப்பாகும். ஆனால், கதர் உற்பத்தியினால் மனிதப் பண்பாடும், கற்பனை சக்தியும், ஆற்றலும் உயரும். நாம் அரை நிருவாணமாக இருந்தால்கூட மில் துணியை வாங்கக் கூடாது என்பது காந்தியடிகளின் கருத்து. மில் துணிகளில் வஞ்சனை, பொய்மை, வன்முறை போன்ற பல பண்பாடற்ற குணங்கள் மறைந்து கிடக்கின்றன. நூற்பாலைகள் மூலம் பொருளாதார முன்னேற்றம் காண்பது நாம் திருடர்களுக்கு உடந்தையாக இருப்பதற்கு ஒப்பாகும்.

சிறு தொழில்கள் மூலம் நாடு முன்னேறுவது நல்லது. அதனால், மக்கள் பண்பாடும், நடைமுறையும், அறிவாற்றலும் உயரும். ஆனால். நூற்பாலை, எஃகு தொழிற்சாலை போன்ற பெரிய தொழில்களும் (large scale industries) தேவைதான். அவைகள் வாய்மை, கழிவிரக்கம், உழைப்பு, தோழமை போன்ற நல்ல கொள்கைகளின் அடிப்படையில் அமைய வேண்டும். அவற்றினிடத்தில் எப்போதும் கண்காணிப்போடிருக்க வேண்டும். பெருந்தொழில்கள் (large scale industries) நாட்டுடைமை (nationalisation) ஆக்கப்பட வேண்டும். அவை இலாபம் பெருவதற்காக இயங்கக் கூடாது; பொது மக்கள் சேவை ஒன்றே கொள்கையாகக் கொண்டு இயங்க வேண்டும். பணக்காரர் மேலும் பணக்காரராவதையும், ஏழைகள் மேலும் ஏழைகளாவதையும் தடுக்க வேண்டும்.

பெருந்தொழில்கள் குறிப்பிட்ட சிலருடைய நன்மைக்காக மட்டும் இயங்கி, மக்களுக்குத் தேவையற்ற பொருள்களை உற்பத்தி செய்து நாட்டை நிரப்பக்கூடாது. ஆலைகளும் இயந்திரங்களும் கருவிகளும் பெருகி நாட்டின் கைத்தொழிலையும் குடிசைத் தொழிலையும் சிறு தொழிலையும் சிதைத்து நாட்டை ஏழ்மையிலாழ்த்தியுள்ளன. தன்மானத்துடன் தொழில் நடத்தியவர்கள் ஆலைகளில் கூலிகளாய் உழைத்து அடிமை வாழ்க்கையை வாழ்கின்றனர்கள். நம்மையும் மீறி இந்தியா இயந்திரமயமானால் நாம் கண்காணிப்போடு இருக்க வேண்டும். மனித உழைப்பையும் வாழ்வையும் இயந்திரங்களுக்குப் பலி கொடுத்துவிட்டு வேலையின்றி வாடக் கூடாது. பலபேருடைய உழைப்பை மூலதனமாகக் கொண்டு இயங்கும் ஆலைகள் அவர்களை வறுமையிலாழ்த்திவிட்டுச் சிலரை மட்டும் பெரும் பணக்காரர்களாக்குவதை நாம் அறிவோம். இந்தியர் அனைவரும் வேலை வாய்ப்பையும், வாழ்க்கை வசதியையும் பெற்றாக வேண்டும் என்பதே காந்தியடிகளின் குறிக்கோள். சிலர் மட்டும் வேலை பெற்று வசதியோடு வாழ்தல் போதாது.

எந்த நாடும் பெருந்தொழிற்சாலைகளைக் கொண்டு இயந்திரமயமாவதைக் காந்தியடிகள் விரும்பியதில்லை. முக்கியமாகச் சுதந்தர இந்தியா சாதாரணமான ஆனால் பெருமைக்குரிய குடிசைத்தொழில்களைத் திறம்படச் செய்து உலகத்தூடே அமைதியுடன் வாழ வேண்டும். உயர்ந்த நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் சிக்கலான இயந்திர வாழ்க்கைப் பொருந்தாது. பண்பாட்டோடு கூடிய கண்ணியமான வாழ்க்கை இலக்கணத்தைப் புரிந்து கொண்டால்தான் பல வழிகளிலும் நாம் இன்பமாக வாழ முடியும்.

தந்தி, தொலை பேசி, இருப்புப் பாதை முதலியவை மிகவும் இன்றியமையாதவைகளா என்பது காந்தியடிகளின் கேள்வி. நமது நாட்டை மூலப் பொருள் உற்பத்தி செய்யும் நாடாக மாற்ற வேண்டுமானால் இருப்புப் பாதை போன்ற புதுமையான முறைகள் பயன்படலாம்; அவ்வகைச் சாதனங்களை வேண்டுமானால் நாம் வைத்துக் கொள்ளலாம். ஆனால்,அவை மக்களுக்கு எந்த வகையிலும் இடையூறு இல்லாமல் இயங்கப் பாதுகாப்பளிக்க வேண்டும்.

இயந்திர வளர்ச்சியும், பெருந்தொழில் வளர்ச்சியும் நாடு முன்னேற சுலபமான வழிமுறை என்னும் கொள்கை தவறானது. வன்முறைகளைப் பயன்படுத்தும் நாடுகளில் முப்படைகளின்

தேவைகளைச் சந்திக்க பலவித பொருந்தொழில்கள் வளர்ச்சியடைய வேண்டியது அவசியம். ஆனால், துன்புறுத்தாமை, தோழமை போன்ற நற்பண்புகளைக் கொண்ட நாடுகளுக்குப் பெரும் ஆலைகளும், தொழிற்சாலைகளும் பொருந்தா. மக்கள் தொகை வளர்ந்து வரும் நம் நாட்டில் அனைவருக்கும் வேலை, உண்டி, உடை, உறைவிடம் வழங்க பெருந் தொழிற்கூடங்கள் தடையாகவே நிற்கும். எளிதில் கிடைக்கும் மலிவுப் பொருள்களையும், பயனற்ற பழைய பொருள்களையும் கொண்டு பேப்பர், சோப்பு போன்றவை செய்யப்படும் குடிசைத் தொழில்கள் வளர வேண்டும். காகிதம் செய்வதற்காகப் பெருந்தொழிற்சாலை (paper mills) அமைத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் மூங்கில் வளர்க்க வேண்டும். அப்படியே மற்ற பொருள்களும் பெருமளவில் சேகரிக்கப்பட்டு இயந்திர உதவியால் குறுகிய காலத்தில் அதிக அளவில் உற்பத்தி செய்தால் விலைவாசிகள் வீழும்; நெருக்கடிகள் பெருகும் அப்படி உற்பத்தி செய்த காகிதத்தை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்று ஒரு சிலரே பயன் பெறுவர்.

அவ்வாறே மின்சாரம் போன்ற சக்திகளையும், டிராக்டர் போன்ற கருவிகளையும், இயந்திரங்களையும் பயன்படுத்த வசதி படைத்த சிலரால் மட்டும்தான் முடியும். வசதியற்ற மற்றேனையோர் வேதனையுற்று வாடுவர். அதனால், வேலையின்மைப் பெருகும்; சண்டை, சச்சரவு, போட்டி, பொறாமை மிகுந்து மக்களின் ஒற்றுமை குலையும்.

எருதுகளைக் கொண்டு உழுவதும், அவற்றின் சாணத்தை உரமாகப் பயன்படுத்துவதும் நல்லது.

அனைவரும் உழைத்து உயர வேண்டும் 'To Labour is to Pray' என்பது பழமொழி. உழைப்பில் இறைவனைக் காணலாம். மனம், வாக்கு, காயம் போன்ற பல வழிகளிலும் ஒருவன் முழு மனிதனாக வளர்வதற்கு உழைப்பும், தொழிலும் இன்றியமையாதவை.

நமது குறிக்கோள் எத்தகைய பொருள்களை எவ்வளவு உற்பத்தி செய்கிறோமென்பதல்ல. ஆனால், மக்கள் வளர்ச்சிக்கு எத்தனை விதங்களில் எவ்வித வசதிகள் செய்து கொடுக்கிறோமென்பதில் இருக்க வேண்டும். பெருமளவில் விளம்பரங்கள் செய்து இயந்திரங்கள் மூலம் குறுகிய காலத்தில் பலவிதப் பொருள்களை அதிக அளவில் உற்பத்தி செய்வது பொருளாதார

முன்னேற்றமாகாது, அப்படி உற்பத்திச் செய்யப்படும் பொருள் களும் பெரும்பாலும் நமக்குப் பயன்படுவனவாய் இருப்பதில்லை. இயந்திர வளர்ச்சி மனிதனையும் இயந்திரமாக்கிவிடக் கூடாது. தனது தேவைகளைப் பெருக்கிக் கொள்வதால் மட்டும் மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்பட மாட்டான். நல்ல பண்புள்ள அமைதியான உயர்தர வாழ்க்கைக்கு இயந்திரங்களும், பெருந் தொழில்களும் உதவி செய்யா.

சோஷலிசம், கம்யூனிசம் போன்ற பல கொள்கைகளும் பொது நன்மைக்காக ஏற்பட்டவைகளே. சமுதாய பொருளா தாரத் தொண்டுகளைப் பொருத்த அளவில் அவைகள் நன்மைப் பயப்பனவாகத் தோன்றலாம். ஆனால், ஆத்மார்த்த அடிப் படையிலும் பண்பாட்டின் அடிப்படையிலும் நமக்கு மாறுபட் டவை. சமுதாய அடிப்படையில்கூட சோஷலிசம், கம்யூனிசம் போன்றவை அவர்களுடைய நாட்டை ஒரே மையமாகக் கொண்டு இயங்குபவை. நாம் ஒவ்வொரு தனி நபரையும் மைய மாகக் கொண்டு இயங்குபவர்கள். மற்றபடி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதே நமது கொள்கை, காந்தீயம் ஒவ் வொரு தனி மனிதன் முன்னேற்றத்திலும் கருத்தைச் செலுத்து கிறது. அதன்படி எத்தனை நாற்காலிகள், மேஜைகள் உள்ளன என்பதல்ல முக்கியம். ஆனால், கம்யூனிசம் இம்மையில் வேண் டிய அத்தனை வசதிகளிலும் கண்ணோட்டம் கொண்டுள்ளது. ஒவ்வொருவனும் நாட்டுக்காக வாழ வேண்டுமென்பது சோஷ லிசம். ஆனால், ஒவ்வொரு தனி மனிதனும் நல்ல பண்பாடு, ஆன்மீகம், பொருளாதாரம் இவைகளின் அடிப்படையில் நல் வாழ்வு வாழ நாடு வகை செய்து கொடுக்க வேண்டும் என்பது காந்தீயம். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் தத்து வத்திற்கேற்ப நமது பண்பாட்டிற்கும் ஆன்மீகத்திற்கும் ஏற்ற சமுதாய சீர்த்திருதங்களைமட்டும் ஏற்றுக் கொண்டு ஒத்துழைக் கிறோம். ஏலாதனவற்றை நாம் ஒதுங்கி நின்று அவற்றிற்கு நமது ஒத்துழைப்பைக் கொடுக்க மறுக்கிறோம்.

காந்தீயம் அனைவரும் நூல் நூற்க வேண்டுமென்பது. ஆனால், அது தனி மனிதர்களின் விருப்பத்தையும், சக்தியையும் பொருத்தது. இதை அனைவரும் வரவேற்பர். சோஷலிசம் பெருந்தொழில்களில் மனிதனும் இயந்திரம் போல் சுழன்று உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது. இதனால் வெறுப்பு, பேராசை, பொறாமை முதலியவை பெருகி சண்டை, சச்சரவுகள் நேரிடும். காந்தீயப் பொருளாதாரப்படி மனித வாழ்க்கை

இம்மையில் சுக வாழ்வு வாழ்வதற்காக மட்டுமன்றி ஒவ்வொரு வரும் மனம் வாக்கு காயங்களால் முன்னேறிய தமது முழுத் தன்மையால் நல்லொழுக்கம் பண்பாடு பொருந்திய சமுதா யத்தை உருவாக்குவதாகவும் அமைய வேண்டும். காந்தீயம் மனிதனை மனிதன் சுரண்டுவதையும் ஒரு சிலர் மட்டும் ஏகபோக வசதி படைத்திருப்பதையும் எதிர்க்கிறது.

உடல் மகிழ்ச்சியுற வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்டோர் தற்கால நாகரிக உலகில் பலராய் உள்ளனர். இவர்கட்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் செய்ய இயந் திரங்களும் உள்ளன. ஆனால், தன் விருப்பப்படி முடிந்த அளவு வேலை செய்துவிட்டு வீடு திரும்புகிறவனுக்கும், பெரும் பணக் காரர்களுக்காக மிகவும் ஆபத்தான தொழில்களில் உயிரையும் பணயம் வைத்து உழைக்கிறவனுக்கும் உள்ள வேற்றுமையை நாம் உணர வேண்டும்.

பிணிகள் பல புதிது புதிதாக உருவெடுத்து வரும் இக்காலங் களில் மருத்துவர்களும் அதற்கேற்ப எண்ணிக்கையில் பெருகு கின்றனர்கள். இன்றைய பண்பாடு ஆன்மீகத்தையும் சமயத்தை யும் பண்பாட்டையும் புறக்கணிக்கிறது. இப் பண்பாட்டைப் போற்றிப் புகழ்வோர் சமயத்தைப்பற்றிக் கவலைப்படாமல் அதனை மூடப் புராதனப் பழக்கமென்று தூற்றுகின்றனர். இவர்கள் உடல் சுகத்தையே விரும்பி அதிலும் வெற்றியின்றி வீழ்கின்றனர்.

இந்தியப் பண்பாடு உலகத்திலேயே மிகச் சிறந்ததென்றும், கடமைக்கு வழி காட்டியே பண்பாடென்றும் காந்தியடிகள் கருதுகிறார். நற்பண்புகளுடன் வாழ்வோரால் விருப்பு வெறுப்பு களையும், மனத்தையும் அடக்கிக் கட்டுப்படுத்த முடியும். பண் பட்ட நல்ல மனம் எது தேவையோ அதைதான் நாடும். பண் பாடற்ற அலைந்து திரியும் மனம் வேண்டியது கிடைக்க கிடைக்க மன நிறைவின்றி மேற்கொண்டும் ஆசைபபட்டு அல்லற்படும்.

பெரும் பொருள் படைத்தவனை மகிழ்ச்சியின்றி வாழவைப் பதும், பொருளற்ற ஏழையை மகிழ்ச்சியாக வாழ வைப்பதும் மனம்தான். ஏழைக்கும் பணக்காரனுக்கும் நல்ல மனசாட்சி இருக்கிறது. காந்தீய சமுதாயம் ஏற்றத்தாழ்வற்றது. அதில் பணக் காரன் தனது திரண்ட செல்வத்தைப் பொது சொத்தாகக் கருதி அதற்குப் பாதுகாவலனாக இருக்க வேண்டும். தனக்கு வேண்

டியதை மிகக் குறைந்த அளவில் பயன்படுத்திக்கொண்டு மீதியை சமுதாயத்தின் மற்ற அங்கத்தினர்கட்குப் பயன்படும் படிச் செய்ய வேண்டும்.

காந்தீய சமுதாயத்தில் ஆட்சியமைப்பு தன்னிறைவு கொண்டு தனித்தியங்கக் கூடியது. மத்தியத் தலையீடு மிகக் குறைந்தே நிற்கும். ஆட்சியமைப்புகள் மக்கள் கூட்டுறவுடனும் ஒத்துழைப்புடனும் உணவு, உடை, உறைவிடம் மற்றும் இன்றியமையாத வசதிகளையும் கவனித்துக்கொள்ளும். 20, 30 கிராமங்களைக்கொண்ட பஞ்சாயத்து வட்டங்கள் ஏற்பட்டுத் தன் தேவைகளை அவைகளே கவனித்துக் கொள்வதுடன் சமுதாயத்துக்காகவும் உழைக்கும். பொதுப் பணிகளிலும் பயிற்சி பெற்று உதவியளிக்கும். இதே போன்று மாவட்டங்கள், மாநிலங்கள் மட்டத்திலும் பிறகு நாடு முழுவதிலும் சுரண்டலற்ற சமத்துவப் பொருளாதாரத் திட்டத்துடனும் பண்பாட்டுடனும் கூடிய சமுதாயம் உருவாக்கப்பட்டுச் சண்டை சச்சரவுகள் நீக்கப்பட்டு மக்கள் இன்புற்று வாழ்வர்.

7. ஜவஹர்லால் நேரு

பண்டித ஜவஹர்லால் நேரு சுதந்தரப் போராட்ட வீரர்களுள் சிறந்து விளங்கிய தீவிர இடது சாரிகளுள் மிகச் சிறந்த ஒருவராவார். இவர் நாடியது பொருளாதார விடுதலையுடன் கூடிய அரசியல் விடுதலை ஆகும். சமதர்ம சமாதான புத்துலகை உருவாக்க ஆசைப்பட்டவர்களுள் இவர் புரட்சிக்காரராய் விளங்கினர். ஆனால், பகவத்சிங் போன்றோரது வன்முறைகளிலோ நேக்சலைட் போன்றோரது கொடுமைகளிலோ இவர் நம்பிக்கையற்றவர். மகாத்மா காந்தியடிகளுடன் கொண்ட தொடர்பினால் வன்முறையற்ற அகிம்சா முறையில் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெறப் பாடுபட்டு வெற்றியும் கண்டார்.

இந்தியக் குடிமக்கள் அனைவருடைய நலனுக்காகச் சமுதாயத்தில் சமதர்மப் பொருளாதாரத் திட்டம் அமைக்க நேரு பெரிதும் முயன்றார். அகில இந்திய காங்கிரசு மாநாடுகளில் சமதர்மத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆற்றிய இவருடைய உரைகளைச் சர்தார் வல்லபாய் படேல் போன்ற சில நண்பர்களும்கூட ஆதரிக்கவில்லை. இந்திய விடுதலைக்கு முன்பே நேரு ரஷியா சென்று அங்கு நிலவும் சமதர்ம ஆட்சியையும், ஐந்தாண்டுத் திட்டங்களையும் நேரில் கண்டறிந்தார்.

பின் தங்கிய பாரதம் முன்னேற தொழிலும் விவசாயமும் வளர வேண்டுமென்பதையும், நீர்ப்பாசனங்களும் நீர்த்தேக்கங்களும் அனல் மின்சார நிலையங்களும் அமைத்தல் அவசியமென்பதையும் உணர்ந்த இவர் பிரதம மந்திரி பதவி ஏற்றதும் அவற்றைச் செயல்படுத்தினர். பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த வல்லபாய் படேல் உள்ளிட்ட பெரும்பாலோர் முதலாளித்துவ கொள்கையுடையோராயிருந்ததால் அவர்கள்

இவரது சமதர்மச் சோஷலிசக் கொள்கையை ஆதரிக்கவில்லை. ஆகையால், இவரது திட்டங்கள் கலப்புப் பொருளாதாரக் (mixed economy) கொள்கையின் அடிப்படையில் அமைந்தன. மார்க்சீயப் பொருளாதாரத் தத்துவங்களைக் கற்றறிந்து உணர்ந்திருந்தாலும் தனியாருடைமையில் இவர் தீவிரமாகத் தலையிடவில்லை. தொழிலையும் உற்பத்தியையும் உழைப்பாளர் உரிமையாக்கி, உழைப்புக்கேற்ற ஊதியம் என்னும் கொள்கையை இவர் செயல்படுத்த முடியவில்லை. இவர் காலத்தில் தனியார் துறையும் பொதுத் துறையும் கணிசமான அளவில் முன்னேறின. தனியார் மூலதனமும் அரசின் மூலதனமும் தொழில்களில் ஈடுபட்டன. உழைப்பாளிகளுக்குத் தொழில் நிறுவனங்கள் உரிமையாக்கப்படாததோடு, அவர்களுக்கு உற்பத்தி வினியோக வாய்ப்பு அளிக்கப்படவுமில்லை. மக்களாட்சியிலும், பாராளுமன்ற முறைகளிலும் நம்பிக்கைக் கொண்ட நேருவால் இதைச் செய்யமுடியவில்லை. காரணம் இவரை சூழ்ந்திருந்த அரசியல் தலைவர்களுள் பலர் முதலாளித்துவக் கொள்கையைக் கொண்டவர்களாய் இருந்ததேயாகும்.

பிரிட்டிஷ் பேபியன் (British Fabian) கொள்கைகளாலும், ரஷிய பொருளாதார முன்னேற்றத்தாலும், கெய்னிஷியன் (Keynesian) பொருளாதாரத் தத்துவங்களாலும் நேரு கவர்ந்து ஈர்க்கப்பட்டார். ஆகையால் துண்டு விழும் பொருளாதாரக் கொள்கை (deficit financing) கலப்புப் பொருளாதாரம் (mixed economy) ஆகிய இரண்டிற்கும் நேரு இடமளித்தார். அவர் கெய்ன்ஸ் (Keynes) பொருளாதார முறைகளை வியந்து கற்றார். ஆயினும், பிரிட்டிஷ் பொருளாதாரம், அமெரிக்க பொருளாதாரம் ஆகியவைகளையும், பருவச் சூழ்நிலைக்கேற்ப சுழலும் வாணிபத் திருப்பங்களையும் (periodical trade cycles) ஆராய்ந்த பிறகு பொருளாதாரச் சமநிலை இயற்கையாகத் தானே வந்தெய்தும் எனும் தொல்வழக்குப் பொருளாதாரக் கொள்கையைக் கைவிட்டார்.

ஆகையால் சேமிப்பு, முதலீடு முதலியவைகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வு ஏற்படும் காலங்களில் வேலை வாய்ப்பு வசதிகளுக்கு இடையூறு ஏற்படுவதுண்டு. சில சமயங்களில் தொழிலாளர் கிடைக்காமல் தொழில்கள் தேங்கி நிற்பதும், வேறு சில சமயங்களில் தொழிலாளர்கள் வேலையின்மையால் தொல்லைப்படும் நிலைமையும் வருவது இயற்கை. இந்தச் சூழ்நிலையைத் தவிர்க்க அரசு முன்வந்து தகுந்த பொருள் உதவி, திட்டங்

களைத் தீட்டி தொழிலுக்கும், தொழிலாளர்கட்கும் தொடர்பு ஏற்படுத்த வேண்டும். இதற்காகவே, துண்டுவிழும் பொருளா தாரக் கொள்கையை (deficit financing) இவர் ஆதரித்துப் போதிய மூலதனம் பெற்றுத் பொதுத் துறையில் தொழில் நிலையங்கள் நிருவி வேலையற்றோர்களுக்கு வாய்ப்பளிக்கக் கரு தினர். இவ்விதமான கலப்புப் பொருளாதாரக் கொள்கையினுல் (mixed economy) தனியார் துறையும் பொதுத் துறையும் ஒரு மித்து இயங்கி பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் களைய வேண்டுமென நேரு கருதினர்.

8. எம். என். ராய்

எம். என். ராய் அவர்கள் கம்யூனிச புரட்சிக் கொள்கை உடையவர். சீனு, ரஷியா, மெக்சிகோ முதலிய நாடுகளில் நடந்த கம்யூனிச மாநாடுகளில் கலந்துகொண்ட பிறகு மனித நலனையே மையமாகக்கொண்ட அவரது பொருளாதாரத் தத்துவங்கள் கம்யூனிசத்துக்குப் பல கோணங்களில் மாறுபட்டிருப்பதை அவர் உணர்ந்தார். பொருளாதார முன்னேற்றமில்லாத அரசியல் விடுதலையை அவர் அடிமை வாழ்க்கையாகவே கருதினுர்.

பெரும் முதலாளிகளும் தனியரசாட்சி (ஏகாதிபத்திய) நாடுகளும் இந்தியப் பொருளாதாரத்தை முன்னேறவிடாமல் தடைக்கற்களாக இருந்து தடுப்பதாக அவர் கருதினுர். நமது பொருளாதாரத்தை வளர்க்க அந்நிய நாட்டின் உதவியை நாடக் கூடாது என்பது அவர் கொள்கை.

ரஷியாவிலிருந்து மறைந்து வந்த அவரைக் காவலர்கள் கண்டுபிடித்துச் சிறைப் படுத்தினுர்கள்; மீரட் சதி வழக்கிலும் ஈடுபடுத்தினுர்கள். விடுதலையாகி வந்த அவர் காங்கிரசில் சேர்ந்தார். ஆனுல், மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகள் பிடிக்காத காரணத்தாலும், அப்போது காங்கிரசு பாசிசம் (Facism) போன்ற ஒரு கொள்கையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகவும் கருதிய அவர் காங்கிரசை விட்டு விலகினுர்.

ஹிட்லருக்கு எதிராக ஐக்கிய (allied) நாடுகளுடன் சேர்ந்து ஒத்துழைப்பதற்காக ராடிகல் டிமாகிரடிக் கட்சி (Radical Democratic Party) என்னும் கட்சி ஒன்றை ஏற்படுத்தினுர். மேலும், ஹிட்லர் வீழ்ச்சியை விரும்பிய அனைத்துக் கட்சிகளையும் ஒன்று சேர்த்து National Democratic Union of All Parties எனும் ஓர் அமைப்பையும் நிறுவினுர்.

இதற்குள் ஸ்டாலின் கம்யூனிசக் கொள்கைகளை விட்டு ராய் அவர்கள் வெகு தூரம் சென்றுவிட்டார். மனிதனின் தனியுரிமையை மையமாகக் கொண்ட டெமாகிரடிக் சோஷலிசம் (democratic socialism) என்னும் மக்கள் சமதர்மக் கொள்கையைப் பரப்பினர். அடிமை வாழ்வைவிட்டு விடுதலை பெறும் நாடுகள் விவசாய முன்னேற்றத்திற்கே முதலிடம் கொடுத்துத் திட்டம் தீட்ட வேண்டுமென்று கருதியவர்களுள் ராய் ஒருவராவார். அவர் உருவாக்கிப் பரப்பி வந்த மக்கள் திட்டம் (peoples' plan) என்பதில் விவசாய முன்னேற்றத்திற்கே முதலிடம் அளிக்கப்பட்டிருந்தது. இரண்டாவதாகத் துய்த்தல், பொருள் உற்பத்தித்தொழிலைப் (consumer goods industry) பெருக்கித் தன்னிறைவு பெற வேண்டுமென்பது. பொதுத் துறையில் கனரகத் தொழிலை (Heavy Industries in Public Sector) ஊக்குவித்தல் பண வீக்கத்திற்கு இடமளிக்குமென்றும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்குமென்றும் ராய் எச்சரித்தார்.

விவசாயத்துக்கு முதலிடம் அளித்து நமது திட்டங்களைத் துவங்க வேண்டுமென்ற அவரது முக்கால உணர்வு (தீர்க்க தரிசனம்) உண்மையாகிவிட்டது. இந்திய அரசு இப்போது பசுமைப் புரட்சிக்கு (green revolution) முதலிடம் அளிக்க முன் வந்துள்ளது.

9. V. G. கலே

பொருளாதார, சமூக, அரசியல், கல்வி முதலிய துறைகளில் பணிபுரிந்த பேராசிரியர் வாமன் கோபிந் கலே இயற்றிய நூல்கள் பல. வறுமையினின்று நீங்கி இந்தியா முன்னேற வேண்டு மானுல் பொருளாதார நிலையையும் அதன் தத்துவங்களையும் ஆராய்ந்து இந்தியப் பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடு களைப்பற்றித் திட்டவட்டமான கருத்துகளை உருவாக்க வேண்டும். ஏழ்மை, தொழில், வாணிபம், நிலச் சீர்திருத்தம், நிதி நிருவாகம், நாணயங்கள் (பணம்), வரவு செலவு, சாதி பாகுபாடு, தொழில் வளர்ச்சியில் அரசின் ஈடுபாடு ஆகிய துறைகள் பலவற்றில் நடந்து வரும் ஆராய்ச்சிகளைத் தொகுத்தும் வகுத்தும் இந்தியப் பொருளாதாரத் துறைக்கு உயிரோட்டம் அளிக்க வேண்டும்.

இந்தியா எந்த வழியில் எவ்விதப் பொருளாதாரக் கொள் கையின் அடிப்படையில் முன்னேற வேண்டும் என்று இது வரையில் அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாமல் போய் விட்டது. இந்தியாவில் இருந்த ஆங்கில அரசும் அதன் அமைதியான ஒழுங்கான ஆட்சியும் மேல் நாட்டுக் கல்வியும் நாகரிகமும் போர்க் காலம் கற்பித்த தேசிய, சர்வ தேச வாழ்க்கை வழிகளும் இந்தியச் சமுதாய நிறுவனங்களும் சமயப் பற்று, பண்டைக் காலந்தொட்டு இருந்து வரும் பழக்க வழக்கங்கள் முதலியவைகளுக்கு ஒரு திருப்பம் கொடுத்துள்ளன. பழமையோடு புதுமையும், கீழ்நாட்டுப் பண்பாட்டோடு மேல் நாட்டு நாகரிகமும், கலைகளும் கலந்து புதிய இந்தியாவை உருவாக்குவதற்கான வழிவகைகள் செய்துள்ளன. இந்தியா வின் சூழ்நிலைகளுக்கேற்ப பொருளாதார முன்னேற்றப் பாதை யைக் காட்டுதல் நிபுணர்களின் முக்கிய வேலையாகும்.

மற்ற நாடுகள் முன்னேறிய வழிகளைக் கவனித்துப் போற்ற வேண்டியவைகளைப் போற்றி நீக்க வேண்டியவைகளை நீக்கி நாம் விரைவில் முன்னேற வேண்டும். நம் நாட்டின் ஏழ்மை நிலையைப் போக்க வேண்டுமாயின் தற்போதுள்ள உற்பத்தி, வழங்கும் முறை முதலியவைகளை மாற்றி அமைத்தாக வேண்டும். வேகமாக முன்னேறி வரும் இக் காலங்களில் எந்த நாடும் தனித் தியங்குதல் மிகவும் கடினம்; தனித்தியங்குதல் நல்லதுமல்ல. ஆகையால், ஐக்கிய நாட்டு மன்றம், மற்றும் அதன் தொடர் புடைய மன்றங்கள், பிரிட்டிஷ் பேரரசு ஆகியவைகளில் அங்கம் வகித்துத் தொண்டாற்றி அவைகளால் ஏற்படும் பலனில் இந்தியா பங்கேற்று வருகிறது. மக்களனைவரையும் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்று உலகத்தையே சொர்க்கமாக்கப் பாடுபடும் நாடுகளுடன் நாமும் ஒன்று சேர்ந்து நின்று ஒத்துழைப்பதுதான் சிறந்த முறை.

இந்து மத சமய தத்துவங்களும், கிருத்தவ புத்த மதக் கோட்பாடுகளும் இவ்வுலக இன்ப சுகங்களைவிட மேலுலக சிந்தனைகட்கும் அறங்கட்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தன. ஆயினும், மக்கள் இம்மையில் சுக வாழ்வு வாழ்வதற்கான நல்ல பொருளாதார, சமூக, அரசியல் சூழ் நிலைகள் உண்டாவதை தடுக்கவில்லை. இந்தியப் பொருளாதாரத் தத்துவம் தனி முக்கியத்துவம் வாய்ந்தது. கடமையுணர்வோடும் கண்ணியத் தோடும் அற வழியிலே உழைத்துப் பொருளீட்டிப் ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’ நமது முன்னோர் கண்ட நல்வழி. இதைத் தவருகப் புரிந்துகொண்டு இந்தியர்கள் இவ்வுலக வாழ்வை வெறுப்பவர்களென்றும் கனவுலகில் வாழ்பவர்களென்றும் ஓடியாடி பொருள் சேர்க்க வகையற்றவர்களென்றும் கருதி குறை கூறுவது தவறு.

நிலம், தொழில், முதலீடு, நிருவாகம், மக்கட்தொகை, செய்தித் தொடர்பு, போக்கு வரவு, வாணிபம், நாணய முறை, அயல் நாட்டுச் செலாவணி, நிதி நிருவாகம், வரவு செலவு, வரி விதிப்பு, வங்கி முறைகள், விலைவாசி போன்ற பலவித பொரு ளாதாரத் துறையைப்பற்றி V. G. கலே அவர்கள் தெளிவுபடக் கூறியிருக்கிறுர்.

தங்கு தடையின்றி எல்லா நாடுகளுக்கும் அவற்றின் விருப்பப் படி வியாபாரம் செய்ய உரிமை இருந்தாலும் இந்தியா போன்ற

பின் தங்கிய நாடுகளுக்குச் சில பாதுகாப்புகள் தேவை. நிற்க, இங்கிலாந்து போன்ற 'காமன் வெல்த்' நாடுகளுக்கு இந்தியா தரும் சலுகைகளைப் போல் அந்த நாடுகளும் இந்தியாவுக்கு வேண்டிய சலுகைகளைத் தருதல் வேண்டும். சலுகைகளும், பாதுகாப்புகளும் ஒருதலைப்பட்சமாக இருக்கக் கூடாது.

பேராசிரியர் கலே அவர்கள் தம்முடைய 'இந்தியத் தொழிலும், பொருளாதாரக் கொள்கைளும்' என்னும் நூலில் இந்தியா வளமடைய வேண்டுமானால் நலிந்த தொழில் துறைகள் புத்துயிர் பெற்றும் புதிய தொழில் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சி பெற்றுமாக வேண்டும் என்று எழுதியுள்ளார். மூலப் பொருள்களே இல்லாத சிறியசிறிய நாடுகள்கூட வெளிநாடுகளின் மூலப் பொருள்களைக் கொண்டு தொழில் துறையில் முன்னேறி அந் நாடுகள் உற்பத்தி செய்த பொருள்களை இந்தியாவுக்கு இறக்குமதி செய்து பெருத்த இலாபம் பெற்று இந்திய தொழிலையும் உற்பத்திச் சக்தியையும் தளர்ச்சியடையச் செய்கின்றன. திக்கெட்டும் புகழ் பெற்ற சால்வைகளையும் கம்பளங்களையும் இதர பொருள்களையும் உற்பத்திச் செய்து உரோம், கிரேக்கம், போர்ச்சுகல் போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து புகழடைந்த நமது முன்னோர் பெற்றிருந்த திறமையும் கலையும் வீழ்ச்சியுற்று அயல் நாட்டுப் பொருள்களுக்கான சந்தையாக நம் நாடு விளங்குவதை நாம் வெட்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும். பண்டைக் காலப் பெருமைக்கு ஏற்றவர்களாகவும் எதிர்காலச் சந்ததிக்குப் பாதுகாவலர்களாகவும் நாம் விளங்குவதற்காகத் தொழில் துறையில் ஏதாவது செய்தாக வேண்டும்.

இந்தியா ஒரு விவசாய நாடாகையால் விவசாய முன்னேற்றத்தை மட்டும் கவனித்துக்கொண்டு மற்றப் பொருள்களின் உற்பத்தித் தொழில்களை அயல் நாடுகளுக்கு விட்டுவிடலாம் என்பது ஒரு கருத்து. ஆனால், விவசாயத்தை புதிய முறைகளில் நன்கு கவனித்துக்கொண்டு மற்ற தொழில்களிலும் நாம் ஈடுபட்டு முன்னேற வேண்டும். ஆலைகளிலும், இயந்திரங்களிலும் வேலை செய்வதற்கு வளரும் நமது இந்தியச் சமுதாயத்தில் உழைக்கும் சக்தி நிறைய உண்டு.

மேல் நாடுகளில் ஆராய்ச்சியாளர்களும், பேராசிரியர்களும் காலத்துக்கேற்ப புதிய கொள்கைக் கோட்பாடுகளை வகுத்து வருகின்றனர். ஆனால், இந்தியாவில் பொருளாதாரத் துறை

வல்லுனர்கள் அத்தகையத் தொண்டினைச் செய்யாது பின்தங்கி யுள்ளனர். எதிர்காலத்தில் இந் நிலை மாறி நாட்டின் பொருளா தார முன்னேற்றத்தில் அவர்களும் பெருமையோடு அவர்களது அறிவாற்றலைப் பயன்படுத்த வேண்டும். அண்மை காலமாகச் சில பல்கலைக் கழகங்களில் பொருளாதாரத் துறையில் Post M.A., ஆராய்ச்சி வகுப்புகள் நடந்து வருகின்றன. பொருளா தாரக் குழுக்கள். நிதிநிலைக் குழுக்கள், இந்திய நாணயச் செலா வணி, விவசாயக் குழுக்கள் முதலியவற்றிற்குப் பொருளாதாரப் பேராசிரியர்களை அமர்த்துதல் வரவேற்கத் தக்கது.

10. C. N. வக்கீல்

பொருளாதாரப் பேராசிரியராகவும், சமூகப் பொருளாதாரக் கலாசாலையின் இயக்குனராகவும் இருந்த C. N. வக்கீல் பதினைந்துக்கு மேற்பட்ட பொருளாதாரத் துறையின் பல பகுதிகளைப்பற்றிய நூல்கள் எழுதி இருக்கிறார்.

அரசியல், நிருவாகம் முதலியவை இந்தியப் பொருளாதாரத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவதாக அவர் கருதுகிறார். வரி செலுத்துவோருடைய நன்மையைக் கருதாமல் அரசாங்க நிருவாகக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. மக்களின் வாழ்க்கை நிலையும் வரி செலுத்தும் தகுதியும் மிகக் குறைவு. அவர்களது நன்மையைக் கருதாமலும் பொருளாதார முன்னேற்றத் துறைகளுக்கு அதிகம் செலவழிக்காமலும் அரசாங்கம் மக்களிடமிருந்து வசூலித்த வரிப் பணத்தைப் பயனற்ற வழிகளில் செலவிடுகிறது.

விவசாயம், தொழில், கல்வி, சுகாதாரம் ஆகியவைகட்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆங்கிலேயர்கட்கும் இராணுவத்துக்கும் செய்யப்படும் செலவை உடனடியாகக் குறைத்தாக வேண்டும். மத்திய அரசு மாநிலங்களிடமிருந்து பெறும் வருவாயைக் குறைக்க வேண்டும். மாநிலங்கள் தங்கள் முன்னேற்றச் செலவினங்களுக்கு அப் பணத்தை உபயோகப் படுத்த வேண்டும். தேவைப்பட்டால் வாரிசு வரி, திருமண வரி போன்றவைகளை விதித்து நாட்டை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கவும் முன்னேறச் செய்யவும் மாநிலங்களுக்குப் பொருளாதாரத் துறையில் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் வேலையின்மையைப் போக்கவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பயன்படக்கூடியவைகளாகத் தீட்டப்பட வேண்டும். முன்னேறிய மேல் நாட்டுத் திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்தங்கிய இந்தியாவிற்குத் திட்டம் அமைப்பது தவறு.

11. D. R. காட்கில்

பூனுவிலுள்ள அரசியல் பொருளாதார நிலேயத்தின் இயக்குனரும் மத்திய மாநில குழுக்களின் அங்கத்தினருமான காட்கில் அவர்கள் பொருளாதாரத் துறையில் பலநூல்கள் இயற்றி உள்ளார். 1850 முதல் 1914க்குள் கைத்தொழில் வீழ்ச்சியடைந்த தற்கு அரசாங்கத்தின் இரயில்வே கொள்கைகளும், தொழில் நுட்ப கல்வியின்மை போன்றவைகளே காரணங்ளென்று கருது கிருர். விவசாயம் மக்கள் பெரும்பாலோரை ஈர்த்தபடியால் மற்றத் தொழில் துறைகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுக்க வேண்டியிருந்தது. ஆடை நெசவுத் தொழிலும், சணல் நெசவுத் தொழிலும்தான் நாட்டில் முக்கியமானதாக இருந்தன. சிக்கலான இயந்திரங்கள் பலவற்றைக் கொண்டு நடந்தப்படும் வேறெந்தத் தொழிலேயும் தொடங்கி நடத்துவதாயில்லே. விவசாயத்துக்கு உதவியாக இருக்கக்கூடிய தொழில்கள் மட்டும் சில நடந்தன. 1914—18 போர்க் காலச் சூழ்நிலேக் கேற்ப இரும்பு-எஃகுத் தொழிற்சாலேகள் சில எழுந்தபடியால் முன் னேற்றம் சிறிது காணப்பட்டது. ஆனுல், உற்பத்தி அளவைப் பொருத்த மட்டில் மிகவும் பின் தங்கியே இருந்தது.

தொழிலாளர் நலன்களேப்பற்றி ஆராயும்போது (1) அவர் களுள் சிலருக்குக் கொடுக்கப்படும் மிகக் குறைந்த ஊதியத்தைப் பற்றியும், (2) அதனுல், தொழிலாளர்களுக்குள் ஏற்படும் மனக் குறை, சச்சரவுகளேப்பற்றியும் குறிப்பிடுகிருர். தொழிலாளி—முதலாளி தொடர்பு சாதனங்களே ஏற்படுத்த வேண்டும். தொழிலாளர் வாழ்க்கை நிலே மிக மோசமாக இருப்பதால் உயர்ந்த ஊதியம் கொடுப்பதோடு அவர்களுக்கு நோய், வேலே யின்மைகளுக்கான காப்புநிதி வசதி, வீட்டு வசதி, சம்பளத் தோடு விடுப்பு போன்ற நல்வாழ்வு வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டும்.

போருக்குப் பிறகு ஏற்பட்ட பண வீக்கத்தால் ஊதியம் பெற்று வாழ்வோர் சங்கடங்கள் பல அனுபவித்தனர். சிறு வியாபாரிகளும், தரகர்களும் பலன் பெற்றனர். நல்ல பொருளாதாரக் கொள்கைகள் மூலம் இதைச் சரி செய்ய முடியும். செலவினங்களைக் குறைப்பது, நிருவாகத்தில் சிக்கனம் கையாள்வது, நேர்முக வரியை அதிகரிப்பது, கடன் பெறுவது, விலைவாசியைக் கட்டுப்படுத்துவது, சேமிப்பையும் இலாபத்தையும் கட்டுப் படுத்துவது, பொருள்களை வழங்குவதில் கட்டுப்பாடு செய்வது போன்ற பல முறைகளை அரசாங்கம் கையாண்டால் வெற்றி காண முடியும்.

12. P. A. வாடியா

பேராசிரியர் P. A. வாடியா அவர்கள் நாட்டுடைமை என்பது பொதுவாக உழைப்பால் பெறப்படும் பொருளைக் குறிக்குமாறுலும், சிறப்பாக நல்வாழ்வுக்குரிய அல்லது நல்வாழ்வுக்குதவும் அத்தனைப் பொருள்களையும் குறிக்கும் என்று கருதுகிறார். உதாரணமாக மிக உயரிய ஆடை, அணிபவனுக்கு நல்வாழ்வளித்தாலும் அதைத் தயாரிக்கும் நெசவாளி குறைந்த ஊதியத்திற்கு வியர்வை சிந்த அல்லல்பட்டு உற்பத்தி செய்வானுகில் அது முன்கூறிய அணிபவனுக்கு மட்டுமே உடைமை எனப்படும். பொதுவாக நல்வாழ்வளிப்பதற்கு ஏராளமான பொருள்கள் உற்பத்திச் செய்யப்படுவதுடன் நல்ல முறையில் வழங்கப்படவும் வேண்டும். நமது நாட்டில் மக்கள் தேவையறிந்து வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யாமல் திட்டமிடாத வகையில் உற்பத்தி செய்து தேவையறியாது குழப்பமான முறையில் வழங்கப்படுகின்றன. நாம் நமது பண்டைக் காலத்திய பண்பாட்டிற்கேற்ப நல்ல முறையில் நாட்டுடைமையை உற்பத்திச் செய்து, வழங்கி பொருள் ஈட்டுவதுடன் நாட்டுக்குச் சேவை செய்யும் தொண்டுள்ளத்தையும் பெற்றுக வேண்டும்.

தேசிய வருமானம்

தனி நபர் ஆண்டு வருமானம் அமெரிக்காவில் 71 பவுன்; இங்கிலாந்தில் 50 பவுன்; ஜப்பானில் 6 பவுன்; ஆனுல், இந்தியாவிலோ 2 பவுன். இங்கு அளவிலா இயற்கைச் செல்வம், மனித சக்தி, சமூக, பொருளாதார, ஆன்மீக அறிவு முதலிய அனைத்தும் இருந்தும் பெரும்பாலான மக்கள் பசியால் வாடுவதேன்? குறைந்த உற்பத்தியும், சேமிப்பின்மையுமே இந் நிலைக்குக் காரணம் ஆகும். மற்ற நாடுகள் பெற்ற தேர்ச்சியைக் கூர்ந்து கவனித்து நமது பண்பாட்டிற்கேற்ப நமது பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட நமது இலாபத்தை மட்டும் கருத்திற் கொள்ளாது இந்தியச் சமுதாயத்தைக் கருத்திற் கொண்டு அனைவருடைய நல்வாழ்வுக்கும் பாடுபட வேண்டும்.

13. கியான் சந்த்

பேராசிரியர் கியான் சந்த் இந்திய நிதி நிருவாக முறை கீழே குறிப்பிட்டபடி செயல்பட்டு வருவதாகக் கூறுகிறுர் :

1. இந்திய நிதி நிருவாகத்துக்கு இங்கிலாந்திலுள்ள இந்தியா செக்ரடெரியே முழு பொறுப்புள்ளவராகவும், இயக்குநராகவும் உள்ளார். அவருடைய உத்திரவின் படிதான் இந்திய நிதி நிருவாகம் செயல்பட வேண்டும்.

2. மத்திய மாநில அரசுகள் நிதி நிருவாக விஷயத்தில் இந்தியா செக்ரடெரியிடமிருந்து பெற்ற அதிகார வரம் பிற்குட்பட்டுதான் நடக்க வேண்டும். குறிப்பிடப்படாத மற்ற அதிகாரங்கள் அனைத்தும் அவரிடமே இருக்கும்.

3. இந்த முறையில் குற்றங்குறைகள் பல இருந்தாலும், அது செயல்பட்ட சூழ்நிலையையொட்டி நன்றுகவே நடந்தது. மக்கள் நல்வாழ்வுக்குச் சில சமயங்களில் இடையூருகவும், பயனற்றதாகவும் இருந்தாலும் இம் முறை ஒழுங்கீனமின்றி நன்கு செயல்பட்டு வந்தது.

4. ஒருமைப்பாடுடைய இந்தமுறை முழுத் தன்மையுடையதாகவும், நிருவாக முறைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் இருந்தன.

ஜனநாயக முறை மேலும் விரிவடைந்து செயற்படும்போது கொள்கை கோட்பாடுகளில் ஏற்ற மாறுதல்கள் ஏற்படும். இந்திய நிதி நிருவாக அமைப்பைப்பற்றிப் பொதுவாக எழுதும் அவர், வரவு செலவு மதிப்பீடுகளைப் பற்றியும், மத்திய மாநில அரசுகளுக்கிடையேயுள்ள நிதி நிருவாகத் தொடர்புகளைப் பற்றியும் கணக்கு, தணிக்கை முறைகளைப் பற்றியும், பொதுக்கடன், உள்ளாட்சி நிதி நிலைமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

நமது அரசாங்க நிருவாக அமைப்பில் உள்ளாட்சித் துறை முக்கியமானதால் அதன் நிதி நிருவாகத்தைப்பற்றி ஆராய்ந்து அறிய வேண்டியது தேவையாகிறது. தல தாபனங்களுக்குப் போதிய அளவு வருவாய் இல்லாமையால் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க முடிவதில்லை. மத்திய மாநில அரசுகள் கொடுக்கும் உதவியுடன், உள்ளாட்சி மன்றங்களும் தங்களா லான இயன்ற அளவு வரி மூலமும், நன்கொடை மூலமும் பொருள் திரட்டி பொதுமக்களுக்கு நேரடியாகத் தேவையான முக்கிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

மிக வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகையைப்பற்றி கியான் சந்த் கவலை தெரிவித்து நாட்டில் உபயோகப்படுத்தக் கூடிய பொருள்களின் உற்பத்தி வேகம், பகிர்ந்தளிக்கும் முறை முதலியவைகளைத் திறம்பட ஆற்ற வேண்டுமென்றும் கருத்து தெரிவிக்கிறார். மேலும் பாமர மக்கள் எளிதில் புரிந்துகொண்டு மனநிறைவுடன் செயல்படத்தக்கக் குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்பதும் அவர் கருத்து.

14. பிற்காலத்தவர்

இந்திய அரசு 1918ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்துக்கு அளித்த பொருளுதவியைக் கொண்டு இந்தியப் பொருளியல் என்ற ஒரு துறையினைப் பல்கலைக் கழகத்தினர் புதிதாக அமைத்தனர். இந்தத் துறைக்குத் தலைவராக டாக்டர் கில்பர்ட் ஸ்லேட்டர் என்பவரை அழைத்தனர். இவர் ஆக்ஸ்போர்டு ரஸ்கின் கல்லூரித் தலைவராக இருந்தவர். பியேட்ரிஸ், சிட்னி வெப் (Beatrix and Sydney welb) ஆகிய பேராசிரியர்கள் இவரை இலண்டன் அரசியல் பொருளியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் முதல் மாணவராகத் தேர்ந்தெடுத்தனர். இச் சிறப்புமிக்க பேராசிரியர் பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார். இந்தியாவிலேயே முதல் முதலாகக் கிராம வளர்ச்சியைப்பற்றி ஆராய்ந்து 'சில தென்னிந்திய கிராமங்கள்' என்னும் உலகப் புகழ்பெற்ற நூலை இவர் இயற்றினார். மேலும் திராவிடப் பண்பாடு, இந்திய தொழில்கள் முதலியவைபற்றியும் சிறந்த ஆராய்ச்சி நடத்தினார். இவரைத் தொடர்ந்து சென்னை பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர்கள் டாக்டர் P. J. தாமஸ், டாக்டர் P. S. உலகநாதன், டாக்டர் பாலகிருஷ்ணா, டாக்டர் V. சண்முகசுந்தரம் ஆகியோர் ஆவார்கள். தாமஸ், உலகநாதன், பாலகிருஷ்ணா ஆகிய மூவரும் பெரும்பாலாகத் தொழில்களைச் சார்ந்த பொருளாதார ஆராய்ச்சி நடத்தினராயினும், தாமஸ் அவர்கள் (கூட்டாட்சி நிதியியல் முன்னேற்றம் (federal finance) என்ற நூலை இயற்றினார். டாக்டர் பாலகிருஷ்ணா அவர்கள் அண்மையில் 'இந்திய நிதியியல்' என்ற நூலையும், 'இந்திய வட்டாரத் திட்டம்' (Indian Regional Planning), 'இந்திய பொருளியல் வளர்ச்சி போன்ற நூல்களை இயற்றினார். இவர்கள் நூல்கள் இயற்றியதுமன்றிச் சிறந்த பொருளியல் கருத்துகளை அறிவிப்பவர் (ஆலோசகர்)களாகவும் பணியாற்றியுள்ளார்கள். தாமஸ் அவர்கள் இந்திய அரசாங்கத்துக்குப் பொருளியல் கருத்தளிப்

பவராக (ஆலோசகராக) இருந்தார். அவருக்குப்பின் டாக்டர் உலகநாதன் அவர்கள் ஐக்கிய நாட்டுக் கிழக்கு ஆசிய (ECAFE) குழுவின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினர். டாக்டர் பாலகிருஷ்ணு முதலாவது இரண்டாவது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டங்கள் தயாரிக்க கருத்துகளைக் கூறினர் ; சென்னை கூட்டுறவுக் குழு உறுப்பினராகப் பணியாற்றினர் ; பிறகு இந்திய ஆயுள் நிதிக் காப்பீடு நிதிக் கழகத்தின் (கார்ப்பொரேஷனின் Life Insurance Corporation) முதலீட்டுக் குழுவுக்குக் கருத்தளிப்பவராகப் பணியாற்றினர் ; பிறகு, சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வுபெற்று இந்திய சுங்கக் குழு (கமிஷன்) உறுப்பினராயிருந்து சிறந்த சேவை செய்தார். இவர் மாணவராகிய டாக்டர் V. சண்முக சுந்தரம் அவர்கள், டாக்டர் தாமஸ், பாலகிருஷ்ணு அவர்கள் வழியில் முதன் முதலில் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சி, அண்மைக் காலக் கூட்டாட்சி நிதி நிலைகள் என்பதாகும். பிறகு மனித வளம் என்ற புதிய பொருளியல் துறையில் எவ்வாறு பொருளியல் முறைகள் அமைகின்றன. நலப் பொருளின் இயல்புகள் யாவை ? என்ற துறைகளின் ஆராய்ச்சிகளில் ஈடுபாடு கொண்டார். இந்தப் புதிய துறைகளில் ஆராய்ச்சியாளர் சென்னை பல்கலைக் கழகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தின் சிறந்த பொருளியல் வல்லுனர்களைப்பற்றி நல்ல ஆராய்ச்சித் தொகுப்புகள் இல்லை. இலண்டன் பல்கலைக் கழகத்திலும் ஆராய்ச்சி நிகழ்த்தக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி டாக்டர் சண்முகசுந்தரம் அவர்கள் பல்கலைக் கழகத்தில் இந்திய பொருளியல் கருத்துகள் என்ற ஒரு தனித் துறையை வகுத்து அதற்கு வேண்டிய வழிவகைகளைக் கண்டு வருகிறுர்.

ஒரு சிறந்த பொருளியல் சாதனைக்குப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பலர் முக்கியக் கருவிகளாய் இருக்கின்றனர். குறிப்பாகத் தமிழகத்தைப் பொருத்தவரையில் சர் ஆர்தர் காட்டன் என்பார் நூருண்டுகட்கு முன்பு தமிழகத்தில் எவ்வாறு நீர்ப்பாசனம் செய்ய வேண்டுமென்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சிறந்த சேவை செய்திருக்கிறுர். அவரைப் போல பல தமிழர்களும் சிறந்த பணியாற்றியுள்ளார்கள். குறிப்பாகச் சமுதாய பொருளியல் முன்னேற்றத்தைப் பின் தங்கிய மக்களுக்கு அளிக்க எண்ணி சர். பி. டி. தியாகராய செட்டியார் என்பார் நீதிக் கட்சித் தலைவராக இருந்து ஈடு இணையற்ற நேர்மையான சேவை செய்திருக்கிறுர். அவர் கட்சியிலிருந்து சேவை செய்த பொருளியல் வல்லுனர்கள் சர். ஆற்காடு ராமசாமி முதலியார், சர். M. A. முத்தையா செட்டியார் இன்னும் பொருளியல்

சமுதாய வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்றனர் நீதிக் கட்சியில் பணியாற்றி மறைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களுள் A. T. பன்னீர்செல்வம், பொப்பிலி அரசர், திரு. முத்தையா முதலியார், டாக்டர் சுப்பராயன் போன்றவர்கள் சிலர் ஆவார்கள்.

நீதிக் கட்சியின் வழிவந்த திராவிட கழகத்தின் தலைவராயிருப்பவரும், இப்போது 95 ஆண்டுகள் நிறைந்தவருமான பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் இந்திய வரலாற்றின் சீர்திருத்த வாதிகளுள் முதன்மையானவர் ஆவார்கள். இவர் பின் தங்கிய மக்கள் சமுதாய முன்னேற்றமடையும் வரை ஒரு நல்ல வாழ்க்கைக்குத் தகுதியற்றவர்களாகி விடுவர் என்று நம்புகிறார். இவரை இந்திய வில்லியம் மாரிஸ் என்று சிலர் கூறுவர். இவர் வழிவந்த டாக்டர் C. N. அண்ணாதுரை அவர்கள் இந்த நூலின் கூட்டாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர் C. D. இராஜேஸ்வரன் அவர்களுடைய மாணவராவார். பச்சையப்பன் கல்லூரி நீதிக் கட்சிக்கு மிகவும் ஈடுபாடு உடைய வகையில் பின்தங்கிய மக்களுக்குச் சலுகையும் வாய்ப்பும் அளிக்கும் கல்லூரியாக உள்ளது. இலண்டன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் H. J. லாஸ்கி அவர்களுடைய சிறப்பு மாணவராக C. D. இராஜேஸ்வரன் பயிற்சி பெற்றார். திரு. நேரு அவர்கள், திரு. கிருஷ்ண மேனன் அவர்கள் போன்ற பலர் லாஸ்கியை இந்திய சுதந்தர வழிகாட்டியாகவும், சோஷலிச மேதையாகவும் கருதினர். ஆதலின் C.N. அண்ணாதுரை அவர்கள் நீதிக் கட்சி சார்புடைய பேராசிரியர் ராஜேஸ்வரன் மாணவன் என்ற காரணத்தால் லாஸ்கியின் வழி வழி மாணவன் என்றுகூறி மகிழ்ச்சியடைவதுண்டு.

BIBLIOGRAPHY

1. Dutt, Economic History of India.
2. Gokhale, Works. V. 2.
3. Madan, Economic Thinking in India.